# ஞானக் கீர்த்தனைகள்

மின் நூல்: எஸ்.கே.ராஜன்
டக்கரம்மாள்புரம்.

# ஞானக் கீர்த்தனைகள் முதலடி அகராதி


| | | | | |
|---|---|---|---|---|
| அ | ஆ | இ | உ | எ |
| ஏ | ஐ | ஒ | ஓ | க |
| ச | ஞா | த | ந | ப |
| ம | ய | ர | ல | வ |
| ஜ | ஸ் | | | |

பாடலாசிரியர் அகராதி

# ஞானக் கீர்த்தனைகள் முதலடி அகராதி

## அ

1. அகலா தென்னோடு வாழும்............432
2. அஞ்சாதே யேசு ரட்சகர்............250
3. அடங்காத நாவு தீதே அதை............364
4. அடியேன் மனது வாக்கும் கொடிய நடத்தையுமே............237
5. அதி மங்கல காரணனே............39
6. அதிசயமான புண்ணியம் நம்மை படைத்த............104
7. அந்த நாள் பாக்கிய நாள் நான் மீட்கப்பட்ட............456
8. அந்தரங்கமாக வந்த நீர் ஆர்? சொல்ல வேணும்............395
9. அப்பனே நீர் எனக்கு எப்படியும் இரங்கி............188
10. அப்பா தயாள குணாநந்த மோனந்த வேதா பொல்லா............92
11. அபிஷேகஞ் செய்துவைத்தாரே குருமார் கூடி............288
12. அமலா தயாபரா அருள்கூர் ஐயா குருபர............33
13. அய்யனே உன் வேதம் இன்பமே............146
14. அரசனைக் காணமலிருப்போமோ? நமது............501
15. அருட்கடலே வரந் தர இது சமயமே............289
16. அருணோதயம் எழுந்திடுவோம்............379
17. அருணோதயம் செபிக்கிறேன் அருள்பரனே கேளுமேன்............378
18. அரூபியே அரூப சொரூபியே எமை............131
19. அல்லேலூயா அல்லேலூயா இயேசு நாமத்திற்கு............500

20. அற்புதம் பாவிநான் மீட்கப்பட்டேன். ....435

21. அனந்த ஞான சொரூபா நமோ நம அனந்த ஞான சொரூபா ....69

22. அன்பரின் நேசம் ஆர் சொல்லாகும்? அதிசய ....461

23. அன்பின் விருந்தருந்த சகோதரர் அனைவரும் வாரும். ....293

24. அன்பு நிறைந்தவரே எங்கள் ஆசைக் கிறிஸ்தரசே ....412

25. அன்புடன் எங்களை ஆண்டருளும் தேவா ....402

26. அன்பே அன்பே அன்பே ஆருயிருறவே ....463

27. அன்பே பிரதானம் சகோதர ....205

28. அன்பே பிரலாபம் அகற்றும் என் அன்பனே ....223

29. அனுக்ரக வார்த்தையோடே இப்போ து ....499

## ஆ

30. ஆ அம்பர உம்பர மும்புகழுந்திரு ....47

31. ஆ இன்ப கால மல்லோ ஜெப வேளை? ....239

32. ஆ என் ப்ராணநாதா ஐயோ என் ப்ராணநாதா ....409

33. ஆ வாரும் நாம் எல்லோரும் கூடி ....4

34. ஆகமங்கள் புகழ் வேதா நமோ நமோ ....375

35. ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம் ....105

36. ஆசையாகினேன் கோவே உனக் ....208

37. ஆண்டவர் பங்காகவே தசம பாகம் ....300

38. ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன் அவர் ....267

ஆண்டவரே உமது வார்த்தை ....

39. ஆண்டவா மோட்சகதி நாயனே ....83
40. ஆத்தும அடைக்கலம் அன்புள்ள யேசுவே ....262
41. ஆத்தும ஆதாயம் செய்குவோமே இது ....275
42. ஆத்துமமே என் முழு உள்ளமே உன் ....7
43. ஆதம் செய்த பாதகம் தொலைய மன்றாடி ....38
44. ஆதரி ஐயா இந்த அவனியில்பேய் எனை ....325
45. ஆதாமின் பாவத்தாலே அரூபன் உருபமான ....49
46. ஆதாரம் நீ தான் ஐயா என் துரையே ....442
47. ஆதி அந்தம் இல்லானே அளவில்லா வல்லபனே ....62
48. ஆதி பராபரனின் சுதனே கிறிஸ்தேசு நாதா எனக் ....180
49. ஆதித் திருவார்த்தை திவ்விய அற்புதப்பாலகனாகப் பிறந்தார் ....37
50. ஆதிபிதாக் குமாரன் ஆவி திரி யேகர்க் கு ....31
51. ஆதியாம் மகா ராஜனே எந்த வேளையும் ....235
52. ஆமென் அல்லேலூயா மகத்துவத் தம்பராபரா ....114
53. ஆர் இடத்தில் ஏகுவேன் நான்? ஆதரி ஐயா ....197
54. ஆரணத் திரித்துவமே எமை ....234
55. ஆரிடத்தில் ஏகுவோம்? எம் ஆண்டவனே ....200
56. ஆரிடம் போவேன் நான் அவதிகள் மிகுந்திடில் ....430
57. ஆரிவராராரோ இந்த அவனியோர் மாதிடமே ....350
58. ஆரும் துணை இல்லையே எனக் ....184
59. ஆவி உடல் பொருள் அத்தனையும் உமக்(கு) ....431

60. ஆவியை அருளுமே சுவாமீ எனக்......136

61. ஆவியை மழைபோலே யூற்றும் பல......137

62. ஆற்றிக்கொள்ளுவோம் மனதை கிறிஸ்துவினால்......340

63. ஆறுதல் அடை மனமே கிறிஸ்துவுக்குள்......339

64. ஆனந்த கல்யாணா இச்சோபனத்......473

65. ஆனந்தம் கொண்டாடுவோம் நாம்......390

66. ஆனந்தமாக இச்சங்க நாளில்......465

67. ஆனந்தமே பரமானந்தமே யேசு......451

68. ஆனந்தமே ஜேயா ஜேயா......322

## இ

69. இங்கெமது நடுவில் எழுந்திடுவாய் இந்நாளில்......309

70. இத்தனை பாடேன் பட்டீர்? இறையே என்னாலே......99

71. இத்தனை பெருங்குருசை ஐயா நீர்......108

72. இந்த சுவிசேடம்போ லெங்கும் அகப்படாது......147

73. இந்த மங்களம் செழிக்கவே கிருபை செய்யும்......313

74. இந்த வேளையினில் வந்தருளும் தேவ ஆவியே இப்போ......130

75. இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் கர்த்தாவே.......290

76. இந்நாள் இரட்சிப்புக்கேற்ற நல் நாள்......149

77. இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள்......148

78. இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார் கம்பீரமாய்......113

79. இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த......320

80. இம்மணர்க் குன்னருள் ஈ பரவாசா ..... 314
81. இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே ..... 438
82. இயேசு கிறிஸ்து மாறாதவரே ..... 494
83. இயேசு கிறிஸ்து வருகிறார் வருகிறார் வருகிறார் ..... 420
84. இயேசு நாமம் ஒன்றை நம்புவீர் ..... 152
85. இயேசு நாமமல்லாம் உலகினில் ..... 151
86. இயேசு நாயகனைத் துதி செய் செய் ..... 175
87. இயேசு நான் நிற்குங் கன்மலையே மற்ற ..... 443
88. இயேசு நேசிக்கிறார் இயேசு நேசிக்கிறார் ..... 211
89. இயேசுநாதா இவ்வேளை வருவாய் ..... 139
90. இயேசுநேசரே விசுவாசக் கண் களால் ..... 439
91. இயேசுமகா ராஜன் வரும் வேளையறியாயே ..... 421
92. இயேசுமகேசனை நான் சிந்திப்பதென் ..... 399
93. இயேசுவின் திருநாமம் பாரில் ..... 397
94. இயேசுவின் நாமமே திருநாமம் முழு ..... 73
95. இயேசுவை அன்றி வேறொரு ரட்சகர் ..... 150
96. இயேசுவை நான் நம்பி சீவியம் செய்குவேன் ..... 452
97. இரங்கும் இரங்கும் கருணைவாரி ..... 186
98. இலவசமாய் நீர் பெற்றுக்கொண்டீரே ..... 299
99. இவரே பெருமான் மற்றப் பேர் ..... 389
100. இறைவன் நீயே எளியனுக் ..... 217

101. இன்பக்ரு பாகரன் நீர் இவ்வாண்டை உம் ....................478
102. இன்றே நீ என்னுடன் இருப்பாய் பரதீசில் ....................85
103. இன்றைக்கே மனந்திரும்புவாய் ....................167
104. இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய் ஏசுநாதையா ....................16
105. இன்னமும் நாம் யேசு பாதத்தில் சந்திக்கும்வரை ....................495

106. ஈசனே கிறிஸ்தேசு நாயகனே உன்றன் ....................403

## உ

107. உச்சித பட்டணம் பட்சமுடன் செலுவோம் ....................344
108. உச்சித மோட்ச பட்டணம் போக ....................361
109. உந்தன் ஆவியே சுவாமி என் தன் மீதினில் ....................129
110. உந்தன் சித்தம் போல என்னை ஒவ்வொரு நாளும் நடத்தும் ....................446
111. உம்மைப் போல யாருண்டு என்னை நேசிக்க ....................401
112. உருகாயோ நெஞ்சமே குருசினில் அந்தோ பார் ....................407
113. உலகம் நில்லாது நல்மனதே நீ கேளு. ....................333
114. உலகமுன் சதமென்று எண்ணியிராதே ....................485
115. உலகில் பவப் பாரத்தால் சோரும் இளைப் ....................166
116. உலகும் வானும் செய்தாளும் ஒப்பில் சர்வவல்லவராய் ....................503
117. உள்ளக் கருத்துடன் இசைந்து கூடுவோம் நம் இயேசு நாதரின் ....................61
118. உனக் கொத்தாசை வரும் நல் உயர் பருவதம் இதோ ....................253
119. உனக்கெதுவேண்டும்? இன்னும் எது வேண்டும்? ....................425
120. உன்தன் சுயமதியே நெறி என் ....................362

121. உன்னதப் பரமண்டலங்களில் வசிக்கும் ........ 1

122. உன்னையே நிமிஷந் தோறும் ஓர்ந்தறி மனமே. ........ 369

எ

123. எங்கள் மீதிரங்குவீர் ஐயா இரக்கமுறும் ........ 329

124. எங்கள் விண்ணப்பம் இன்று கேள் ஐயா ........ 283

125. எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர் ........ 103

126. எத்தனை திரள் என் பாவம் என் தேவனே ........ 181

127. எதற்காய் அஞ்சுகின்றனை பாவி? மனுவேல் நான் இருக்க ........ 170

128. எது வேண்டும் சொல் நேசனே உனக் ........ 371

129. எந்தன் நிர்பந்தம் பாரும் என் மக்களே ........ 467

130. எந்தன் பூமானைக் காண சிந்தை பெருகுதையோ ........ 418

131. எந்தை எந்தை முந்துந் திருமகன் ........ 353

132. எந்நாளு மேதுதிப்பாய் என்னாத்துமாவே நீ ........ 447

133. எப்படித் தப்பிடுவாய் தண்டனைக்(கு) எப்படித் தப்பிடுவாய் ........ 428

134. எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக் கொள்வதற் ........ 158

135. எப்போ காண்பேனோ? எப்போ சேர்வேனோ? ........ 349

136. எப்போதுமே எப்போதுமே எப்போதுமே இன்பவாழ்வே ........ 454

137. எருசலேமே எருசலேமே எருசலேமே எருசலேமே ........ 410

138. எல்லாம் ஏசு மயம் ஜெகம் ........ 75

139. எல்லாம் யேசுவே எனக்கெல்லா மேசுவே. ........ 212

140. எழுந்தருள்வாய் தேவா எழுந்தருள்வாய் தேவா ........ 475

141. எழுந்தருளும் ஏசு சுவாமி ........ 111

142. எழுந்தனன் முகில் மேலே விண்ணதில்........115
143. எழுந்தார் இறைவன் ஜெயமே ஜெயமெனவே........415
144. என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது என் ஆவி........504
145. என் உயிர் நேசர் இயேசுவை நான்........387
146. என் உள்ளங் கவராய் நீர் மரித்த........440
147. என் ஐயா தினம் உனை நம்பி நான்........220
148. என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்........246
149. என்தன் பரமகுரு செய்த உபகாரத்தை........8
150. என்தன் ஜீவன் சொந்தமதாகத் தத்தம் செய்கிறேன்........204
151. எனது கர்த்தரின் இராசரீக நாள் எப்போ வருகுமோ?........122
152. எனது கர்த்தரின் ராஜரீக நாள் எப்போ வருகுமோ?........123
153. என்றைக்கு காண்பேனோ என் ஏசு தேவா?........71
154. என்றைக்குச் சாவேனோ? என் யேசுவை நான்........341
155. என்ன என் ஆனந்தம் என்ன என் ஆனந்தம்........413
156. என்ன என் ஆனந்தம் என்ன என் பேரின்பம்........484
157. என்ன செய்குவேன் எனக்காய் இயேசுமைந்தன்........411
158. என்ன பாக்கியம் எவர்க்குண்........53
159. என்னாலே ஜீவன் விடுத்தீரோ ஸ்வாமி?........100
160. என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்........203
161. என்னையும் உம தாட்டின் மந்தையோ........198
162. என்னோ பல நினைவாலும் நீ உன்னை அலைக்கழிப்பாய்?........252

ஏ

163. ஏங்குதே என்ன கந்தான் துயர்...98

164. ஏசு கிறிஸ்து நாதர்...351

165. ஏசு மகாராசனுக்கே இன்றும் என்றும் ஜே...493

166. ஏசு ராஜா எனை ஆளும் நேசா...76

167. ஏசுநாதன் சாவை வென்று எழுந்திருந்தானே...112

168. ஏசுநாதனே இரங்கும் என் ஏசு நாதனே...221

169. ஏசுநாயகா வந்தாளும் எந்நாளும் திவ்ய...312

170. ஏசுவே உமதுரை மிகப் பகரும் சுவிசேஷமானதை...78

171. ஏசுவே கிரு பாசனப்பதியே கெட்ட...225

172. ஏசுவையே துதிசெய் நீ மனமே...56

173. ஏசையா பிளந்த மலையே...255

174. ஏதனாதி தேவனே சிலுவை சுமந்...106

175. ஏற்றுக் கொண்டருளுமே தேவா இப்போ...238

176. ஏற்றுக்கொள்ளவேணுஞ் சுவாமி எங்கள் வேண்டலை....14

177. ஏன் இந்த பாடையா? நான்...91

178. ஏன் மயங்கிறாய் மனமே? ஏன் மயங்கிறாய்? கான...153

ஐ

179. ஐயனே இவர்க் காசி ஈகுவாய்...460

180. ஐயனே நரர் மீதிரங்கி அருள் ஐயனே...138

181. ஐயா உமது சித்தம் ஆகிடவே வேணும்...244

182. ஐயா உனதருள் புரி அருமை மேசையா...7764

183. ஐயா நீரன்று அன்னா காய்பாவின் வீட்டில்....109

184. ஐயையா நான் ஒரு மா பாவி என்னை....132

185. ஐயையா நான் பாவி என்னை ஆளும் தயாபரனே....185

186. ஐயையா நான் வந்தேன் தேவ....202

187. ஐயையோ என்தன் அக்ரமம் போக்க....193

188. ஐயோ நான் ஒருபாவ ஜென்மி ஆனேனே....178

ஒ

189. ஒரு மருந்தரும் குருமருந்தே....367

190. ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க....382

ஓ

191. ஓ தாகம் மிகுந்தவரே அமர்ந்த....161

192. ஓ மனந்திரும்பு பாவத்தை விட்டோடவே விரும்பு....160

193. ஓ ஸ்திரீ வித்தேசையா....281

194. ஓகோ பாவத்தினைவிட் டோடாயோ?....171

195. ஓசன்னா பாடுவோம் ஏசுவின் தாசரே....502

196. ஓடிவா ஜனமே கிறிஸ்து வண்டைக்....18

197. ஓய்வு நாளதனை யாசரித்திடுவீர் உலகிலுள்ளோரே நீர்....27

198. ஓய்வு நாளதை ஸ்தாபித் தருளிய....26

199. ஓய்வுநாள் இது மனமே தேவனின்....23

க

200. கண்களை ஏறெடுப்பேன் மாமேரு நேராய் என்....383

201. கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்....24

202. கர்த்தர் பிறப்புப் பண்டிகையைக்....492

203. கர்த்தர் பெரியவர் அவர் நமது....386

204. கர்த்தரின் பந்தியில் வா சகோதரா....292

205. கர்த்தருக்குப் பயந்தன்னவர் வழியில் உத்தமமாய் நடப்போன்....474

206. கருணா கரனே பரமே சுரனே....48

207. கருணாகர தேவா இரங்கி இந்தக்....21

208. கருணைநிறை கர்த்தனே எம் காவலா நீயே....455

209. கல்லும் அல்லவே காயம் வல்லும் அல்லவே இது....331

210. கல்லும் அல்லவே காயம் வல்லும் அல்லவே இது....332

211. கவலை வைக்காதே மகனே நீ....445

212. கனம் கனம் பராபரன் கருணையின் குமாரனே....93

213. காட்டும் நல் வகை காட்டும் ஐயரே ஏழைப் பாவிக்குமது....231

214. காப்பார் உன்னைக் காப்பார்....479

215. காரும் கிறிஸ்தேசுவே எனைக் காரும் கிறிஸ்தேசுவே....236

216. காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்....450

217. காலமே தேவனைத் தேடு ஜீவ....15

218. கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே நல்ல....196

219. கிருபாகரனைத் துதிப்போம் வணக்கமாய்ச் சங்....302

220. கிருபை கூரும் ஐயனே பாவி என்....214

221. கிருபை புரிந்தெனை ஆள் நீ பரனே....230

222. குணப்படு பாவி தேவ கோபம் வரும் மேவி இப்போ. ........ 169

223. குணம் இங்கித வடிவாய் உயர் கோவே ஏசு தேவே ........ 307

224. கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறே னெங்கள் ........ 354

225. குருசினில் தொங்கியே குருதியும் வடிய ........ 107

226. குருவபிஷேகஞ் செய்த கொள்கை நயந்தெங்கள் ........ 285

ச

227. சகோதரர்க ளொருமித்துச் ........ 357

228. சத்தாய் நிஷ்களமாய் ஒரு சாமியமும்இலதாய் ........ 374

229. சத்திய வேதத்தைத் தினம் தியானி ........ 141

230. சதி பேய் செயுது துணை நீயே ........ 242

231. சந்தத மங்களம் மங்களமே ........ 310

232. சந்ததம் மா தேவா துதி ........ 464

233. சந்துஷ்டி கொண்டாடினானே ........ 194

234. சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து ........ 52

235. சரணம் சரணம் அனந்தா சச்சிதானந்தா ........ 95

236. சரணம் சரணம் அனந்தா சச்சிதானந்தா ........ 96

237. சரணம் சரணம் சரணம் எனக்குன் ........ 2

238. சரணம் நம்பினேன் யேசு நாதா இது ........ 9

239. சருவ லோகாதிபா நமஸ்காரம் ........ 29

240. சருவேசுரா ஏழைப்பாவி என் பேரிலே ........ 190

241. சருவேஸ்பரனே சரணம் சுபதினமதில் மகிழ் ........ 471

242. சன்மார்க்கர் பண்பும் சாற்றக் கேளும் ........ 264

243. சாலேமின் ராசா சங்கையின் ராசா ஸ்வாமி வாருமேன்......................121

244. சித்தப்படி இரங்கையா நின் திருச்.......................................................457

245. சித்தம் கலங்காதே பிள்ளையே...........................................................444

246. சிந்தனைப் படாதே நெஞ்சமே உனை ரட்சித்த..........................................249

247. சிந்தையுடன் தெய்வாலயந்தனில் சேர்வோம் திரி.....................................476

248. சிலுவைக்காட்சி என்............................................................................408

249. சீர் அடை தருணம் இதறி மனமே.........................................................168

250. சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம் ஆதி......................................................58

251. சீர்திரியேக வஸ்தே நமோ நமோ நின்.....................................................376

252. சீர்மிகு வான்புவி தேவா தோத்ரம்.........................................................277

253. சுத்திகரியாயோ துர்க்குணம் நீங்க என்னைச்.........................................134

254. சுதன் பிறந்தார் சுதன் பிறந்தார்............................................................50

255. சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசுக் கிறிஸ்துவுக்கு...................................303

256. சுந்தரப் பராபரனே பரி சுத்தன் கிறிஸ்தெனும் நித்தியனே.........................54

257. சுவிசேடம் கூறுவோம் வாரீர் கன..........................................................301

258. சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில்.........................................482

259. செய்ய வேண்டியதைச் சீக்கிரம்............................................................337

260. சென்றார் சென்றார் மனுவேல் பரலோகம்..............................................117

261. சேவித்துக் கொண்டேன் ஐயா சீர்பாதத்தைத்........................................271

262. சொந்தம் உமக்கினி என் ஏசுதேவா பாவ..............................................400

263. சொல்லரும் மெய்ஞ்ஞானரே மேன்மை ப்ரபுவே........................................70

264. சோபன கீதம் பாடுவோம் சுவிசேச மேன்மை ..........................................305

## ஞா

265. ஞான சுவிசேஷமே.......................................................................... 144

266. ஞான திரி முதலொரு பொருளை நரர் சுகமொடு வர அருள்........324

## த

267. தந்தானைத் துதிப்போமே திருச்..........................................................284

268. தந்தேன் என்னை இயேசுவே.................................................................449

269. தந்தைசரு வேஸ்பரனே உன்தன் மகன் யேசுவுக்காய்............................216

270. தயை கூர் ஐயா என் ஸ்வாமீ பாவி நான்...................................................84

271. தரி தாழ்மையே தெரிந்து வெறு.........................................................368

272. தருணம் இதில் அருள் செய் ஏசுபரனே பாவச் சுமையானது.......... 191

273. தருணம் இதுவே கிருபை கூரும்...............................................................6

274. தருணம் ஈதுன் காட்சி சால........................................................................5

275. தருணம் மழை ஈயும் நாதனே .............................................................327

276. தருணமே பரம சரீரி எனைத்................................................................222

277. தாசரே இத்தரணியை அன்பாய்.............................................................466

278. தாரகமே பசிதாகத்துடன் உம்மிடம் ......................................................297

279. திரிமுதல் கிருபா சனனே சரணம் ....................3
280. திரியேகா திருமகிபா திரியுலகின் பூரணா....................384
281. திரு மாமறையதை ஜெகத்தி லளித்தவனை....................423
282. திருப் பதம் சேராமல் இருப்பேனோ நான்....................433
283. திரும்பிப் பாராதே சோதோமைத்....................336
284. திருமா மறையே அருள் பதியே நின்....................458
285. திருமுகத் தொளிவற்று பெருவினைகளில் உற்று....................183
286. திருவிருந் தருந்திட வாரும் ஏசு....................295
287. திவ்ய சபையை நாட்டுவாய் தேவா யெகோவா தேவா....................282

288. தீதிலா மா மகத்வ தேவா வந்தாளும் அதிசய ....................315
289. தீய மனதை மாற்ற வாரும் தூய ஆவியே கன ....................135
290. தீயன் ஆயினேன் ஐயா எளியேன் உற்ற ....................176

291. துங்கனில் ஒதுங்குவோன் பங்கமின்றித் தங்குவான்....................257
292. துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்....................57
293. துதிபூரணா நீ சுபம் அருள்....................470
294. துய்ய திருப் பாலனே துன்ப வினை சூழ்ந்ததோ மகனே ....................366

295. தூய பரப் பொருளே துன்புற ரட்சித்தருளே....................326

296. தெய்வம் இவர் தெய்வம் இவர் எங்கள் குல ....................64
297. தெய்வன்பின் வெள்ளமே திருவருள் தோற்றமே....................487

298. தேவ சுதன் பூவுலகோர் பாவம் ஒழிக்க மனு ....................87
299. தேவ சுதனைத் துதி செய் எனதுள்ளமே....................321
300. தேவ சேயோ தேவ சேயோ சீவ வான ....................51
301. தேவ தேவனே எகோவா ....................63
302. தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ?....................245
303. தேவசுதன் புவிதனில் பிறந்தார் ....................388
304. தேவதே ஓர் ஏக வஸ்து தேவ நாமனாம் கிறிஸ்து....................65
305. தேவன் மரித்தே இவ்வுலகில் உயிர்த்தே ....................116
306. தேவனே உமையான் மனமாறிப்பிறந்த ஓர் சிறியகுழந்தையாகச் 396
307. தேவனே ஏசுநாதனே இத்....................318
308. தேவனே துயர்காலத் தடைக்கலம் தேவனே ....................258
309. தேவனே நான் உமதண்டையில் இன்னும் நெருங்கிச்....................437
310. தேவா இரக்கம் இல்லையோ? இயேசு ....................218
311. தேவா இவ்வீட்டில் இன்றே மேவி எழுந்து வரவே தயை ....................373
312. தேவா எனை மறக்காதே இந்தச்....................481
313. தேவா சுகம் அருள்வாய் நின் தாசனுக்கு....................372
314. தேவா திருக்கடைக்கண் பார் ஐயா....................228
315. தேவா பர தேவா ஓ யே....................17
316. தேவாதி தேவன் இன்றுயிர்த்தார் ....................25
317. தேவாதி தேவன் மகத்துவத்தை ஆத்மமே....................34
318. தேவாதி தேவனே திருச்சுதன் ஆவியே....................12

319. தேவாதி தேவா திருமறை யோவா ........ 11

320. தேவாதி தேவே நீரே சேவிக்கில் உமை ........ 272

321. தேன் இனிமையதிலும் சத்திய வேதம் ........ 142

322. தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்விய மதுரமாமே ........ 206

323. தேனிலும் மதுரம் வேதம தல்லால் ........ 359

324. தொழுகிறோம் எங்கள் பிதாவே ........ 498

325. தோத்திர பாத்திரனே தேவா ........ 19

326. தோத்திரம் செய்வேனே ரட்சகனைத் ........ 60

327. தோத்திரம் புகழ் கீர்த்தனம் ஜெய சோபனம் உமக்கையா துதி ........ 280

328. தோத்திரிக்கிறேன் நான் தோத்திரிக்கிறேன் தேவ ........ 355

ந

329. நடுத்தீர்ப்புச் செய்ய வாறாரே புவி தனக்கு ........ 128

330. நம்பவேண்டாம் உலகை நம்பவேண்டாம் ........ 334

331. நம்பிப் பிழைக்கலாம் வாரீர் இயேசு கிறிஸ்துவை ........ 427

332. நம்பிவந்தேன் மேசியா நான் நம்பிவந்தேனே திவ்ய ........ 247

333. நம்பினேன் உன தடிமை நான் ஐயா திடப்படுத்தி என்தனை ........ 232

334. நரனாம் எளியேன் நற்கதி சேர ........ 86

335. நல்ல தேவனே ஞான ஜீவனே ........ 380

336. நல்ல விசேஷங் கேளுங்கோ ஏசு ........ 41

337. நல்லனே வேண்டல் கேள் என் நாயனே ........ 227

338. நல்லாயன் ஏசு சாமி ராஜ தாவீதுடை மகவு ....254
339. நல்வழி மெய் ஜீவன் எனும் நாம தேயனே உனை ....248
340. நற்கருணைத் திரு விருந்தை நாடுஞ் சகோதரரே ....294

341. நாம் மோட்ச வின்பம் நாடிப்போவோம் ....360
342. நாளும் வாழும் நாதா வேதா ....486
343. நான் விடமாட்டேன் என் இயேசுவை. ....441

344. நிச்சயம் செய்குவோம் வாரீர் வதுவரர்க்கு ....472
345. நித்தம் நித்தம் பரிசுத்தர் துத்தியம் செய்யும் ....317
346. நித்தம் முயல் மனமே பரி ....426
347. நித்தமும் சிந்தித்து சிந்தித் தேசுவின் நிருமலப் பதம் சேராய் ....110
348. நித்தி யானந்தனே சித்தம் வைத்திரங்குவாய் ....215
349. நித்திய கன்மலை எனக்காய்ப் பிளந்தது ....256
350. நித்தியா இவ் ஆலயத்தில் சேர் ஐயா இதில் ....316
351. நிறைவுற வரந்தா நியமகம் ....468
352. நின் பாதம் துணை அல்லால் வேறொரு துணை ....226
353. நினைந்து நினைந்து கண்ணீர் சொரிந்து ....192
354. நினையேன் மனம் நினையேன் தினம் ....209

355. நீதியாமோ? நீ சொல்லும் ஓய் ....298
356. நீயுனக்குச் சொந்தமல்லவே மீட்கப்பட்ட பாவி ....201

357. நீயே நிலை உனதருள் புரிவாயே ஏசு....81

358. நெஞ்சமே கெத் சேமனேக்கு நீ நடந்து வந்திடாயோ?....405

359. நெஞ்சமே தள்ளாடி நொந்து நீ கலங்காதே கிறிஸ்....260

360. நெஞ்சே நீ கலங்காதே சீயோன் மலையின்....251

ப

361. பக்தியாய்ச் ஜெபம் பண்ணவே சுத்தமாய்த் தெரியாதய்யா....489

362. பணிந்து நடந்து கொண்டாரே பரன் பாலனும்....352

363. பரத்திலே நன்மை வருகுமே நமக்கு நித்திய....347

364. பரத்திலே நன்மை வருகுமே நமக்கு நித்திய....346

365. பரம சேனை கொண்டாடினார்....45

366. பரனே உனை நம்பினேன் உரமுடன் தாங்கையா....229

367. பரனே திருக்கடைக்கண் பாராயோ? என்றன்....219

368. பரனே பரப்பொருளே நித்ய பாக்கியனே சத்ய வாக்கியனே....90

369. பரிசுத்த ஜீவியம் செய்வோம் கிறிஸ்தவரே....270

370. பரிசுத்தாவி நீர் வாரும் திடப்....462

371. பவனி செல்கின்றார் ராசா நாம்....404

372. பஜனைசெய் மனமே மேசியா....276

373. பாக்கியம் தந்தருளே பர மானந்த மெய்....233

374. பாக்கியர் இன்னார் என்றிறைவன்....265

375. பாடித் துதி மனமே பரனைக் கொண்....279

376. பாணிக்ரகணஞ் செய்யும் இருபேருக்கும்....308
377. பாதகர்க் காய்ப்படும் பாடுகளைக் கண்ணால்....102
378. பாதகன் என் வினைதீர் ஐயா கிருபாகரா நின்....82
379. பாதம் ஒன்றே வேண்டும் இந்தப்....261
380. பாதம் வந்தனமே வரப்பிர....59
381. பாதைக்கு தீபமாமே....143
382. பார் ஐயா எளியேன் செய் பவ வினை தீர் ஐயா.....189
383. பார்க்க முனம் வருவேன் நெருக்கத்தில்....72
384. பாரும் பாரும் ஐயா எனை அன்பாகப்....323
385. பாலர் ஞாயிறிது பாசமாய் வாரும்....491
386. பாலர் நேசனே மிகப் பரிவுகூர்ந் திந்தப்....291
387. பாலரே நடந்து வாருங்கள்....490
388. பாவப்பாரில் உன்னத சமாதானம் ஓ....241
389. பாவம் போக்கும் ஜீவ நதியைப்....156
390. பாவம் வந்ததையோ உலகுக்கு பாவம் வந்ததையோ....365
391. பாவி இன்றே திரும்பாயோ? நேச....173
392. பாவி எனைச் சற்றே கண்பாரும் ஸ்வாமி....177
393. பாவி ஏசுனைத்தானே தேடித் துயர் மேவினார்....296
394. பாவி நான் என்ன செய்வேன் கோவே....101
395. பாவி மன துருகே....43
396. பாவிக்கு நேசராரே....398

397. பாவியாகவே வாறேன் பாவம் போக்கும்........182
398. பாவியாம் எனை மேவிப்பார் ஐயா யேசுநாதா ஸ்வாமி........179
399. பாவியே பாவியில் பாவியே உனில் அன்புண்டோ? சொல்........174

400. பிரிய இயேசுவின் சேனை வீரர்கள் நாம்........448
401. பின் செல்வேன் என் மீட்பரே நானும்மைப்........199

402. புத்தியாய் நடந்து வாருங்கள் திரு வசனப்........269
403. புத்தியாய் நடந்து வாருங்கள் திருவசனப்........268
404. புறப்படுங்கள் தேவ புதல்வரின் ஊழியரே........273

405. பூமியும் நிறைவும் உலகமும் அதிலுள்ள........385
406. பூரண கிருபையின் மயமே தேவா........80
407. பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்........497

408. பெத்தலையில் பிறந்தவரைப்........393
409. பெத்லேகம் ஊரோரம் சத்திரத்தை நாடிக்........392
410. பெருக்கத் திருக் கருணைப்பிதா அத்தனே........32

411. பொக்கிஷம் சேர்த்திடுங்கள் பரத்திலே........274
412. பொழியும் பொழியும் தயை பொழிந்திடும்........287
413. பொற்பு மிகும் வானுலகும்........94
414. பொன்னகர்ப் பயணம் போகும் புண்ணியர்களே மகிமை........338

415. போற்றிடுவாய் மனமே நீ பரனைப்........278

ம

416. மகனே உன் நெஞ்செனக்குத் தாராயோ? மோட்ச........172

417. மகிழ் மகிழ் மந்தையே நீ அல்லேலூயா பரன்........118

418. மகிழ்ந்து புகழ்ந்து மிகப்பணிந்து துதித்து கிறிஸ்தை........266

419. மகிழையனே மன மகிழையனே........480

420. மங்கள மணாளா மன்றல் ஆசி தா இம்மண மக்கள்........469

421. மங்களம் ஜெயமங்களம் மகத்துவர்க்கு........30

422. மங்களம் ஜெயமங்களம்........28

423. மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு மங்கள வாழ்வு........306

424. மத்திய பானத்தில் மிக நித்தியம் கருத்து வைக்கும்........370

425. மரித்தாரே கிறிஸ்தேசு........155

426. மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்........343

427. மலையாதே நெஞ்சமே இப்படி நம்மை........44

428. மறவாதே மனமே தேவ சுதனை........319

429. மன வாதை அடைந்த கனபாதகன் வஞ்சம்........243

430. மனமே ஓ உன்னதம் மறை தந்தவனே வந்தனர்........67

431. மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க........36

432. மன்னுருவானார் ஆதிமன்னுருவானார் ஏதுந்........394

433. மா பரன்சேய் மனுவாயினாரே யேசு........391

434. மாசில்லாத் தேவ புத்திரன்........55

435. மாதுக்கோர் மணவாளனே வகுத்த ஞான மணாளனே ......................311

436. மாற்றீரென் கவலை அருள்பெற மிக ..........................................................263

437. மிகையாகத் தூஷணித்துச் ..........................................................................97

438. மின்னாள் சீக்கிரம் வரச் சொன்னாள் வரச் சொன்னாள்..................120

439. மேகமீதில் இயேசு ராஜன் வேகம் வாறாரே ..............................................419

440. மேசியா ஏசு நாயனார்   எமை மீட்.........................................................66

441. மோட்ச பேரின்ப பாக்கியங்கள் அறிவுக்கெட்டா ...................................345

ய

442. யார் இவர் ஆரோ? யார் இவர் ஆரோ?.......................................................42

443. யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்..........................................................416

444. யேசு நசரையி னதிபதியே பவ நரர்பிணை யெனவரும்.........................79

445. யேசுவின் ஒதுக்கில் நான் இறக்க அருள் புரியும்....................................342

446. யோர்தான் நதியோரம் திகையாதே மனமே..............................................488

ர

447. ரட்சகர் இயேசு ராஜாதாம் பட்சமுடன் எமைக் கவர்ந்தவராம்.......496

448. ராசாதி ராசன் யேசு யேசு மகா ராசன் அவர் ..............................................417

449. ராஜ ராஜ பிதா மைந்த தேசுலாவுசதா நந்த...........................................40

ல

450. லாபமென்ன உனக்கு லாபமென்ன நீ........429

வ

451. வந்தருள் ஈசன் மனை காண்மகிமை ஏகோவாவே உனை........10

452. வந்தனம் வந்தனமே தேவ துந்துமி கொண்டிதமே இது........35

453. வந்தாரே ஆவிசீஷர்கள் மேலே........140

454. வந்தானே தந்தை பிதாவின் சுந்தர மைந்தனே........124

455. வந்து நல்வரம் தந்தனுப்பையா ஆதிநாதா ஜோதி........13

456. வந்தே கடைக்கண் பாருமேன் சர்வேசுரனே........330

457. வந்தேன் கல்வாரி சிலுவையினருகே எனைத்........406

458. வர வேணும் என தரசே மனுவேல் இஸரேல் சிரசே........119

459. வருவாய் கருணாநிதியே புது........477

460. வருவார் கிறிஸ்தேசு நாதர்தான் அன்று........125

461. வருவார் விழித்திருங்கள் இயேசுநாதர்........126

462. வா பாவி கர்த்தரின் அண்டைக்கு வா........163

463. வா பாவீ மலைத்து நில்லாதே வா.........162

464. வா வா நேசா மலர் சுவிசேஷத்தின் மது தனையுண்டிடவே........453

465. வாரா வினை வந்தாலும் சோராதே மனமே........259

466. வாராயோ திருமீட்பரினண்டை........424

467. வாரீர் பாடுற்றோரே வந்தென் மார்பினில் சார்வீரே உங்கள்........74

468. வாரீரோ? வினை தீரீரோ? எனைக்........210

469. வாரும் எமது வறுமை நீக்க ....328
470. வாரும் ஐயா போதகரே வந்தெம்மிடம் தங்கியிரும் ....381
471. வாரும் திருக் கண்ணாலே பாரும் பரிசுத்தாவி தாரும் ....286
472. வாரும் தேற்றரவரே வாரும் எனைச் ....133
473. வாரும் மனந்திரும்பி வாரும் கிறிஸ்துவிடம் ....164
474. வாரும் வாரும் என தடி வந்து சேரும் ....165
475. வாருமே வழி காட்டுமே யேசு வறியன் என் கலி ஓட்டுமே. ....240
476. வாருமையா என்னுள்ளத்திலே ....377
477. வான இராச்சியம் வந்ததோ கோ கோ ....159
478. வான நகரத்தின் மேன்மையென சொலுவோம் கன ....348
479. வானம் பூமியோ? பராபரன் ....46
480. வானாதி தாள் காட்டும் நல்ல ....145

481. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் மெய் ....195
482. விசுவாசியின் காதில் பட யேசுவென்ற நாமம் ....207
483. விண்மணி பொன்மணி வித்தக மணியே ....436
484. விந்தை கிறிஸ்தேசு ராசா ....434
485. விந்தையாகவே சாவை வென்றுயிர்த்தனரே ....414
486. விரும்பாதே மனமே உலக வாழ்வை ....335
487. விலை மதியா ரத்தத்தாலே மீட்கப்பட்டீரே ....157
488. வினை சூழா திந்த இரவினில் காத்தாள் ....22

489. வீராதி வீரர் ஏசு சேனை நாங்கள் ........356
490. வேத புத்தகமே வேத புத்தகமே........358
491. வேதமே என்ன சொல்லுவேன்? நின் மாட்சியை.........422
492. வேதா தயை நிறை தாதா ஏசு........187
493. வேறு ஜென்மம் வேணும் மனம்........154

494. வையகந் தன்னை நடுத்தீர்க்க இயேசு........127

ஜ

495. ஜகநாதா குரு பரநாதா திரு........88
496. ஜகநாதா குரு பரநாதா திரு........89
497. ஜகமே உன்னால் என்ன சுகமே? ........483

498. ஜீவ வசனங் கூறுவோம் சகோதரரே........304
499. ஜீவனே நித்திய ஜீவனே........68
500. ஜீவனேசு கிருபாசன்னா எனின்........224

501. ஜெப சிந்தை எனில் தாரும் தேவா என்னை ........213
502. ஜெபம் மறவாதே நேசனே எக்காலமும் நீ........459
503. ஜென்மம் ஏதுக்கு? ஜெபம் செய்யா........363

ஸ்

504. ஸ்தோத்திரம் கிருபை கூர் ஐயா........20

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆராதனை ஆரம்பம் | - 1-12, 374 - 377 |
| ஆராதனை முடிவு | - 13, 14 |
| காலை | - 15-19, 378-381 |
| மாலை | - 20-22, 382, 383 |
| ஓய்வு நாள் | - 23-27 |
| திரியேகர் | - 28-30 |
| பிதாவாகிய தேவன் | - 31-35 |
| குமாரனாகிய தேவன் | - 36-126 |
| வருகை | - 36-44 |
| பிறப்பு | - 45-55, 391-395 |
| கிறிஸ்து துதி | - 56-75 |
| பிரார்த்தனை | - 76-86 |
| ஜீவியம் | - 87-89 |
| பாடும் மரணமும் | - 90-110, 404-413 |
| உயிர்த்தெழுதல் | - 111-114, 414-417 |
| பரமேறல் | - 115-118 |
| இரண்டாம் வருகை | - 119-128, 418-421 |
| பரிசுத்த ஆவியானவர் | - 129-140 |
| பரிசுத்த வேதாகமம் | - 141-147, 422, 423 |
| இரட்சணியம் | -148-194, 424-434 |

இரட்சணியம் வழி - 148-158, 424-425

இரட்சணியம் அழைப்பு - 159-175, 426-429

இரட்சணியம் பாவ அறிக்கை - 176-194, 430-434

கிறிஸ்தவ ஜீவியம் - 195-280, 435-485

கிறிஸ்தவ ஜீவியம் -விசுவாசம் - 195-204, 235

கிறிஸ்தவ ஜீவியம் -அன்பு - 205-212

கிறிஸ்தவ ஜீவியம் - ஜெபத்தியானம் - 213-241, 436-444

கிறிஸ்தவ ஜீவியம் -போராட்டம் - 242-244

கிறிஸ்தவ ஜீவியம் -நம்பிக்கை - 245-263, 445-447

கிறிஸ்தவ ஜீவியம் -பரிசுத்த நடக்கை - 264-270, 448, 449

கிறிஸ்தவ ஜீவியம் -முயற்சி - 271-275, 450-453

கிறிஸ்தவ ஜீவியம் -போற்றுதல் - 276-280, 454, 455

திருச்சபை - 281-280, 456-475

திருச்சபை -சபைச்சங்கம் - 281-284, 456, 457

திருச்சபை -குருக்கள் - 285-289, 458-460

திருச்சபை -ஞானஸ்நானம் -290, 291

திருச்சபை -இராப்போஜனம் - 292-297, 461-463

திருச்சபை -தருமம் - 298-300, 464, 465

திருச்சபை -சுவிசேஷப் பிரபல்யம் - 301-305, 466, 467

திருச்சபை -விவாகம் - 306-315, 468-475

திருச்சபை -தேவாலயம் - 316-318, 476

| | |
|---|---|
| வருஷம் | – 319–324, 477–480 |
| அபயமிடுதல் | – 325–330, 481 |
| அநித்தியமானவைகள் | – 331–337, 482–486 |
| நல்மரணம் | – 338–343, 487 |
| மோட்சம் | – 344–349, 488 |
| பாலர் பாட்டுகள் | – 350–361, 489, 490 |
| விசேஷ சமயம் | – 362–373, 491–500 |

## சிமியோனின் கீதம் (லூக்கா 2: 29–32)

**ஆண்டவரே உமது வார்த்தை**
/ யின் ப/டி உமது அடியேனை இப்பொழுது
சமாதானத்தோடே / போக விடுகி /றீர்.

புறஜாதி /களு /க்கு பிரகாசிக்கிற /ஒளி /யாக /வும்.

உமது ஜனமாகிய இஸ்ர /வேலு /க்கு ம /கிமை யாக /வும்.

தேவரீர் சகல ஜனங்களுக்கு /முன்பா /க ஆயத்தம் பண்ணின
உம்முடைய இரட்சண்யத்தை என் /கண்கள் /கண்ட /து.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த /ஆவிக் /கும்
மகி/மை யுண்/டாவ தாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்/பொழுது
/மான சதா காலங்களிலும்
மகிமையுண்டாவ/தாக/ஆ/மென்.

# ஞான கீர்த்தனைகள்

## 1. கர்த்தருடைய ஜெபம்

**கழிநெடில்**

**உன்னதப் பரமண்டலங்களில் வசிக்கும்**
ஒளிர்பிதா வே, உனின் நாமம்
உயர் பரி சுத்த மாய்த்தொழப் படுக;
உனது ராச்சிய முறை வருக;
முன்னிய உனது சித்தமே பரத்தில்
முடியுமாப் போல, இப்புவியில்
முடிவுறச் செய்யப் படுவது மாக
முழுதும் நின் கரத்தையே நோக்கும்
நின் அடியார்க்கன் றாடக உணவு
நிரம்பவே அருள; பிறர் இயற்றும்
நீதிக்கே டினை யாம் பொறுப்பது போல,
நிமலனே, எம்பவம் மனியாய்;
இன்னமும் எமைச்சோ தனைக்குள் படாமல்
இடர் தவிர்த் திரக்கமாய்க் காவாய்;
இராச்சியம் வல்லமை மகிமைமற் றெவையும்
என்றும் உன் உடைமையே; ஆமென்.

*– சவரிமுத்து உபாத்தியாயர்*

**2. இராகம்: செஞ்சுருட்டி** **பிலந்திதாளம்**

*பல்லவி*

**சரணம், சரணம், சரணம் எனக்குன்**
தயைபுரியும், என்பரனே.

*அனுபல்லவி*

மரணத்தின் பெலன் அழித்துயிர்த்த என்
மன்னா, ஓசன்னா! – சரணம்

***சரணங்கள்***

1. தரணி தனில் வந் தவதரித்த தற்
பரனே, எனக்காக–வலு
மரணம் அடைந்தும், உயிர்த்தெழுந்த தென்
மகிமை, நித்திய பெருமை: – சரணம்

2. சுரர்கள் போற்றும் பரனே, உனக்குத்
துரோகியான எனக்கு–நீயே
இரவு பகல் என் குறைவு நீக்க, உண்
டேது நலம் என் மீது; – சரணம்

3. எவ்வித நன்மைக்குங் காரணனே, உனை
ஏழை அடியேனே–பற்றி
இவ்வுலகத்தில் எவ்வேளையும் போற்றவே
இரங்காய், எனக்கிரங்காய்: – சரணம்

4. தப்பின ஆடதற் கொத்த அடியேனைத்
தானே வந்து தேட, உனக்
கெப்படி சித்தம் உண்டானதிவ் வற்பனுக்
கற்புதமாம் முடி சூட – சரணம்

***– ஜாண் பால்மர்***

## 3. இராகம்:சங்கராபரணம் ஆதிதாளம்

**திபதைகள்**

**திரிமுதல் கிருபா சனனே, சரணம்;**
ஜெக தல ரட்சக தேவா, சரணம்;
தினம்அனு தினம் சரணம்,–கடாட்சித்
தினம்அனு தினம் சரணம்–சருவேசா.

2. நலம் வளர் ஏக திரித்துவா, சரணம்;
நமஸ்கரி உம்பர்கள் நாதா, சரணம்;
நம்பினேன் இது தருணம்–தருணம்;
நம்பினேன், தினம் சரணம்–சருவேசா

3. ஏதமில்[1] துல்லிப ஞானா,சரணம்;
எழில்கரு ணைக் குரு வானாய், சரணம்;
இடர் தொலைத் தருள், தருணம்–பிரதாப
என்பர னே, சரணம்–சருவேசா.

4. உலக[2] நடுவிட மெழும் உனதா,–சரணம்;
ஓர்கிரு பாசன ஒளியே, சரணம்;
ஒளி அருள் வாய்; தருணம்–மனுவோர்க்
குத்தம னே, சரணம்–சருவேசா.

5. நித்திய தோத்திர நிமலா, சரணம்;
நிதி இஸ் ரேலரின் அதிபதி, சரணம்;
நாதா, இது தருணம்–கிருபைக் கோர்
ஆதா ரா சரணம்–சருவேசா!

***– சத்தியநாதன் உபதேசியார்***

**4. இராகம்: போர்த்துகீஸ்** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஆ! வாரும் நாம் எல்லோரும் கூடி**
மகிழ் கொண்டாடுவோம்–சற்றும்
மாசிலா நம் யேசு நாதரை
வாழ்த்திப் பாடுவோம்

***சரணங்கள்***

1. தாரகம்[3] அற்ற ஏழைகள் தழைக்க நாயனார்–இந்தத்
தாரணியிலே[4] மனுடவ தாரம் ஆயினார்; – ஆ!

2. மா பதவியை இழந்து வறியர் ஆன நாம்–அங்கே
மாட்சி உற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார்; – ஆ!

3. ஞாலமதில்[5] அவர்க்கிணை[6] நண்பர் யாருளர்,–பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார். – ஆ!

---

1 குற்றமில்லாத
2 பெத்லகேம்
3 ஆதரவு
4 பூமியிலே
5 உலகத்தில்
6 ஒப்பு

4. மா கொடிதான சாவின் வலிமை நீக்கியே—இந்த
மண்டலத்தில் னின்றுயிர்த்தவர் விண்டலஞ்[1] சென்றார். – ஆ!

5. பாவிகட்காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே—அவர்
பட்சம் வைத் துறும் தொழும்பரை[2] ரட்சை செய்கிறார் – ஆ!

***– ஜாண் பால்மர்***

## 5. இராகம்: பைரவி திரிசுரதாளம்

***பல்லவி***

**தருணம் ஈதுன் காட்சி சால[3]**
அருள்; அனாதியே,—திவ்ய—சருவ நீதியே.

***சரணங்கள்***

1. கருணை ஆசன ப்ரதாப[4]
சமுக சன்னிதா,—மெய்ப்—பரம உன்னதா, – தருணம்

2. பர சுரநரர் பணிந்து போற்றும்
பரம நாயகா,—நின்—பக்தர் தாயகா,[5] – தருணம்

3. உன்னதத்திருந் தென்னை ஆளும்
ஒரு பரம்பரா,—நற்—கருணை அம்பரா,[6] – தருணம்

4. அரிய வல்வினை தீப்பதற்குற
வான தட்சகா,[7]—ஓர்—அனாதி ரட்சகா, – தருணம்

5. அலகை[8] நரகை அகற்றி, முழுதும்
அடிமை கொண்டவா,—என்—தருமை கண்டவா, – தருணம்

6. தினம் தினம் நரர்க் கிரங்கும், இரங்கும்,
தேவ பாலனே,—இம்—மானுவேலனே, – தருணம்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 விண்தலம்
2 அடியாரை
3 மிக்க
4 புகழ்ச்சிக்குரிய
5 அடைக்கலம்
6 கடவுளே
7 படைப்பாளி
8 பேய்

**6. இராகம்: மோகனம்** **சாபுதாளம்**

**பல்லவி**

**தருணம் இதுவே, கிருபை கூரும்,**
வழிபாரும், பதம் தாரும், தாரும்.

**சரணங்கள்**

1. கருணை தெய்வ குமாரா, கன மனுடவதாரா;
அருமை ரட்சக யேசு நாதா,–உல
கனைத்தும் வணங்கும் சத்ய வேதா,–உன்றன்
அடியர்க் கருளும் திருப் பாதா,–சத்ப்ர
சாதா, நீதா![1] – தருணம்

2. வானத்திலிருந்து வந்த ஞானத்தொளி சிறந்த
மகிமைப்பிதாவின் திருப் பாலா,–ஆதி
மைந்தர்க் கிரங்கும் அனுகூலா,–கன
விந்தைக் கருணை மனுவேலா,–மெய்ந்
நூலா, சீலா! – தருணம்

3. அற்ப உலக வாழ்வில் அலைந்து, நிலை குலைந்து,
அலகை[2]ப்படு குழியில் வீழ்ந்து,–தாழ்ந்து,
அஞ்சி அஞ்சி நலிந்தேனே;–அடிமைக்
கஞ்சல் என்றுசொல்லும் கோனே,–சீ
மானே, தானே! – தருணம்

4. இந்த உலகத் தெமைச் சந்தித் தனுக்கிரகித்த
சொந்தக் கிருபைகள் மா காத்ரம்,[3]–அவை
சிந்தித்து முடியா விச்சேத்ரம்,[4]–நிர்ப்
பந்த அடியர்கள் எம்மாத்ரம்!–பத
தோத்ரம்! தோத்ரம்! – தருணம்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 நீதி உடையவனே
2 பேயை
3 முக்கியம்
4 அதிசயம்

**7. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஆத்துமமே, என் முழு உள்ளமே;–உன்**
ஆண்டவரைத் தொழு தேத்து;–இந்நாள் வரை
அன்பு வைத்தாதரித்த
ஆண்டவரைத் தொழுதேத்து.

***சரணங்கள்***

1. போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற்[1] கரிய தன்மையுள்ள – உன் ஆண்

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலக முன்தோன்றி ஒழியாத – உன் ஆண்

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத்தருளும், மேலான – உன் ஆண்

4. வாதை, நோய், துன்பம், மாற்றி, அனந்த
ஓதரும்[2] தயைசெய் துயிர் தந்த – உன் ஆண்

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்,
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் – உன் ஆண்

6. துதி மிகுந்தேற ஸ்தோத்தரி தினமே
இதயமே, உள்ளமே, என் மனமே – உன் ஆண்

***– தைரியம் எழுத்தர்***

**8. இராகம்: ரீதிகௌளை** **அடதாளசாப்பு (375)**

**பல்லவி**

**என்தன் பரமகுரு செய்த உபகாரத்தை**
ஏத்தித் துதிப்பேன்; நானே

1 சொல்வதற்கரிய
2 சொல்லுதற்கரிய

**அனுபல்லவி**

தந்தைப் பரனிடத்தா னந்தத் தொனி விளங்க
சத்தமாக நின்ற நித்திய வஸ்துவான – என்

**சரணங்கள்**

1. வானத் தமலர்[1] சேனை கிரகித்து முடியாத
மகிமைப்ர தாபம் மிகுத் தோன்,–அதி
ஞானத்துடன் உலகும், பரமும், அதில் நிறைந்த
யாவும் நெறியில் பகுத்தோன்,
மேன்மை பொருளதாக தேவ மகத்துவத்தின்
விளங்கும் அனந்த சுகத்தோன்,–அக்கி
யானத் திருள் அகலத் தான் இப்புவியில் உற்ற
அந்த முடி வில்லாத சுந்தர கிறிஸ்துநாத – என்

2. மிக்கப் பராபரனோ டொக்க ஒன்றித்திருந்த
முக்கியம் அனைத்தும் விடுத்து,–ஏவை
மக்கள் துயர் அகலத் துக்க உலகமதில்
மனுடாவதாரம் எடுத்து,
பக்ஷமாக அடிமைக் கோலம் கொண்டரும்
பாடு பட்டுயிர் கொடுத்து,–நரர்
அக்கிரமம் அனைத்தும் நிக்கிரகம் புரிந்து,
அந்தகாரம் அற வந்த யேசுகிறிஸ்து – என்

3. பாவத் திகில் அறுத்துச், சாபத்தையும் தொலைத்து,
பகைஞன் வினையை நீக்கிக்–கொடும்
ஆபத்திலும், அடர்ந்த கோபத்திலும் விழுந்த
அடிமைகளைக் கை தூக்கி,
தேவத்திரவியம் என்ற ஜீவ போஜனத்தைத்
திருவுள மாய் உண்டாக்கி,–நித்தம்
மாபத்தி ரமாய்ப் பிர தாபித் தனுக்ர கித்து,
வைத்துக் காத்த ஒரே நித்திய திரித்வமான – என்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 பரிசுத்தர்

**9. இராகம்: நாதநாமக்கிரியை** **சாப்புதாளம்**

*பல்லவி*

**சரணம் நம்பினேன் யேசு நாதா–இது**

***அனுபல்லவி***

தருணம், தருணம், உன்றன் கருணை கூர், வேதா. – சரணம்

**சரணங்கள்**

1. நின் அருளால் இங்கே வந்து,–என்றும்
நின் அடைக்கலமாக என்னையே தந்து,
முன் நாள் வினையைத் துறந்து,–ஆதி
மூலமே, உனக்கோலம், ரட்சியும் என்று. – சரணம்

2. சன்னதி முன் தொண்டன் நின்றே,–என்றும்
தாயான கருணை உனக்கு உண்டென்றே,
சென்னிமேல் கரம் தூக்கி நின்றே, உனைச்
சேவிக்கும் எளியேனைக் கோபிக்காய் என்றே. – சரணம்

3. அலைவாய்த்[1] துரும்புபோல் ஆடி,–உன
ததி கருணை வரச் செம்பாதந் தேடி,
தொலையாத வாழ்வை மன்றாடி,–அன்பின்
தோத்ர சங்கீர்த்தன கீதங்கள் பாடி. – சரணம்

4. இனிய கருணை பொழிவேதா;–எனை
இரு கரத்தால் அணை என் கிறிஸ்து நாதா,
கனி வினையைத் தொலைத்த நீதா,–நசரைக்
கர்த்தாதி கர்த்தா, உன் கருணையைத் தா, தா. – சரணம்

**10. இராகம்: புன்னாகவராளி** **ரூபக சாப்புதாளம் (376)**

**பல்லவி**

**வந்தருள், ஈசன் மனை காண்;மகிமை ஏகோவாவே, உனை**
வாழ்த்தும் அடியார்க்கு நிதம் வாய்த்த பெருவாழ்வே.

---

1 அலையில் அகப்பட்ட

**அனுபல்லவி**

அந்தி பகல் இங்குனை வந்தடையும் அடியார்க் கிரங்கி,
ஆதரவாய் ஆண்டு கொள்வாய், வேத பராபரன் குமாரா – வந்த

**சரணங்கள்**

1. திருக்கருணை மொழியால் மனந்திருக்கறுக்கும் பொருட்டெழுந்து,
தீய வினை மிதித் தழிப்பாய், தேவா பெருமானே
பெருக்கமுள உன் வசனம் பேதையருக்கே பலிக்க
உருக்கமுடன் இரங்கும் ஐயா, உன் பதமே தஞ்சம் என்றாம்; – வந்த

2. பஞ்சம் படை, நோவு, துன்பம், பயங்கரம், செய் பவ வினைக்கும்,
கெஞ்சும் அடியாரைக் காப்பாய், கிறிஸ்தேசு நாதா,
மஞ்சு திகழ் பரமண்டல வாழ்வை விடுத்தே உலகில்
துஞ்சு சிறு பாலகனாகத் தோன்றி வரும் தேவ தேவே – வந்த

3. பூவுலகை ஆளும் மன்னர், போதம் உணர் வேதியர் உன்
பொன் பதத்தை அர்ச்சயிக்க நல பதம் தா, தேவே
மூவுலகினில் துதியும், முக்யம் மகத்துவம் கனமும்,
மா பலமுமே உமக்கே, மங்களம் உண்டாவதாக – வந்த

***– காபிரியேல் உபதேசியார்***

**11. இராகம்: இங்கிலீஷ் ஆதிதாளம்**

**பல்லவி**

**தேவாதி தேவா, திருமறை யோவா**
சிறியனுக் கிரங்காய் தேவா.

**சரணங்கள்**

1. வா, வா, ஜீவா; மகிமைச் சொரூபா,
மலர் முகம் காட்டிட வாவே – தேவாதி

2. ஆயத்தமான அகம் எனக்கிருக்க,
ஆவியின் பெலத்தால் ஜெயிக்க – தேவாதி

3. ஞானத்தின் ஊற்றில் நன்குறப் பருக
நலிந்த என் விசுவாசம் பெருக – தேவாதி

4. அற்புத ஞான அருணோதயமே
அருள் முகப் பிரபை தா, ஐயா – தேவாதி

5. புகழ் உரை வேதப் புதிய உணவால்
புதுப்பெலன் அடைவேனாக – தேவாதி

**– ஏ. தேவசகாயம்**

**12. இராகம்: ஆனந்தபைரவி ஆதிதாளம் (377)**

**பல்லவி**

**தேவாதி தேவனே, திருச்சுதன் ஆவியே**
திரியேகனே, உமக்கே – தோத்திரம்!

**சரணங்கள்**

1. பாவஞ் செய்தோம்; பல பாடுகட்காளானோம்;
பராபரனே, பாவிகட் கிரங்குவாயே! – தேவாதி

2. தீராயோ எங்கவலை! தீர்த்து ரட்சித் தெமக்குத்
தாராயோ உந்தனாவி! தந்தெமையாட்கொள்ளாயோ! – தேவாதி

3. சத்யந்தயை யாதியாஞ் சாதுத்வ குணங்களை
நித்யானந்த மடைய நித்தமெமக் கருள்வாய் – தேவாதி

4. உமது வேதத்திலுள்ள அதிசயங்களைக் காண
உமது சமூகம் தந்து எமை நடத்தும் – தேவாதி

**13. இராகம்: வசந்தபைரவி ஆதிதாளம்**

**கண்ணிகள்**

**வந்து நல்வரம் தந்தனுப்பையா,–ஆதிநாதா, ஜோதி,**
வல்ல ஆவியை வார்த்தெழுப்பையா.

2. பண்ணின ஜெபம் எண்ணிக்கேள், இன்னும்–ஆதிநாதா, ஜோதி,
பண்பாய் உள்ளினில் பதிந்தே ஆளென்றும்

3. காதில் கேட்ட உன் கோதில்[1] வாக்கியம்,–ஆதிநாதா, ஜோதி,
கருத்தில் இருத் தப்போதே பாக்கியம்.

4. புறத்தில் சென்று அறத்தைச் செய்யவே,–ஆதிநாதா, ஜோதி,
புத்தி தா நான் புதிதாய் உய்யவே.

5. இந்தப் பலியின் இனிய கந்தமே[2],–ஆதிநாதா, ஜோதி,
என்னில் கமழ ஈவாய் அந்தமே.

***– ச. அருமைநாயகம்***

**14. இராகம்: இந்துஸ்தானி (378)**

**பல்லவி**

**ஏற்றுக்கொள்ளவேணுஞ் சுவாமி, எங்கள் வேண்டலை.**

**சரணங்கள்**

1. பாவிகளாய்க் கூடினோம்,–பரனே; உமைத் துதித்தோம்;
பார்த்தீர் எங்களிருதயம்–கேட்டீர் எங்கள் ஜெபத்தை
பாவிகள் எம் ஸ்தோத்திர–பலியை யேசுவின் மூலம் – ஏற்றுக்

2. காதால் கேட்ட சத்யத்தைக்–கருத்தாய்த் தியானிக்க,
கர்த்தா, கிருபை செய்தகத்தில்–கருத்தை நன்றாய்ப் பதியும்
சுத்தா, சத்ய அறிவும்,–நித்தா, நித்ய ஜீவனுந்தாரும் – ஏற்றுக்

***– செல்லத்துரை சாலமோன்***

**15. இராகம்: மோகனம் ரூபகதாளம்**

***பல்லவி***

**காலமே தேவனைத் தேடு;–ஜீவ**
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு.

***அனுபல்லவி***

சீலமுடன் பதம் பாடிக் கொண்டாடு;
சீரான நித்திய ஜீவனை நாடு. – காலமே

---

1 குற்றமில்லாத 2 வாசனை

*சரணங்கள்*

4. மன்னுயிர்க்காய் மரித்தாரே,–மனு
மைந்தனெனப் பெயர் வைத்திருந்தாரே;
உன் சிருட்டிகரை நீ உதயத்திலெண்ணு;
உள்ளங் கனிந்து தனி ஜெபம் பண்ணு. – காலமே

2. பாவச் சோதனைகளை வெல்லு;–கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு
ஜீவ கிரீடஞ் சிரத்திலணியச்
சிந்தனை செய்: மனுவேலனைப் பணிய. – காலமே

3. சிறுவர்க ளென்னிடஞ் சேரத்–தடை
செய்யா திருங்களென்றார் மனதார;
பரலோக செல்வ மவர்க்குப் பலிக்கும்;
பாக்கிய மெல்லாம் பரந்து ஜொலிக்கும். – காலமே

4. வேலையுனக்குக் கைகூட,–சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாட;
காலை தேடுவோ ரென்னைக் கண்டடைவாரே,
கண்விழித்து ஜெபஞ் செய்யுமென்றாரே. – காலமே

***– அருள்திரு. ச.பே. ஞானமணி***

**16. இராகம்: சுருட்டி** **அடதாளசாப்பு**

*பல்லவி*

**இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய், ஏசுநாதையா;**
இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்

*அனுபல்லவி*

அன்றுன் உதிரம் நரர்க்கென்று சிந்தி மீட்டெனை
வென்றியுடன் ரட்சித்த நன்றி போலே எனக்கு – இன்

***சரணங்கள்***

1. போன ராவில் என்னைக் கண் பார்த்தாய்,–பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தாய்;
ஈன சாத்தான் எனையே இடர்க்குள் அகப்படுத்தி,
ஊனம் எனக்குச் செய்யா துருக்கமுடன் புரந்தாய்.[1] – இன்

2. கையிட்டுக் கொள்ளும் என்றன் வேலை–யாவிலுமுன்றன்
கடைக்கண் ணோக்கி, அவற்றின் மேலே,
ஐயா நின் ஆசீர்வாதம் அருளி, என் மனோவாக்கு
மெய்யால் நின் மகிமையே விளங்கும்படி ஒழுக. – இன்

3. எத்தனையோ விபத்தோர் நாளே;–தஞ்சம் நீ என
எளியேன் அடைந்தேன் உன்றன் தாளே[2];
பத்தர் பாலனா,[3] எனைப் பண்பாய் ஒப்புவித்தேன், உன்
சித்தம் எனது பாக்கியம், தேவ திருக்குமாரா. – இன்

4. பாவ சோதனைகளை வென்று, பேயுலகுடல்;
பண்ணும் போர்களுக் கெதிர் நின்று,
ஜீவ பாதையில் இன்றும் திடனாய் முன்னிட்டுச் செல்ல
தேவ சர்வாயுதத்தைச் சிறக்க எனக் கணிந்து. – இன்

***– பாளையங்கோட்டைப் பாடல்***

**17. இராகம்: காம்போதி. சாப்புதாளம் (379)**

**பல்லவி**

**தேவா, பர தேவா, ஓ! யே**
கோவா, எனைக் கா, வா.

**அனுபல்லவி**

கா, வா, எனை, இக்காலையில் எழுந்து,
கண் பார்த்தென் மேல் கருணை புரிந்து – தேவா

---

1 காப்பாற்றினாய்
2 பாதம்
3 பரிபாலனன் (பாதுகாப்பவன்)

**சரணங்கள்**

1. கடந்த இரா அந்தகாரம் பின் வாங்க,
காலை ஒளி கண்ணுறக் காத்தெனை ஓங்க,
உடந்தையாக என்னை உரித்துடன் தாங்க,
உன்அருள் புரி இடையூறுகள் நீங்க, – தேவா

2. பாவம் பசாசுலக பாசம் விட்டோட,
பரலோக வாழ்வினைப் பத்தியாய்த் தேட
பூவில் விசுவாசப் போராட்டம் ஆட,
புண்ணியன் உன்னையே போற்றி மன்றாட; – தேவா

3. இந்த நாளில் அடியேன் எழுந்து பணிகள் ஆற்ற,
ஏற்ற சவுக்கியம் பெலன் என்னிடம் தோற்ற,
வந்தருள் உன் திரு வசனமே சாற்ற,
வரம் அளித்திட உன்னை வாழ்த்தியே போற்ற; – தேவா

4. இந்நிலந் தன்னிலே, இறைவா, நீ மாத்திரம்
ஏத்தித் தொழும் மகிமை ஏற்றிடப் பாத்திரம்;
உன் இடந்தான் நோக்கும் ஊன்றி என் நேத்திரம்,[1]
ஓதிடுவேன் என்றும் உமக்கே மா தோத்ரம். – தேவா

***– ஜாண் பால்மர்***

**18. இராகம்: புன்னாகவராளி** **ஆதிதாளம் (380)**

**பல்லவி**

**ஓடிவா, ஜனமே;–கிறிஸ்து வண்டைக்**
கோடிவா, ஜனமே;–பண்டிகை கொண்
டாடிவா, ஜனமே;–அவர் பாதத்தைத்
தேடிவா, ஜனமே.

1 கண்மணி

### அனுபல்லவி

நீடு சமர்[1]புரி கோடி அலகையை
நிக்ரகித்து[2] வாள் பிடித்த உக்ர மனுவேலனைக் கண்(டு)–ஓடி

### சரணங்கள்

1. நேர்ந்தடிகள் துதித்து,–நித்ய ஜெபத்தில்
நீதித் தவங்கள் கதித்து,
சேர்ந்தருளை மதித்து,–சோதிக்கச் செய்த
தீய சர்ப்பத்தை மிதித்து,–அநித்தியமான
ஜெக ஜாலத்தைப்[3] பணித்து, அகத் தாக்ரமத்தை[4] விட்டு,
திட்டமாக நின்று, பத்துக் கற்பனைப் படியே சென்று,
தேவ துந்துமி முழங்க,–சங் கீதங்களும்,
பா வினங்களும் விளங்க,–அதன் ஒலியால்
அண்டமும் குலுங்க, பர மண்டலங்களும் இலங்க,
ஆராதனைகள் செய்து, சீராய் நடந்துகொண்டு,
அரிய பரம் பொருள் ஒருவனை நெஞ்சகம்
உருகி நடம்[5] செய்து, பெருகிய அன்புடன். – ஓடி

2. ஞானஸ்நானம் பெற்றுச்–சுருதி[6] நூலின்
மேன்மைச் சாஸ்திரம் கற்று,
ஈனப் பாவிகள் கற்று,–மாயங்கள், அக்கி[7]
யானக் கிரயைகள் அற்று,–மாங்கிஷத்தின்[8]
இருளாந்த காரம் நீங்கி, அருளானந்தங்கள் ஓங்கி,
இஷ்டமாய் நடந் தெலார்க்கும் துஷ்டத்தனப் பொல்லார்க்கும்
யேசு நேசத்தைச் சூட்டி,–மனோகரத்தால்
பாசத் தன்பு பாராட்டிக்,–கவனமாக
அந்தி சந்தியும் ஜெபங்கள், மந்திரங்களைப் படித்து,
ஆண்டாண்டெமைக் கரிசித்து, மீண்டாண்டானுக்கிரகித்த
அறிவுகள் இங்கித கிருபை விளங்கிய
திரிமுதலின் சரண் உறுதியுடன் தொழ. – ஓடி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 சங்கீதம்
2 உயர்ந்த
3 பிசாசின் தந்திரங்கள்
4 பேராசை
5 நடனம்
6 திருமறை
7 அஞ்ஞான
8 மாமிசம்

**19. இராகம்: போர்த்துகீஸ்** **ஏகதாளம்**

*பல்லவி*

**தோத்திர பாத்திரனே, தேவா,**
தோத்திரம் துதியுமக்கே,
நேத்திரம்[1]போல் முழு ராத்ரியுங் காத்தாய்;
தோத்திரம் துதியுமக்கே!

*சரணங்கள்*

1. சத்துரு பயங்களின்றி,–நல்ல
நித்திரை செய்ய எமை
பத்திரமாய்ச்சீ ராட்டி யுறக்கியே[2]
சுற்றிலுங் கோட்டையானாய். – தோத்

2. விடிந்திருள் ஏகும்வரை–கண்ணின்
விழிகளை மூடாமல்,
துடி[3]தாய் தந்தைபோல் படிமிசை[4] எமது
துணை எனக் காத்தவனே. – தோத்

3. காரிருள் அகன்றிடவே,–நல்ல
கதிரொளி திகழ்ந்திடவே,
பாரிதைப் புரட்டி உருளச் செய் தேகன
பாங்கு சீராக்கி வைத்தாய். – தோத்

4. இன்றைத் தினமிதிலும்–தொழில்
எந்தெந்த வகைகளிலும்
உன் திரு மறைப்படி ஒழுகிட எமக்கருள்
ஊன்றியே காத்துக் கொள்வாய். – தோத்

*– பி.ஐ. ஜாண்*

1 கண்மணி
2 உறங்கவைத்து
3 பதைக்கிற
4 பூமியின்மேல்

## 20. இராகம்: கல்யாணி ஏகதாளம்

**பல்லவி**

**ஸ்தோத்திரம்! கிருபை கூர் ஐயா,**
விழிபார், ஐயா: விழி பார் ஐயா,

**சரணங்கள்**

1. பாத்ரம் இலா எனை நேத்ரம் என உச்சிதமாய்க்
காத்து வந்திடும் எனது கர்த்தாதி கர்த்தனே! – ஸ்தோ

2. இந்த நாள் அளவிலும் வந்த துன்பம் யாவுமே
எத்தனை விட்டகலவே இரங்கிய தேவனே – ஸ்தோ

3. மனதிலும் வாக்கிலும் மட்டில்லாத பாவி நான்;
எனது தீ தகற்றி ஆளும், ஏகாம்பர நாதனே – ஸ்தோ

4. போதனே, நீதனே புனித சத்ய வேதனே
கீதனே, தாசர் துதி கேளும், ஏசு நாதனே – ஸ்தோ

*– ஏ.அ*

## 21. இராகம்: காம்போதி சாப்புதாளம்

***பல்லவி***

**கருணாகர தேவா, இரங்கி இந்தக்**
கங்குலில்[1] எனைக் கா, வா.

***அனுபல்லவி***

இருளேதும் அணுகாமல் இரவிலும் பகல் போல
என்றும் பிரகாசமாக இலங்கும் மா திரியேக. – கரு

1 இரவு

*சரணங்கள்*

1. சென்ற பகலில் காத்து, சேர் விபத்துகள் நீத்து,
சேர்த்தையே வழி பார்த்துத், திகில் தீர்த்து;
நன்றியதற்குத் துதி நவில்வன்,[1] நீ என் கதி
நாடும் என் அதிபதி; நமஸ்காரம் உனக்கதி. – கரு

2. நித்திரையில் உட்புகுந்து, சத்துருப் பசாசு வந்து
நெருங்காமல் நீ எழுந்து, நிலை புரிந்து,
சுத்தநெஞ்சோ டமைந்து தூங்க நல் துயில் தந்து,
தூதர் காவல் நிறைந்து, துணையாய் என்னோடிருந்து. – கரு

3. தாதா,[2] அண்டினேன் உன்னைத் தஞ்சம் நீயே, என்னைத்
தாங்குவதார் பின்னை, சார்வன் நின்னை;
வேதா, நான் உன் தொண்டு வினைஞன் என் நிலை கண்டு,
மீண்டும் செட்டைகள் விண்டு[3] விலகா தணைத்துக்கொண்டு.
– கரு

4. தீய எண்ணங்கள் பாற,[4] திகில் கனவுகள் மாறத்,
திவ்ய சிந்தை உள் ஊற, ஸ்திரம் ஏறக்,
காயம் உயிரும் கூடக், கருத்துன்னோ டுறவாடக்,
காலை நல்லறம் நாடக், கரிசித்துன் துதி பாட. – கரு

***– ஜாண் பால்மர்***

**22. இராகம்: தன்யாசி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**வினை சூழா திந்த இரவினில் காத்தாள்,**
விமலா,[5] கிறிஸ்து நாதா.

*அனுபல்லவி*

கனகாபி ஷேகனே,[6] அவனியர்க் கொளிர், பிர
காசனே, பவ நாசனே, ஸ்வாமி! – வினை

---

1 சொல்லுவேன்
2 தந்தை
3 விரிந்து
4 ஓட–அழிய
5 தூயவர்
6 பொன்போன்ற அபிஷேகமுள்ளவனே

***சரணங்கள்***

1. சென்ற பகல் முழுதும் என்னைக் கண் பார்த்தாய்;
செய் கருமங்களில் கருணைகள் பூத்தாய்;
பொன்றா[1] தாத்ம சரீரம் பிழைக்க ஊண் பார்த்தாய்;
பொல்லாப் பேயின் மோசம் நின்றெனைக் காத்தாய். – வினை

2. சூரியன் அஸ்தமித் தோடிச் சென்றானே;
ஜோதிநட் சத்திரம் எழுந்தன வானே;
சேரும் விலங்கு பட்சி உறைபதி தானே
சென்றன; அடியேனும் பள்ளி கொள்வேனே. – வினை

3. ஜீவன் தந்தெனை மீட்டோய் சிறியேன் உன் சொந்தம்;
ஜெகத் தின்பங்கள் விழைந்து சேர்தல் நிர்ப்பந்தம்;
பாவியேன் தொழுதேன் நின் பாதாரவிந்தம்[2];
பட்சம் வைத்தாள்வையேல், அதுவே ஆனந்தம். – வினை

4. இன்றைப் பொழுதில் நான் செய் பாவங்கள் தீராய்;
இடர்கள் துன்பங்கள் நீங்க என்னைக் கை சேராய்;
உன்றன் அடிமைக் கென்றும் உவந்தருள் கூராய்;
உயிரை எடுப்பையேல், உன் முத்தி[3] தாராய். – வினை

***– பாளையங்கோட்டைப் பாடல்***

**23. இராகம்: கல்யாணி** **ஆதி தாளம் (381)**

***பல்லவி***

**ஓய்வுநாள் இது,–மனமே,–தேவனின்**
உரை யைத் தியா னஞ் செய் கவனமே.

***அனுபல்லவி***

நே தந்தையர் சேயர்க்குதவிய
நெறி இச் சுவிசேஷ வசனமே. – ஓய்வு

---

1 சாகாமல் 2 திருவடி 3 நித்தியம்

**சரணங்கள்**

1. ஜீவ சுக புத்திர செல்வம் தந்தவர்
சேவடி உனக் கபயமே;
மேவி அவர் கிருபாசனத்தின் முன்
வேண்டிக் கொள், இது சமயமே. – ஒய்வு

2. ஆறு நாளுனக் களித்தவர், இளைப்
பாறி எழினில் களித்தவர்;
கூறும் பூரண ஆசீர்வாதத்தைக்
குறித்துணை இதற் கழைக்கிறார். – ஒய்வு

3. கர்த்தர் ஆசனம் குறுகிக்கேள் இன்று
காலை நண் பகல் மாலையும்;
சுத்தம் நாடுவோர் மாத்திரம் வந்து
துதிக்கத் தகும் இத் தேவாலயம். – ஒய்வு

4. ஆத்ம தேகம் நீ கடவுட் குப் படைப்
பாற்ற நற்சுப நாளிதே;
அறையிலே சமுசார ஜெபம் செய்வோர்
அடைவர் பலனிதில் அதனமே – ஒய்வு

*– பாளையங்கோட்டைப் பாடல்*

**24. இராகம்: பூபாளம்** **சாப்புதாளம்**

**கண்ணிகள்**

**கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்**
துதி செய்ய மனமே–எழுந்திராய்.

2. வறண்டு தண்ணீர் அற்ற வனம் இந்தப் புவிதனில்
திரண்ட தயை தேவை–நாடுவேன்.

3. கடவுளின் வல்லமை, கன மகிமை காணும்
இடமதில் செல்வதே–என் இஷ்டம்.

4. ஜீவனைப் பார்க்கிலும் தேவனின் காதலை
ஆவலாய் நாடி நான்–போற்றுவேன்.

5. ஆயுள் பரியந்தம் ஆண்டவர் நாமத்தை
நேயமாய் பாடி நான்–உயர்த்துவேன்.

6. மெத்தையில் ராச்சாமம் நித்திரை கொள்கையில்
கர்த்தரின் செயல்களைச்–சிந்திப்பேன்.

7. அல்லும் பகலும் நான் அவர் செட்டைகளின் கீழ்
தொல்லைக்கு நீங்கியே–ஒதுங்குவேன்.

8. ஆத்துமம் தேவனை அண்டிக் கொள்ள அவர்
நேத்திரம்[1] போல் என்னைக் காக்கிறார்.

*– தீ. யோசேப்பு*

**25. இராகம்: இந்துஸ்தானி (382)**

**பல்லவி**

**தேவாதி தேவன் இன்றுயிர்த்தார்**

**சரணங்கள்**

1. தேவாதி தேவன் றன் நேய குமாரன்,
ஜீவரட்சண்ய உபகாரன், ஏசு – தேவாதி

2. அதிமகி ழொடு கன சுரர் துதிபாட
அடியர்களும் மகிழ் கொண்டாட, ஏசு – தேவாதி

3. சீறும் அலகை சிரமுடைத்ததி திடமாய்
தீயர் கதியடைய இடமாய், ஏசு – தேவாதி

4. சாபம் அற்றிடவே, ஜீவன் உற்றிடவே,
சாவதின் கூருமொடிந்திடவே, ஏசு – தேவாதி

5. சீஷரை யாற்றி, மாசற்றத் தேற்றி
தேவ நெறியை நிறைவேற்றி, ஏசு – தேவாதி

6. மனத்துயர் தரித்தோர் மரத்தினில் மரித்தோர்
மாஜெயங் கொண்ட அதிபனானார், ஏசு – தேவாதி

*– ஜாண் பால்மர்*

---

1 கண்மணி

**26. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**ஓய்வு நாளதை ஸ்தாபித் தருளிய**
உன்னதா, உமக்கே ஸ்தோத்திரம்!

*அனுபல்லவி*

மாய்விலா மறையை யாம் மனதில் உட்கொண்டு
வாழ்த்தி, உம்மைப் புகழ்ந்து போற்ற வாய் விண்டு[1] – ஓய்வு

*சரணங்கள்*

1. தேகக் கவலை, தொழில், யாவையும் ஒழிக்க,
திவ்ய சிந்தையால் எங்கள் இதயமே செழிக்க,
ஏகன் நின் அருள் பெற்றிங் கிகல்[2] அறத் தழைக்க,
எவரும் திருநாளாய்க் கொண்டாடி எக்களிக்க.[3] – ஓய்வு

2. முத்தி வழி விலக்கும் துர்க் குணம் மாற்றி,
முன் நின் றெம்மை நடத்தியே கரை ஏற்றி,
எத்தேசத்தாரும் உம்மை ஏகமாய்ப் போற்றி
இறைஞ்ச[4] அருளும் உமதாவியை ஊற்றி. – ஓய்வு

*– ஜாண் பால்மர்*

**27. இராகம்: லாவணி** **ஆதிதாளம்**

**ஓய்வு நாளதனை யாசரித்திடுவீர்–உலகிலுள்ளோரே; நீர்**
ஓது மேயத்தேவன்றன்–ஆதி விதியிதை[5]–உள்ளத்திற்
கொள்வீரே.

2. ஆறு தினங்களும்–லௌகீக வேலையை–ஆதரவாய்ப் புரிவீர்
ஆன வேழாந்தினம்–வைதீகவலுவலை–அவசியம்
பார்த்திடுவீர்.

---

1 மலர்ந்து
2 பகை
3 மகிழ
4 வணங்க
5 கட்டளை

3. ஆசோதை[1] யாவர்க்கும்–அவசியம் வேண்டுமென்–
றாதியிலெம்பரனார்
அடுத்த வேழா நாளைப்–பரிசுத்தமாக்கினர்;–அப்பரிசறியீரோ?[2]

4. அருமையாமந்நாளை–அவமாக்கித் திருடீர்–அதைத்
திருநாளாக்கி
ஆரியர்[3] போதகங்–கேட்டிடவாலயம்–அதற்கு நடந்திடுவீர்.

5. மக்களுந் தாயரும்–வீட்டுடைத் தலைவரும்–மற்றுள மித்திரரும்[4]
வாருங்களாலயம்–சேருங்கள்; தேவனை–வாழ்த்தி
வணங்குவீரே

*– சு.ச. எரேமியா*

**28. இராகம்: சௌராஷ்டிரம் அடதாளசாப்பு**

**பல்லவி**

**மங்களம்! ஜெயமங்களம்! மகத்துவர்க்கு**
மங்களம்! ஜெயமங்களம்!

**சரணங்கள்**

1. எங்கும் ஒன்றாகவே இருந்திக பரங்களும்
பங்கம் இலாமலே படைத்த பிதாவுக்கும். – மங்

2. நல்ல கதியை மாந்தர் நலமதுடன் அடையத்
தொல் உலகை ரட்சிக்கும் சுதன் ஏசுநாதர்க்கும் – மங்

3. சுத்தரித்து நரர்[5] சுக உலகம் அடையப்
பக்தர்களாக்கும் பரிசுத்த ஆவிக்கும். – மங்

4. இம்முறை முத்தொழில் இயற்றி உலகனைத்தும்
செம்மையுடன் நடத்தும் திரியேக தேவனுக்கு. – மங்

*– ஜாண் பால்மர்*

---

1 இளைப்பாறுதல்
2 தன்மை
3 போதகர்
4 மித்திரர்
5 மனிதர்

**29. இராகம்: சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**கண்ணிகள்**

**சருவ லோகாதிபா, நமஸ்காரம்!**
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்.

2. திரு அவதாரா, நமஸ்காரம்!
ஜெகத் திரட்சகனே, நமஸ்காரம்!
தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில்[1] மாண்டோய், நமஸ்காரம்.

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்!
பரம சற்குருவே,[2] நமஸ்காரம்!
அரூபியாய்[3] அடியார் அகத்தினில் வசிக்கும்
அரிய சித்தே[4] சதா நமஸ்காரம்.

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்!
மூன்றிலொன்றோனே நமஸ்காரம்!
கர்த்தாதி கர்த்தா, கருணாசமுத்திரா,
நித்ய திரியேகா, நமஸ்காரம்.

***– ம. வேதமாணிக்கம்***

**30. இராகம்: இங்கிலீஷ்** **ஆதிதாளம் (383)**

**பல்லவி**

**மங்களம்! ஜெயமங்களம்**
மாசில்லா திரியேகர்க்கு!

**அனுபல்லவி**

சங்கையின் ராஜர்க்கு – எங்குமாபுகழ் நேசர்க்கு – மங்

1. மரத்தில்–சிலுவை
2 ஞானாசிரியர்
3 உருவமில்லாதவர்
4 அறிவு

**சரணங்கள்**

1. அந்தம் ஆதி யில்லாதவர், – விந்தையுலகம் செய்தவர்,
முந்த நமை நேசித்தவர், – மூவுலகுக்கும் ஆண்டவர்
சந்ததம் வாழ்பவர், எந்தையாம் பிதாவுக்கு. – மங்

2. வான லோகமே விட்டு, – ஈனப் பாவியை யிட்டு
தானமா யுயிர் விட்டு, தீன நரரைத் தான் மீட்டு,
வாழும் மணவா ளர்க்கு – நன்மை செய் மனுவேலர்க்கு. – மங்

3. சுத்த இதயமே தந்து, – பக்தர் மனதிலே வந்து,
அத்த னாலயமா யீந்து – நித்தம் துதிபெற நின்று,
சத்தியம் போதிக்கும் – சுவாமி பரிசுத்தாவிக்கும். – மங்

***– அருள்திரு. சா. சீமோன்***

**31. இராகம்: வராளி** **திரிபுடைதாளம் (384)**

***பல்லவி***

**ஆதிபிதாக் குமாரன்–ஆவி திரி யேகர்க்–கு**
அனவரதமும்[1] தோத்திரம்!–திரியேகர்க்கு–கு
அனவரதமும் தோத்திரம்.

***அனுபல்லவி***

நீத[2] முதற் பொருளாய் நின்றருள் சருவேசன்,
நிதமும் பணிந்தவர்கள் இருதயமலர் வாசன்,
நிறைந்த சத்திய ஞான மனோகர,
உறைந்த நித்திய வேத குணாகர,
நீடு வாரி[3] திரை சூழு மேதினியை
மூடு பாவ இருள் ஓடவே அருள்செய். –ஆதி

---

1 எப்போதும் 2 நீதி 3 கடல்

***சரணங்கள்***

1. எங்கணும் நிறைந்த நாதர்–பரிசுத்தர்கள்
என்றென்றைக்கும் பணிபாதர்,
துங்கமாமறைப்[1] பிரபோதர்,[2]– கடைசி நடு
சோதனை செய் அதி நீதர்,
பங்கில்லான்,[3] தாபம் இல்லான் பகர் அடி[4] முடிவில்லான்,
பன் ஞானம், சம்பூரணம், பரிசுத்தம், நீதி என்னும்
பண்பதாய் சுயம்பு[5] விவேகன்,
அன்பிரக்கத யாளப் பிரவாகன்[6]
பார்தலத்தில் சிருஷ்டிப்பு, மீட்பு, பரி
பாலனத்தையும்[7] பண் பாய்நடத்தி அருள். –ஆதி

2. நீதியின் செங்கோல் கைக்கொண்டு–நடத்தினால் நாம்
நீணிலத்தில்லாமல் அழிந்து,
தீதறு நரகில் தள்ளுண்டு–மடிவோ மென்று
தேவ திருவுளம் உணர்ந்து,
பாதகர்க் குயிர் தந்த பாலன் யேசுவைக்கொண்டு
பரன் எங்கள்மிசை தயை வைத்தனர்; இது நன்று
பகர்ந்த தன்னடி யார்க்குறு சங்சலம்,
இடைஞ்சல் வந்த போதே தயவாகையில்
பாரில் நேரிடும் அஞ்ஞான சேதமுதற்
சூரியன் முன் இருள் போலவே சிதறும். –ஆதி

***– காபிரியேல் உபதேசியார்***

**32. இராகம்: தோடி** **ஆதிதாளம் (385)**

**பல்லவி**

**பெருக்கத் திருக் கருணைப்பிதா அத்தனே[8]!**

---

1 தூய
2 பேரறிவுடையவர்
3 நீதியாளர்
4 தொடக்கம்
5 தானாக உருவானவர்
6 பூரணர்
7 பரிபாலனம்–பாதுகாத்தல்
8 கடவுள்

**அனுபல்லவி**

நெருக்கப்படும் எனை ஆள், நித்ய கர்த்தனே –பெரு

**சரணங்கள்**

1. வல்லபம்[1] என்னுயிர் காக்கும் வெகுமானம்;
நல்லவழி சேர்க்குதுன் உன்னத ஞானம் –பெரு
2. சுத்திகரிக்குதுன் துய்ய பரிசுத்தம்;
பத்திரப்படுத்து தெனை நீதிப் பொருத்தம் –பெரு

3. சருவ வியாபகம் எனைச் சார்ந்திருக்குது
பொறுமை சினத்தைப் பொருந்தா துருக்குது[2] –பெரு

4. ஆளுகை எனைத் தெரிந்துன் அடி சேர்க்குது;
மீளவும் உன் நன்மை செல்வம் மிக ஆக்குது –பெரு

5. நேசத்தின் இரக்கம் என் பவத்தை நீக்குது;
மாசற்ற உன் அன்பெனை மகிழ்ச்சியாக்குது –பெரு

6. உன்தன் உண்மை மோட்ச வீட்டிற்குள்ளே கூட்டுது;
சந்தேகம் இல்லாமல் முடிதான் சூட்டுது –பெரு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

## 33. இராகம்: ரீதிகௌளை ஆதிதாளம்

**பல்லவி**

**அமலா[3], தயாபரா, அருள்கூர், ஐயா, குருபர[4]**

**சரணங்கள்**

1. சமயம் ஈராறோர் ஆறு சாஸ்திரங்கள் வேத நான்கும்
அமையும் தத்துவம் தொண்ணூற் றாறும், ஆறுங்கடந்த – அம

1 அருஞ்செயல்
2 கலக்குதல்
3 தூயவர்
4 முதல் ஆசான்

2. அந்தம் அடி[1] நடு இல்லாத தற்பரன் ஆதி,
சுந்தரம் மிகும் அதீத[2] சோதிப்பிரகாச நீதி. – அம

3. ஞானத் ரவிய வேத நன்மைப் பரம போத,
வானத் தேவப்ரசாத[3] மகிமைக் களவில்லாத. – அம

3. காணப்படா அரூப, கருணைச் சுய சொரூப,
தோணப்படா வியாப[4], சுகிர்தத்[5] திருத் தயாப. – அம

4. சத்ய வசன நேயா, சமஸ்த புண்ய சகாயா,
கர்த் தத்துவ உபாயா, கருணை பொழியும் வாயா – அம

5. எல்லை இல்லா மெய்ஞ் ஞான ஏக பர வஸ்தான
சொல் அரிதாம் நிதான, துல்லிபத்[6] தொன்றாம் மேலான – அம

6. கருணாகரா, உப காரா, நிராகரா,[7]
பரமேசுரா, கிரு பாகரா, சர்வேசுரா – அம

– **வேதநாயகம் சாஸ்திரியார்**

**34. இராகம்: சங்கராபரணம் ஏகதாளம் (386)**

**பல்லவி**

**தேவாதி தேவன் மகத்துவத்தை–ஆத்மமே**
ஆவலாய் த்யானி, அன்பின் கிருபை மயமே.

**அனுபல்லவி**

ஏகோவா வெனும்–ஏக சக்ராதிபதி
என்றென்றும் பரிசுத்த–ரெனப் போற்றும் மோக்ஷபதி – தேவா

**சரணங்கள்**

1. அண்ட சராசரம் யாவும் சிருஷ்டித்தவர்
அளவுக் கெட்டாச் சர்வ – ஞானமிகுந்தவர்
தொண்டர் ரக்ஷைக் காய்ச் சுதனை விடுத்தவர்
தொல்புவியோர்–மோக்ஷம் பெறப் பாதை காண்பித்தவர் – தேவா

---

1 ஆதி
2 மனதுக்கு எட்டாத
3 ஜீவஅப்பமாகிய கிறிஸ்து
4 நிறைந்த
5 நற்செயல்
6 நிறைவு–மிகச்சரியான
7 உருவமற்றவனே

2. நேற்று மின்று மென்றும் மாறாத் தன்மையோன்,
நேர்மை பிசகாதோர்க் கானந்த வாய்மையோன்,
வேற்றுமையின் நிழல் தோன்றாத் தூய்மையோன்,
வேண்டிக்கொள்வோர்க் கருளேராளமாய்ப் பொழிவோன் –தேவா

3. அலகைக்[1] காளாகாம லருமை மைந்தனை விட்
டன்பா யெமை மீட்ட எ பரனே ஸ்துதி
உலகில் யாம்பிழைத் தசைவதும் முடிவில்
உம்பரோ[2] டின்புற் றோசன்னா சொல்வதும் கதி – தேவா

***– டி. சுந்தரம்***

**35. இராகம்: போர்த்துகீஸ் திரிசுரதாளம் (387)**

***பல்லவி***

**வந்தனம், வந்தனமே! தேவ துந்துமி[3] கொண்டிதமே![4] – இது**
வரையில் எமையே வளமாய்க் காத்த எம்துரையே, மிகத் தந்தனம்.

***சரணங்கள்***

1. சந்ததஞ் சந்ததமே, எங்கள் தகுநன்றிக் கடையாளமே,–நாங்கள்
தாழ்ந்து வீழ்ந்து சரணஞ் செய்கையில் தயைகூர், சுரர்பதியே.

2. சருவ வியாபகமும் எமைச் சார்ந்து தற்காத்ததுவே,–எங்கள்
சாமி, பணிவாய் நேமி[5] துதிபுகழ் தந்தனமே நிதமே!

3. சருவ வல்லபமதும் எமைத் தாங்கினதும் பெரிதே,–சத்ய
சருவேசுரனே, கிருபாகரனே, உன்சருவத்துக்குந் துதியே.

4. உன்தன் சர்வ ஞானமும் எங்களுள்ளிந்திரியம் யாவையும் –பார்த்தால்
ஒப்பே தருங் காவலே உன்னருளுக்கோ தரும்[6] புகழ் துதி துதியே

5. மாறாப் பூரணனே, எல்லா வருடங்களிலும் எத்தனை–உன்றன்
வாக்குத் தவறாதருளிப் பொழிந்திட்ட வல்லாவிக்குந் துதியே.

***–அருள்திரு. வே. மாசிலாமணி***

---

1 பேய்
2 வானோர்
3 துதி
4 இனிமையாய்
5 கடல் அளவில்
6 ஒப்பு ஏது அரும் காவலே உன் அருளுக்கு ஓதரும் புகழ்

### 36. இராகம்: செஞ்சுருட்டி ஆதிதாளம்

*கண்ணிகள்*

**மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க**
வல்ல பராபரன் வந்தார், வந்தார். –பாவீ

2. இந்நிலம் புரக்க[1], உன்னதத் திருந்தே
ஏகபராபரன் வந்தார், வந்தார். –பாவீ

3. வானவர் பணியுஞ் சேனையின் கர்த்தர்,
மகிமைப் பராபரன் வந்தார், வந்தார். –பாவீ

4. நித்திய பிதாவின் நேய குமாரன்
நேமி[2] அனைத்தும் வாழ வந்தார், வந்தார். –பாவீ

5. மெய்யான தேவன், மெய்யான மனுடன்,
மேசியா, ஏசையா, வந்தார், வந்தார். –பாவீ

6. தீவினை நாசர், பாவிகள் நேசர்,
தேவ கிறிஸ்தையா வந்தார், வந்தார். –பாவீ

7. ஜெய அனுகூலர், திவ்விய பாலர்
திரு மனுவேலனே வந்தார், வந்தார். –பாவீ

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

### 37. இராகம்: இங்கிலீஷ் ஆதிதாளம்

**பல்லவி**

**ஆதித் திருவார்த்தை திவ்விய அற்புதப்பாலகனாகப் பிறந்தார்;**
ஆதந் தன் பாவத்தின் சாபத்தை தீர்த்திட
ஆதிரை[3]யோரையீ டேற்றிட.

1 பாதுகாக்க 2 பூமி [3] உலகம்

### அனுபல்லவி

மாசற்ற ஜோதி திரித்துவத் தோர் வஸ்து
மானிட ரூபந்தனை எடுத்து

மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்,
உன்ன தகஞ்சீர், முகஞ்சீர் வாசகர்,
மின்னுச்சீர் வாசகர், மேனிநிறம் எழும்
உன்னத காதலும் பொருந்தவே சர்வ
நன்மைச் சொரூபனார், ரஞ்சிதனார்[1],
தாம், தாம், தன்னரர் வன்னரர் [2]
தீம், தீம், தீமையகற்றிட
சங்கிர்த, சங்கிர்த, சங்கிர்த சந்தோ
ஷமென சோபனம்பாடவே,
இங்கிர்த,[3] இங்கிர்த, இங்கிர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட –ஆதி

### சரணங்கள்

1. ஆதாம் சாதி ஏவினர்; ஆபிரகாம் விசுவாசவித்து,
யூதர் சிம்மாசனத்தாளுகை செய்வோர்
ஈசாய் வங்கிஷத்[4]தானுதித்தார். –ஆதி

2. பூலோகப் பாவ விமோசனர், பூரண கிருபையின் வாசனர்,
மேலோக இராஜாதி இராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார் –ஆதி

3. அல்லேலூயா! சங்கீர்த்தனம், ஆனந்த கீதங்கள் பாடவே,
அல்லைகள்,[5] தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார். –ஆதி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 இன்பமுடையவர்
2 தம் மக்கள்; கொடிய மக்கள்
3 இனிய
4 வம்சம்
5 மனத்துயர்

**38. இராகம்: லாவணி** **ஆதிதாளம் (388)**

**பல்லவி**

**ஆதம் செய்த பாதகம் தொலைய மன்றாடி**
அனுக்கிரகமாகவே திருக்குமாரனும் நீடி – ஆதி

**அனுபல்லவி**

விதப் பரம போதன்–உயர்
மேன்மைக் கிறிஸ்து நாதன்,
வெகு கோடிப் புகழ் பாடி, தூதர் கூடி,
கொண்டாட நாடி சந்தானே – ஆதம்

**சரணங்கள்**

1. மன்னன் தவீது குல கன்னி மரியினிடமாக
மனுடர்களில் அதிக பிரியம் உற, வினைகள் போக,
திருவானே தருகுவானே; சுய
திரு உருவானே,
மலையானே, கலையானே,–மலைச்
சார்பில் பெத்தலேம் ஊரினில் பிறந்தானே – ஆதம்

2. அகத் துதித் தொளிர் திருத்துவத்தி லொன்றானே,
அனைத்துலகமும் வகுத்துக் காத்து நின்றானே
மா மகத்வ இம்மானுவேலே, மன
பிரிய மிகுதியாலே
மனுவாக, வினைபோக,–பசு
மாட்டுக் கொட்டிலில் காட்டினில் பிறந்தானே – ஆதம்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**39. இராகம்: சுருடா** **ஆதிதாளம்**

***பல்லவி***

**அதி–மங்கல காரணனே**
துதி–தங்கிய பூரணனே–நரர்
வாழ விண் துறந்தோர் ஏழையாய்ப் பிறந்த
வண்மையே[1] தாரணனே[2]! – அதி

---

1 அழகு 2 நிலையானவர்

*சரணங்கள்*

1. மதி–மங்கின எங்களுக்கும்
திதி[1] – சிங்கினர்[2] தங்களுக்கும் – உனின்
மாட்சியும்,[3] திவ்விய காட்சியும் தோன்றிட
வையாய் துங்கவனே! – அதி

2. முடி–மன்னர்கள் மேடையையும்,
மிகு–உன்னத வீடதையும்–எண்ணா
மாட்டிடையே பிறந் தாட்டிடையர் தொழ,
வந்தனையோ தரையில்? – அதி

3. தீய–பேய்த்திரள் ஓடுதற்கும்,
உம்பர்[4]–வாய்த்திரள் பாடுதற்கும்,–உனைப்
பின்பற்றுவோர் முற்றும் துன்பற்று வாழ்வதற்கும்
பெற்ற நல் கோலம் இதோ? – அதி

***– தேவவரம் முன்ஷி***

**40. ஹரிகாம்போதி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**ராஜ ராஜ பிதா மைந்த தேசுலாவுசதா[5] நந்த[6]**
யேசு நாயகனார் சொந்த மேசியா நந்தனே!

*அனுபல்லவி*

ஜெகதீசு[7] ரேசுரன் சுக நேச மீசுரன்[8] மக – ராஜ

*சரணங்கள்*

1. மாசிலா மணியே! மந்த்ர[9] ஆசிலா அணியே! சுந்த்ர
நேசமே பணியே, தந்திர மோசமே தணியே;
நிறைவான காந்தனே[10]! இறையான சாந்தனே! மறை – ராஜ

---

1 மகிமை
2 நிலை குலைந்தோர்
3 மகிமை
4 தூதர்
5 ஒளி
6 மகன்
7 உலகம்
8 இறைவன்
9 வேதம்
10 தலைவன்

2. ஆதியந்த மில்லான் அந்த மாதி னுந்தியிலே[1], முந்த
வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே;
பத ஆமனாமனா! சுதனாமனாமனா! சித[2] – ராஜ

3. மேன்மையா சனனே, நன்மை மேவுபோசனனே, தொன்மை
பான்மை வாசனனே, புன்மை பாவ மோசனனே,
கிருபா கரா நரா! சருவேசுரா, பரா ஸிரீ – ராஜ

4. வீடுதேடவுமே, தந்தை நாடுகூடவுமே, மைந்தர்
கேடு மூடவுமே, விந்தையோடு பாடவுமே,
நர[3]வேட மேவினான்; சுரராடு[4] கோவினான்;[5] பர – ராஜ

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**41. இராகம்: காம்போதி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**நல்ல விசேஷங் கேளுங்கோ,–ஏசு**
நாதன் திரு அவதாரம் செய்த மகா
நல்ல விசேஷங் கேளுங்கோ!

**அனுபல்லவி**

நல்ல விசேஷம் இதுவாம், உலகில் சமஸ்த
நரர்க்கும் சுரர்க்கும் பரத்தினில்
வல்லமை ஆதி[6] தன் மைந்தனைத் தந்து,
மனிதரை ரட்சிக்க மா அருள் கூர்ந்த இந் –நல்ல

**சரணங்கள்**

1. சொல்ல முடியா அன்பிதே–தம்
தொண்டரைப் போல் பகையாளர் தம்பால் வைத்த–
சொல்ல முடியாத அன்பிதே;
அல்லல் அகற்றி அறிவில்லா எங்களின்
ஆத்தும நேசர் குழந்தையாக,
இல்லம் இல்லாமலே காலியின்[7] கொட்டிலிலே நரர்[8] ரூபமதாய்,

---

1 வயிறு
2 ஞானம்
3 மானிட
4 தூதர்
5 மோட்சத்தான்
6 தேவன்
7 பசுக்கூட்டம்
8 மனிதர்

எல்லை இல்லான் தந்தையாக இருக்க மா
ஏழை மனிதர் அனையுடன் தந்தையாய்
தொல்லை அறுக்க என் றிங்கெழுந்தான்; மகா
சூட்சமதாகிய மாட்சிமையாம் ஒரு –நல்ல

2. மாந்தர்க்க நல்ல கால–மாம்;
மரண சாபத்துள் அடைபட்டொடுங்கும்–மாந்தர்க்கு
சாந்தம், பொறுமை, சுகுணம் அநேகம்,
சாற்றெளிதாமோ? கிருபைப் பிரவாகம்,
வாய்ந்த நரர் மீதில் அன்பு சொல்வென்றால்,
வானவர்க்கும் அரிதே;
சேர்ந்து பணிந்து முழந்தாழ்ப்படி இட்டு,
செப்புவோம்; நம் ஏசு நாம் நடந்திடில்,
அன்பும் அருளும் அனைத்தும் உடன் உண்டாம்; –நல்ல

***– காபிரியேல் உபதேசியார்.***

**42. இராகம்: உசேனி** **ஏகதாளம்**

***பல்லவி***

**யார் இவர் ஆரோ? யார் இவர் ஆரோ?**
யார் இவர்? பரன் வார்த்தை மாமிசம்
ஆயினர் இவரோ?

***சரணங்கள்***

1. ஈர் ஐந்து குணம் இல்லாதோர் போலே,
பாரினில் ஓர் எளிய கன்னிகையின்
பாலர் ஆனாரோ? – யார்

2. ஊரில் ஓர் இடமும் உகந்திட[1] இல்லையோ?
சீர் அல்லாக் குடியிற் பிறந்தார் அதி
சயம் ஆனவரோ? – யார்

3. கர்த் தத்துவமோ காணாது தோள்மேல்;
சுற்றி வைக்கப் பழந்துணியோ? இவர்
தூங்கப் புல் அணையோ? – யார்

---

1 விரும்பிட

4. சேனை தூதர் இதோ! சிறப்புடன் பாட,
கானகக் கோனர்[1] காணவர, இவர்
கர்த்தர் ஆவாரோ? – யார்

5. முந்து தீர்க்கர் பிதா மொழிந்த தெதிர் பார்த்த
சொந்தமான ஜனம் இஸ்ரவேலின்
சூரியன் இவரோ? – யார்

6. பாவியான என்மேல் பட்சமே மிகவாய்
ஜீவனைக் கொடுக்கப் பிறந்த என்றன்
ஜீவ நாயகரோ? – யார்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**43. இராகம்: ஆனந்தபைரவி** **ஏகதாளம்**

**பல்லவி**

**பாவி, மன துருகே**

**அனுபல்லவி**

ஆ[2] வீட்டில் ஏர்[3] காட்டு தேவாட்டுக் குட்டிக்கு – பாவி

**சரணங்கள்**

1. மாது[4] தின்ற கனிவினை போக
மனுடர் வடிவமாக–நம்
வல்லமைப் பிதாவின் மைந்தன் புல்லதில் பிறந்தார், அந்தோ
–பாவி

2. வேத வாசகப்படி நெறிகாட்ட
வேதாளக்குடி[5] ஓட்ட, இதோ!
வித்தக திரித்துவ ஏக தத்துவ சொரூபன் வந்தார் –பாவி

3. விந்தைத் திருமுதல் நரர் உரு உவந்தார்,
கந்தைத் துணி அணிந்தார்!–இப்படி
மெத்தனவ[6] ராகக் கரி சித்துனைப் புரக்க[7] வந்தார் –பாவி

---

1 மேய்ப்பர்
2 முன்னணை
3 அழகு
4 ஏவாள்
5 பேய்
6 அழகற்றவர்
7 மீட்க

4. மேட்டிமையைத் துறந்தார், காட்டினிடை சிறந்தார்,
மேன்மை அனைத்தும் மறந்தார்;–இந்த
விந்தைக் கோலத் துன்னைக் கண்டு சந்திக்க வந்திருக்கிறார்
–பாவி

5. நெரிந்த நாணலை முறியார், பொரிந்த[1] திரியை அவியார்,
நிர்ப்பந்தர் தமைப் பிரியார்; இவர்
நீதிமான்களை அல்ல, உன்னைப் போல் பாதகரைத்தான்
தேடி வந்தார் –பாவி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**44. இராகம்: காம்போதி ஆதிதாளம் (390)**

**பல்லவி**

**மலையாதே, நெஞ்சமே,–இப்படி நம்மை**
வகுத்தவனே தஞ்சமே.

**அனுபல்லவி**

அலையா தருள் மந்த்ர கலையாகம சுந்த்ர
அருத்தப் பண் கருத்தர்க்கென்
றுரித்தல் கொண் டிருத்திக்கொள். – மலை

**சரணங்கள்**

1. கருத்தர் கட்டுவதல்லோ வீடு,–நரர்
கட்டும் கிரியைகள் வீண் பாடு,
வருத்தப் படுவதென்ன? தேடு?–பேயின்
மயக்கமெல்லாம் விட்டுப்போடு;
தரித்திரத் திரள் இக்கட்டு பெருத்த கவலைப்பட்டுச்
சலியாதிரு, நலியாதிரு;
தந்தையார் சுதன் வந்த நாள் இது. – மலை

---

1 மங்கின

2. எண்ணத்தினால் என்ன கூடும்?–தெய்வம்
இட்டதல்லோ வந்து நீடும்;
மண்ணைச் சதம் என்றெண்ணி, வாடும்–மக்கள்
மனதில் துயரம் வந்து மூடும்;
கண்ணைத் திறந்து நோக்கு, விண்ணைச் சிறந்துள்ளார்க்கு
குருத்தாய் இரு; உரித்தாய் இரு;
குருத்தரானவர் ஒருத்தரே துணை. – மலை

3. என்ன கவலைப்பட்டும் நஷ்டமே,–கிறிஸ்
தேசு பிறந்ததுன் அதிஷ்டமே;
உன்னதன் பண்ணின திட்டமே,–உனக்
கொழுங்கு ப்ரமாணத்தின் சட்டமே;
பின்னப்பட் டுலையாதே, சின்னப்பட் டலையாதே;
பெருத்த நாள் இது, கருத்தர் நாள் இது,
பெலப்பாய் இரு, கெலிப்பாய் இரு. – மலை

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

### 45. இராகம்: ஆனந்தபைரவி ஆதிதாளம் (391)

**பல்லவி**

**பரம சேனை கொண்டாடினார்;**
பரன் இரக்கத்தைப் பாடினார்.

**சரணங்கள்**

1. பரத்திலே இருந்து பதி பெத்தலேம் வந்து,
பரன் நரரூ[1] பணிந்து பணிவானதில் சிறந்து, – பரம

2. இரவின் இருளை மாற்றி, இடையர் மனதைத் தேற்றி,
கிருபைப் பரனைப் போற்றி, கிறிஸ்தின் பிறப்பைச் சாற்றி, – பரம

3. சர்ப்பப்பேயை வென்று, சகலர்க் கேய[2] நன்று
அற்புதமாக இன்று அத்தன் பிறந்தார் என்று, – பரம

***– தைரியம் எழுத்தர்***

1 மானிடச்சாயலாகி 2 பொருந்த

**46. இராகம்: செஞ்சுருட்டி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**வானம் பூமியோ? பராபரன்**
மானிடன் ஆனாரோ? என்ன இது?

**அனுபல்லவி**

ஞானவான்களே, நிதானவான்களே,–என்ன இது? – வானம்

**சரணங்கள்**

1. பொன்னகரத் தாளும், உன்னதமே நீளும்
பொறுமைக் கிருபாசனத்துரை,
பூபதி[1] வந்ததே அதிசயம்!–ஆ! என்ன இது! – வானம்

2. சத்ய சருவேசன், துத்ய கிருபை வாசன்,
நித்ய பிதாவினோர்
மகத்துவக் குமாரனோ இவர்?–ஆ! என்ன இது? – வானம்

3. மந்தைக் காட்டிலே மாட்டுக் கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூட்சி,[2]
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி! – ஆ! என்ன இது?
– வானம்

4. வேறே பேரல்ல, சுரர் விண்ணவர் ஆருமல்ல;
மாறில்லாத ஈறில்லாத[3]
வல்லமைத் தேவனே புல்லில் கிடக்கிறார்! – ஆ! என்ன இது?
– வானம்

5. சீயோனின் மாதே, இனி க்ஷணந்தரியாதே,
மாயமென்ன?[4] உனக்குச் சொல்லவோ?
வந்தவர் மணவாளனல்லவோ?–ஆ! என்ன இது? – வானம்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 அரசன்
2 ஞானம்–உபாயம்
3 முடிவு–முடிவில்லாத
4 ஆச்சரியம்

**47. இராகம்: இந்துஸ்தானி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**ஆ! அம்பர[1] உம்பர[2] மும்புகழுந்திரு**
ஆதிபன்[3] பிறந்தார்

*அனுபல்லவி*

ஆதிபன் பிறந்தார்,–அமலாதிபன்[4] பிறந்தார். – ஆ!

*சரணங்கள்*

1. அன்பான பரனே!–அருள் மேவுங் காரணனே!–நவ
அச்சய[5] சச்சிதா[6]–ரட்சகனாகிய
உச்சிதவரனே! – ஆ!

2. ஆதம் பவமற,–நீதம்[7] நிறைவேற,–அன்று
அல்லிராவினில்[8]–வெல்லையடியினிற்[9]
புல்லணையிற் பிறந்தார். – ஆ!

3. ஞானியர் தேட,–வானவர் பாட,–மிக
நன்னய, உன்னத–பன்னரும்[10] மேசையா
இந்நிலம் பிறந்தார். – ஆ!

4. கோனவர்[11] நாட, தானவர்[12] கொண்டாட–என்று
கோத்திரர்[13] தோத்திரஞ்–சாற்றிடவே,
யூத கோத்திரன் பிறந்தார். – ஆ!

5. விண்ணுடு[14] தோண,–மன்னவர் பேண,–ஏரோது,
மைந்தனின் சிந்தையமுந்திக் கலங்கிட
விந்தையாய்ப் பிறந்தார். – ஆ!

***– யோ. யாக்கோப்பு***

---

1 வானாதி வானங்கள்–வெட்டவெளி
2 உம்பரர்–வானோர்
3 அதிபன்–இறைவன்
4 பாவமற்ற
5 தொழுவதற்குரிய
6 இறைவன்
7 நீதி
8 இருள்
9 தூய
10 சொல்லமுடியாத
11 மேய்ப்பர்
12 அரசர்–தூதர்
13 இனத்தார்
14 நட்சத்திரம்

**48. இராகம்: காம்போதி** **அடதாளசாப்பு (392)**

**பல்லவி**

**கருணா கரனே, பரமே சுரனே**
கனிவினை தீர்க்க வந்த தனிமுதல் ஏசு நாதா.

**சரணங்கள்**

1. பரன் ஆதியிலே திருவாய்மையிலே
பகுத்து விந்தையினோடு மகத்வ சந்தோட நீடு
பரிவுடனே அறு தின மதிலே உயர்
பரம் உலகி யாவையும் அருளிய நேரமே
பாருலகந் தனில் ஓர் மனுடன் தனை
ஏவையர் என்றொரு பாவையுடன் செய்து,
படர்ந்த காவிடை இரண்டு மரந் தர,
அடர்ந்த ஜீவியம் நன்றறி வென்றொரு
பழத்திலே புசியாமல் விலக்கின
வழிப் படாது பசாசுட, சொற்படி
பாவையர் ஆர்ந்தின[1] தீவினையால் நர
தாவீது சேயென மேவு குணா நிதி. – கருணா

2. மறையாரணனே, நிறை பூரணனே,
வலமைக்கொரே யோவாவே,[2] தலைமைத் தேவாதிதேவே,
வருகையை மாமறை இருடியர்[3] ஓதின
வரிசையின் ஓர் தவி தரசனின் ஊர் அயல்
மந்தையின் ஆயர்கள் வந்து பணிந்தெழ,
விந்தை மெய்ஞ் ஞானியர் சிந்தை உவந்திட,
மகிழ்ந்து வானவர், பூதலர் பாதலர்
புகழ்ந்து பாடியும் ஆடியுமே தொழ,
மரியவள் உந்தியில்[4] அரிய பரன் திரு
மகனென அன்புடன் நரர் உருவங் கொடு[5]
மானிடர் யாவரும் வானிடமே பெற,
மாடடையுங் குடில் நீடிய சுந்தர. – கருணா

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

---

1 உண்ட
2 எகோவாவே
3 ரிஷிகள்–தீர்க்கதரிசிகள்
4 வயிறு
5 கொண்டு

**49. இராகம்: சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஆதாமின் பாவத்தாலே அரூபன் உருபமான**
அதிசயம் இதோ! பாரும்.

**அனுபல்லவி**

மாதேவை புத்திர ரான மானிடர் குழாங்களே, நீர்
வல்லமைப் பிதாவின் ஒரு மைந்தனைச் சந்திக்க வாரும் –ஆதா

**சரணங்கள்**

1. ஆதி பிதாவின் கிரு பாசனத்தைத் துறந்தார்;
அழகான மோட்ச செல்வ பாக்கியத்தை மறந்தார்
பாதகந் தீரவேண்டிப் பெத்தலையில் சிறந்தார்;
பராபர வஸ்து வானோர் பாலனாகப் பிறந்தார் –ஆதா

2. உன்னத வஸ்து வானோர் உலகத்தை நேசித்தார்;
ஒப்பில்லா தேவ தேவன் மனுஷரை ஆசித்தார்;
தன் ஒளிவை விளங்க, தானே பிரகாசித்தார்;
ஜாதிகளுக்குத் தயவாய்; உபதேசித்தார் – ஆதா

3. மந்தை ஆயர் சந்திக்க, சந்தோடமே விண்டார்,
வான நாட்டைப் பிரிந்து மாட்டுக் கொட்டிலைக் கண்டார்
விந்தை திருமுதலார்க் கந்தைத் துணியைக் கொண்டார்
வேத காரணர் தானே மேவி தாயின் பால் உண்டார் – ஆதா

***– வேதநாயக சாஸ்திரியார்***

**50. இராகம்: சகானா.** **ஆதிதாளம்**

**பல்லவி**

**சுதன் பிறந்தார், சுதன் பிறந்தார்,**
துதிமிகு தேவ சுதன் பிறந்தார்.

**சரணங்கள்**

1. சருவ தயாப சகாய பிரதாப
கிருபைப் பிதாவின் தற்சுபாவ – தேவா – துதி

2. பரமாபி ஷேக பட்ச சிநேக
பெருமான் மகத்துவ த்ரியேக – தேவா – துதி

3. மனுடரை மீட்க மறுபிறப்பாக்க,
கனிவினை யாவையும் தீர்க்க – தேவா – துதி

4. இந்நிலத்தை நாடி, முன்னணையைத் தேடி
கன்னிமா திரியிடம் நீடி – தேவா – துதி

5. பெத்தலேகம் ஊரில் மெய்த்தவிதின் வேரில்
பத்தர்களுக் காக இப்பாரில் – தேவா – துதி

***– வேதநாயகம் சாத்திரியார்.***

**51. இராகம்: ஆனந்த பைரவி. ஆதிதாளம்**

**பல்லவி**

**தேவ சேயோ, தேவ சேயோ, சீவ வான**
மன்னா, மா திவ்விய கிருபா சன்னா
பாவிகளின் பிர சன்னா,
தேவ சேயோ, தேவ சேயோ, ஆண்டருள்
செயும்; ஓசன்னோ!

**சரணங்கள்**

1. ஆவியாய் அனாதியாய் அமர்ந்த தேவ சேயோ,
மூவுலகனைத்தையும் முன் தந்த தேவ சேயோ, – தேவ

2. சுந்தரமிகும் பரமானந்த தேவ சேயோ,
நந்தர்[1] மகிழ்ந்தடி பணிந்த தேவ சேயோ, – தேவ

3. செங்கோல் தவி[2] திறைஞ்சுந் துங்க தேவ சேயோ,
மங்காக் கிருபை சிறந்த சங்கைத் தேவ சேயோ, – தேவ

4. மாட்டுக் கொட்டிலில் பிறந்த வல்ல தேவ சேயோ,
மீட்டுக் கொண்டெமைப் புரந்த மேன்மைத் தேவ சேயோ, – தேவ

***–வேதநாயகம் சாத்திரியார்***

---

1 மேய்ப்பர் 2 தாவீது

## 52. இராகம்: இந்துஸ்தான் கார்வா ஆதிதாளம்

*பல்லவி*

**சமாதானம் ஓதும் ஏசுகிறிஸ்து**
இவர்தாம், இவர்தாம், இவர்தாம்.

*சரணங்கள்*

1. நமதாதி பிதாவின் திருப்பாலர் இவர்,
அனுகூலர் இவர், மனுவேலர் இவர். - சமா

2. நேய கிருபையின் ஒரு சேயர்[1] இவர்,
பரம ராயர் இவர், நம தாயர்[2] இவர். - சமா

3. ஆதி நரர் செய்த தீ தறவே,
அருளானந்தமாய் அடியார் சொந்தமாய். - சமா

4. ஆரணம்[3] பாடி, விண்ணோர் ஆடவே,
அறிஞோர் தேடவே, இடையோர் கூடவே. - சமா

5. மெய்யாகவே மே சையாவுமே
நம்மை நாடினாரே, கிருபை கூறினாரே. - சமா

6. அருளானந்த மோட்ச வழி காட்டினாரே,
நிலை நாட்டினாரே, முடி சூட்டினாரே - சமா

*- வேதநாயகம் சாசுதிரியார்*

## 53. இராகம்: சங்கராபரணம் ஆதிதாளம்

*பல்லவி*

**என்ன பாக்கியம், எவர்க்குண்**
டிந்தச் சிலாக்கியம்?

*அனுபல்லவி*

விண்ணவரும், புவிமேவும் முனிவர்களும்,
மன்னவருங் காணா மகிபனை யான் கண்டேன்; - என்ன

---

1 மகன் 2 மேய்ப்பர் 3 வேதம்

***சரணங்கள்***

1. வானகந்தானோ,–அல்லதிது–வையகந் தானோ?
ஆனகம்[1] சென்று எழுந்த அரும்பொருள்
கானகந் தன்னில் என் கையில் அமர்ந்தது; – என்ன

2. போதும் இவ்வாது;–பரகதி–போவேன் இப்போது;
ஏதேன் என்ற பரதீசும் வந்திட்டது;
எண்ணில்லாத செல்வம் என் கையில் கிட்டுது; – என்ன

3. சாமியைக் கண்டேன்,–மகானந்தம் சாலவுங் கொண்டேன்,
காமரு[2] தேங்கனி[3] வாய்கள் துடிப்பதும்,
கண்ணும் மனமும் களிக்க விழிப்பதும்; – என்ன

4. அன்னமும் நீயே;–கிடைத்தற்கருஞ்–சொர்ணமும்[4] நீயே;
மின்னறு மேகத் திருக்கை துறந்தையோ?
மேதினி தன்னை ரட்சிக்கப் பிறந்தையோ? – என்ன

***– காபிரியேல் உபதேசியார்***

**54. இராகம்: நாட்டை** **சாப்புதாளம்**

**கண்ணிகள்**

**சுந்தரப் பராபரனே, பரி–சுத்தன் கிறிஸ்தெனும் நித்தியனே,**
மைந்தனாய்ப் பிறந்தீரோ–சுவாமி
மாங்கிஷத்தில்[5] உருவானீரோ?

2. வான தூதர் போற்றிடவே,–உம்மை–வாழ்த்திப் புகழ்ந்து
கொண்டேத்திடவே
கானத்தொனி ஏற்றிருந்த–சுவாமி
காட்டு மடத்தில் உதித்ததென்ன?

3. ஆசை மிகும் ஆபிரகாம்–உரு–வாகும் முன் விண்தல
நேசமுடன் பிள்ளை தந்தும்–அந்த
நீதிமான் வங்கிஷம்[6] ஆனதென்ன?

---

1 தொழுவம்
2 அழகு
3 இனிய கனி
4 தங்கம்
5 மாமிசம்
6 வம்சம்

4. ராஜன் தவீ தாண்டவனும், அவன்–நண்ணும் பவ தீமையில் மீண்டவனும்
தாசன் மகன் ஆனதும் ஏன்? சுவாமி
தாவீதின் சந்ததி மேவின தேன்?

5. பொங்கு பவ நாசனனே, விண்ணோர்–போற்றிப் புகழுஞ் சிம்மாசனனே
தங்குதற் கிடம் இல்லையோ? சுவாமி
தபாரிக்க ஒரு ஊர் இல்லையோ?

***– ஏசுவடியான் உபாத்தியாயர்***

**55. இராகம்: சயிந்தவி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**மாசில்லாத் தேவ புத்திரன்**
மானிடனா னார், ஜெய! ஜெய!

**சரணங்கள்**

1. ஆசீர்வாதமே! கன தேசார்[1] நீதமே!–ஒளிர்
காசினி மீததி நேசப் பிரகாச விண் வாச கிருபாசன – மாசி

2. சத்திய வாசகர்–சதா–நித்திய தேசிகர்–வளர்
பெத்லகேம் ஊர்தனிலே கரிசித்துக் கன்னியாஸ்திரி வித்தினில் – மாசி

3. அந்தரம்[2] பூமியும்–அதி–சுந்தர நேமியும்[3]–தினம்
ஐந்தொரு நாளினிலே தருமுந்தின மூன்றிலொன்றாகிய – மாசி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**56. இராகம்: எதுகுலகாம்போதி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஏசுவையே துதிசெய் நீ, மனமே,**
ஏசுவையே துதிசெய்,–கிறிஸ்தேசுவையே,

---

1 ஒளி சிறந்த 2 வானம் 3 கடலும்

*சரணங்கள்*

1. மாசணுகாத பராபர வஸ்து,
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து, – ஏசு

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்,
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன். – ஏசு

3. எண்ணின காரியம் யாவும் முகிக்க[1]
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க. – ஏசு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**57. இராகம்: இந்துஸ்தான் டப்பா** **ஏகதாளம்**

*பல்லவி*

**துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்,**
சுப மங்கள மிகு சம்பிரம[2] சுக சோபன க்ஷேமம்!

*சரணங்கள்*

1. அதி சுந்தர நிறை கொண்டுயர் அருள் மோக்கிஷ[3] தீபன்,
கதி உம்பர்கள்[4] தொழும் இங்கித[5] கருணைப் பிர தாபன். – துதி

2. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய அத்தனார்[6]
நிந்தையாய் ஒரு கந்தை மூடவும் வந்த மாபரி சுத்தனார். – துதி

3. திருவான் உல கரசாய் வளர் தேவ சொரூபனார்
ஒரு மாதுடை வினை மாறிட நரர் ரூபமதானார். – துதி

4. அபிராம் முனி யிடமேவிய பதிலாள் உபகாரன்,
எபிரேயர்கள் குலம் தாவீதென் அரசற் கோர்குமாரன். – துதி

5. சாதா ரண வேதா கம சாஸ்த்ர சுவிசேஷன்,
கோதே புரி ஆதா முடை கோத்ர திரு வேஷன். – துதி

6. விண் ணாடரும் மண் ணாடரும் மேவுந் திருப் பாதன்,
பண்ணோதுவர்[7] கண்ணாம் வளர் பரமண்டல நாதன். – துதி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 முடிக்க
2 களிப்பு
3 மோட்ச
4 வானோர்–தூதர்
5 இனிய
6 இறைவன்
7 கவி பாடுவார்

**58. இராகம்: சுருட்டி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்; ஆதி**
திரி யேக நாதனுக்குச் சுபமங்களம்.

*அனுபல்லவி*

பாரேறு[1] நீதனுக்கு, பரம பொற்பாதனுக்கு,
நேரேறு[2] போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு. – சீர்

*சரணங்கள்*

1. ஆதி சரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்;
அகிலப்[3] பிர காசனுக்கு, நேசனுக்கு மங்களம்
நீதி பரன் பாலனுக்கு, நித்திய குணாலனுக்கு,[4]
ஓதும் அனு கூலனுக்கு, உயர் மனுவேலனுக்கு. – சீர்

2. மானாபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்;
வளர் கலைக் கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்
கானான் நல் தேயனுக்குக், கன்னிமரி சேயனுக்கு
கோனார் சகாயனுக்குக், கூறு பெத்த லேயனுக்கு. – சீர்

3. பத்து லட்ச ணத்தனுக்குச்[5], சுத்தனுக்கு மங்களம்;
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்குச், சருவாதி காரனுக்கு,
பத்தர் உப காரனுக்குப், பரம குமாரனுக்கு. – சீர்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**59. இராகம்: யமுனா கல்யாணி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**பாதம் வந்தனமே! – வரப்பிர**
சாதம் எந்தனமே.

---

1 பூமி
2 நன்னெறி
3 பூமி
4 குணாலயனாகிய கடவுளுக்கு
5 பத்து லட்சணம் (அழகு) கொண்டவருக்கு

*சரணங்கள்*

1. ஆதரவொடு வேதமே விடுத்தாளும் அற்புதனே,
திவ்ய சுதனே, கிருபைப் பதனே, சுசிகர[1] – பாதம்

2. பேசுதற்கரிதான துத்திய பெருமைக் கோமானே,[2]
மெய்ச் சீமானே, அருள் கோனே, சுசிகர – பாதம்

3. ஞானமாய் நரர்க் கான ஜீவனை நல்கிய சீலா,
மனு வேலா, துரை பாலா, சுசிகர – பாதம்

4. தீவினை தொலைத்தாவியே மிகுத் தேவும் இங்கிதமே,[3]
என் ரஞ்சிதமே[4], நீ சந்ததமே! சுசிகர. – பாதம்

5. தாசரை விசுவாசமாய்க் கையில் தாங்குபகாரா,
அதிகாரா, கன தீரா[5] சுசிகர – பாதம்

***– ஆபிரகாம் அல்லின்***

**60. பைரவி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**தோத்திரம் செய்வேனே–ரட்சகனைத்**
தோத்திரம் செய்வேனே

*அனுபல்லவி*

பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை[6] யூதக் கோத்திரனை, என்றும் – தோத்திரம்

*சரணங்கள்*

1. அன்னை மரி சுதனை,–புல் மீது
அமிழ்துக் கழுதவனை,
முன்னணை மீதுற்ற சின்னக் குமாரனை,
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனை. – தோத்திரம்

---

1 தூய
2 அரசனே
3 பிரியமே
4 இன்பம்
5 வீரனே
6 அரசனை

2. கந்தை பொதிந்தவனை,–வானோர்களும்
வந்தடி பணிபவனை,
மந்தையர்க் கானந்த மாட்சியளித்தோனை
மான[1] பரன் என்னும் ஞான குணவானை. – தோத்திரம்

3. செம்பொன் னுருவானைத்,–தேசிகர்கள்[2]
தேடும் குருவானை,
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று, பைம் பொன் மலர் தூவி. – தோத்திரம்

***– தஞ்சை சத்தியநாதன்***

## 61. இராகம்: ஆனந்தபைரவி ஏகதாளம் (394)

**பல்லவி**

**உள்ளக் கருத்துடன் இசைந்து கூடுவோம், நம் இயேசு நாதரின்**
உரிமையைத் தினம் புகழ்ந்து பாடுவோம்.

**அனுபல்லவி**

வள்ளல் கிறிஸ்திங்கு வந்தெமை மீட்க
வருந்தி அன்பாகப் புரிந்த செயல் பற்றி,
மனதே ஒருப்பட்டும், துதிவிண் இடை எட்டும்
படி இன்னிசை இட்டும், உயிரே உள மட்டும் – உள்

**சரணங்கள்**

1. தீயர் பயமின்றி வளைந்து கிட்டவும்,–சோரன் போல அவரையே
சேர்ந்து வந்து வலுவாகக் கட்டவும்,
நேயம் அற அவர் சிரசில் குட்டவும்–கெட்ட பாவிகள் மிக
நிந்தை செய்து குறைவாகத் திட்டவும்,
காயமதிலும் உள்ளத்திலுமேவக்
கடுந்துயர் மிக்க அடைந்தனரே, நரர்,
கரும வினை தீர, தரும நெறி சார,
பரம கதி சேர, மிகவும் மகிழ் கூர – உள்

---

1 மேன்மை 2 ஞானிகள்

2. காசினியில் அவர் தமக்கு யாருமே–நிகர் இல்லை; அங்கவர்
கால் அடி செல்ல எவ்வினையுந் தீருமே;
பாசமுடன் அவர் கருணை பாருமே;–பிணையாய் உயிர்விடப்
பாரில் எவரும் இன்றதனை ஒருமே;
தாசர் அனைவரும் சாட்சி பகிர்ந்திட
தாரணியோர் அனைவோரும் உணர்ந்திட,
தருவில் அறையுண்டார், திரு வசனம் விண்டார்;
உறு பகையை வென்றார்; மறுமையதிற் சென்றார் – உள்

*– ஜாண் பால்மர்*

**62. இராகம்: முகாரி** **ஆதிதாளம் (395)**

**கண்ணிகள்**

**ஆதி அந்தம் இல்லானே, அளவில்லா வல்லபனே,**
அன்பே, மானுடவதாரத் திருவடிவே;
மாது பொருட்டாலே மாடடையுங் கொட்டிலிலே
வானத்திலே இருந்து வந்தீரோ, மன்னவனே?

2. அன்பே, என் ஆருயிரே, ஆனந்தப் பேரொளியே,
ஆர்க்குந் தயாபரமே, அற்புத கருணாகரமே,
இன்பப்ர வாகமே, இம்மானுவேல் அரசே,
ஏசுக் கிறிஸ்தையாவே, ரட்சியும் ஒரே கர்த்தாவே.

3. ஆராய்தல் இல்லாத ஆழக்ருபா நதியே,
ஆரும் அளவறுக்கக் கூடாத அற்புதமே,
வாராயோ? பாவிகளைப் பாராயோ, பார்த்திரங்கி
வானத்தில் நின்றெழுந்து வந்த பரிபூரணமே?

4. தேவ கிருபை பொழிய, ஜீவ நதி பெருக,
சீயோனின் மக்கள் எல்லாம் சேர்ந்ததிலே பருக,
ஏவை துயர் அகல, எவ்வுயிரும் பிழைக்க,
ஸ்தீரியின் வித்தில் வந்தீரோ, இஸ்ராவேலின் கோமானே?[1]

1 அரசனே

5. ஞான மலை அருவி நன்மைப்ர வாகம் வர,
நாடனைத்துந் தழைக்க, நல்லோர் குழாம்[1] செழிக்க
வானில் மகிமை பெற, மண் மீதில் ஆசி உற,
மாந்தரில் அன்புண்டாக வந்தீரோ மானுவேலே?

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**63. இராகம்: துசாவந்தி** **ரூபகதாளம் (396)**

**பல்லவி**

**தேவ தேவனே, எகோவா,**
வா, என் ஜீவனே.

**அனுபல்லவி**

காவலர்க் குபதேசனே,– கனபாவிகட் கதிநேசனே – உயர்
கர்த்தன் ஏக திரித்துவ ஞான மகத்துவ ராஜகிறிஸ்துவாகிய
–தேவ

**சரணங்கள்**

1. அந்த[2] மேனியே,– கனம் பெரும்–அனந்த ஞானியே,
விந்தை மானியே,[3]–சுந்தரம்–மிகுந்த தானியே,[4]
தந்தையர் தர, வந்தவா,–பசு
மந்தை யூடு பிறந்தவா,–கதி
தந்தவா, சொல் உவந்தவா,–மெய்
சிறந்தவா, விண்ணெழுந்தவா, திவ்ய – தேவ

2. சத்திய வாசனே,– யூதர்குலத்–தவிது ராஜனே,
நித்திய நேசனே,–அடியவர்[5]–நிலைமை ஈசனே,
பத்தருக்குப காரனே,–வளர்
பெத்தலைக் கதிகாரனே,–வளர்
பாரனே, அதி தீரனே,– நல்
உதாரனே, பெல வீரனே, ஜெய – தேவ

---

1 கூட்டம்
2 அழகு
3 பெருமையுள்ளவனே– கனம்பொருந்தியவர்
4 இடம்பெற்றவனே– தானமளிப்பவர்
5 பக்தர்

3. வான சீலனே,– மனு உரு–வான கோலனே,
ஞான பாலனே,–அதிசய–நன்மை நூலனே,
பானுவே[1] மனுவேலனே,–இம்
மானுவேல் அனுகூலனே,–கன
பத்தியே தரு துத்தியமே[2],–நெடு
நித்தியமாய் வளர் வஸ்துவே ஒரு – தேவ

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**64. இராகம்: நாதநாமக்கிரியை ரூபகதாளம்**

**பல்லவி**

**தெய்வம் இவர், தெய்வம் இவர்–எங்கள் குல**
தெய்வம் இவர் தானே.

**அனுபல்லவி**

கைவருந்தாமல் உலகம் கற்பித்த தெய்வம் இவர்;
கர்த்தத்துவங்கள், நித்திய கர்த்தர் என்னும் தெய்வம் இவர்
– தெய்வ

**சரணங்கள்**

1. எல்லாவற்றையும் அமைத்த வல்லாண்மை தெய்வம் இவர்;
பல்லுயிர்க்கும் ஈவளிக்கும் பாக்கியமிகும் தெய்வம் இவர்
– தெய்வ

2. சந்திரர்க்கும், சூரியர்க்கும் அந்தரர்க்கும்[3] தெய்வம் இவர்;
சுந்தரச் சீயோன் மலையில் தோத்திரிக்கும் தெய்வம் இவர்
– தெய்வ

3. கேரூபின் மீதேறி வல சாரிவரும் தெய்வம் இவர்;
ஆறுலட்சம் கானகர்[4] ஆராதனை செய் தெய்வம் இவர்
– தெய்வ

4. காலா காலங் கடந்த காட்சி இவர் மாட்சி இவர்,
ஆலேலூயா அமரர்[5] அஞ்சலி செய் தெய்வம் இவர்; – தெய்வ

***– சத்தியநாதன் உபதேசியார்***

---

1 சூரியனே
2 புகழ்ச்சி
3 வானோர்
4 பாடகர்
5 வானோர்

**65. இராகம்: புன்னாகவராளி** **ஏகதாளம்**

*பல்லவி*

**தேவதே, ஓர் ஏக வஸ்து, தேவ நாமனாம் கிறிஸ்து,**
தேவன் ஆதியே நமா!

*அனுபல்லவி*

ஜீவ ஆவி எகோவா, அல்பா ஒமேகா[1], நமஸ்து[2]–ஒரு –தேவதே

*சரணங்கள்*

1. மூவராய் அரூபியாய் முன் ஊழி ஊழி[3] காலம் வாழ்
பாவ தாழ்விலா வலா, பராபரா, தயாபரா!–ஒரு – தேவதே

2. ஆதியாய் அனாதியாய், அரூபியாய்ச் சொரூபியாய்,
நீதி ஞாய நேர்மையாய், நீடூழி ஆள் சுயாதிபா!–ஒரு – தேவதே

3. மாசில்லா நேச வாச மட்டில்லா நன்மையே,
தேசுலா[4] வனாதி ஏசு மா சிறந்த உண்மையே!–ஒரு – தேவதே

4. ஈறில்லா[5] மெய்ஞ்ஞான ஜோதி, ஏகமாம், ஆனந்தமே,
மாறிலா தனுக்ரகஞ்செய வந்த ஆதியந்தமே!–ஒரு – தேவதே

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**66. இராகம்: கமாசு** **ஆதிதாளம்**

*பல்லவி*

**மேசியா ஏசு நாயனார், – எமை மீட்**
கவே நரனாயினார்[6], எமை மீட்கவே

---

1 ஆதியந்தம்
2 தொழுகிறோம்
3 யுகம்
4 ஒளி பரந்த
5 முடிவற்ற
6 மானிடன்

***சரணங்கள்***

1. நேசமாய் இந்தக் காசினியோரின்
நிந்தை அனைத்தும் போக்கவே,
மாசிலான் ஒரு நீசனாகவே
வந்தார் எம் கதி நோக்கவே. – மேசியா

2. தந்தையின் சுதன் மாந்தர் பாதகம்
சமஸ்தமும்[1] அற வேண்டியே;
விந்தையாய்; குடில் மீது வந்தனர்
விண்ணுலகமும் தாண்டியே. – மேசியா

3. தொண்டர் வாழவும், அண்டரின் குழாம்
தோத்திரம் மிகப் பாடவும்,
அண்டு[2] பாவிகள் விண்ணடையவும்
ஆயர் தேடிக் கொண்டாடவும். – மேசியா

4. தேவனாம் நித்ய ஜீவனாம் ஒரே
திருச் சுதன் மனுவேலனார்;
பாவிகள் எங்கள் பாவம் மாறவே
பார்த்திபன்[3] தேவ பாலனாய். – மேசியா

***– ச. யோசேப்பு***

**67. இராகம்: காம்போதி** **ரூபகதாளம் (397)**

**பல்லவி**

**மனமே, ஓ! உன்னதம், மறை தந்தவனே வந்தனர்**

**அனுபல்லவி**

கன மிகுந்த திருக்குமாரன் கருணையாய் நரர் உருவமாகினர்
– மன

---

1 அனைத்தும் 2 அண்டினோர் 3 அரசன்

**சரணங்கள்**

1. ஆதி சர்ப்பத்தின் தலையை உடைக்க,
அகிலத்தின் பவமனைத்தும் துடைக்க;
வேத மறையி னூடு சிறந்த மேசியா பிறந்தார் – மன

2. ஆ! கனமிகு மகிமைத் தேவனார்
யாவருக்கும் அருள் செய்ய மேவினார்;
ஏக முதல்வனாம் ஒரு வஸ்து ஏசு ராஜ கிறிஸ்து – மன

3. நானிலத்தில் நரர்[1] பிழைக்கவே,
ஞான நன்மைகளே தழைக்கவே,
வான ராச்சியம் சேர்ந்து வந்தது: மானுவேல் பிறந்தார் – மன

4. நாம் நடத்தியபடி செய்யாமல்,
நம்முடமேல் உக்கிரம் வையாமல்;
ஆ! மகத்துவமே கதித்த அனாதியார் உதித்தார் – மன

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**68. இராகம்: வனஸ்பதி** **ஆதிதாளம் (398)**

**பல்லவி**

**ஜீவனே, நித்திய ஜீவனே!**
ஜீவனே, பரமானந்த திவ்ய பாலகனாக வந்த
ஜீவனே, நித்திய ஜீவனே!

**அனுபல்லவி**

காவ[2] தில் விளைந்த ஆதி ஏவை[3] வினைதீரவந்த – ஜீவனே

**சரணங்கள்**

1. வல்லமைத் திரித்துவ தேவன், சொல்லரும் கிருபைப் பிரதாபன்
துல்லிபத்தின்[4] ஞான தீபன், நல்லவர்க்கருள் தயாபன்
அல்லிருள்[5] போதே–அடர்–புல்லதின் மீதே–வரல்
ஆன வான மோன ஞான நேசமே! – ஜீவனே

---

1 மானிடர்
2 ஏதேன்
3 ஏவாள்
4 புகழ்பெற்றவன்
5 சுத்தத்தின்

2. நித்திய கிருபைப் பிரகாசன், அத்தனார்க் கொரே குமரேசன்[1],
சத்திய வேதத்தின் வாசன், ஸ்துத்திய மிகுஞ் சருவேசன்,
சித்திரச் சுதனே,–திரி–தத்வ அற்புதனே,–பர
தேசு லாச நேச மேசியா வேந்தே! – ஜீவனே

3. வானத்தைப் படைத்த கர்த்தர், ஞானத்தை உடைத்த நித்தர்
மேன்மை தேவத்துவ பரிசுத்தர், கானத்துற்றெமைக்கரிசித்தர்,
மட்டளவற்றோர்,–மாட்டுக்–கொட்டிலுற்றோர்–இன்று
வாழ்த்தி, ஏற்றி, போற்றி, ஸ்தோத்திரஞ் சொல்வோம். – ஜீவனே

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**69. இராகம்: செஞ்சுருட்டி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**அனந்த ஞான சொரூபா, நமோ நம! அனந்த ஞான சொரூபா!**

***சரணங்கள்***

1. கனங்கொள் மகிமையின் கர்த்தாவே, காத்திர நேத்திர
பர்த்தாவே – நரர்[2]
காண வந்தாரே;–பரன் நரர் காண வந்தாரே.
கரு ணாகர தேவா, அனந்த ஞான சொரூபா! – அன

2. அந்தப் பரமானந்த குணாலா,[3] ஆதத்தின் தீதற்ற மனுவேலா!–
எமை
ஆண்டு கொண்டாரே,–பரன் எமை ஆண்டு கொண்டாரே,
ஞானாதிக்கத்[4] துரையே அனந்த ஞான சொரூபா! – அன

3. ஆடுகளுக் குரிமைக் கோனே, ஆரண[5] காரணப் பெருமானே –
நரர்க்
கன்பு கூர்ந்தாரே;–பரன் நரர்க் கன்பு கூர்ந்தாரே,
கிருபாசனத் தானே, அனந்த ஞான சொரூபா! – அன

---

1 மைந்தன்
2 மானிட
3 குணாலயமானவரே
4 ஞானத்தைச் சுதந்தரமாகவுடைய
5 வேதத்திற்கு

4. பந்தத் துயரந் தீர்த்தாரே, பாவத்தைச் சாபத்தை ஏற்றாரே;–எமைப்
பார்க்க வந்தாரே;–பரன் எமைப் பார்க்க வந்தாரே,
பரமாதிக்கத் தோரே, அனந்த ஞான சொரூபா! – அன

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

## 70. இராகம்: உசேனி ஆதிதாளம்

***பல்லவி***

**சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மை ப்ரபுவே,**
சுரூபத் தரூபக் கோனாரே[1].–உரை

***அனுபல்லவி***

வல்லறஞ் சிறந்து மனுவானாரே,–உயர்
இல்லறந் துறந்து குடிலானாரே,–உரை – சொல்

***சரணங்கள்***

1. மாடாயர்[2] தேடும் வஸ்துபகாரி,–மிகு
கேடாளர் நாடுங் கிறிஸ்து சற்காரி,[3]
வையகம் புரப்பதற்கு வந்தாரே,–அருள்
பெய்து நவமும் தவமுந் தந்தாரே,–உரை – சொல்

2. அச்சய[4] சவுந்தர அசரீரி,–அதி
உச்சித சுதந்தர அருள்வாரி,[5]
ஐயா வல்லாவே, மாதேவா,–ஓ!
துய்யா,[6] நல்லாவே, ஏகோவா,–உரை – சொல்

3. பாவ வினை யாவையுந் தீர்த்தாரே,–உயர்
தேவ குலமாய் எமைச் சேர்த்தாரே;
பக்கிஷத்தால்[7] முகம் பார்த்தாரே,–பெரும்
பொக்கிஷம் போல் எமைச் சேர்த்தாரே,–உரை – சொல்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 மேய்ப்பரே
2 மாட்டிடையர்
3 தயாளன்
4 அழிவில்லாத–குறைவற்ற
5 அருட்கடலே
6 பரிசுத்தனே
7 பட்சம்–பட்சத்தால்

## 71. இராகம்: இந்துஸ்தனரி

*பல்லவி*

**என்றைக்கு காண்பேனோ, என் ஏசு தேவா?**

*அனுபல்லவி*

குன்றாத தேவ குமாரனைத் தானே நான் – என்

*சரணங்கள்*

1. பரகதி திறந்து, பாரினில் பிறந்து,
நரர்[1] வடிவாய், வந்த ராஜ உல்லசானை. – என்

2. ஐந்தப்பம் கொண்டு அநேகருக்குப் பகிர்ந்து,
சிந்தையில் உவந்த வசீகர சினேகனை. – என்

3. மாசிலாத நாதன், மாமறை நூலன்,
ஏசுவின் திருமுக தரிசனம் நோக்கி நான். – என்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

## 72. இராகம்: உசேனி

*பல்லவி*

**பார்க்க முனம் வருவேன்;–நெருக்கத்தில்**
பத்ரமாகத் கரிசித்த மேசியாவை.

*அனுபல்லவி*

ஆர்க்கும் இரங்கும் பராபரனின் சுதன்
அன்பின் மனுடவ தாரத்தைச் சிந்தித்து, – பார்

*சரணங்கள்*

1. நிச்சய சாதாரண சத்திய வேதனை,
அட்சய ஞான வரப்பிர சாதனை,
உச்சித வாக்ய சுவிசேட போதனை,
ரட்சகர் எங்கள் கிறிஸ்தேசு நாதனை, – பார்

---

1 மனிதர்

2. முற் பிதாக்கள் விரும்பிய தேட்டம்[1],
முன்னே ஆதிப் பிதாவின் சிரேட்டம்[2],
எப்பு விக்கும் எவர்க்கும் கொண்டாட்டம்,
எந்தையின் சுதன்மேல் என்றன் நாட்டம். – பார்

3. ஆசைக் கிறிஸ்துண்மை யான நல் ஆயனை,
ஆத்தும நாயகர் ஆன என் நேயனை,
பாச வலையில் கை தூக்கின நாயனை,
பக்ஷ மொடு காத்த முக்ய சகாயனை. – பார்

4. ஆச்சரிய மான நேசத்தை, பாசத்தை,
அன்பின் திருமுகத்தை, ஐந்து காயத்தை,
காட்சி தரும் இரு பாதத்தைப், பாவியைக்
கைதூக்கி விட்ட கரத்தை, உரித்தாக. – பார்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**73. இராகம்: கௌசிகை** **ஆதிதாளம்**

***பல்லவி***

**இயேசுவின் நாமமே திருநாமம்,–முழு**
இருதயத்தாற் றொழுவோம் நாமும்.

***சரணங்கள்***

1. காசினியில்[3] அதனுக் கிணையில்லையே;–விசு
வாசித்த பேர்களுக்குக் குறையில்லையே. – இயேசு

2. இத்தரையில் மெத்தவதி சய நாமம்;–அதை
நித்தமுந் தொழுபவர்க்கு ஜெயநாமம். – இயேசு

3. உத்தம மகிமைப் பிரதாபநாமம்; இது
உண்மை யிது உண்மை, மனமொத்த நாமம். – இயேசு

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம்;–கடும்
வேதாளம் கண்டு பயந்தோடும் நாமம். – இயேசு

5. பக்ஷமுடன் ரக்ஷைசெயு முபகாரி; தீய
பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி. – இயேசு

***–ச. ஞானமணி***

---

1 பொக்கிஷம் 2 முதற்பேறான 3 உலகு

**74. இராகம்: இந்துஸ்தான் டப்பா** **ஏகதாளம்**

**தரு**

**வாரீர் பாடுற்றோரே வந்தென் – மார்பினில் சார்வீரே உங்கள்**
வருத்தந் தீர்ப்பேனென் றேசு வாக்களிக்கக் கேட்டே – வாரீர்

2. மாசுகளோடுயான்–செல்ல–வந்ததே சந்தோஷம்! நித்திய
மாட்சிமையா யிளைப்பாற மறைவிடமும் பெற்றேன் – வாரீர்

3. தாகிப்போரே ஜீவ–புனல்–தாழ்ந்து குடிவாரும், அதைத்
தாறேன் சும்மாவென யேசு தாற்றியது கேட்டே, – வாரீர்

4. ஏசுவாம் நல்ஜீவ–ஊற்றில் இன்புறவே பருகித்–தாகம்
ஏகிப் பரவசமாகி இருக்கிறேன் அவருள் – வாரீர்

5. இரு ளாருலகில் நானே எரியும் வெளிச்சம்,–அதால்
இலகுஞ்[1] ஜீவியமென ஏசுரைக்கக் கேட்டே – வாரீர்

6. பார்த்தேன்; சூரியனும்–நீதிப்பரனுமவரென்றே–கண்டு
நேர்த்தியாம் வெளிச்சத்தில் நாள் நீங்குமட்டும் நடப்பேன்–வாரீர்

***– ஜி. ஜேம்ஸ்***

**75. இராகம்: நாதநாமக்கிரியை** **ஆதிதாளம்**

**பல்லவி**

**எல்லாம் ஏசு மயம்; ஜெகம்**
எல்லாம் ஏசு மயம்

**சரணங்கள்**

1. பல்லாயிரங் கோடி படைப்புகள் யாவும்
பரலோகம், பூலோகம், பாதாள லோகம் – எல்

2. அண்ட சராசரம் ஆதித்தன்[2], அம்புலி[3],
அரிய தராகணம்[4], அக்கினி, காற்றுமே – எல்

---

1 ஒளிரும்
2 சூரியன்
3 சந்திரன்
4 நட்சத்திரம்

3. சத்திய வேதமும் சார்ந்த நூலாகமம்[1]
சாஸ்திரமொடு திருச் சபை அலங்காரமும் – எல்

4. ஆலயந் தோறு மெய் அன்பர் செய் பஜனையும்
அடியர் ஜெபங் களும் ஆராதனைகளும், – எல்

5. ஜெனித்தல், இறத்தலொடு ஜீவனோ டுயிர்த்தலும்
ஜெய களிப்பொடு நித்ய ஜீவனைப் பெறுதலும் – எல்

*– ஈசாக்கு பாக்கியநாதன்*

**76. இராகம்: தோடி** **ரூபகதாளம் (399)**

**பல்லவி**

**ஏசு ராஜா,–எனை–ஆளும் நேசா**

**சரணங்கள்**

1. மாசிலா மணி ஆன முச்சுடர்
மேசியா அரசே–மனு
வேலே, மாமறை நூலே; தேவ செங்
கோலே, இங்கெனின் மேலே அன்பு செய் – ஏசு

2. தாவீ தரசன் மைந்தா–நின்
சரணம், சரணம், எந்தா! சதா
னந்தா வா னந்தா, உ
வந்தாள், மிக வந்தனம், வந்தனம்! – ஏசு

3. ஐயா என் மனம் ஆற்றி–உன
தடிமை என்றெனைத் தேற்றி; குண
மாக்கி, வினை நீக்கி, கை
தூக்கி, மெய்ப் பாக்கியம் கொடு – ஏசு

4. சுத்த திரித்துவ வஸ்துவே–சுவி
சேட மகத்துவ கிறிஸ்துவே–பரி
சுத்தனே, கரி சித்தெனை இ
ரட்சித்தடிமைகொள்; நித்தியம் ஸ்தோத்திரம்! – ஏசு

---

1 வேதம்

5. மங்களம் ஈசாவே–வளம் மிகும்
சங்கையின் ராஜாவே–நரர்
வாழ்வே மன் னாவே, மெய்த்
தேவே, உமக் கோசன்னாவே! – ஏசு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**77. இராகம்: மான்சி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஐயா, உனதருள் புரி, அருமை மேசையா!**

**அனுபல்லவி**

பொய்யா மருள்வினை, செய்யா துலகதில்
நையா தடிமைகொள, துய்யா, மெய்யா. – ஐயா

**சரணங்கள்**

1. ஆதாரமும் நீ யலதார் திருப் பாதா,
சாதா ரண வேத வினோத சங்கீதா,
காதார வினவு,[1] நீ தா எனின் குறை,
தாதா, பர குரு நாதா, போதா! – ஐயா

2. அந்தா தி[2], அனாதி, பிதா ஒரு மைந்தா;
சிந்தா குலமே[3] தவிர், நீடு சுகந்தா;
உந்தா பரம்[4] அருள் எந்தா,[5] ஞானப் ர
பந்தா,[6] வருசதா னந்தா நந்தா! – ஐயா

3. ஈசா, நசராபுரி மேவிய வாசா,
பூசா[7] விதி மாமறை புகழுபதேசா,
மாசா[8] மிகு பவ நாசா, எருசலை
ராசா, ஒரு சரு வேசா, நேசா. – ஐயா

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 கேளும்
2 முதலும் இறுதியும்
3 மிகு வியாகுலம்
4 உதவி
5 எந்தை
6 வேத முதல்வன்
7 பூசைக்குரியவன்
8 கொடிய சாவு

**78. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதிதாளம் (400)**

**பல்லவி**

**ஏசுவே, உமதுரை மிகப் பகரும்–சுவிசேஷமானதை**
எமக்கும் ஈந்ததால் உமக்கு ஸ்தோத்திரம்

**அனுபல்லவி**

தாசர் பிழைத்தென்றும் வாழ்ந்திட, ஏசுவே,
தயவுடன் உமதூழியக் காரரால்
சத்தியம் அறைந்தீர்; வெற்றியாய்ச் சிறந்தீர்;
முத்தியைத் திறந்தீர்; அத்தை எனக்கீந்தீர் – ஏசுவே

**சரணங்கள்**

1. இருண்டபள்ளத்தின் உழையினில்கிடந்தேன்–நீர்
உருக்கமாகவே
எடுத்தெனக்குயிர் கொடுத்ததால் பிழைத்தேன்;
வறண்ட தலமதாகவே இருந்தேன்; உமதன்பின் ஞான
மழை பொழிந்ததின் மகிமையால் செழித்தேன்;
திரண்ட சத்துருக் கூட்டமதால் எங்கும்
புரண்டோடும் பாவ வெள்ளத்திலே நின்று
சேர்தெனை எடுத்தீர்; பார்த்தறத் துடைத்தீர்,
போர்த்துடை உடுத்தீர்; காத்தருள் கொடுத்தீர் – ஏசுவே

2. இப்படி நான் பெற்றஞான ஜோதியும்–ஏசுக்கிறிஸ்துவே
அன்பாய்
இரங்கிச் செய்த நன் மறுமை நீதியும்
தப்பிடாமல் என்றும் எனக்கு வீதியும், நான் அடைந்த
வாக்கியம்
தளர்ந்திடாமலே தினமும் போதியும்!
எப்பொழுதும் உம தூழியக்காரரால்
செப்பிடப்பட்ட நற் சுவிசேஷத்தால்
எல்லாரையும் பாரும்; பொல்லா வினை தீரும்;
அல்லும் எனில் வாரும், நல் ஆவியைத் தாரும் – ஏசுவே

*– மரியான் உபதேசியார்*

**79. இராகம்: தோடி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**யேசு நசரையி னதிபதியே,–பவ நரர்பிணை யெனவரும்.**

***அனுபல்லவி***

தேசுறு[1] பரதல[2]வாசப் பிரகாசனே
ஜீவனே, அமரர்[3] பாவனே[4] மகத்துவ. – யேசு

***சரணங்கள்***

1. இந்த உலகு சுவை தந்து போராடுதே,
எனதுடல் உமதோ டிசைந்து சீராடுதே;
தந்தர அலகை[5] சூழ நின்று வாதாடுதே;
சாமி, பாவியகம் நோயினில் வாடுதே. – யேசு

2. நின் சுய பெலனல்லாமல் என் பெலன் ஏது
நினைவு, செயல், வசனம், முழுதும் பொல்லாது;
தஞ்சம் உனை அடைந்தேன், தவற விடாது;
தாங்கி ஆள் கருணை ஓங்கி எப்போதும். – யேசு

3. கிருபையுடன் என் இருதயந்தனில் வாரும்;
கேடு பாடுகள் யாவையும் தீரும்;
பொறுமை, நம்பிக்கை; அன்பு, போதவே தாரும்;
பொன்னு லோகமதில் என்னையே சேரும்; – யேசு

***– சவரிமுத்து உபாத்தியாயர்***

**80. இராகம்: இங்கிலீஸ்.** **ஆதிதாளம் (401)**

**பல்லவி**

**பூரண கிருபையின் மயமே, தேவா,**
பொற்புச் செப்பத் தொப்பற் றதிசயமே.
ஆரண சுசஜெப சொரூபா, யோவா,
அடியனையே இரட்சித் தாள்.

---

1 ஒளிவீசும்
2 பரலோகம்
3 வானோர்
4 மகானுபாவனே
5 பேய்

**அனுபல்லவி**

சீருச்சப் பட்சத் திரு முதலே,
சிட்டோர்க்காதரவே, யனுசாரி,
தீமைக் கட்டற்றுப், பூமக்கட் கொத்துச்,
சாமத்திற் பெத்தலேமிற் புற் கொட்டில்
மேவு ரூபா, தேவ ரூபா, மூவொரூபா, ஜீவவா,
தேசருள் வாசநேசா சீமா, சுரர் பதியே,
மாசதிலேசு ராஜ பூமா, நரர் துதியே,
தேவரெலாம் நீடியடி தொழுபரா, கா, வா,
தேடரு முனிரு சரண் மலர் துணை, துணையே, – பூரண

**சரணம்**

சாதிகளுட பரவசமே, நேயா,
சத்தியத் துத்தியச் சொற்கப் பதி நிஜமே,
ஆதிவினையற வருசுதா, தீயோர்க்
கருமையினோர் மத்யஸ்தா;
மா தத்துவச் சுத்தப் பரவெளியே,
வற்றா வாரிதியே யசரீரி.
வானத்துப் பொற்புக் கானத்திற் கொட்டிற்
றானத்திற் புக்கத் தானுற்றுற்பித்த
காவலா வா, மாவல்லா, ஓ! நலவா, மேலவா,
மானுவேலாசை யேசையா மீசுர வடிவே,
பானுவே, நேச மேசியா வாச முடிவே,
மாசதிலா மூவரு மொரு தெய்வமே, நாதா,
மாயை யற வருள் புரி தினந் துதியே. – பூரண

***– வேதநாயகம் சாத்திரியார்.***

**81. இராகம்: காம்போதி** **ஆதிதாளம் (402)**

**பல்லவி**

**நீயே நிலை, உனதருள் புரிவாயே,–ஏசு**

**சரணங்கள்**

1. தூய அர்ச்சயர்கள் சூழ சீயோன் மாமலையில் ஆளும்
சுந்தரக் கிருபை வாரியே மைந்தர் கட்கனு சாரியே,
சோபன ஜீவி–மகிமைப்ர,–தாப அரூபி, சொரூபி,
ஜோதி, ஆதி நீதி ஓதி சுயவல்லமையில் நரர் திரு உரு எனவந்த
– நீயே

2. நன்மை நிறை வாகரமே,[1] ஞானப் பிரபாகரமே,
வன்மைத் தர்ம சாகரமே, வான சுரர் சேகரமே,
மகிமை வந்தனமே,–அடியார்–துதிகள் தந்தனமே, கனமே,
வாசநேச ஏசுராஜ மனுடர்களுடகதி தின அருச்சனை[2] துதி
– நீயே

3. வானும் இகமும் படைத்த, வலுசர்ப்பம் வினை துடைத்த,
ஞான நன்மைகள் உடைத்த, நரர்க்குக் கிருபை கிடைத்த,
நய கிருபாலி,–உலகின்–பவம் அறு மூலி, செங்கோலி,
நாடி, நீடி, தேடி, கூடி, நயம் அருள் அரசன் நீ, தயவுடன்
பரிசனி.[3] – நீயே

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**82. இராகம்: ஆனந்த பைரவி** **ஏகதாளம்**

***பல்லவி***

**பாதகன் என் வினைதீர், ஐயா, கிருபாகரா, நின்**
பாடு நினைந் தெனைச் சேர், ஐயா.

***அனுபல்லவி***

தீதகற்றவே சிறந்த சேண்[4] உலகினிமை விட்டு,
பூதலத் துகந்து வந்த புண்ணியனே, ஏசு தேவா. – பாதகன்

1 உறைவிடமே
2 பூசனை
3 சேர்த்துக்கொள்
4 உயர்ந்த

***சரணங்கள்***

1. வந்துறும் எப்பாவிகளையும்–அங்கீகரிக்கும்
மாசில்லாத ஏசு நாதனே,
உந்தன் இடம் வந்துளமே உருகி அழுது மாது
முந்தி மிகச் செய்த பாவம் முழுதும் பொறுத்தாய் அன்றோ?
– பாதகன்

2. சிந்தின உன் உதிரம் அதே–தீயோன் மறத்தை
சின்னபின்னம் செய்ய வல்லதே;
பந்தம் உற உந்தன் வலப் பாகமுற்ற கள்வனையே
விந்தையுற வேரெட்சித்த வேதனே, அவ்விதமாயே – பாதகன்

3. அற்பவிசுவாசமுளன் ஆம்–அடியேனை இனி
ஆதரிப்பதார்? உன் தஞ்சமே;
தற்பரா, உனைத் தரிசித் தன்றி நம்பிடேன், எனவே
செப்பின தோமாவுக்குப்போல், திரு உருக்காட்சி தந்து.
– பாதகன்

***– ஜாண் பால்மர்***

## 83. இராகம்: இந்துஸ்தானி

***பல்லவி***

**ஆண்டவா, மோட்சகதி நாயனே,**
மீண்டவா, பாவிக் கிரங்குவாயே.

***சரணங்கள்***

1. நீண்ட ஆயுளுள்ளவா, நெறிமறை கொடுத்தவா,
தாண்டி உலகில் வந்தாயே, தயாளமுள்ள ஏசுவே –ஆண்

2. பெத்தலேக மூரிலே பிள்ளையாய்ப் பிறந்தாயே;
சித்தம் வைத்திரங்கமாட்டாயோ, தேவ சீல மைந்தனே? –ஆண்

3. பாவியான ஸ்திரீ உன் பாத முத்தி செய்திட
ஜீவவாக்குரைக்கவில்லையோ, தேற்றல் செய்யும் மீட்பரே?
–ஆண்

4. பேதலித்த சீமோனைப் பேணி முகம் பார்த்தாயே;
ஆதரவுநீ தான் அல்லவோ, அருமையுள்ள அப்பனே? –ஆண்

5. கொல்கதா மலையிலே குருசினில் தொங்கையிலே,
பொல்லாருக்கிரங்கவில்லையோ, பொறுமையுள்ள தேவனே?
– ஆண்

6. பாவவினை தீர்க்கவே பாடு மிகப் பட்டாயே;
கோபமின்றி என்னை நோக்காயோ, குருசில் அறையுண்டவா?
– ஆண்

– *ஜே.சி. அருளப்பன்*

### 84. இராகம்: சங்கராபரணம் ஆதிதாளம்

*பல்லவி*

**தயை கூர், ஐயா; என் ஸ்வாமீ, பாவி நான்,**
தயை கூர், ஐயா; நின் தாசன், ஏசையா;
தயை கூர், ஐயா.

*சரணங்கள்*

1. ஜெய மனுவேலன், நய அனுகூலன்,
சீரா, தீரா, அதிகாரா, திருக்குமார;
சேவியர்கள் பணிவிடை மேவிய நேச
விலாச க்ருபாசன யேசு நரேந்திரா![1] –தயை

2. வானத்திலிருந்து வந்து, ஞானத் துரு உவந்து[2],
வளமை[3] கொண்டு, கிருபை விண்டு, குடில் கண்டு,
மாடடை வீடதி னூடு[4] புல் மேடையில்
நீடின போதினி மோடியதாமோ[5]? –தயை

3. தந்தை பிதாவின் மைந்தன் மைந்தர் வடிவமாகி,
தராதலமேவி[6] வா, பாவி; எனக் கூவி,
சாங்கமதாய்[7] அருள் ஓங்கி, மகா பெரு
ஈங்கிசையாய்[8] உயிர் நீங்கினதாலே நீ. –தயை

---

1 அரசனே–மனித குமாரன்
2 விரும்பி
3 மேன்மை
4 நடு
5 முழுவதும்
6 பூமியிடம் வந்து
7 முழுவதும்
8 உபத்திரவமுள்ளதாய்– பாடு ஏற்றவராய்

4. தேவ ரட்சிப்பனைத்தும் பாவிகட்காய் விளைத்தும்,
சிலுவையில் மாண்டும், துயர் பூண்டும், சிறை மீண்டும்,
ஜீவனோடதிபதி பராபரனார் வல
பாரிசமே[1] அர சாளும் இந் நேரம் நீ –தயை

***– வேதநாயகம் சாசுதிரியார்***

**85. இராகம்: சங்கராபரணம். ஆதிதாளம்**

**பல்லவி**

**இன்றே நீ என்னுடன் இருப்பாய் பரதீசில்**
என்ற நல்வாக்கு இப்பாவிக்கும் ஈந்தருள்.

**சரணங்கள்**

1. கர்த்தா உம் ராஜ்ஜியத்தில் சேரும் போ தென்னையும்
கருத்தில் வையெனக் கெஞ்சும் கள்ளன் பெற்றாற்போல்,
–இன்றே

2. கொல்லும் உன் பகைவர்க்குக் கூறும் மன்னிப்பைக்
கூர்ந்து கள்ளன் கேட்டுக் குணப்படுந் தன்மையாய் – இன்றே

3. குருசின் உம் ரூபத்தைக் கொலைஞன் அகம்பதித்து
உருகியே தன்னெஞ்சம் உன்னைப் பற்றச் செய்தாயே – இன்றே

***– அருள்திரு. எஸ்.ஜி. ஏசுவடியான்***

**86. இராகம்: சகான ஆதிதாளம்**

**திபதை–கண்ணிகள்**

**நரனாம் எளியேன் நற்கதி சேர,**
பரனே, உன் அருள் செய், என் பவவினை தீர.

2. தரணியோர்க் காக நரர் உருத் தரித்தாய்;
தகு நெறி விளக் கிட மிகவும் சஞ்சரித்தாய்.

3. இக பரம் அனைத்தும் வகையுடன் படைத்தாய்
எளியோர்க்கென்றாவின் கொட்டில் வழிவரத் தொடுத்தாய்.

---

1 பக்கம்

4. பாவிகள் உயிர்த்து ஜீவனைக் கூட,
பரிவுடன் பாடடைந்தீர், திரு ரத்தம் ஓட.

5. இந்நிலத் தவர்க்காய் நல்நெறி முடிக்க,
இழிமரத் தறையுண்டீ எழில் உடல் துடிக்க.

6. பாதகன் ஒருவன் தீதுணர்ந் துருக
பரதீசில் அமைத்தீரே, அருள் மிகப் பெருக.

7. மரணத்தின் கூர்போய் நரர் என்றும் நேரே,
வாழ்ந்து பரத்துறவே ஆழ்ந்துயிர்த் தீரே.

*– ஜாண் பால்மர்*

**87. இராம்: காம்போதி** **ஆதிதாளம் (403)**

**கண்ணிகள்**

**தேவ சுதன் பூவுலகோர் பாவம் ஒழிக்க–மனு**
ஜென்மமாக வன்மையுள்ளோன் தன்மையாய் வந்தார்.

2. வந்த பின் தன் தந்தையர்க்கு கந்தபடியே–பர
மண்டலன் பூ மண்டலத்தோர் தொண்டன்போல் ஆனார்.

3. தொண்டனாகி, அண்டர்[1] கோமான்[2] விண்ட[3] மறையே,–பரி
சுத்தம், மகா சத்யம், மிகு புத்திக்கும் ஊற்றே.

4. புத்தி மிகு வித்தமறையைத் துலக்கவே–பல
போதகன்மார் பூதலத்தின் மீதில் தெரிந்தார்.

5. பூதலத்தில் வேதமறை ஓதி, நரர்க்குள்–அற்
புதங்கள் செய்து சிதங்கள்[4] ஓதிக் கதங்களை[5] வென்றார்.

6. ஏசுஉல காசைகளின் மாசறுக்கவும்–மாந்தர்க்
கீடேற்றத்தைத் தேடவும் மிகு பாடுகள் பட்டார்.

*– தேவவரம் முன்ஷி*

---

1 வானோர்
2 அரசன்
3 உரைத்த–மொழிந்த
4 சிறந்தவை
5 பாம்புகளை–பகை

**88. சங்கராபரணம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**ஜகநாதா, குரு பரநாதா, திரு**
அருள் நாதா, ஏசு பிரசாதா நாதா!

**அனுபல்லவி**

திகழுறுந்[1] தாதா[2], புகழுறும் பாதா,
தீதறும் வேத போதா!

**சரணங்கள்**

1. முற்காலம் ஆதிமைந்தர் மோசப் பிசாசு தந்திர
மொய்[3] கொண்டு கனியுண்ட பழியாலோ?
நற்காலம் நீ தெரிந்து, நவின்ற வண்ணம் பரிந்து,
நர[4]தேவனாக வந்தாய் மொழியாலோ? – ஜக

2. எளிய வேஷந் தரித்தே இங் கவதரித்தாலும்,
இமையோர் வந்திறைஞ்சிடத் தெரிந்தாயே;
ஒளிசெய்யும் பணிமுடி உயர் மன்னர் தொழும்படி
உடு[5] வழி காட்டிடப் புரிந்தாயே. – ஜக

3. அருந் தவன்[6] கையில் தங்கி, அன்பின்பக் கடல் பொங்கி,
ஆலயத்தில் துதிக்க களித்தாயே,
வரும் தவ மதியால் முன் மற[7] மன்னன் தேடிட, உன்
மலர் முகங் காட்டாமல் ஒளித்தாயே. – ஜக

4. மக்கள் உளக் களங்கம் மாசற்றொளி விளங்க,
மதுரப்பிரசங்கம் யார்க்கும் உரைத்தாயே;
சிக்[8] கடர் துன் மனத்தைத் திருத்தி, அறத்தின் வித்தை
திருத் தயை கூர்ந் தெவர்க்கும் விதைத்தாயே. – ஜக

---

1 பிரகாசமுள்ள
2 தந்தை
3 பெருமை–பகை
4 மானிட
5 நட்சத்திரம்
6 சிமியோன்
7 கோபமுள்ள–ஏரோது
8 அழுக்கு

5. இஷ்டமுடன் நேசித்தும் எமக்குப தேசித்தும்
இணையில் பேரின்பக் கண்ணால் பார்த்தாயே;
துஷ்டப் பேயைக் கடிந்தும் துஞ்சினர்க்[1] குயிர்தந்தும்
துன்பப்பிணி பலவுந் தீர்த்தாயே – ஜக

*– வீரமா முனிவர்*

**89. இராகம்: தன்யாசி** **ஆதிதாளம் (404)**

**பல்லவி**

**ஜகநாதா, குரு பரநாதா, திரு**
அருள் நாதா, ஏசு பிரசாதா நாதா!

**அனுபல்லவி**

திகழுறுந் தாதா, புகழுறும் பாதா,
தீதறும் வேத போதா!

**சரணங்கள்**

1. நிகராய் இப் பெரு நன்றி நீ இயற்றின தன்றி
நீதிக்கும் பலியாகப் பரிந்தாயே;
புகர்கொள்[2] எமை நினைந்து பூங்காவில் மிக நொந்து;
பொருவில் உதிர வேர்வை சொரிந்தாயே. – ஜக

2. தனையர்[3] வல் நோயைக்கண்ட தாயார் மருந்துட்கொண்ட
தகைமை எனப் பேரன்பு கூர்ந்தாயே;
வினையர் வெம் பாவக் கேடு விலக அரிய பாடு
மேவி அனுபவிக்க நேர்ந்தாயே – ஜக

3. சயிலம்[4] பிளந்திடவும் தபனன்[5] வில் மங்கிடவும்,
ஸ்வாமி எமைப் புரக்க[6] மரித்தாயே,
உயிரோடு செஞ்டர்போல் உயிர்த்து, திருவுடல்மேல்
உற்ற ஐந்து காயங்கள் தரித்தாயே. – ஜக

---

1 மரித்தோர்
2 பாவம்
3 மகன்
4 மலை
5 சூரியன்
6 காக்க

4. மாதவர் எங்கும் செல்ல, மறை உபதேசஞ் சொல்ல,
வரங்கள் அளவில்லாது பொழிந்தாயே;
ஓத ஒண்ணாத துங்க உன்னதமான அங்கம்
உலகில் அமைத்து முத்திக் கெழுந்தாயே. – ஜக

5. அமரர்[1] முற்றும் அறியார், அடிகள் சற்றும் அறியார்,
ஆர் உன் திறல் அறிவார், கர்த்தாவே,
எமது பவம் பொறுத்தே, இரக்கம் எம்மேல் உகுத்தே,
எமைப் புரந்தாளும்[2], மானப் பர்த்தாவே – ஜக

*– வீரமா முனிவர்*

**90. சங்கராபரணம்** **ஏகதாளம்**

**கண்ணிகள்**

**பரனே, பரப்பொருளே–நித்ய–பாக்கியனே சத்ய வாக்கியனே,**
நரரான பாவிகட்காய்–இந்த–நானிலத்தில் வந்த வானவனே!

2. வேறோர்மலர்க்காவில்–சென்று–வேதனைப்[3] போற்றி–மனம் நொறுங்கி
ஆறாக் கொடுந்துயரம்–உந்தன்–ஆத்துமத்தில் வரலானதுவோ?

3. ஈராறு சீடர்களில்–பண இச்சை–மிகுந்த ஒரு சீடன்,
பேர் யூதாஸ்காரி யோத்தாம்,–அவன்–பேசினதின்படி காசு பெற்று.

4. ஒன்னாரின்[4] கும்புகளை[5]–அழைத்–தோடிவந்தே, உம்மை நாடிவந்தே,
கன்னத்தில் முத்தமிட்டே,–உம்மைக்–காட்டிக் கொடுக்கத் துணிந்தானோ?

5. காட்டிக்கொடுத்திடவும்,–அந்தக்–காதகராகிய பாதகர் கை
போட்டே பிடித்திடவும்,–பின்னும்–பொற்கரங்கட்டி இழுத்திடவும்.

---

1 வானோர்
2 காத்து
3 பிதா
4 பகைவர்
5 கூட்டம்

6. செம்புருவையைப்[1] போலே–கூடச்–சென்றிடக் காய்பா முன் நின்றிடவும்
அம்பரனே, உந்தனுக்கு–இந்த–ஆபத்துவந்ததென் பாவம் அல்லோ?

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**91. இராகம்: சங்கராபரணம் ரூபகதாளம்**

**பல்லவி**

**ஏன் இந்த பாடையா? நான்**
என்ன தருவேன் இதற் கீடையா?

**சரணங்கள்**

ஆனந்த நேமியே[2]–எனை ஆளவந்த குரு சுவாமியே – ஏன்

**சரணங்கள்**

1. கெத்சேமனே யிடம் ஏசுவும்–அதின்
கெழு மலர்க் காவிடை[3] போகவும்,
அச்சயனே[4], மனம் நோகவும்–சொல்
அளவில்லாத் துயரமாகவும் – ஏன்

2. முழந்தாள் படியிட்டுத் தாழவும்–மும்
முறை முகம் தரைபட வீழவும்,
மழுங்கச் சினம் உமைச் சூழவும்–கொடு
மரண வாதையினில் மூழ்கவும், – ஏன்

3. அப்பா, பிதாவே, எனறேத்தவும்–துயர்
அகலச் செய்யும், எனச் சாற்றவும்,
செப்பும் சித்தமாக என்று போற்றவும்,–ஒரு
தேவதூதன் வந்து தேற்றவும் – ஏன்

---

1 குற்றமற்ற ஆட்டுக்குட்டி
2 கடல்
3 சோலை
4 தேவக்குமாரன்

4. ஆத்துமத் துயர் மிக நீடவும்,–குழம்
பாக உதிர வேர்வை ஓடவும்,
சாத்திர மொழிகள் ஒத்தாடவும்,–உந்தன்
தாசரும் பதந்தனை நாடவும் – ஏன்

*– ஏசுதாசன் அண்ணாவியார்*

**92. இராகம்: கெவுளிபந்து அடதாளம்**

**கண்ணிகள்**

**அப்பா, தயாள குணாநந்த மோனந்த வேதா,–பொல்லா**
இப்பாரில் காய்பாமுன் ஏகினீரோ, ஏசுநாதா?

2. குற்றம் சுமத்தப் பொய்ச் சாட்சிகளைத் தேடினாரோ?–அந்தச்
செற்றலர்[1] எல்லாம் திரண்டேகமாய்க் கூடினாரோ?

3. கன்னம் அதைத்ததோ?[2] கண்கள் சிவந்ததோ? சுவாமி,–பொறி
மின்னிக் கலங்கி, விசனம் உற்றீரோ, நன்னேமி?[3]

4. மெய்யான சாட்சி இட்டையனே, சொன்ன உம் மீதே–தீயர்
பொய்யான சாட்சி இட்டையோ, சுமத்தினார் தீதே.

5. என் கட்டை நீக்கிஈடேற்ற வாதைக்குள்ளானீரோ?–உம்மைப்
பின் கட்டாய்க் கட்டி, பிலாத்திடங்கொண்டு போனாரோ?

6. இத்தனை பாடுகள் நீர் பட்ட தென்கொடும் பாவமே,–என்றன்
கர்த்தனே, உன் மீதில் வந்ததையோ, தேவ கோபமே?

7. நீர் பட்ட பாட்டைப்போல், ஆர் பட்டுத்தாங்குவார், தேவே?–பல
கார்பட்ட[4] நெஞ்சமும் சீர்பட்டுப் போகுமே, கோவே.

*– ஏசுதாசன் அண்ணாவியார்*

---

1 பகைவர்
2 வீங்கியதோ
3 கருணைக்கடல்
4 இருளடைந்த–பாவ இருள்

**93. இராகம்: இங்கிலீஸ்** **ஆதிதாளம் (405)**

**பல்லவி**

**கனம், கனம் பராபரன் கருணையின் குமாரனே**
தினம், தினம் கீர்த்தனம்; ஜெயம்! ஜெயம்! ஸ்தோத்திரம்

**சரணங்கள்**

1. வனந்தனிலே மானிடர் வருந்தின பாதகம் அற,
கனிந்து நமதாண்டவர் கடுந்துயரம் பூண்டனர். – கனம்

2. அன்னாவும் காய்பாவுமாய் அடர்ந்த சங்கம் யாவரும்
இன்னா ஞாயங் கூறியே எதிர்த்து, தீர்ப்பதிட்டனர். – கனம்

3. ஞாய சங்க மீதிலே நாதனைச் சினந்தொரு
தீய பாவிதான் அவர் திரு முகந்தறைந்தனன். – கனம்

4. ஆகடியமாக முக் காட திட்டி ராவெல்லாம்
ஏகனைப் பரிகாசமாய் ஈனர் குட்டவும் செய்தார். – கனம்

5. கைச்சரசம் பண்ணினார்; காவல் மீதிருத்தினார்;
அச்சமற்ற கந்தையாய் அநேக தூஷணஞ் சொன்னார். – கனம்

6. சங்க மீதிரண்டு பொய்ச்சாட்சிகள் எழுந்துமே,
பங்கமான தோதினும், பரிந்து கேட்டிருந்தனர். – கனம்

7. பெத்தரிக்கமாகவே பேதுரு அப்போஸ்தலன்
சத்தியங்கள் பண்ணியே தான் மறுதலித்தனன் – கனம்

8. கஸ்தியதுறச் சொல்லி, கனன் றெழுந்து ஆரியன்
வஸ்திரம் கிழித்துமே, மரணத் தீர்ப்பியற்றினன் – கனம்

**94. இராகம்: மோகனம்** **ரூபகதாளம்**

**தரு**

**பொற்பு[1] மிகும் வானுலகும்**
பூவுலகும் படைத்த பரப்பொருளே,–இங்கே
பொந்திப்பிலாத் தரண்மனையில்
வந்து நிற்கும் காரணமேன், கோவே?

---

1 அழகு

2. கற்பனை மீறிய பாவத்தால்
கடின நரகாக்கினைப் படாமல்–உன்னைக்
காப்பதற் கிங்கே ஞாய
தீர்ப்பில் உற்றோம், சீயோனின் மாதே.

3. துய்ய திரு மேனி எல்லாம்
நொய்ய உழுத நிலம்போல ஆகி,–உன்
சோரி[1] சிந்த, வாரதினால்
நீர் அடிக்கப்பட்டதென்ன, கோவே?

4. வையகத்தின் பாதகத்தால்
பெய்யும் நடுதீர்வையெல்லாம் ஆற்ற,–இந்த
வாதை எல்லாம் பட்டிறக்க,
போத[2] மனம் சம்மதித்தோம், மாதே.

5. செய்ய[3] கண்கள் உறச் சிவந்து,
திருக் கன்னங்கள் தடித்து, மிக வீங்கி,–முழுச்
சென்னியின் ரோமங்கள் எல்லாம்
வின்னமுற்றிங்[4] கிருப்பதென்ன, கோவே?

6. மையிருளில் குருக்களுடை
மாளிகையில் படுத்தின பாடெல்லாம்–இங்கே
வன் கொலைஞரால் அடிக்க,
பங்கமுற்ற கோலம் இது, மாதே

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**95. இராகம்: சங்கராபரணம் ஏகதாளம்**

*பல்லவி*

**சரணம், சரணம், அனந்தா, சச்சிதானந்தா[5],**
தாவீதின் மைந்தா, ஓசன்னா! சரணபதந்தா.

---

1 இரத்தம்
2 பூரணமாய்
3 அழகான
4 சிதைவு
5 சத்து, சித்து, ஆனந்தம் என்னும் இறைநிலை

***சரணங்கள்***

1. தேவசுதன் பொந்தியுப் பிலாத்தினிடமே,
சென்று பல பாடுபடவும் தயவானார். – சரணம்

2. தந்து[1] செய்து பொந்தியுப் பிலாத்து துரைதான்,
தற்பரனை விட்டுவிடத் தன்னுள் எண்ணினான். – சரணம்

3. பரபாசோ[2] டதிபதியைப் பணிய நிறுத்தி,
பாதகனை யோ? இறையை யோ? விட, என்றான். – சரணம்

4. ஜீவனுட அதிபதியைச் சிலுவையில் கொன்று,
திருடனையே விட்டுவிடத் தீயவர் கேட்டார். – சரணம்

5. தண்ணீர் தனை எடுத்துக் கை கழுவியே,
தற்பரனைக் கொல்வதற்கங் கொப்புக்கொடுத்தான். – சரணம்

6. கள்ளனையே விட்டு விட்டு யூதர்கட்காக,
காவலனைக் குருசறைப் பாவியும் தீர்த்தான். – சரணம்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**96. இராகம்: சங்கராபரணம் ஏகதாளம்**

***பல்லவி***

**சரணம், சரணம், அனந்தா, சச்சிதானந்தா,**
தாவீதின் மைந்தா, ஓசன்னா! சரணபதந்தா.

***சரணங்கள்***

1. பித்தன் என்று வெள்ளை அரைச் சட்டை அணிந்து,
பேதக ஏரோதே பரி காசம்பண்ணினான். – சரணம்

2. கற்றூணில் சேர்த்திறுகக் கட்டி, வலுவாய்க்
காவலன்[3] தன் சேர்வை எல்லாம் கூடி அளித்தார். – சரணம்

3. முள்ளின் முடி செய்தழுத்தி, வள்ளல் எனவே,
மூர்க்க முடனே தடிகொண் டார்க்க அடித்தார். – சரணம்

---

1 தந்திரம் 2 பரபாசு 3 அரசன்

4. கையினில் செங்கோலதென்று மூங்கில் ஒன்றிட்டு,
காவலன் நீ யூதருக்கென் றோவியஞ் சொன்னார். – சரணம்

5. துப்பினார் முகத்தினில் அதிக்கிரமமாய்,
துன்னிய[1] கைக்கோலை வாங்கி சென்னியில் போட்டார்.
– சரணம்

6. முழங்காலிலே இருந்து தெண்டன் பண்ணியே,
முன்னவனைத்தான் இறைஞ்சிக் கன்னத்தறைந்தார். – சரணம்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**97. இராகம்: மோகனம் ரூபகதாளம் (407)**

**தரு**

**மிகையாகத் தூஷணித்துச்**
சகலாத்து மேல் சட்டை ஒன்றிட்டு–யூதர்
வேந்தன் எனச் சேவகர்தாம்
காய்ந் திசைத்த கோரணியென்? தேவே

2. பகைகாரப் பாவிகளைத்
தொகையாக வானுலகில் சேர்த்து–அங்கே
பார்த்திபராய்ச் சமுகத்தினில்
ஏற்றிவைக்க வேண்டி அன்றோ மாதே?

3. முள்ளின் ஒரு முடி சமைத்து,
வள்ளல் உம்தன் சிரத்தமுத்தி வைத்தே–கனு
மூங்கில் தடியால் அடிக்க
ஓங்கு துயர் அடைந்தீரோ? கோவே?

4. தெள்ளி முகம் மினுக்கி, மிகச்
சிரத்தை அலங்கரித்துக் கந்தை தீர்த்து – நித்ய
ஜீவன் முடி உன் தலையில்
ஓவியமாய்ச் சூட்ட அன்றோ மாதே?

---

1 கெட்டியான

5. நன்னயஞ் சேர் என்னுத்தம
நாயகமே, மெய்க்கிறிஸ்து வேந்தே–நீர் செய்
நன்றி குன்றாதே ஒழுக
என்றும் எனக்கருள் புரியும் – தேவே

6. கன்னியரே, சீயோனின்
மின்னரசே, ஞானமடமானே, உன்னைக்
காத்தருள்வோம், மணவீடு
சேர்த்தருள்வோம், கலங்காதே மாதே.

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**98. இராகம்: சங்கராபரணம் திரிசுதாளம்**

***பல்லவி***

**ஏங்குதே என்ன கந்தான், துயர்**
தாங்குதில்லை முகந்தான்.

***அனுபல்லவி***

பூங்காவிலே கனிந்தேங்கி நீர் மன்றாட
ஓங்கியே உதிரங்கள்
நீங்கியே துயர் கண்டு – ஏங்குதே

***சரணங்கள்***

1. மேசியா வென்றுரைத்து, யூத
ராஜனென்றே நகைத்து,
தூஷணித்தே அடித்து, நினைக்குட்டி
மாசுகளே[1] சுமத்தி,
ஆசாரமின்றியே ஆசாரியனிடம்
நீசர்கள் செய் கொடும் தோஷமது கண்டு – ஏங்குதே

2. யூதாஸ் காட்டிக்கொடுக்க, சீமோன்
பேதுரு மறுதலிக்க,
சூதா யெரோதே மெய்க்க, வெகு
தீதாயுடை தரிக்க,
நாதனே, இவ்விதம் நீத[2]மொன்றில்லாமல்
சோதனையாய்ச் செய்யும் வேதனையைக் கண்டு – ஏங்குதே

---

1 குற்றம் 2 நீதி

3. நீண்ட குரு செடுத்து, எருசலேம்
தாண்ட மலையெடுத்து
ஈண்டல்[1] பின்னே தொடுத்து, அவரின்மேல்
வேண்டும் வசை கொடுத்து,
ஆண்டவர் கை காலில் பூண்டிடும் ஆணியால்
மாண்டதினால் நரர் மீண்ட தென்றாலுமே – ஏங்குதே

***– தேவசகாயம் எழுத்தர்***

**99. இராகம்: கமாசு ஆதிதாளம்**

**பல்லவி**

**இத்தனை பாடேன் பட்டீர்?–இறையே, என்னாலே**
இத்தனை பாடேன் பட்டீர்

**அனுபல்லவி**

சித்தம் மகிழ்ந்தே நாடி,
சத்துருப் பாவியைத் தேடி, – இத்

**சரணங்கள்**

1. தந்தை பிதாச் சேயனே, சருவாதி நாயனே,
பொந்தியுப் பிலாத்தின் கீழாய், நிந்தனை துயருக் காளாய் – இத்

2. முள்ளின் முடி சூடியே, மூர்க்கர் வசை பாடியே,
வள்ளலே, மகா உரத்த கள்ளனுடனே நிறுத்த – இத்

3. குருதி சிந்தி ஓடவே, கொலைக்களம் நீடவே,
பருதி இருண்டு போகக், கரங் கழல் அணி நோக, – இத்

4. எந்தை மனு வேலனே, தந்தை அனு கூலனே,
உன்தன் ஐந்து காயத்தாலே எந்தன் வினை தீர் அன்பாலே –இத்

***– தைரியம் றைற்றர்.***

1 கூட்டம்

**100. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதிதாளம் (408)**

**பல்லவி**

**என்னாலே ஜீவன் விடுத்தீரோ, – ஸ்வாமி?**
இத்தனை பாட்டுக்கிங்கே அடுத்தீரோ?

**அனுபல்லவி**

பொன்னாட்டதிபதி பரமன் ஆட்டுக்குட்டியே,
பொறுமைக் களவிலாத கிருபைத் திருக்குமாரா,
பூண்டு பொற் குருசினில் அறையுண்டெனை
மீண்டனுக்ரக மிட நெறி கொண்டதோ? – என்

**சரணங்கள்**

1. கள்ளனைப்போல் கட்டுண்ட பரிதாபம்,–மெய்ப்பூங்
காவில் ஆத்துமத்துற்ற மனஸ்தாபம்,–வேர்த்து
வெள்ளமாய் ரத்தம் புரண்ட சோபம்[1],–யாரால்
விபரித்து முடியும் உன் பிரஸ்தாபம்?
எள்ளத்தனை அன்பிலா உள்ளத் துரோகி நானே;
எனால் உமக்கென்ன லாபம்? ஏசு
மனா பரப்ரம[2] திரு வுளமோ இது? – என்

2. சிலுவை மரத்தில் கைகால் நீட்டி, தேவரீர்
திருவிலாவைத் துளைக்க ஈட்டி, காயம்
வலிய அன்பின் கடைக்கண் காட்டி,–இன்னம்
வரவழைக்கிறீர் தயை பாராட்டி;
விலைகொடுத்தெனைக் கூட்டி, மிக்க சலாக்யம் சூட்டி,
மீண்டவாறிது மிக்க விசாலமே,
ஆண்டவா, அது பக்கிஷ[3] நேசமே. – என்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

1 துக்கம் 2 பரம்பொருள் 3 பட்சமுள்ள

**101. இராகம்: சங்கராபரணம்** **திரிசுரதாளம்**

*பல்லவி*

**பாவி நான் என்ன செய்வேன்,–கோவே,**
ஜீவன் நீர் விட்டதற்காய்?

*அனுபல்லவி*

தேவ கோபத்தினால் மேவிச் சிலுவையில்
தாவி உயிர் விட்டு, ஜீவித்த தென்கொலோ? –பாவி

*சரணங்கள்*

1. நாடி எனைத் தயவாய்–மணஞ் செய்ய–தேடி வந்தீர், அரசே
ஆடுகளுக்காக நீடி உயிர் தர,
பாடு பட்டுக் குரு குடிறந்தீர் அன்றோ? –பாவி

2. பொன்னுல காதிபனே,–தேவரீர்–என்ன செய்தீர், ஐயனே?
சின்னப் படுத்தவும் கன்னடித்தடிக்கவும்,
சென்னியில் முண்முடி தன்னை அழுத்தவும். –பாவி

3. வாரால் அடிக்கப்பட்டு,–குட்டுண்டு–வாதைப்ட்டெண்ணம்
அற்றீர்;
சீரா[1] மனுடவ தாரா, சருவாதி
காரா, பரம குமாரா, ஓலோலமே! –பாவி

4. வாதை உமக்கெதினால்–உண்டாயிற்று?–பாதகி[2] பாவத்தினால்
வேதம் நிறைவுற, ஆதி பவம் அற,
நீதி தரும் யேசு நாத சுவாமியே. –பாவி

5. குற்றமற்ற மீட்பர்,–பவக்கடன்–முற்றும் அறத் தீர்ப்பர்,
கொற்றவர்க்கும்[3], கல்வி கற்றவர்க்கும், சுரர்[4]
மற்ற வர்க்கும் அளவற்ற கிருபையே. –பாவி

*– வேதநாயக காஸ்திரியார்*

---

1 மேன்மையுள்ளோரே
2 ஏவாள்
3 அரசர்
4 வானோர்

**102. இராகம்: கேதாரகௌளம். ரூபகதாளம்**

**பல்லவி**

**பாதகர்க் காய்ப்படும் பாடுகளைக் கண்ணால்**
பாருங்கள் பாவையரே.

**அனுபல்லவி**

காதகன் பாவி யூதாஸ் காட்டிக்கொடுக்க விண்ணைக்
காட்டும் கல்வாரிமலைக் கோட்டில்[1] நம் பிணையாளி – பாத

**சரணங்கள்**

1. பக்தர் பெருமான் இரு கைத்தலம் விரிக்கிறார்,
பாவியைப் போல் வாதை மேவி உத்தரிக்கிறார்[2];
பெத்தம்[3] உளமனத்தார் கத்திக்கொக் கரிக்கிறார்,
பேதை மரி தன்மார்பில் மோதி ஆகுலிக்கிறார். – பாத

2. கள்ளர், கயவர்பலர் துள்ளித் தூஷணிக்கிறார்,
காடி கலந்தகடற் காளானைத் திணிக்கிறார்;
வள்ளல் செவியுளைக்கும் வார்த்தைகள் பிணைக்கிறார்,
மாறுபா டுள்ள ரபி[4] மார்புறக் கணிக்கிறார். – பாத

3. கைவிட்ட தெனவென்று கலங்கிநின் றழுகிறார்,
காயுநின் மலன்கோபத் தீயினில் முழுகிறார்,
மையுற்ற[5] கொலைஞர்க்காய் மன்றாடித் தொழுகிறார்;
வானோர் அரசன் ஏழு வாக்கிய மொழிகிறார். – பாத

4. மாலுற்ற[6] திருவுடல் கீலற்று[7] நழுவுதே,
மாற்றல[8] ரிற்கொடிய கூற்றுயிர்[9] பிழியுதே,
பாலுற்ற நறுவிலா வேல்பட்டுக் கிழியுதே,
பாணியும்[10] குருதியும் தோணியே வழியுதே. – பாத

***– மறைத்திரு. E.J. குளோரியா ஐயா, திருச்சிராப்பள்ளி.***

---

1 சிகரம்
2 சகிக்கிறார்
3 பாசம்
4 ஆசாரியர்
5 குற்றம்
6 மயக்கம்
7 பிடியற்று
8 பகைவர்
9 சொல்
10 தண்ணீர்

**103. இராகம்: கெண்டை** **ஆதிதாளம்**

*பல்லவி*

**எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்**
எங்கே சுமந்து போகிறீர்?

*சரணங்கள்*

1. எங்கே சுமந்து போறீர்? இந்தக் கானலில் உமது
அங்கம் முழுதும் நோக, ஐயா, என் ஏசுநாதா – எங்

2. தோளில் பாரம் அழுந்த, தூக்கப் பெலம் இல்லாமல்
தாளுந் தத்தளிக்கவே, தாப சோபம் உற, நீர் – எங்

3. வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாக
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர – எங்

4. தாயார் அழுதுவர சார்ந்தவர் பின் தொடர,
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர – எங்

5. வல்ல பேயைக் கொல்லவும், மரணந்தனை வெல்லவும்,
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும் – எங்

6. மாசணுகாத சத்திய வாசகனே, உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்து – எங்

*– ஏசுதாசன் அண்ணாவியார்*

**104. இராகம்: உசேனி** **ஆதிதாளம் (409)**

**பல்லவி**

**அதிசயமான புண்ணியம்!–நம்மை படைத்த**
ஆண்டவர் பாடுபட்டு, மீண்டிரட்சித்த செயல்
அதிசயமான புண்ணியம்!

**அனுபல்லவி**

சதி வினை அலகை சொல்லியபடி, விலக்கிய
தருமிசை கனி நுகர் அதம் ஏவை பவம் அற,
மதி மிகு தேவ குமாரன் இப்பூமியில்
வந்ததும் ஜீவனைத் தந்தெமைப் புரந்ததும் – அதி

**சரணங்கள்**

1. பாங்காகச் சீடர் தமது–பதம் விளக்கி
பரிசுத்த நற்கருணை பக்ஷமாக அருளி,
பல பல புத்தி சொன்னதும், பரிந்திரவில்
பூங்காவனத்தில் சென்றதும்,–பொறுமையாக
புண்ணியன் ஆத்துமத்தில் புகலரும் கஸ்திவாதை
பூண்டு திகிலடைந்ததும், புவி அனைத்தும்
தாங்கினன் அழுது கொண் டேங்கி, ப்ரலாபித்து,
தரையில் மும்முறை முகம்பட விழுந்ததும், அவர்
ஓங்கிய ஜெபங்களும் தபங்களும் அவஸ்தையில்
உதிரப்ரவாக வேர்வைகள் பெருக்கானதும் – அதி

2. தேவன் இக்கோலமாகவே–செருக்களத்தில்
சென்று கொல்கதா என்னும் குன்றிற் கெழுந்ததின் பின்
திருடர் இருவர் நடுவே, சிலுவைதனில்
பாவிகள் தான் அறைந்ததும், பரிகாசங்கள்
பண்ணவும் நிருவாணமாய் அண்ணல் தொங்கினதுவும்
பாய்ந்த குருதி வெள்ளமும், பயங்கரமாய்
ஆவி விட்டிறந்ததும், ஜீவனைக் கொடுத்ததும்
அயல் விலாத் திறந்ததும்–அடக்கப்பட்டதும், அப்பால்
மேவி அங்குயிர்த்ததும், எழுந்ததும் நடுவிட
மீள்வதும், ஏசுநா யகர் அருள் செய்வதும் – அதி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**105. இராகம்: வராளி** **ஏகதாளம் (410)**

**பல்லவி**

**ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம்,**
வா, ஆ! கல்
வாரிச் சிலுவையில் வானவன் தொங்குகின்ற
ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம், வா

**அனுபல்லவி**

சூட்சமுறு தேவ காட்சியாங் கற்பனை
துய்யத்தை நரர்மீறி—மகா
துர்குணப் பேயின் தந்திரத்தினால்
தூய்மை விட்டனர், வாய்மை கெட்டனர்
சுத்தகிறிஸ்தரசன், தேவனுட
சித்தன், அமை சிரசன், மாந்தர்களின்
துன்பத்தைப் போக்கவும், இன்பத்தைச் சேர்க்கவும்,
தோஷஞ் செய்பாதகன் வேஷமாய்த் தொங்குகின்ற — ஆ

**சரணங்கள்**

1. எருசலை நகர் மருவுங் கல்வாரி
என்னப்பட்ட ஒரு மேடு—அதில்
ஏசுக்கிறிஸ் தெனும் நேசமகத்துவன்
எங்களுக்காய்ப்படும் பாடு—மரக்
குருசில் ஏறியே சிரசில் முண்முடி
கொண்டதும் நொந்ததும் நீடு;—அப்போ
கொற்றவன் தன் முகம் சற்றேனுன் காட்டாத
குறையதும் ஒரு பீடு;
குருதி வடியவே, சுருதி[1] முடியவே
பருதி[2] மறையவே திரையுங் கிழியவே,
கொலைஞர் அவமதிக்க,—துஷ்டனாம்
அலகை[3] மனங்கொதிக்க, கசப்புடன்
கோனே, என்னை நீர் ஏனோ கைவிட்டீர்?
கொடுக்கிறேன் ஜீவனை, எடுத்திடு மென்றமும் — ஆ

2. பூலோகத்தாரே, இம்மேலான காட்சியின்
புண்ணியத்தை வந்து பாரும்,—தேவ
புத்திரன் பக்கத்தில் குத்துண்டு பாய்கின்ற
புனித ரத்தமும் நீரும்—நம்மை

---

1 வேதம் 2 சூரியன் 3 பேய்

மேலோகஞ் சேர்க்கின்ற சாலக்கிருபையின்
விஸ்தார ஊற்றென்று சேரும்;–அதில்
விழுந்து ஆத்மம் முழுகிப் பாவந் தீ
வினை அகன்றிட வாரும்
சீலமற்ற மாந்தர் கோல முற்ற வேந்தர்
ஜீவனதிபதி சாவினாலே நம்மைத்
தெய்வ லோகஞ் சேர்க்க–நித்தியமாய்
உய்யும் சுத்தோராக்க, சுத்த பிதா
செல்வக் கிறிஸ்தந்தக் கல்வாரி மேட்டினில்
ஜீவன் துடிக்கதத்தம் ஆவி விடுகின்ற – ஆ

*– தீ. யோசேப்பு*

**106. இராகம்: ஆனந்தபைரவி ஆதிதாளம் (411)**

**பல்லவி**

**ஏதனாதி தேவனே,–சிலுவை சுமந்**
தெங்கே போகிறீர், என் ஜீவனே?

**அனுபல்லவி**

ஆதிப் பிதாவின் மைந்தா, அருமைக் கிறிஸ்தானந்தா,
அஞ்சாத தம்ஏவை அருந்திய நஞ்சார், கனியாலே
விளைந்ததோ – ஏத

**சரணங்கள்**

1. முந்து மனுடர் தம்மால் வந்த வினையை மாற்றி,
முழுதும் உலகை ஆற்றி, எழுதும் வேதத்தைச் சாற்றி
தந்த லகையைத்[1] தாழ்த்தி, மைந்தரைக் கரையேற்றி,
தப்பா துயிர் விடுத்து மெய்ப்பாய் ரட்சிக்கத் தோன்றி – ஏத

2. ஆகம்[2] எல்லாம் புண்ணாக, அடிப்பட்டிரங்கி நோக,
ஆத்தும வாதைகள் மேவி, வேற்று முகம் குறாவி
சாகத் தீர்க்கப்பட்டொரு சாலேம் பட்டணம் விட்டு,
தறுகித் தறுகி நின்று, மறுகி, மறுகிச் சென்று – ஏத

1 பேய் 2 உடல்

3. மெத்த நின் முகம் வாடி, ரத்த வெள்ளங்கள் ஓடி,
மெலிந்து, முள்முடி சூடி, நலிந்து, நடை தள்ளாடி
சத்துருக்களை நாடி, சித்தம் உருகித் தேடி,
சாவைத் தொடர்ந்து கொல்க தாவுக்கடந்து கூடி – ஏத

4. பாவியைக் கை தூக்கவோ? தீவினையை நீக்கவோ?
பரமகதி சேர்க்கவோ? பரனோடுற வாக்கவோ?
மேவித் தற்காக்கவோ? சாவின் துயர் போக்கவோ?
வெற்பனைக்[1] கடாட்சித்தாற்போல் எப்போதும் எனைக்
கண்ணோக்கவோ? – ஏத

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**107. இராகம்: லாவணி ஆதிதாளம்**

***பல்லவி***

**குருசினில் தொங்கியே குருதியும் வடிய,**
கொல்கதா மலைதனிலே–நம்
குருவேசு சுவாமி கொடுந்துயர் பாவி,
கொள்ளாய் கண் கொண்டு.

***சரணங்கள்***

1. சிரசினில் முண்முடி உறுத்திட, அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ!–தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்,
சேனைத்திரள் சூழ. – குரு

2. பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன் போல் தொங்க,–யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை. – குரு

3. சந்திர சூரிய சகலவான் சேனைகள்
சகியாமல், நாணுதையோ!–தேவ
சுந்தர மைந்த னுயிர் விடு காட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ? – குரு

1 பேதுரு

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே,–அவர்
தீட்டிய திட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூறோடுது, பார்; – குரு

5. எருசலேம் மாதே, மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ?–நின்
எருசலையதிபன் இளமணவாளன்
ஏற்றகோல மிதோ? – குரு

*– அருள்திரு. எஸ்.ஜி. ஏசுவடியான்*

**108. இராகம்: எதுகுலகாம்போதி ஆதிதாளம் (412)**

**பல்லவி**

**இத்தனை பெருங்குருசை, ஐயா, நீர்**
எடுத்தெப்படி நடப்பீர் துய்யா!

**அனுபல்லவி**

இத்தரையோர் வினையறச் சத்தமற்ற ஆடதுபோல்
இடறி தாளுந் தத்தளித்து வீழ்ந்திட
எழுந்து பதறியே சடலம் சோர்ந்திட – இத்

**சரணங்கள்**

1. கொல்கதா பாதையினிற் கூட்டம் அடர்ந்திடவும்;
கொடியோர் நடத்திவரவும்,
நல்மாதரான சிலர் நாடிப் புலம்பிடவும்
நயமதாகி தோள்கள் சிவக்கவும்
நாதா, உமக்குப்பின் சீமோன் சுமக்கவும் – இத்

2. வானா சனத்திலே மாறத நன்மைகளை
மாந்தர் அனுபவித்திட,
ஞானாகரனே, உந்தன் நற்றாள் கரத்தினிலே
நைய ஆணியினா லிறுக்கவும்,
மெய்யில் பாரமாய்ச் சுமையொறுக்கவும் – இத்

3. ஆவியொடுங்கிடவும், அவயவம் நடுங்கிடவும்,
அருள் முகம் வாடிடவும்,
பாவிகளைத் தமது பாரிச[1]மாக்கிடவும்;
பாடுபட வந்த இரக்க வாசனே
பரமநாதனின் அருமைச் சேயனே – இத்

*– தேவசகாயம் ஆசாரியார்*

**109. இராகம்: நீலாம்புரி ஆதிதாளம்**

**திபதை – கண்ணிகள்**

**ஐயா, நீரன்று அன்னா காய்பாவின் வீட்டில்**
நையவே பட்டபாடு, யேசையாவே!
கைகள் கட்டப்பட்டதோ? கால்கள் தள்ளாடினவோ?
கயவர்கள் தூஷித்தாரோ, யேசையாவே!

2. திரு முகம் அருள் மங்க, செங்குருதிகள் பொங்க,
இருளர்[2] கஸ்தி கொடுக்க, யேசையாவே!
பொறுமை, அன்பு, தயாளம் புனிதமாக விளங்க
அருமைப் பொருளதான யேசையாவே!

3. முள்ளின் முடியணிந்து; வள்ளலே, என்றிகழ
எள்ளளவும் பேசாத யேசையாவே!
கள்ளன்போலே பிடித்துக் கசையால[3]டித்து மிகக்
கன்மிகள் செய்த பாவம்; யேசையாவே!

4. கற்றூணில் சேர்த்திறுக்கிச் செற்றலர்[4]தாம் முறுக்கிக்[5]
கர்வங்கொண்டே தூஷிக்க, யேசையாவே!
சற்றுமிரக்கமில்லாச் சண்டாளன் ஓடி வந்து
சாடிக் கன்னத்தறைய, யேசையாவே!

5. பொன்னான மேனியதில் புழுதி மிகப் படிய
புண்ணியன் நீர் கலங்க, யேசையாவே!
அண்ணலே, அன்பருய்ய அவஸ்தைகளைச் சகித்தீர்!
அடியேனைக் காத்தருளும், யேசையாவே!

*– சவரிமுத்துப் போதகர்*

---

1 பக்கம்
2 கொடியவர்
3 சவுக்கால்
4 பகைவர்கள்
5 சினந்து

**110. இராகம்: முகாரி** **ஏகதாளம் (413)**

**பல்லவி**

**நித்தமும் சிந்தித்து சிந்தித் தேசுவின் நிருமலப் பதம் சேராய்;**
நெஞ்சமே, அவர் தஞ்சம் உய்ய நீ கெஞ்சிக் கெஞ்சியே வாராய்

**சரணங்கள்**

1. எத்திசைக்கும் இறைமை செலுத்திய கர்த்தர் உன்பவம் போக்க
இத்தரையில் ஓர் ஏழையாய் வந்ததைப் பத்தியாய் உன்னில்
காக்க, – நித்

2. கெத்துசேமினித்தோட்டத்திலே அவர் பத்தியாய் ஜெபம்
தொடங்கி
ரத்த வேர்வை யோடாத்துமப் பாடு சகித் தகோரத்தால் நடுங்கி
– நித்

3. சிலுவையை நைந்த உடலில் சுமத்தி, வலிமையாகவே நடத்தி,
கொலுகதாவினில் கொண்டுபோன துய்யுலகுக்கே உனைக்
கடத்த, – நித்

4. பார மரத்தில் அவர் கை காலெல்லாம் சேரவே அறைந்ததையும்
கூர் சவளக்[1] குத்தால் விலாவினில் சோரி[2] நீர் பிறந்ததையும்–நித்

5. பகலும் இருள, திரையும் கிழிய, நகமும்[3] நடுங்கிப் பிளக்க,
அகிலம் அதிர, அவர் மரித்ததைச் சகல பேர்க்கும் நீ விளக்க
–நித்

***– தேவவரம் முன்ஷி***

---

1 ஈட்டி 2 இரத்தம் 3 மலை

**111. இராகம்: வரலி** **சாப்புதாளம்**

**பல்லவி**

**எழுந்தருளும், ஏசு சுவாமி**

**அனுபல்லவி**

விழுந் தலகை[1] அழிந்தொழியத்
தொழுஞ் சுரரும்[2] வரல் ஆச்சே – எழுந்

**சரணங்கள்**

1. பத்தினிகள் கந்தவர்க்கம் எடுத்தேந்தி, பிரேதலங்கா
ரத்தின முறை நாடி, இதோ! ஆசரிக்க வந்தாரே. – எழு

2. மகதலா ஊர் மரியாள் மகிழ்ந்து தரிசித்தேற்ற,
அகமகிழ்ந்தப் போஸ்தலர்கள் அதிசயித்துப் போற்ற. – எழு

3. முத்திரையும் காவல்களும் மூடிய கல்லதும் நீங்கி,
சத்துருக்கள் நடுநடுங்கித் தயங்கி மனங் கலங்க. – எழு

4. வேதாளம் நடுங்கி விழ, விண்ணோர் ஒடுங்கித் தொழ,
பாதாளம் இடிந்து விழ, பராபரனே, எழுந்தருளும். – எழு

5. விஸ்தார உலகமதில், மெய்யான திருச்சபையில்,
விஸ்வாச சங்கீர்த்தனம் எந்நாளும் உண்டாக. – எழு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**112. இராகம்: அசாவேரி** **அடதாளசாப்பு (414)**

**பல்லவி**

**ஏசுநாதன் சாவை வென்று, எழுந்திருந்தானே!**

**அனுபல்லவி**

மாசிலாத் தூதர் பளீர் எனவே மின்ன,
வையகத் தூதர் விழுந்துயிரே கன்ன;
நீசமுள்ள மரணம் பயந்தினிமேல் என்ன?
நிலை என்ன? தலை என்ன? உலைகிறேன் எனப்பன்ன – ஏசு

---

1 பேய் 2 தேவதூதரும்

**சரணங்கள்**

1. ஓடி ஒளிந்த சீஷர் கூடி தேவ குமாரன்
ஓதின முன் உரையைப் படிக்க,
தேடின பொருள் சற்றுக்காலம் இழந்து பின்னும்
திரும்ப அடைந்தவர் போல் நடிக்க
கூடி, ஏசுவைப்பற்றி இருந்தது வீணாகச் சென்ற
குடியைக் கெடுக்கும் ஐயம் ஒடிக்க,
வாடின மகுதல மரியாள் கண்டு வணங்கி,
மனுவேலே, என்று களி துடிக்க,
பீடையாம் காவல் நீங்கி, யோசேப்பு வந்தாற்போல,
பிரிய தானியேல் சிங்கக் குகையை விடுத்தாற்போல,
கூடாம் இருளில் சென்ற பானு உதித்துச் சாலக்
குவலயத்திற் காந்தி கொடுப்பது போல, சீல – ஏசு

2. நானே தேவ குமாரன் என்று போதித்ததை
நரர்கள் அறிந்திடவே காட்ட,
வானவனுக்கும் மனுவுக்கும் குறைவில்லாத
மத்தியஸ்தன் என்று நாட்ட,
போன காலத்திற் சொன்ன அடையாளப்பலி எல்லாம்
போகலாம் என்றவற்றை ஓட்ட,
தானலோகம் செல்ல எவ்வகைப் பாவியும்
தளர்ச்சி இன்றித் தலை நீட்ட,
ஈடம் இன்றித் தீர்க்கத்தரிசனம் நிறைவேற்ற,
இயம்பிய யோனாவின் அடையாளமே தோற்ற
ஊன மானுடர்களை நீதிமான்களாய் ஏற்ற
யூத கோத்திர சிங்கம் என்றுல கோர் போற்ற – ஏசு

***– ஆபிரகாம் உபதேசியார்***

### 113. இராகம்: இங்கிலீஸ் ஆதிதாளம்

**சரணங்கள்**

**இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார், கம்பீரமாய்**
இகல்[1] அலகை[2] சாவும் வென்றதிக வீரமாய்,
மகிழ் கொண்டாடுவோம், மகிழ் கொண்டாடுவோம்.

---

1 பகை 2 பிசாசு

2. போர்ச்சேவகர் சமாதி சூழ்ந்து காவலிருக்க,
புக ழார்ந்தெழுந்தனர், தூதன் வந்து கல்மூடி பிரிக்க –மகிழ்

3. அதிகாலையில் சீமோனொடு யோவானும் ஓடிட,
அக்கல்லறையினின் றேகினார் இவர் ஆய்ந்து தேடிட –மகிழ்

4. பரி சுத்தனை அழிவுகாண வொட்டீர், என்று முன்
பகர்வேதச் சொற்படி பேதமற்றெழுந்தார் திருச்சுதன் –மகிழ்

5. இவ்வண்ணமாய்ப் பரன் செயலை எண்ணி நாடுவோம்;
எல்லோருமே களி கூர்ந்தினிதுடன் சேர்ந்துபாடுவோம். –மகிழ்

***– ஜான் பால்மர்***

## 114. இராகம்: இங்கிலீஸ் ஆதிதாளம்

***பல்லவி***

**ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா;**
ஆமென், அல்லேலூயா! ஜெயம்! ஜெயம்! அனந்த தோத்திரா.

***அனுபல்லவி***

ஆம் அனாதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே! – ஆமென்

***சரணங்கள்***

1. வெற்றிகொண் டார்ப்பரித்து–கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து,–முறித்து;
பத்ராசனக்[1] கிறிஸ்து–மரித்து,
பாடுபட்டுத்தரித்து, முடித்தார். – ஆமென்

2. வேதம் நிறைவேற்றி,–மெய் தோற்றி,
மீட்டுக் கரையேற்றி,–பொய் மாற்றி,
பாவிகளைத் தேற்றி,–கொண்டாற்றி,
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார். – ஆமென்

1 தலைமை ஆசனம்

3. சாவின் கூர் ஒடிந்து,–மடிந்து,
தடுப்புச் சுவர் இடிந்து,–விழுந்து,
ஜீவனே விடிந்து,–தேவாலயத்
திரை ரண்டாய்க் கிழிந்து ஒழிந்தது. – ஆமென்

4. தேவ கோபந் தீர்ந்து,–அலகையின்
தீமை எலாஞ் சோர்ந்து–முடிந்தது;
ஆவலுடன் சேர்ந்து–பணிந்துகொண்
டாடும், களி கூர்ந்து மகிழ்ந்து – ஆமென்

***– வேதநாயகம் சாசுதிரியார்***

**115. இராகம்: சுருட்டி** **முறஅடந்தை (415)**

**பல்லவி**

**எழுந்தனன் முகில் மேலே விண்ணதில்**
இறைவன் இம்மனுவேலே

**அனுபல்லவி**

விழுந்தலகை அதிர, வெருண்டு, மரணம் சாபம்
ஒழிந்து போகவே, மரித்துயிர்த்ததி
உரம தாமிகை எதையுமே ஜெயித் – தெழுந்

**சரணங்கள்**

1. தொண்டர்கட் கதிபதியாய்,–சர்வவன்மை
கொண்டருட் கடல் நிதியாய்,
மண்டலங்களுக்கு மேல் மண்டலத் தொளிர் தந்தை
வலது பாரிச மேவியே, எழில்
மகத்வ மா முடி சூடவே, மகிழ்ந் – தெழுந்

2. திருச்சபை யகங்களிக்க,–திவ்ய ஜீவ
விருட்சக் கனியை அளிக்க,
பரத்தில் தீய நரரை உரித்துள்ளோர்கள் ஆக்க,
பரமன் முன் உறு நடுவன் ஆகவே
பரிந்து பேசி நல் வரங்களீந்திட – எழுந்

***– ஜாண் பால்மர்***

**116. இராகம்: மணிரங்கு** **ஆதிதாளம்**

**பல்லவி**

**தேவன் மரித்தே, இவ்வுலகில் உயிர்த்தே**
விண்ணுக் கெழுந்தார், ஜெயம்! ஜெயம்!

**அனுபல்லவி**

பாதகர்க்காகப் பரிந்தவர் பேச
பரத்துக்கெழுந்தார், நயம்! நயம்!–கிறிஸ்து – பர

**சரணங்கள்**

1. பன்னிரு சீடரும் பகைவருங் காண
பதியதற் கேகினர், ஜெயம்! ஜெயம்! கிறிஸ்து;–பதி
உன்னத சுவிசேஷம் உலகினில் கூறியே,
உம்பர்[1] மேகினர், நயம்! நயம்!–கிறிஸ்து;–உம்

2. ஆகமப் படியே அவனியில் வந்தே
அனைத்தையும் முடித்தார், ஜெயம்! ஜெயம்! கிறிஸ்து; அ
மேகமீ தேறி மிகப்புவி யோர்க்காய்
வேண்டல் புரிகிறார், நயம்! நயம்! கிறிஸ்து;–வேண்

3. மோசே முனிவர்கள், முன்னுரை தீர்க்கர்கள்
முதல்வனைத் தொழுகிறார், ஜெயம்! ஜெயம்! கிறிஸ்து–முதல்
ஆசைகொண்டெல்லா அரூபிகள்[2] கூடி
அமலனைப் பணிகிறார், நயம்! நயம்! கிறிஸ்து;–அம

4. பாவியே, உனக்காய்ப் பரிந்தவர் பேசப்
பரமதற்கெழுந்தார், ஜெயம்! ஜெயம்!–கிறிஸ்து;–பர
சாவில் நின்றுன்னை மீட்டவர் மோட்ச
தலமதைத் தருவார், நயம்! நயம்! கிறிஸ்து–தல தேவ

*– ஜாண் பால்மர்*

---

1 மோட்சம் 2 தூதர்

**117. இராகம்: மத்தியமாவதி** **அடதாளசாப்பு (416)**

**பல்லவி**

**சென்றார், சென்றார் மனுவேல்;–பரலோகம்**
சென்றார், சென்றார் மனுவேல்.

**அனுபல்லவி**

சென்றார், சென்றார், சீஷர் குன்றின் மீதில் நின்று,
என்று காண்போம், என்று ஒன்றி வானம் நோக்க, –சென்

**சரணங்கள்**

1. வானலோகம் துறந்து–இகழ்ச்சிக்குள்–ளான லோகம் பிறந்து
தானம் நிதி நிறைந்து–வளர்ந்திட–ஞானமதனில் உறைந்து
தீன உலகை வென்று, பீனக்[1]குருசை நேர்ந்து
தேனரோடே மாய்ந்து, ஈனக்கல்லறை சேர்ந்து
ஊனம் இன்றி மின்னி, பானு[2]போலத் தேர்ந்து
தானலோகம் செல்ல, மானமேகஞ் சார்ந்து –சென்

2. தேவ தூதர் தொழவே,–மகாத்மாக்கள்–பாவநாசன் எனவே,
தாவி அவரும் எழவே–அவர் துதி–ஓவல் இன்றி விழவே,
பாவம் போக்கும் ரத்தம் பாத்திரமதனில் மொண்டு,
மேவும் ஆசாரியர் மிக சுத்த தலம் கண்டு;
தேவ கிருபைக்காக ஜெபித்தார்களே பண்டு;
ஆவலாய்க் காயங்கொண்டு, அவ்விதம் செய்யத் தொண்டு
–சென்

***– ஆபிரகாம் உபதேசியார்***

**118. இராகம்: பூரிகல்யாணி** **ஆதிதாளம் (417)**

***பல்லவி***

**மகிழ், மகிழ், மந்தையே, நீ; அல்லேலூயா! பரன்**
மைந்தன் பரமேறினார், அல்லேலூயா!

---

1 பெரிய 2 சூரியன்

***அனுபல்லவி***

மகிழ், மகிழ்; பரன் மைந்தன் மகத்துவ பரமேறினார்;
திகழ் திருச்சேனை பாடும் அல்லேலூயா, இன்று. – மகிழ்

***சரணங்கள்***

1. வானமெல்லாம் நிரப்ப மனுஷ மைந்தன் எல்லா
வானங்கள் மேலேறினார், அல்லேலூயா!
தீனதயாளு நம்மைச் சேர்ந்த தலைவராயினார்,
ஞானமுடன் பாடுங்கள், அல்லேலூயா, இன்று – மகிழ்

2. ஏசுபரன் நமக்கு இறையானார்; இது
எல்லாவர்க்குஞ் சந்தோஷம், அல்லேலூயா!
வாசம் நாம் செய்யத் தந்தை வளவில்[1] இடம்பிடித்த
நேசமுன்னத நேசம், அல்லேலூயா, இன்று – மகிழ்

3. தந்தை வலப்பாகத்தில் சத்திய கிறிஸ்து எங்கள்
சத்துருக்கள் மேற்சிறந்தார், அல்லேலூயா!
சொந்தக் காயங்கள் காட்டிச் சுகிர்தமுடன் ஜெபிப்பார்;
மந்தையே, உந்தனுக்காய் அல்லேலூயா, இன்று – மகிழ்

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**119. இராகம்: இரமாமனோசுரி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**வர வேணும், என தரசே, மனுவேல், இஸரேல் சிரசே**

**அனுபல்லவி**

அருணோ தயம் ஒளிர் பிரகாசா, அசரீரி ஒரே சரு வேசா! – வர

---

1 வீட்டில்

**சரணங்கள்**

1. வேதா, கருணா கரா, மெய்யான பரா பரா,
ஆதார நிராதரா[1], அன்பான சகோதரா,
தாதா[2]வும் தாய் சகலமும் நீயே;
நாதா, உன் தாபரம் நல்குவாயே. – வர

2. படியோர்[3] பவ மோசனா, பரலோக சிம்மாசனா,
முடியா தருள் போசனா, முதன் மா மறை வாசனா,
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்,
இமையவர் அடி தொழு மேன்மையின் எந்தாய், – வர

3. வானோர் தொழும் நாதனே, மறையாகம போதனே,
கானாவின் அதீதனே[4], கலிலேய வினோதனே,
ஞானாகரமே, நடு நிலை யோவா,
நண்பா, உனத நன்மையின் மகாதேவா! – வர

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**120. இராகம்: ஆனந்தபைரவி** **சாப்புதாளம்**

**பல்லவி**

**மின்னாள்[5] சீக்கிரம் வரச் சொன்னாள், வரச் சொன்னாள்.**

**அனுபல்லவி**

மன்னா, ஏசுகிறிஸ்து மகராஜா, ஓசன்னா! – மின்

**சரணங்கள்**

1. உமது சபையாம் மனையாட்டி–உம
துருக்கத்தினால் உம்மில் அன்பு பாராட்டி – மின்

---

1 ஆதாரமில்லாதவரே– ஆதரவற்றவர்
2 தந்தை
3 உலகோர்
4 மனதிற்கெட்டாதவரே– இறைவன்
5 மணவாட்டி

2. சீயோன் மகள் காதல் மிஞ்சி; உமைச்
சீக்கிரம் வரச் சொன்னாள், மெத்தவும் கெஞ்சி; – மின்

3. எருசலேம் மகள் உமைத் தேடி–மன
தேங்கி, ஏங்கி, மதி முகம் மிக வாடி – மின்

4. ஆவி நீர் கொடுத்த அச்சாரம்–மேவி
அப்பா, பிதாவே, என்று அழைக்கச் செய்தீர் ஆம் – மின்

5. திருடன்போல் வருவேன் என்றீர் ஆம்–தினம்
ஜெபம்பண்ணி, விழித்துக்காத்திருக்கச் சொன்னீர் ஆம் – மின்

6. தேவரீருடன் ஒன்றாய்க்கூடி–நித்ய
ஜீவனை அடைந்திட மிகவும் மன்றாடி – மின்

7. ஏழை அடியாள் பாவம் தீரும்;–உம
தின்பத் திருச்சபையின் மகிமையில் சேரும் – மின்

*– மரியான் உபதேசியார்*

**121. இராகம்: மோகனம் ஏகதாளம்**

**சரணங்கள்**

**சாலேமின் ராசா, சங்கையின்1 ராசா, ஸ்வாமி, வாருமேன்,**
ஸ்வாமி, வாருமேன்,–இந்தத்
தாரணிமீதினில் ஆளுகை செய்திடச் சடுதி வாருமேன். – சாலே

2. சீக்கிரம் வருவோமென்றுரைத்துப்போன செல்வக்குமாரனே;
–இந்தச்
சீயோனின் மாதுகள் தேடித்திரிகின்ற செய்திகேளீரோ? – சாலே

3. எட்டி எட்டி உம்மை அண்ணாந்துபார்த்துக் கண்பூத்துப்
போகுதே;–நீர்
சுட்டிக்காட்டிப்போன வாக்குத்தத்தம் நிறைவேறலாகுதே– சாலே

1 கனத்திற்குரிய

4. நங்கை[1] எருசலேம்பட்டணம் உம்மை நாடித்தேடுதே;–இந்த
நானிலத்திலுள்ள ஜீவப்பிராணிகள் தேடிவாடுதே. – சாலே

5. சாட்சியாகச் சுபவிசேஷம்[2] தாரணிமேவுதே;–உந்தஞ்
சாட்சிகளுடைய இரத்தங்களெல்லாம் தாவிக்கூவுதே. – சாலே

*– அருளானந்தம் பிரசங்கியார்*

### 122. இராகம்: அசாவேரி — கும்மிசிந்து

*பல்லவி*

**எனது கர்த்தரின் ராஜரீக நாள் எப்போ வருகுமோ?**
ஏங்கும் என் கலி[3] நீங்க மகிழ்ச்சி எப்போ பெருகுமோ?

*அனுபல்லவி*

மனித சுதனின் அடையாளம் விண்ணில் காணும், என்றாரே,
வல்லமையோடு மகிமையாய்த்தோன்றி, வருவேன் என்றாரே.
– எனது

*சரணங்கள்*

1. தேவ தூதரின் கடைசி எக்காளம் தொனி முழங்கவே;
ஜெகத்தில் ஏசுவைப் பற்றி மரித்தோர் உயிர்த்தெழும்பவே,
ஜீவனுள்ளோரும் அவருடன் மறு ரூபமாகவே;
ஜெகத்தில் பக்தர்கள் கர்த்தரிடத்துக் கெழுந்துபோகவே – எனது

2. தூதர் எக்காளத்தொனியில் என்னிடம் சேர்ப்பேன் என்றாரே!
சோதனை காலந்தனில் தப்பவுன்னைக் காப்பேன் என்றாரே;
பாதக மனுஜாதி வேதனை அடையும் என்றாரே;
பாவ மனுஷன் தோன்றி நாசமாய்ப் போவான் என்றாரே – எனது

3. சூரியன் இருளாகிச் சந்திரன் ரத்தமாகவே –
ஜோதி நட்சத்திரங்கள் அத்திக் காய்போல் உதிரவே,
பாரில் அக்கினி வீழ்ந்து மூன்றிலோர்பங்கு வேகவே
பயங்கள், பஞ்சங்கள், யுத்தங்கள், பூமி அதிர்தலாகவே – எனது

*– பாளையங்கோட்டைப் பாடல்*

---

1 குமாரத்தி–பெருமாட்டி　　2 நற்செய்தி　　3 துன்பம்

**123. இராகம்: அசாவேலி.** **கும்மிசிந்து (418)**

**பல்லவி**

**எனது கர்த்தரின் இராசரீக நாள் எப்போ வருகுமோ?**
ஏங்கும் என் கலி[1] நீங்க மகிழ்ச்சி எப்போ பெருகுமோ?

**அனுபல்லவி**

மனிதசுதனின் அடையாளம் விண்ணில் காணும் என்றாரே,
வல்லமையோடு மகிமையாய்த்தோன்றி வருவேன் என்றாரே
– எனது

**சரணங்கள்**

1. சாதிகட்குக் கொடியாய் ஈசாயின் வேரன் றேறுவார்;
சகலரும் அவர் கொடியின்கீழ் வந்து பணிந்து சூழுவார்;
நீதியாய்த் தானே மேசியா எங்கும் ஆளுகை செய்வார்;
நித்தம்பிர புக்கள் நியாயமாய்த் துரைத்தனம் செய்வார். – எனது

2. எருச லேமி லிருந்து சீவ நதிகள் ஓடுமே,
ஏழைகள் மன மகிழ்ந்து கர்த்தரை ஏத்திப் பாடுமே;
வருடமாயிரம் அளவும் பூமியில் பலன்கள் நீடுமே,
வான இராச்சிய சேனைகள் யாவும் வந்து கூடுமே. –எனது

3. சஞ்சலங்களும் தவிப்புகள் யாவும் ஓடிப் போகுமே,
சந்தோஷத்தோடு மகிழ்ச்சியும் வந்து சார்ந்து பிடிக்குமே;
நெஞ்ச மகிழ்ந்து நீதிமான்களின் வாய் துதிக்குமே,
நித்திய சீவனைப் பெற என்றன் மனம் துடிக்குமே. – எனது

4. சீக்கி ரமாக வருகிறேன் என்று சொல்லி விட்டாரே,
சீவ விருட்சந் தனில் அதிகாரம் தருவேன் என்றாரே;
பாக்கியமுள்ள சுவிசேடத்தைக் கைக்கொள்ளச் சொன்னாரே,
பார்க்கப் பார்க்க நல் வேதவாக்கியம் தோன்றும் என்றாரே!
– எனது

***–பாளையங்கோட்டைப் பாடல்***

1 துன்பம்

**124. இராகம்: காப்பி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**வந்தானே, தந்தை பிதாவின் சுந்தர மைந்தனே,**

**அனுபல்லவி**

அந்தமாய்[1] உருவம்கொண்டு, அன்புடன் சீயோனைக் கண்டு
விந்தையில் சல்லாபம்[2] விண்டு, மீண்டிரட்சித்தாளவென்று –வந்

**சரணங்கள்**

1. அங்கியும் மார்பருகில் பொற்கச்சையும் கட்டி
அட்சய[3] தேவ த்ரவிய ஆரணம்[4] கிட்டி,
துங்கமாய்க்[5] கரத்தில் வான ராச்சிய செய்கோலை நீட்டி,
ஜோதிப் பிரகாச ஜீவ ரத்ன கிரீடம் சூட்டி – வந்

2. அக்கினி கொழுந்தடைவாய்க் கண்கள் எரிக்க
ஆதித்தன்[6] எனவே மக ப்ரபை விரிக்க,
மிக்க சிரத்தின் ரோமம் பஞ்சினும் வெண்மை தெரிக்க,
மேன்மையில் எக்காளங் கொண்டேழு தூதர் ஆர்ப்பரிக்க, – வந்

3. காயும் சொகு சாவுக் கொத்த கால்கள் இலங்க,
கரத்தினிலே ஏழு நட்சத்திரங்கள் அலங்க[7]
வாயிலிருந் திருபுறமும் கூர்மைப்பட்டயம் துலங்க,
வாரிதி[8] ஜலத் தொனியின் வார்த்தையால் அண்டம் குலுங்க
–வந்

***– வேதநாயக சாஸ்திரியார்***

---

1 அழகாய்
2 இன்மொழிகள்
3 குறைவற்ற
4 வேதம்
5 தூய
6 சூரியன்
7 ஒளிர
8 கடல்

**125. இராகம்: காம்போதி** **ஆதிதாளம் (419)**

**பல்லவி**

**வருவார் கிறிஸ்தேசு நாதர்தான்; அன்று**
தருவார் அவரவர் பலன்தான் மெய்யாய்

**அனுபல்லவி**

குருவாய், இரட்சிப்பின் அதிபதியாம், – யூதக்
கோத்திர மனுச் சக்கரவர்த்தியாய், மெய்யாய் – வரு

**சரணங்கள்**

1. பொய்யில்லை; அதி சீக்கிரத்தில்தான்,–அவர்
புண்ணியர் மறுரூபமாகத்தான்,
துய்யோரெழுப்பி யொன்றாய்ச் சேரத்தான், உலகின்
துர்ச்சனரின்[1] கண்களும் காணத்தான், மெய்யாய் – வரு

2. ஜெயங்கொள்ளுந் தாசனைக் கண்டெடுக்க, தமது
சிம்மாசனம் அவனுக்குக் கொடுக்க;
பயங்கொள்ள உலகைக் கோலாலொடுக்க, தமது
பாதரட்சை அவன் காலில் தொடுக்க, மெய்யாய் – வரு

3. உலகமுழுது மொன்றாயாள, சபை
யொரு மந்தையாய்க் கூடி வாழ,
அலகை[2] நரகில் வீழ்ந்து மாள, மூவுல
கனைத்தும் வணங்கியபடி தொழவே, மெய்யாய் – வரு

4. பசிதாகம், துக்கம் பறந்தோட, வென்ற
பரிசுத்தர் புதுப்பாட்டுப் பாட,
வசித்த துட்டர்[3] நரகில் வாட, இங்கே
வறுமைப் பட்டோர் சுகங்கொண்டாட, மெய்யாய் – வரு

*– ஜே.சி. அருளப்பன்*

---

1 பாவிகள் 2 பேய் 3 பாவிகள்

**126. இராகம்: சௌராஷ்டிரம் ஆதிதாளம்**

***பல்லவி***

**வருவார் விழித்திருங்கள்;–இயேசுநாதர்**
வருவார் விழித்திருங்கள்.

***அனுபல்லவி***

பெரியவர், சிறியவர், பேதையர், மேதையர்[1]
சருவர்க்கும் நடுத்தீர்த்துத் தகு பலன் அளித்திட. – வரு

***சரணங்கள்***

1. பேரிகையால்[2] அண்ட பித்திகளும்[3] குலுங்க,
பேர் எக்காளத் தொனியால் பேய்க் கணங்கள் கலங்க,
தாரணியோர் மலங்க[4], தமைப் பற்றினோர்களும்
சீர்நிறை தூதரும் சேர்ந்து சூழ்ந்திலங்க. – வரு

2. வானம் மடமடென்க, வையம் கிடுகிடென்க,
ஈனப் பேயைச் சேர்ந்த எவரும் நடுநடுங்க,
மானம் இன்றி வாழ்ந்த மா பாதகர் அடங்க,
ஞான கானம் பாட நல்லோர் சபை தொடங்க. – வரு

3. துன்புற்றோர்க்கு ஜீவ இன்பக் கனிகள் ஊட்ட
தொண்டு செய்ய அன்பர்க்கு அண்டர்[5] முடிகள் சூட்ட,
அன்பற்றோரை நரகவன்புத் தீயில் வாட்ட,
அத்தனைச்[6] சேர்ந்தோரை நித்ய கதியில் கூட்ட – வரு

4. விசுவாசிகள் தமை மெச்சிப் புகழுதற்கும்,
மேலா மோட்ச தலத்தோர் சால மகிழுதற்கும்,
விசுவாச ஈனரை வியவா திகழுதற்கும்,
விண்ணோர் குழாங்கள் சூழ, அண்ணல் கிறிஸ்தரசர் – வரு

***–தேவவரம் முன்ஷி***

---

1 புலவர்
2 முரசு
3 சுவர்கள்
4 நிலை கலங்க
5 அண்டர்
6 இறைவன்

**127. இராகம் : இந்துஸ்தான்காப்பி** **ஆதிதாளம் (420)**

*பல்லவி*

**வையகந் தன்னை நடுத்தீர்க்க இயேசு**
வல்லவர் வருகிறார் திருமறைக்கேற்க!

*அனுபல்லவி*

பொய்யுலகோர்களின் கண்களும் பார்க்க,
பொற்பதிதனிற் பரன் சேயரைச் சேர்க்க. - வைய

*சரணங்கள்*

1. வானங்கள் மடமடப்போ டொழிந்திடவே,
மாகிதலம்[1] அதிர்ச்சியாய்த் தானடுங்கிடவே;
பானு[2]வுன் மதி[3] யுடு[4] அனைத்தும் மங்கிடவே,
பஞ்சபூதியங்களுந் தானழிந்திடவே. - வைய

2. முக்கிய தூதனெக்காளமே தொனிக்க,
முதல் மரித்தோரெல்லாந் தாமெழுந்திருக்க,
ஆக்கணமுயிருள்ளோர் மறு உருத்தரிக்க,
ஆண்டவர் வருகிறார், பக்தர்கள் களிக்க. - வைய

3. யாவரின் சிந்தை செய்கையும் வெளிப்படற்-கு
இரண்டு புத்தகங்களுந் திறந்தவரவர்க்குப்
பூவுலகினிலவர் நடந்து வந்ததற்குப்
புண்ணியனளவுடன் பலனளிப்பதற்கு. - வைய

4. அடைக்கலன் யேசுவை அறிந்தவர் நாமம்,
அழிந்திடாதவர்களின் வாழ்வது க்ஷேமம்;
படைத்திடுவாயிந்தக் கணமுனை, க்ஷாமம்[5]
பற்றிடக் கூடுமே திடுக்கெனவே, நம். - வைய

*- அருள்திரு. ஞா. சாமுவேல்*

---

1 பூதலம்
2 சூரியன்
3 சந்திரன்
4 நட்சத்திரம்
5 பஞ்சம்

**128. இராகம்: உசேனி** **ஆதிதாளம் (421)**

**பல்லவி**

**நடுத்தீர்ப்புச் செய்ய வாறாரே–புவி தனக்கு**
நாயன் கிறிஸ்து நின்று; ஞாயம் புரிய வென்று.

**அனுபல்லவி**

கடு மரக்கனி தின பவமதில் விளை உல
கதில் உறு மனுடர்கள் அவரவர் கிரியைகள்
கிடு கிடென் றொலி பெறும் மடமடப் பொடு வரு
கிறிஸ்துவின் நாளினில் விரித்துமே வெளிப்படு – நடுத்

**சரணங்கள்**

1. சூரியன் அந்தகாரம் ஆம்; சுடும் அந்நாள் முன்
சுத்த நிலாவும் ஒளி அற்று மறைந்து போகும்;
துலக்க வெள்ளிகள் அதிரும்,–தொகை தொகையாய்ப்
பெலத்துப் பழம் போல் உதிரும்;–பெருக்கமொடு
பேச்சில் வானம் அசையும்; ஆச்சரியம் இசையும்
பேதையர் தாமும் மருள்வர்,–பிரியமாகப்
பாரினில் பெண்களைக் கொள்வர்கள், கொடுப்பார்கள்,
பயம் அறச்செலிக்கினில் புசிப்பர்கள், குடிப்பர்கள்;
வீரியமாய்ப் பல கட்டுவர், நாட்டுவர்;
விதத்துடனே கொடுந் தீமைகள் புரிகுவர். – நடுத்

2. ஆர்ப்பரிப்போடு வருவார்;–ஆகாயமுடன்
அண்டம் குலுங்கிடவே, எண்டிசையும் உருகும்,
அக்கணம் தூதர் நடப்பார்; அதிர்ச்சி உற
எக்காளத் தானும் தொனிப்பார்,–எல்லாரும் அப்போ
எழும்பிக் கல்லறை விட்டே ஒடுங்கி கிறிஸ்துவுக்கு
எதிர் சென்று வானம் ஏகுவார்;–ஏகோபித் தன்று
பார்ப்பார்கள் கிறிஸ்துவை, பாவிகள் நடுங்குவர்;
பரன் அருள் அடைந்த நல் பாக்கியர் களிப்பர்கள்;
தீர்ப்புகள் பெற எனத் திருமகன் ஆசனம்
சேர்த்துமே, அனைவரைப் பார்த்துமே உரை சொலி – நடுத்

3. எங் கோன் [1]கிறிஸ்து நின்றுமே,–இரு வகுப்பாய்
இடையன் ஆடும் கிடாயும் நடுவாய்ப் பிரிக்கும் நேராய்,
இஷ்டரை வல பக்கமும்,–இறுமாப்பான
துஷ்டரை இட பக்கமும், தொகைப்படுத்தி
சுகமாய் வலது பக்கத்துற்ற பக்தரே, நீங்கள்
துவக்கு லோகமுதல் வைத்த–சுக உலகம்
இங்கிதமாய் அடைந் திளைப்பற மகிழுங்கள்;
இடப் புறக் கொடியரே, என்னை விட்டிங் ககலுங்கள்;
பங்கமாய் அலகை[2]க்கும், அவனுடைத் தூதர்க்கும்,
பத்திரமாம் நரகத்தினில் விழும், என – நடுத்

*– ஏசடியான் உபாத்தியாயர்*

**129. இராகம்: மோகனம் ஏகதாளம்**

*பல்லவி*

**உந்தன் ஆவியே, சுவாமி, என் தன் மீதினில்**
வந்து சேரவே, அருள் தந்து காவுமே.

**அனுபல்லவி**

முந்து மானிடர் வினை தந்த சாபமும்
நிந்தை யாவுமே பட வந்த யேசுவே – உந்

*சரணங்கள்*

1. மதிமயக்குதே; பேயும் மன தியக்குதே,[3]
அதிகமாய்க் கடல் அலை அறைந்து பாயுதே; – உந்

2. சத்ய ஆவியைச் சீடர்க் கித்தரை விட,
சித்தமாய் உரை புரி நித்ய தேவனே. – உந்

3. பெந்தே கோஸ் தெனும் மா சிறந்த நாளிலே
விந்தை ஆவியின் அருள் தந்த நேர்மையே, – உந்

---

1 அரசர் 2 பேய் 3 அசைக்குதே

4. தாசன் யானுமே புகழ் வீசும் வாய்மையே[1]
வாச மாகவே அருள், நேச தேவனே. – உந்

*– சவரிமுத்து உபாத்தியாயர்*

**130. இராகம்: கெவுளிபந்து** **அடதாளம்**

*தரு*

**இந்த வேளையினில் வந்தருளும், தேவ ஆவியே,–இப்போ**
எங்கள் மீதிரங்கித், தங்கி வரம் தாரும், ஆவியே.

2. அந்தணர்[2] தம்மிடம் விந்தை செய்த சத்ய ஆவியே–முன்
ஆச்சரியமாகக் காட்சி தந்த ஞான ஆவியே.

3. அர்ச்சியர்க்[3] கந்நாளி லற்புதம் செய்தாண்ட ஆவியே–இந்த
ஆதிரை[4] மீதினில் தீதகற்றியாளும், ஆவியே.

4. ஆருமறியாத ஆறுதல் செய்திடும் ஆவியே,–இங்கு
அஞ்ஞானம் அகற்றி, மெய்ஞ்ஞானம் புகட்டும், ஆவியே

5. சித்தம் இரங்காயோ, நித்தியராகிய ஆவியே–அருள்
ஜீவ வழி காட்டிப் பாவம் அகற்றிடும், ஆவியே.

6. வாரும், வாரும்; கண் பாரும், பரிசுத்த ஆவியே;–இன்று
வந்து சபை மீதில் சிந்தை வைத்தருளும், ஆவியே.

7. தேற்றரவாளன் என்றேற்றிப் புகழ்ந்திடும் ஆவியே–நிதம்
சித்தம் வைத்தென் மீதில் முற்றிலும் காத்திடும், ஆவியே.

*– ச. யோசேப்பு*

---

1 வலிமை
2 அடியவர்
3 தூயவர்
4 உலகு

**131. இராகம்: சேனாவதி** **ரூபகதாளம்**

*பல்லவி*

**அரூபியே, அரூப சொரூபியே,–எமை**
ஆளும் பரிசுத்தரூபியே, அரூப சொரூபியே.

*அனுபல்லவி*

திருவிணா[1] டுறை நிதான கருணையா திபதி மோன[2]
சுர நரர்[3] வணங்கும் வானஒரு பராபர மெய்ஞ்ஞான – அரூ

*சரணங்கள்*

1. ஆதி காரண அரூபியே,–அசரீரி சத்ய
நீதி ஆரண[4] சொரூபியே,
வேத வாசக சமுத்ர, ஓதும் வாய்மைகள் சுமுத்ர,[5]
தீதிலா துயர் விசித்ர, ஜாதி யாருட பவித்திர[6] – அரூ

2. சீரு லாவிய தெய்வீகமே,–திரி முதல் ஒரு பொருள்
ஏரு[7] லாவிய சிநேகமே,
பாருளோர் பணிந்து போற்றும் ஆரியர்,[8] அடியர் சாற்றும்
நேரமே புகழை ஏற்றும்; வீரமாய் மனதை ஆற்றும் – அரூ

3. பக்தர் பாதகம் அடாமலே[9],–பசா சுலகுடல்
சத்ரு சோதனை படாமலே,
அத்தனார்[10] தேவ கோபம், நித்ய வேதனைகள் சாபம்,
முற்றும் மாறிடத் தயாபம் வைத்து நீடுன் பிரதாபம்[11] – அரூ

***– வேதநாயக சாஸ்திரியார்***

---

1 மோட்சலோகம்
2 மௌன
3 விண்ணோர் மண்ணோர்
4 வேதம்
5 சரியளவான
6 தூயவர்
7 அழகு
8 குருவே–இறைவன்
9 அணுகாமல்
10 இறைவன்
11 புகழ்

**132. இராகம்: சயிந்தவி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**ஐயையா, நான் ஒரு மா பாவி;–என்னை**
ஆண்டு நடத்துவீர், தேவாவி!

*சரணங்கள்*

1. மெய் ஐயா, இது தருணம், ஐயா;–என்தன்
மீதிலிரங்கச் சமயம், ஐயா;
ஐயையா, இப்போ தென்மேல் இரங்கி–வெகு
அவசியம் வரவேணும், தேவாவி! – ஐயையா

2. எனதிருதயம் பாழ்நிலமாம்;–ஏழை
என்னைத் திருத்தி நீர் அன்பாகத்
தினமும் வந்து வழி நடத்தும்,–ஞான
தீபமே, உன்னத தேவாவி! – ஐயையா

3. ஆகாத லோகத்தின் வாழ்வை எல்லாம்–தினம்
அருவருத்து நான் தள்ளுதற்கு
வாகான[1] சுத்த மனம் தருவீர்,–நீர்
வல்லவராகிய தேவாவி. – ஐயையா

4. பத்தியின்[2] பாதை விலகாமல்,–கெட்ட
பாவத்தில் ஆசைகள் வையாமல்
சத்திய வேதப்படி நடக்க,–என்னைத்
தாங்கி நடத்திடும், தேவாவி! – ஐயையா

5. அன்பு, பொறுமை, நற் சந்தோஷம்,–என்
ஆண்டவரின் மேல் விசுவாசம்,
இன்ப மிகு மெய்ச் சமாதானம்,–இவை
யாவும் தருவீரே, தேவாவி! – ஐயையா

6. ஏசு கிறிஸ்துவில் நான் சார்ந்து,–அவர்
இடத்திலேயே நம்பிக்கை வைக்க,
மாசில்லாத் துய்யனே, வந்துதவும்;–நீர்
வராமல் தீராதே, தேவாவி! – ஐயையா

*– அருள்திரு. பி. பாக்கியநாதன் தாவீது*

---

[1] அழகான–ஒழுங்கான 2 பக்தி

**133. இராகம்: உசேனி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**வாரும், தேற்றரவரே, வாரும்;–எனைச்**
சேரும், வினையறுத் தெனைச் சேரும்.

**அனுபல்லவி**

ஆரும் மாற்றுதற் கரிதான பவம் தீரும்படி செய்யும், திறவானே[1].
– வாரும்

**சரணங்கள்**

1. மிகவும் பாழ் நிலம் என்னுள்ளமே;–அதில்
விதைக்கும் திரு வசனத்தையும் தள்ளவே,
ஜகமும் மாமிச ஆசைகளும் மெள்ளவே,–செய்யும்
சதியை அகற்றி எனையாட் கொள்ளவே,
அக மீதா நந்தம் கொண்டுன் புகழ் விள்ளவே[2],–செஞ்சொல்
அடியன் நான் உமைப் பாடி மகிழ் கொள்ளவே, – வாரும்

2. வாடும் மனதினை ஆற்றுதற்கும்,–வேத
மார்க்கத் தொழுகி உமைப் போற்றுதற்கும்,
சூடென்[3] கெட்ட குணத்தை மாற்றுதற்கும்,–சற்று
துலங்கும் தீபத்திற் கெண்ணெய் ஊற்றுதற்கும்,
நாடும் கதியில் கரை ஏற்றுதற்கும்;–நித்ய
நன்மைகளினால் எனைத் தேற்றுதற்கும், – வாரும்

***– தேவவரம் முன்ஷி***

**134. இராகம்: செஞ்சுருட்டி** **ரூபகதாளம்**

**பல்லவி**

**சுத்திகரியாயோ, துர்க்குணம் நீங்க என்னைச்**
சுத்திகரியாயோ,

---

1 ஆற்றலுடையவர் 2 கூறவே 3 கோபி–கோபக்காரர்

**சரணங்கள்**

1. மத்தியஸ்தர் பிரசாதனே[1], பரிசுத்தாவி எனும் நாதனே,
பக்தி தரும் போதனே, உயர் முக்திதரும் நீதனே! – சுத்

2. பெந்தெகொஸ்து முருகிலே,[2] அங்கு வந்தே சீஷரருகிலே,
உந்திய[3] கருணை வாரியே, அருள் தந்திடு நல் உதாரியே!– சுத்

3. அந்தகாரம் விலகவே, ஒளி சந்ததமும் இலங்கவே,
சந்தரப்பிரகாசனே, தேவமைந்தர் போற்றும் நல்நேசனே! – சுத்

4. சத்திய நெறியில் ஏறவே, நற்பத்தியில் தினம் தேறவே,
புத்தியைத்தரும் ஆவியே, இதயத்தை உன்னருள் மேவியே.
– சுத்

5. தேவ நல் வர மானவா, எங்கு மேவு மூன்றில் ஒன்றானவா,
பாவ மாசினைப் போக்குவாய், நித்திய சாபம் யாவையும்
நீக்குவாய். – சுத்

***– ஜாண் பால்மர்***

**135. இராகம்: பைரவி** **திரிசுரதாளம்**

***பல்லவி***

**தீய மனதை மாற்ற வாரும், தூய ஆவியே,–கன**
நேய ஆவியே.

***சரணங்கள்***

1. தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே,–மருள்[4]
தீர்க்கும், தஞ்சமே. – தீய

2. பரத்தை நோக்க மனம் அற்றேனே, பதடிதான்,[5] ஐயா.–ஒரு
பாவி நான் ஐயா. – தீய

---

1 அநுக்கிரகம்
2 பண்டிகையில்
3 உயர்ந்த
4 அறியாமை
5 பதர்

3. புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே,–அதைப்
புகழ்ந்து காக்கவே. – தீய

4. ஏக்கத்தோடென் மீட்பைத் தேடி, இரந்து கெஞ்சவே,–தினம்
இதயம் அஞ்சவே. – தீய

5. கிறிஸ்து மீது நாட்டங் கொண்டு கீதம் பாடவே,–அவர்
கிருபை தேடவே. – தீய

6. தேவ வசனப் பாலின்மீது தேட்டம் உன்னவே[1],–மிகு
தெளிவு துன்னவே.[2] – தீய

7. ஜெபத்தின் தாகம் அகத்தில் ஊறி ஜெபித்துப் போற்றவே,–மிக
சிறப்பாய் ஏற்றவே. – தீய

*– அருள்திரு. சற்குண உவின்பிரிட்*

**136. இராகம்: இந்துஸ்தான்காபி ஆதிதாளம்**

*பல்லவி*

**ஆவியை அருளுமே, சுவாமீ,–எனக்**
காயுயிர் கொடுத்த வானத்தினரசே!

*சரணங்கள்*

1. பாவிக்கு ஆவியின் கனியெனுஞ் சிநேகம்,
பரம சந்தோஷம், நீடிய சாந்தம்,
தேவ சமாதானம், நற்குணம், தயவு,
திட விசுவாசம் சிறிதெனுமில்லை. – ஆவி

2. தீபத்துக் கெண்ணையைச் சீக்கிரம் ஊற்றும்;
திரி யவியாமலே தீண்டியே யேற்றும்,
பாவ அசூசங்கள்[3] விலக்கியே மாற்றும்,
பரிசுத்த வரந் தந்தென் குறைகளைத் தீரும். – ஆவி

---

1 வாஞ்சை 2 சேர்தல் 3 அழுக்கு

3. நற்கனி தேடிவருங் காலங்க ளல்லவோ?
நானொரு கனியற்ற பாழ்மர மல்லவோ?
முற்கனி முகங்காணா வெம்பயி ரல்லவோ?
முழுநெஞ்சம் விளைவற்ற உவர்நில மல்லவோ? – ஆவி

*– அருளானந்தம் பிரசங்கியார்*

**137. இராகம்: அமிர்தகல்யாணி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஆவியை மழைபோலே யூற்றும்,–பல**
சாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்.

***அனுபல்லவி***

பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே,
பரிந்து நீர் பேசியே இரங்கிடச் செய்யும். – ஆவி

**சரணங்கள்**

1. அன்பினால் ஜீவனை விட்டீர்,–ஆவி
அருள் மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்;
இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராளமான ஜனங்களைச் சேரும். – ஆவி

2. சிதறுண்டலைகிற ஆட்டைப்–பின்னும்
தேடிப் பிடித்து நீர் தூக்கிச் சுமந்து,
பதறாதே நான்தான் உன் பர்த்தாவாம்[1] யேசு
பாக்கிய ரென்னும் நல் வாக்கையருளும். – ஆவி

3. சாத்தானின் கோஷ்டம்[2] அதிகம்;–அவன்
தந்திரக் குணங்களின் சேஷ்டை அதிகம்;
கர்த்தன் கிறிஸ்துவின் காயத்தினாலே
கலகக் குணங்களை ஒழிந்திடச் செய்யும் – ஆவி

---

1 மணவாளன்–நல்மேய்ப்பன் 2 ஆரவாரம்

4. காத்திருந்த பல பேரும்-மனங்
கடினங் கொள்ளா முன்னே உம் பாதஞ் சேரும்;
தோத்திரக் கீதங்கள் பாடிப் புகழ்ந்து
சுத்த லோகம் வரத் தூயாவி ஊற்றும். – ஆவி

5. தோத்திரக் கீதங்கள் பாடி-எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாத்திரராக அநேகரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள்மாறி யூற்றும். – ஆவி

***– அருளானந்தம் பிரசங்கியார்***

**138. இராகம்: செஞ்சுருட்டி ஆதிதாளம்**

**பல்லவி**

**ஐயனே, நரர் மீதிரங்கி அருள், ஐயனே,**

**சரணங்கள்**

1. வையங் கெடுக்கப்பட்டு நொய்யு தனாதி! உன்தன்
துய்ய ஆவியை விடுத்துய்யக் கிருபை புரியும். – ஐய

2. ஆதத்தின் மக்கள் எல்லாம் போதத்[1] தவிக்கிறார்கள்;
வேதத் துரைப்[2] பிரகாரம் நீதத்துன் ஆவி தந்தாள்[3]. – ஐய

3. மைந்தர் மடிந்து நரகந்தனில் வீழாதுன்றன்
மைந்தனின் ஆவியைத் தந் தெந்தவிதமும் காப்பாய். – ஐய

4. முந்து மனுடருக்குத் தந்த வாக்குத் தத்தத்துன்
சிந்தை மகிழ்ந்தவர் நிர்ப்பந்தம் தவிர்க்கவேண்டும். – ஐய

5. ஆகாதவன் மடிந்து சாகா துயர் பிழைக்க,
வாகாய்[4] அருள் செயும் திரி யேகா; உமக்குத் தோத்ரம். – ஐய

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 அறிவு
2 வசனம்
3 ஆளுகை செய்யும்
4 நேர்த்தி

**139. இராகம்: செஞ்சுருட்டி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**இயேசுநாதா, இவ்வேளை வருவாய்.**

**சரணங்கள்**

1. தாசர் இரக்ஷணிய வழி சகலர்க்கும் கூறிட
நேச சுத்தாவி நீரே – இயேசு

2. அன்றுன் சீடர்க்கருள் ஆவியளித்தாயே
இன்றும் உன்னத ஆவி ஈய, – இயேசு

3. இங்குறு மிவர் உனில் விசுவாசம் வைத்
தென்றும் இரட்சிப்படைந்தே ஏக – இயேசு

***– டி. பால்மர்***

**140. இராகம்: நாதநாமக்கிரியை** **ஆதிதாளம்**

**பல்லவி**

**வந்தாரே ஆவி;சீஷர்கள் மேலே**
வந்தாரே ஆவி

**அனுபல்லவி**

வந்தனர், அக்கினிச் சுந்தர நாவென
நிந்தை அடைந்துளம் நொந்தவர் மேலே! – வந்

**சரணங்கள்**

1. எல்லாரும் ஒருமனம் அல்லாது, வேறில்லாமல்,
சொல்லாமல் வீடுவிட்டு, புல்லர்கள்[1] தமக்கஞ்சி,
வல்லவனான ஏசு நல் அடியை வணங்கி
அல்லும் பகலும் ஏற்றும் மெல்லிய சீஷர் மேலே – வந்

---

1 பகைவர்கள்

2. அண்டம் அகன்று, பூ மண்டலந்தனில் ஆவி
எண்டிசையும் முழக்கம் கொண்டிடவே, பலத்த
சண்டமாருதம்[1] போலக் கண்டவர் பிரமிக்க
தொண்டர் இருந்த வீட்டை மண்டல்செய்து நிரப்பி – வந்

3. கூடிய ஜனங்களும் நாடி–கலிலேயர்
தேடிப் பிடிக்கினும் ஓடி ஒளிப்பவர்
பாடி, எம்பாஷையிலே நீடிய பிரசங்கம்
சூடியதேதென, சாடி அதிசயிக்க – வந்

***– ஆபிரகாம் உபதேசியார்***

**141. இராகம்: இங்கிலீஷ் ஆதிதாளம்**

***பல்லவி***

**சத்திய வேதத்தைத் தினம் தியானி,**
சகல பேர்க்கும் அதபிமானி.[2]

***அனுபல்லவி***

உத்தமஜீவிய வழி காட்டும், உயர்வானுலகில் உனைக்கூட்டும்
– சத்

***சரணங்கள்***

1. வாலிபர் தமக்கூண் அதுவாகும்; வயோதியர்க்கும்
அதுணவாகும்
பாலகர்க்கினிய பாலும் அதாம்; படிமீ[3] தாத்மபசி தணிக்கும். –சத்

2. சத்துருப் பேயோ டமர்புரியும் தருணம் அது நல் ஆயுதமாம்;
புத்திரர் மித்திரரோடு மகிழும் பொழுதும் அது நல் உறவாகும்.
– சத்

---

1 பெருங்காற்று 2 அது பெருமைக்குரியது 3 உலகு

3. புலைமேவிய[1] மானிட ரிதயம் புனிதம் பெறுதற்கது மருந்தாம்;
நிலையா நரர்வாணாள் நிலைக்க நேய காயகற்பம்[2] அதாம் – சத்

4. கதியின் வழிகாணாதவர்கள் கண்ணுக்கரிய கலிக்கம்[3] அது;
புதிய எருசலேம் பதிக்குப் போகும் பயணத்துணையும் அது. – சத்

5. மாந்தர் ரக்ஷிப்படையும் வழி வழுத்தும் வேதவார்த்தை அது;
வேந்தர் அமைச்சர் முதலெவர்க்கும் விதித்த பிரமாணமும்
அதுவே. – சத்

*– மு. சாமுவேல்*

**142. இராகம்: சங்கராபரணம்** **மட்டியதாளம்**

**பல்லவி**

**தேன் இனிமையதிலும் சத்திய வேதம்**
திவ்யமான மதுரம்.

**அனுபல்லவி**

ஞானமது நிறையும் வேதமதில் எனக்கு,
நாதனே, அருள் ஆசை அனுதினம் ருசித்திட. –தேன்

**சரணங்கள்**

1. ஆரணம்[4] அதி புனிதம் களங்கம் இல்
லாத சுகிர்த[5] அமுதம்;
பூரணமாய் அதைத் தான் உட்கொண்டே வரில்,
பொன்னுல கதற் கேற்ற தன்மை உண்டாக்குமே. –தேன்

2. பாதைக்குரிய தீபம்; மெய் வேதம்
பற்றிடில் மிகு லாபம்;
வாதை செய்திடும் பல சோதனைகளும் எதிர்
வரில் அனைத்தும் வெல்லத்தகும் படைக்கல[6] மதே. –தேன்

---

1 தீமை சேர்ந்த
2 மருந்து
3 கண் மருந்து
4 வேதம்
5 இன்ப
6 பேராயுதம்

3. விண்ண தழிந்தாலும், அதோ டிந்த
மேதினி ஒழிந்தாலும்,
திண்ண மதாய் என்றும் சிறந்திலகும் ஜீவ
திருமறை எனில் தங்கிப் பலன் தர அனுக்ரதி –தேன்

4. எத்திசை யிலுமுள்ள நரர் யாவரும்
ஏகன் நின் அறிவு கொள்ள,
சுத்த சுவிசேஷம் துலங்கிப்ர காசிக்க
தூய நல் ஆவியை யாவர்க்கும் ஈந்தருள். –தேன்

***– ஜாண் பால்மர்***

**143. இராகம்: மோகனம் ஏகதாளம்**

***பல்லவி***

**பாதைக்கு தீபமாமே**
பரிசுத்த ஆகமம்–மா நல்ல

***சரணங்கள்***

1. பாதைக்கு தீபமே, பாவிக்கு லாபமே,
பேதைக்குத் திரவியமே, பரிசுத்த ஆகமம். – மா நல்ல

2. தேனின் மதுரமே, திவ்ய அமுதமே
வான பிதாவின் வாக்கே பரிசுத்த ஆகமம். – மா நல்ல

3. நீதியி னாதாரமே, நெறியுள்ளோர் செல்வமே,
ஜாதிகள் மேன்மையாமே பரிசுத்த ஆகமம். – மா நல்ல

4. ஞான சமுத்திரமே, நல்ல சுமுத்திரையே.[1]
ஈனர்க்கும் ஆதரவே பரிசுத்த ஆகமம். – மா நல்ல

5. உலகோர்க் குயிர்துணை, உண்டோ அதற்கிணை?
அலகையை[2] வெல்லுங்கணை பரிசுத்த ஆகமம். – மா நல்ல

6. எல்லையில்லா விஸ்தாரம், எவர்க்கும் பர மாகரம்,
வல்ல பரனின் வேதம் ஆகமம். – மா நல்ல

***– டி. அருளானந்தம்***

---

1 சரியளவு 2 பேயை

**144. இராகம்: பிலகரி** **செம்படைதாளம்**

**பல்லவி**

**ஞான சுவிசேஷமே**
நன்மை தரும் நேசமே

**அனுபல்லவி**

ஞான உபதேசமே, வளரும் விசுவாசமே, – ஞான

**சரணங்கள்**

1. சத்திய வாக்கியமே, சந்தோச பாக்கியமே,
புத்தியா ரோக்கியமே, புண்ணிய சிலாக்கியமே. – ஞான

2. நீதிப் பிரசங்கமே, நிமலன் அருள் தங்கமே,
சோதிமிகும் துங்கமே,[1] துதிபெருகும் பொங்கமே,[2] – ஞான

3. அஞ்ஞானத்தை அழிக்கும், அலகையிடர் ஒழிக்கும்,
மெய்ஞ்ஞானத்தை அளிக்கும், விளங்கி என்றும் செழிக்கும்,
– ஞான

4. யேசுவண்டையில் சேர்க்கும், எல்லா இடரும் நீக்கும்,
பேசும் பாவத்தைப்போக்கும், பேதைமையோரைக் காக்கும்
– ஞான

***– ஜே. யாக்கோபு***

**145. இராகம்: இந்துஸ்தானி.** **ஆதிதாளம்**

**பல்லவி**

**வானாதி தாள்[3] காட்டும் – நல்ல**
வாத்தி[4] சுவிசேடம்.

---

1 தூய்மை
2 பொலிவு–ஆனந்தம்
3 பாதம்
4 வழிகாட்டி

**அனுபல்லவி**

கோன் ஆதி இயேசு கிறிஸ்து மொழிந்த தோர்
கோதில்லா[1] நீதி நிறைந்த சுவிசேஷம். – வானாதி

**சரணங்கள்**

1. ஆதி ஒளி தோண, நல்ல அறிவு மிகக் காண–சத்திய
நீதியின் வேர் ஊண,–அதை–நீணிலத்தோர் பூண
ஜாதிகளான சகல மனிதரும்
சத்ய மறை என்று துத்யம்[2] புரியவும் – வானாதி

2. அன்பு நிறைந்திடவும்,–கெட்ட–ஆசை குறைந்திடவும்–மோட்ச
இன்பம் சிறந்திடவும்,–பாவ–இருள்கள் மறைந்திடவும்,
முன்பு நடந்த முரட்டாட்டத்தை விட்டு
முற்றிலும் நற்குண சுத்தம் பெருகவும் – வானாதி

3. கார்இருள் நீங்கிடவும்–பாவக் கயிறுபின் வாங்கிடவும்–நித்ய
பேர்ஒளி ஓங்கிடவும்–சத்ய–பிரபல்யம் நூங்கிடவும்[3]
தாரணியில் உள்ள சர்வ மனிதரும்
சத்ய பிதா எனும் வஸ்துவைச் சேரவும் – வானாதி

4. பாலர்கள் கூடிடவும்–நித்ய–பரகதி தேடிடவும்–சீவ
காலங்கள் நீடிடவும், மோட்ச–கன முடி சூடிடவுங்
கோலம் நிறைந்த மணவாளன் இயேசுவைக்
கூடி அனுதினம் பாடித் துதிக்கவும் – வானாதி

***– மரியான் உபதேசியார், திருநெல்வேலி.***

**146. இராகம்: பியாகடை ரூபகதாளம் (422)**

**பல்லவி**

**அய்யனே உன் வேதம் இன்பமே,**

**அனுபல்லவி**

அதனை மறுத்து மீறில் அதிகம் வருகுந் துன்பமே – அய்

1 குற்றம் 2 துதி 3 பெருகிடவும்

**சரணங்கள்**

1. தேன் கூண்டொழுகு தேனில் மிக்கதே; சுத்த
தெளிந்த நறுந்தேனில் தக்கதே,-உண்ண
தித்திப் பதிகம் கொண்ட சுத்த தகைமைவிண்ட - அய்

2. பேதையை அறிவாக்குஞ் சத்தியம்-ஆவி
பெருக உயிர்ப்பிக்கும் நித்தியம்,-நன்மை
பெருக்கங் கொண்ட நீதி, உருக்கங்கொண்ட ஜோதி - அய்

3. பொன்னிலும் உயர்ந்த பொன்னாகுமே,-மாற்றிப்
புடமிட்ட பசும் பொன்னென்றாகுமே-நடை
புகுந்த வழிக்குத் தீபம் தகுந்த அருளி லாபம் - அய்

4. ஆவியின் பட்டயம் ஆமே-நித்யம்
அருள் மோட்சத்தில் கொண்டு போகுமே-உந்தன்
அரிய மகிமை காட்டும் பெரிய கவலை யோட்டும் - அய்

5. சுத்த சுத்தம் தரும் சுத்தமே;-மிக
துய்ய அறிவு தரும் வித்தமே;-இனிமை
சொல்லத் தொலைந்திடாத வல்லத் தகையதீத - அய்

***- பு.சு. யோ***

**147. இராகம்: காம்போதி ஆதிதாளம் (423)**

**பல்லவி**

**இந்த சுவிசேடம்போ லெங்கும் அகப்படாது**
ஏதோ என் பாக்கியம் இது.

**அனுபல்லவி**

விந்தையுடன் புவியோரை மீட்கப் பரன் அன்பாக
வேதியர்க்கே அளித்தார் மெய்ம்மறை சத்தியமாக,
விளங்க விபுலகில், கலங்க வலகையும்,
இலங்க மனுடர்கள்; துலங்க, நாளுமே, - இந்த

**சரணங்கள்**

1. ஜாதிகள் யாவரும் சத்தியம் மறையில் சேர,
சகல பொய்ம் மதங்களும் தரணிதனிலே மாற,
மேதினி மீதிலெங்கும் மெய் அறிவில் தேற;
விக்கிரகத்தை உடைக்க, உக்கிரகத்தை ஒழிக்க,
விக்கினத்தை அறுத்து நுக்ரகத்தை அளிக்க – இந்த

2. இந்நிலமீதி லெங்கும் மிதற்கீடுண்டோ பாக்கியம்?
இச்சுவி சேஷத்தினால் எவர்க்குமுண்டாம் சலாக்கியம்;
பன்னிரு சீடருக்கும் பகர்ந்தளித்திட வாக்கியம்
பாரில் மனுடர் பவம் பரிகரித்திடம் யோக்கியம்;
பட்சமுடன் திரு ரட்சகரருள் பெறும்,
இச்சை மிகும்; குரு உச்சிதனே அருள் – இந்த

3. தேசமெங்கும் பெருகி, சீர்கெட்டோர்களை மேவி,
திடனற்றோர்களைத் தேடி, திவ்ய ஆவியால் ஊதி,
பாசமுடன் கிறிஸ்தின் பாதம் பணிந்தே தாவி,
பார்மிசை யாவருமே பவத்தை ஏவி,
பரத்தின் வழியைக் காட்டும் திறத்தின் கிரீடம் சூட்டும்.
கருத்தில் பலத்தை நாட்டம், வரத்தினருளால் தேற்றும் – இந்த

*– ஜே.யாக்கோபு*

**148. இராகம்: ஆனந்தபைரவி** **சாப்புதாளம்**

**பல்லவி**

**இந்நாள் ரட்சிப்புக் கேற்ற நல் நாள்,**
ஏற்ற நல் நாள், ஏற்ற நல் நாள்.

**அனுபல்லவி**

சொன்னார் கிறிஸ்துனக்குக் கிருபையைச் சொரிந்து. – இந்

**சரணங்கள்**

1. சந்தோஷந்தனைச் சொல்ல வந்தேன்;–தேவ
சமாதான வார்த்தையைப் பெலனாகத் தந்தேன். – இந்

2. வாடித் திகைத்துப் புலம்பாதே;–உந்தன்
மனதில் அவிசுவாசம் வைத்துக் கலங்காதே. – இந்

3. உலகச் சிநேகம் வெகு கேடு;–அதற்
குடந்தைப்படா மல் ஜீவ மார்க்கத்தைத் தேடு. – இந்

4. பொய்யான மாயைதனை நம்பி, வரும்
பூரண கிருபையைப் போக்கடியாதே வெம்பி; – இந்

5. இன்றுன் இரட்சகரிடம் திரும்பு;–அவர்
இயற்றும் சம்பூரண ஜீவனை விரும்பு. – இந்

6. இனிமேலாகட்டும், என் றெண்ணாதே;–பவ
இச்சைக் குட்பட்டால், திரும்ப ஒண்ணாதே. – இந்

7. ஜீவ நற் காலம் இதைப் பற்று;–அந்தன்;
சிருட்டிகர் கிருபைச் சீர் பாதத்தை தந்து – இந்

***– மரியான் உபதேசியார்***

**149. இராகம்: ஆனந்தபைரவி** **சாப்புதாளம் (424)**

**பல்லவி**

**இந்நாள் இரட்சிப்புக்கேற்ற நல் நாள்,**
ஏற்ற நல் நாள், ஏற்ற நல் நாள்.

**அனுபல்லவி**

சொன்னார் கிறிஸ்துனக்குக் கிருபையைச் சொரிந்து – இந்

**சரணங்கள்**

1. கிறிஸ் தேசுவை உற்றுப்பாரு;–அவர்
கிருபையாய்ச் சிந்தி ரத்தத்தைச் சேரு – இந்

2. பாவங்கள் அறச் சுத்திகரிப்பார்,–உனைப்
பரிசுத்த வஸ்திரத்தாலே அலங்கரிப்பார் – இந்

3. நேர்மையாய்க் கிறிஸ்தின் பின்னே நில்லு;–தேவ
நீதியைப் பிடித் தவர்க்குப் பின்னாகச் செல்லு; – இந்

4. வருவார் கிறிஸ்து மக ராஜன்;–அவர்
வந்துனக்கு இன்பமது தருவார், நன் னேசன்; – இந்

5. மகிமை நிறைந்த கிரீடஞ் சூடி–நித்திய
வாழ்வை அருள்வார் உனக்கின்பங் கொண்டாடி – இந்

6. ஏசுக்கிறிஸ்தை நீ தான் நம்பு;–அவர்
என்றென்றைக்கும் உனக் கிரட்சிப்பின் கொம்பு – இந்

***– மரியான் உபதேசியார்***

**150. இராகம்: மணிரங்கு** **ஆதிதாளம்**

**பல்லவி**

**இயேசுவை அன்றி வேறொரு ரட்சகர்**
காசினி தனிலுண்டோ, மனமே? அவர்
நேசமறிந்து விசுவாசம் இல்லாமலே
மோசம் போவதேன், மனமே?

**சரணங்கள்**

1. ஆதம் ஏவை செய்த பாதகம் தொலைந்திட
பூதலம் வந்ததார் மனமே?–கொடும்
யூதர்களால் பல வாதைகள் கொண்டு திவ்ய
போதகம் செய்ததார், மனமே? – இயேசு

2. இந்த வாழ்வு கன நிந்தை என்றுனது
சிந்தை தெளிந்திருந்து, மனமே-ஐயோ!
பந்த பாசமதில் நொந்து நாள்தோறும்!
அலைந்து திரிவதேன், மனமே? - இயேசு

3. பூதல மீதினில் ஓதரி[1] தாம் பரஞ்
ஜோதியைப் போற்றி செய், மனமே;-செய்தால்
பாதகம் போய் மோட்ச சாதகம் ஆமென்று
வேதமுரைக்கு தல்லோ மனமே? - இயேசு

***- தஞ்சை சத்தியநாதன்***

**151. இராகம்: வனஸ்பதி** **ஆதிதாளம்**

***பல்லவி***

**இயேசு நாமமல்லாம்-உலகினில்**
வேறு நாமம் இல்லை,-கிறிஸ்து

***அனுபல்லவி***

தேசுலாவிய[2] கேரூ பீம்பணி
திவ்விய வானவர் முனிவர் கண்மணி
மாசில்லாத மெய்ஞ்ஞான சிகாமணி
மதிக்கும் சத்திய வேத சிரோமணி - இயேசு

***சரணங்கள்***

1. வானமும் புவியும்-கதி-ரோன் மதி[3] உடுவும்[4]
கானல் வரை[5] கடலும்-நர[6]-ரான எவ்வுயிரும்
தானே படைத்தருள் ஆதி காரணன்,
சர்வ ஜீவ தயாபரா பூரணன்,
ஈனர் வாக்குக் கெட்டாத மெய்யாரணன்,
இலங்கும் வேத சங்கீத பாராயணன். - இயேசு

---

1 சொல்வதற்கரிய
2 ஒளி
3 சந்திரன்
4 நட்சத்திரம்
5 மலை
6 மனிதர்

2. காவிலாத மேவை–செய்–தீவினையதனால்
பூவின் மாந்தர் படும்–துயர்–தேவ கோபமற,
பாவிகளைப் பரனோடுற வாக்கப்,
பரம எருசலேம் நகர் சேர்க்க,
மேவு மலகை[1] அரணைத் தூளாக்க,
மேதினியில் சமாதானம் உண்டாக்க. –இயேசு

3. பண்டு வேதியர்கள்–கைக்–கொண்ட மாமறையில்
விண்ட நாமமல்லாமல்–உயர்–அண்ட மீதினிலும்,
மண்டலத்திலும், ஆழி[2] கீழிலும்
மாருதம்[3] செலும் அட்ட[4] திக்கிலும்,
தொண்டர் கூக்குரல் எட்டும் தூரத்திலும்,
துஷ்டர் வர விரும்பாத இடத்திலும். – இயேசு

***– ஈசாக்கு பாக்கியநாதன்***

### 152. இராகம்: கமாஸ் ஆதிதாளம்

**பல்லவி**

**இயேசு நாமம் ஒன்றை நம்புவீர்,**
பூலோகத்தாரே;

**சரணங்கள்**

1. இயேசு நாமம் ஒன்றை நம்பும்;
இரட்சண்யத்துக் கிதுவே ஸ்தம்பம்;
பேசும் வேறே நாமமெல்லாம்
பேயின் வம்பும் தும்புமாகும் – இயேசு

2. பார்த்திபன்[5] தவீது குலக்
கோத்திரக் கன்னிமரிபால
நேத்திரம்[6] போலே உதித்துத்
தாத்திரி[7] ரட்சகனான, – இயேசு

1 அலகை–பேய்
2 கடல்
3 காற்று
4 அக்ஷ்ட–எட்டு
5 அரசன்
6 மண்மணி
7 உலகு

3. பூதலத் தஞ்ஞான இருள்
போக்கவே மெஞ்ஞான பெருஞ்
ஜோதியாய் விளங்கி நிற்கும்
நீதியின் சூரியன் ஆன – இயேசு

4. பாவிகளீடேற மோட்சப்
பாக்கியம் பெறுவதற்காய்
ஜீவன் விட்டுயிர்த் தெழுந்து
சேணுலகுக்[1] கேறிச் சென்ற, – இயேசு

5. விண்டலத்தவர்கள் சூழ,
கண்டலகை பதறி வீழ;
மண்டலத்தைத் தீர்வை செய்யக்
கொண்டல்[2] மிசை வரும் ராஜன் – இயேசு

*– ஈசாக்கு பாக்கியநாதன்*

**153. இராகம்: செஞ்சுருட்டி** **ஏகதாளம்** (425)

**பல்லவி**

**ஏன் மயங்கிறாய்–மனமே?–ஏன் மயங்கிறாய்?–கான**
மான மயங்கிறாப் போல்–ஏன் மயங்கிறாய்?

**சரணங்கள்**

1. அந்தர[3] வான் புவி தந்த பராபரன்
ஆரென் றறிவால் அறியாமல் – ஏன்

2. பராபரனோ, பாகாலோ தெய்வம்
எனப் பகுத் தறிந் தேத்தாமல் – ஏன்

3. பராபரன் தெய்வம் ஆனால் அவரைப்
பணி, பசாசானால் அதைச் சேவி – ஏன்

4. மனுடவ தாரம் செய்த பராபர
வஸ்துவே கிறிஸ்து என்றறியாமல் – ஏன்

---

1 வானலோகத்திற்கு 2 மேகம் 3 ஆகாயம்

5. எந்த விதத்திலும் இயேசு கிறிஸ்துவால்
இரட்சிப் படைவதைத் தேடாமல் – ஏன்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**154. இராகம்: கரகரப்பிரியை** **ரூபகதாளம்**

*பல்லவி*

**வேறு ஜென்மம் வேணும்,–மனம்**
மாறுதலாகிய உள்ள சுத்தி என்னும்

*சரணங்கள்*

1. கூறு பரிசுத்தர் மாறிலா தேவனின்
தேறுதலான விண்பேறு பெற இங்கே; –வேறு

2. பாவசுபாவமும் ஜீவியமும் மாறி
தேவனின் சாயலை மேவுவதாகிய; –வேறு

3. மானிடரின் அபிமானத்தினாலல்ல,
வானவரின் கிருபா தானமாய் வரும்; –வேறு

4. ஒன்றான ரட்சகர் வென்றியை நம்பி,
மன்றாடுவோருக்கு ஒன்றுவதாகிய; –வேறு

5. மைந்தர் கெடாமல் உகந்து ஈடேறவே,
சொந்த மகன் தனைத் தந்த பிதா அருள்; –வேறு

6. மண்ணினில் பத்தராய் நண்ணி[1] நடக்கவும்,
விண்ணினில் தூயராய் தண்ணளி[2] கொள்ளவும்; –வேறு

*– தீ. யோசேப்பு*

**155. இராகம்: முகாரி** **ரூபகதாளம்**

*பல்லவி*

**மரித்தாரே கிறிஸ்தேசு**
உனக்காகப் பாவி.

---

1 பொருந்தி 2 கருணை

*சரணங்கள்*

1. திரித்துவத் துதித்தோர் தெய்வீக சேயே,[1]
தீன தயாளத்வ மனுவேலே பாராய். – மரி

2. லோகத்தின் பாவத்தைத் தேகத்தில் சுமந்தே,
லோலாயமாயச்[2] சிலுவையிலே பாராய். – மரி

3. மகத்தான தண்டனை நிவிர்த்திப்பதற்கே,
மா பாடுபட்டுத் தரித்ததே பாராய். – மரி

4. மன்னிப்புண்டாக்கவே மத்தியஸ்தராக
மாவாதைக் குள்ளானார் தாமே நீ பாராய். – மரி

*– ஈசாக்கு பாக்கியநாதன்*

**156. இராகம்: செஞ்சுருட்டி** **பிலந்திதாளம்**

*பல்லவி*

**பாவம் போக்கும் ஜீவ நதியைப்**
பாரீர் வந்து பாராய்–பாவி?

*அனுபல்லவி*

தீவினை தீர்க்கும் தேவ மறியின்[3]
திருரத்த மிந்த ஆறாம்,–பாவி? – பாவம்

**சரணங்கள்**

1. கல்வாரி மலைச்சிகர மீதுற்றுக்
கண்கள்[4] ஐந்து திறந்து;–அதோ
மல்கிச் சிலுவை யடியில் விழுந்து
வழிந்தோடுது பாராய்,–பாவி – பாவம்

2. பாவச்சுமையால் நொந்து சோர்ந்து
பதறிவிழுந் தலறி–நிதம்
கூவியழுத அனந்தம்[5] பேரிதில்
குளித்தே யுளங் களித்தார்,–பாவி – பாவம்

---

1 குமாரன்
2 துன்புற்று
3 ஆட்டுக்குட்டி
4 காயங்கள்
5 ஏராளம்

3. பத்தருளத்தி லிடைவிடாமல்
பாய்ந்து வளமீந்து–அதை
நித்தமும் பரிசுத்த குணத்தில்
நிலைநாட்டுது பாராய்–பாவி – பாவம்

4. ஒருதரம் இந்த நதியின் தீர்த்தம்
உண்டோர்? ஜீவன் கண்டோர்–தாகம்
அறுதி[1] யடைவர்; வேறொரு நதிக்
கலையார், தேடி யலையார்,–பாவி – பாவம்

5. முன்பின் ஒன்றையும் யோசியாமல்
முழுகாயோ நீ, பாவி? இந்த
அன்பின் நதியில் விசுவாசம் வைத்தால்
அதுவே போதும்; பாவி–ஆ!–ஆ – பாவம்

6. நித்தியந்தனில் கலந்துறையுஞ் செந்
நீரார்[2] நதியிதிலே–தங்கள்
வஸ்திரந் தோய்த்த சுத்தர் சபையில்
வாழ்ந்து கீதம் பாடாய்–பாவி? – பாவம்

*– அருள்திரு. ஜி.சே. வேதநாயகம்*

**157. இராகம்: செஞ்சுருட்டி ஆதிதாளம்**

*பல்லவி*

**விலை மதியா ரத்தத்தாலே மீட்கப்பட்டீரே**

*சரணங்கள்*

1. உலையும் பொன் வெள்ளி உலோகத்தாலல்ல,–ரீ–ரீ–ரீ–ரீ
சிலுவையி லேசுபரன்– படும் வலு கொலையா லுதிரும் – விலை

2. நீருமக் குரிமை எதினியிலையே[3],–ரீ–ரீ–ரீ–ரீ
சீர்மண மகனுடைமை:–நீவிர் ஓர்ந்துணர்வது[4] கடமை – விலை

3. ஆகங்கள[5]வர்க்கு ஆலய மலவோ?–ரீ–ரீ–ரீ–ரீ
அசுத்தம் படலாகாதே, நன்மை வசிக்கும் தலமதாமே – விலை

---

1 முடிவு
2 நீர்நிறைந்த
3 ஏது–காரணம்
4 ஆராய்ந்து
5 சரீரங்கள்–உள்ளம்

4. ஆவியுந் தேவன் அகமது தானே–ரீ–ரீ–ரீ–ரீ
தேவதுதிக ளதிலே–எழச் செல்வீர் தினமு மிகவே – விலை

5. மனமது அவர்க்கு மாத்திரம் சொந்தம்,–ரீ–ரீ–ரீ–ரீ
பிளமுறு கேடறிவு–அதைப் பின் தொடர்வது இழிவு. – விலை

***– அருள்திரு. வி. மாசிலாமணி***

**158. இராகம்: காம்போதி ஆதிதாளம்**

*பல்லவி*

**எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கிக் கொள்வதற்**
கிப்புவியிலே உதித்தார்; அற்புதந்தானே.

*அனுபல்லவி*

மெய்ப்பரம் புவியும் தந்த தற்பரன் அனாதி பிதா
நற்புதல்வனான ஏசு நாத கிருபாகரனார். – எப்

*சரணங்கள்*

1. மட்டில்லாப் பொருள் அனைத்தும் திட்டமாகவே படைத்து
இட்டமாய் அனுக்கிரகித்த சிஷ்டிகன் தானே;
கட்டளையிட்ட கற்பனை விட்டொரு சர்ப்பத்தின் வாயில்
பட்டு நரகத்துக்காளாய்க் கெட்டழிந்த பேர் என்றாலும். – எப்

2. அச்சயன்[1] மோசேயைக் கொண்டன்றெச்சரித் தெழுதித் தந்த
உச்சித கற்பனை கடந் திச்சையினாலே,
துர்ச்சனப் பாசாசைக் கூடி மிச்சமாய்ப் பாவங்கள் செய்து
நிச்சயம் கெட்டுப் போனார்கள்; ரட்சிக்கக்கூடாதென்றாலும்.
–எப்

3. தாக்கிய பராபரன் உண்டாக்கிய அனந்த செல்வப்
பாக்கியங்கள் அனைத்தையும் போக்கடித்துமே,
யோக்கியம் தெய்வ புத்ர சிலாக்கியம் எல்லாம் இழந்து
பேய்க்கடிமை ஆட்கள் கேட்டை நீக்குதற் கேலாதென்றாலும்,
– எப்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

1 கடவுள்–தூயவர்

**159. இராகம்: பைரவி** **அடதாளசாப்பு**

**பல்லவி**

**வான இராச்சியம் வந்ததோ கோ கோ!**
மாந்தரே; தவம் செய்யும்; ஓகோ கோ!

**அனுபல்லவி**

ஆன சாட்சி, தியான சூட்சி[1], மெய்ஞ்
ஞான காட்சியர், தோன்றினார்; –வான

**சரணங்கள்**

1. மன்னவன் கிறிஸ்தாதிபன் வந்தார்,
வாகுறப் பவமே ஒழிந்திடவே குணப்படுவீர்களே;
என்னிலும் பெரியார் வலியார் அவர்
இந்நிலத்திடை மேவினார்; உயர் உன்னதக் கிருபை ஆழமே!
– வான

2. பிந்தி வந்தவர், முந்தி இருந்தவர்;
பேசரும் பொருளார், பரம்பர[2] நேசர், நம் கருணாம்பரர்,[3]
சுந்தரப் பரிபூரணர், காரணர்,
ஜோதிசொந்த அனாதி மைந்தன் இம்மாதிரந்தனில்[4] மேவினார்
– வான

3. அண்ணலார் பாத ரட்கையின் வாரையே
அவிழ்க்க, வாய்மையில்[5] எடுக்க, அல்லது சுமக்கப் பாத்திரன்
அல்ல நான்;
திண்ணம் என் முழுக்கோ ஜலத்தீர்த்தமே;
தீயினாலும் அரூபியாலும்[6] ஸ்நானமே அவர் ஈகுவார். –வான

4. வேதமார் பரிசேயர் சதுசேயரே,
வீம்புத் துட்டமுறு தீம்புக்கெட்டகுண பாம்புக்குட்டிவிரியன்களே
போதவே வரும் கோபத்துக்குத் தப்பிப்
போவதைத் திடமாய் உமக்கிது போதிவித்[7] தெவர் காட்டினார்?
– வான

---

1 உபாயம்
2 பரலோக
3 கடவுள்
4 பூமியில்
5 வலிமையில்
6 தூயஆவியாலும்
7 போதித்து

5. மரத்தின் வேர் அருகே முன் கோடாலியும்
வைத்திருக்குது, பத்திரத்துடன் எச்சரிக்க விடாதேயும்,
வரத்தில் நற்கனி தான் தருகாத்[1] தரு
வைத்திடக் கிட வெட்டி மிக்கழல் அக்கினிக் கிரையாக்குவார்
– வான

6. தூற்றுக்கூடை கரத்தில் இருக்குது
துறையினில் தமதுரிய நற்களம் அற விளக்கி, அறுதியிலே
தோற்றக் கோதுமை கேயத்தில்[2] சேர்த்துமே
தீயதுர்ப்பதர் ஆனதைத் தழலால் எரிப்பர் இந் நேரமே –வான

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**160. இராகம்: உசேனி** **ஆதிதாளம் (426)**

**பல்லவி**

**ஓ! மனந்திரும்பு, பாவத்தை விட்டோடவே விரும்பு;**

**அனுபல்லவி**

தாமதியாதே; நீ பிறந்த நாள் தொட்டு,
சாத்தான் செயும் பல போதனைக்குட்பட்டு
சாமளவும் பாவ ஆசையாலே கெட்டு;
தயங்கி மயங்கித் தியங்குவதையிட்டு,

சாபமும்–தேவ கோபமும்–மனத்
தாபமும்–உன்றன் பாவத்தினால் வரும் – ஓ! மனந்

**சரணங்கள்**

1. உன்றனிதயஞ் சீர்கேடு;–மறுபிறப்
புத்தமமாமதை நாடு;
இன்றிரட்சிப்பினைத் தேடு; பாவ மன்
ன்னிப்புக் கிரந்து மன்றாடு
இன்று தேவாவியின் சத்தத்தை நீ கேட்டு,
இருதய கடினத்தை விட்டுப் போட்டு,
சென்று மனஸ்தாபங் கொண்டுன் மனம், வாட்டு;

1 தராத 2 வீட்டில்

தேவகுமாரனைச் சேர்; சொல்லாதே சாட்டு;
சேவிப்பாய்; யேசைச் சேவிப்பாய்; என்றுஞ்
ஜீவிப்பாய்; வரும் ஆபத்துக்குத் தப்ப, – ஓ! மனந்

2. மறுபடியும் பிறந்து–இருதயம்
மாறி நலம்புரிந்து,
பொறுதி தயை சிறந்து–ரட்சிப்பைப்
போற்றி யுளந்திருந்து,
உறுதியுடன் தேவ சந்நிதி சேர்ந்து,
உன்மனந் திரும்புத லின்கனி யார்ந்து,
நெறியை விடாது முழுதும் உனை நேர்ந்து
நித்தமுந் தேவ நியமங்களைத் தேர்ந்து,
நீதியாய்–நின்று சாதியாய்–மனம்
பேதியாய்–ஆசீர் வாதம் பெறப் பாவி – ஓ! மனந்

*– S.S.J.*

**161. இராகம்: மலையாயி** **திரிசுரதாளம்**

*பல்லவி*

**ஓ! தாகம் மிகுந்தவரே, அமர்ந்த**
தண்ணீரண்டை வாரும். – ஓ!

1. ஏகன் நானுங்களையே அழைக்கும் என் தன்
இன்ப வாக்குத்தத்தமே நம்பி
வேகமாக ஓடி வாருமெனதிடம்,
வேண்டியதைத் தருவேன். – ஓ!

2. காசு பணமது, அற்றுலகந்தன்னில்
கஷ்டப்படுவோரே, விசு
வாசமாயென்னிடம் வந்து விலையின்றி
வாங்கியே சாப்பிடுமே. – ஓ!

3. பாரச் சுமையோடு பாரில் வருத்தங்கள்
பட்டு உழல்வோரே, வாரும்,
நேரே, உமக்கிளைப்பாறுதலாவியை
நேசமாய்த் தந்திடுவேன். – ஓ!

4. அப்பமல்லாத பொருளையும் திருப்தி
ஆகாத வஸ்துவையும்,–நம்பி
தப்பிதமாய்ப் பிரயாசத்தையும் பணம்
தன்னையுமேன் கெடுப்பீர்? – ஓ!

5. ஆவலாக உற்றுக் கேட்டு நீங்கள் நல
மானதைச் சாப்பிடமே, நோய்
மேவியே உங்களின் ஆத்துமங்கள் கொழுப்
பாகி மகிழ்ந்திடுமே, – ஓ!

6. கர்த்தரைக் கண்டடையத் தக்க காலத்தில்
கண்டிடுமே உடனே;–உந்தன்
அத்தன் சமீபமாக இருக்கும் போதே
ஆவலாய்க் கூப்பிடுமே. – ஓ!

*– வே. மாசிலாமணி*

**162. இராகம்: காமாசு** **அடதாளசாப்பு**

*பல்லவி*

**வா, பாவீ, மலைத்து[1] நில்லாதே, வா.**

*சரணங்கள்*

1. என்னிடத்தில் ஒரு நன்மையு மில்லையென்
றெண்ணித் திகையாதே;
உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே,
உள்ளபடி வாவேன். – வா

1 திகைத்து

2. உன்றனுக்காகவே நானேயடி பட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்;
சிந்திய என் திரு ரத்தத்தால் உன் பாவம்
தீர்த்து விட்டேன், பாவி, வா. – வா

3. கொடிய பாவத் தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ?
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்,
ஒன்றுக்கும் அஞ்சாதே, வா. – வா

4. விலக யாதொரு கதியில்லாதவன்
உலகை நம்பலாமோ?
சிலுவை பாவிக ளடைக்கலமல்லோ?
சீக்கிரம் ஓடி வாவேன். – வா

5. என்னிடத்தில் வரும் பாவிகளை ஒரு
பொழுதும் தள்ளேனே;
வன்னிய மேலோக வாழ்வை யருள்வேனே,
வாராயோ, பாவி? – வா

***– தேவசகாயம் உபாத்தியாயர்***

**163. இராகம்: கமாசு** **அடதாளசாப்பு**

**பல்லவி**

**வா; பாவி கர்த்தரின் அண்டைக்கு வா,**

**சரணங்கள்**

1. பாவியே, இன்னும் பயமின்றிப் பாவத்தில்
நிலைத்திருக்காதே; இப்போ
தாவியே ஜோதியருன்னை அழைக்கிறார்
தாமதஞ் செய்யாதே – வா

2. பாவநாசர் உனக்கென்று சிந்தின
ரத்தம் அதோ பாராய்?–உல
காசையை விட்டகன் றேசுவின்
பந்தியில் இக்ஷணமே சேராய்? – வா

3. ஆபத்துக்குந்த தேவ கோபத்துக்குந்
தப்பத் தீவிரமாயோடி வா;–உன்
பாவத்தின் சாபத்தை நீக்க வந்த
பரிசுத்தரின் அண்டைக்கு வா – வா

4. காலத்தை வீணாய்க் கழித்துவிட்டால்
இனி யெப்போ குணப்படுவாய்?–நீ
ஜாலம் பண்ணித் தேவ சாபத்தை
தேடாமல் இப்போ குணப்படுவாய் – வா

*– அருளானந்தம் பிரசங்கியார்*

**164. இராகம்: உசேனி** **ஆதிதாளம் (427)**

**பல்லவி**

**வாரும், மனந்திரும்பி வாரும்; கிறிஸ்துவிடம்**
சேரும்; திடமுடனே சேரும்.

**அனுபல்லவி**

ஆரும் வரலாம், நித்திய பேறும் பெறலாம்; வந்தோர்
ஆரையும் தள்ளிவிட்டார்; தாராளமா யெளியோர், – வா

**சரணங்கள்**

1. தெருக்கடோறு மலைந்த[1] தீயர்க்கு மிடமுண்டு;
சிதறி வேலி கடோறும் திரிந்தோரையும் பண்டு
உருக்கமுட னழைத்த திருக்கருணையுங் கண்டு
உள்ளநோய் துயரோடு மெள்ளத் தள்ளாடிக் கொண்டு – வா

2. தாழ்வோடமுது தியங்கும் நிர்ப்பந்தமும்
தம்பவச் சேனையால் தத்தளித்தோர் ஆரும்,
நாளும் வருங் கோபாக்கினைக்கு வெருவினோரும்[2],
நானே பாவியென்றோரும் நடுநடுங்கின பேரும்; – வா

---

1 மயங்கிய 2 அஞ்சினோர்

3. பதினோராம் தாசில்[1] வந்தாலும் உதறித் தள்ளார்
பரிதாபம் அன்பிரக்கம் திரு உள்ளத்திலுள்ளார்;
கதித்த மோட்சத்திற் பங்கு கள்ளனுக் கீந்த நல்லார்
கனிந்து வருவோர் தம்மைச் சினந்து நில்லென்று சொல்லார்–வா

**165. இராகம்: தோடி** **ரூபகதாளம் (428)**

**பல்லவி**

**வாரும், வாரும்; என தடி–வந்து சேரும்**

**அனுபல்லவி**

ஆரானாலும் துர்ப்பாவியன் ஆயினும்
அச்சம் இல்லாமலே, இக்ஷண மேவியே – வாரும்

**சரணங்கள்**

1. பாரம் சுமந்து தவிப்பவரே,–கன–பாடுகள் நிறைந்திருப்பவரே
ஆறுதல், தேறுதல் அளிக்கிறேன், என்று
அன்புடன் சொல்ல யான், பின்னும் தடை ஏது? – வாரும்

2. தாகம் மிகுந்தவரே, வாரும்; பதில்–தரவும் பணம் இன்றி வாரும்;
தாகம் தீர்த்துக் கொள்ளும் தடை இல்லாமலே
சந்தோஷமே பெற இந்தத் தருணமே – வாரும்

3. தீவி[2]திராட்சரசமும் கொளும்–மிக–திருப்திசெய்யும் அமுதும் கோளும்
தாவீதின் நிச்சயக்கிருபை யாவையும்
சந்தத உடன் படிக்கையே செய்வோம் – வாரும்

4. ஜெபதபத்தோடு சேரவாரும்–வெகு–திடநம்பிக்கையோ டேகிவாரும்
உவமை ஏதும் இலாத தயாள நல்
உருக்க மேவிய கிறிஸ்து ஏசு நான் – வாரும்

*– ஈ.ஞ.*

---

1 வேளை 2 இனிமையான

**166. இராகம்: காம்போதி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**உலகில் பவப் பாரத்தால் சோரும்–இளைப்**
பூர்ந்த நரரே[1], வந்து சேரும்.

*அனுபல்லவி*

அலைசடிப் பட்டவரே, வாரும்,–என்றன்
ஆறுதலால் அவற்றைத் தீரும்;–பொல்லா – உல

**சரணங்கள்**

1. பாவி என்றெண்ணித் திகைப் போரும்,–என்றன்
பாவம் தீராதென் றிருப்போரும்,
ஆவலாய் ஓடி வந்து சேரும்;–நான்
ஆகாமியர்க்காக வந்த தோரும்[2];–பொல்லா – உல

2. இளமை என்றே எண்ணி, நில்லாதே;–சாவும்
இளமை என்று சொல்லிச் செல்லாதே?
வளமாய் வருவதைத் தள்ளாதே;–கெட்ட
வழக்க மிதையே கைக் கொள்ளாதே.–பொல்லா – உல

3. வாலிபப் பிராய மிதில் நாளும்–இன்ப
வாழ்வு சுகிக்க வென்று மாளும்
சீலரே, இன்றென் னுரை கேளும்;–அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும்,–பொல்லா – உல

4. காலம் கடந்த கிழவோரே,–வீணாய்க்
காலம் கழித்தே உழல்வோரே,
காலமே தேட மறந்தாரே; உங்கள்
கவலையைத் தீர்ப்பேன், அறிவீரே.–பொல்லா – உல

*– ஏசுதாசன் சவரிராயன்*

---

1 மானிடர் 2 நினையும்

**167. இராகம்: அங்குஸ்தானி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**இன்றைக்கே மனந்திரும்புவாய்,**
இல்லையானால் கெடுவாய்.

**அனுபல்லவி**

பின்னைக் கென்று நீ பின்னிடுவது
பிசாசின் தந்திரப் பேச்சென்றே நினை. – இன்

**சரணங்கள்**

1. நீதி வெட்டக் கை ஓங்குதே, நீடிய சாந்தமோ தாங்குதே,
மாதயவோடு இயேசு இரட்சகர் வருந்தி, பாவி, உனை
அழைக்கிறார். – இன்

2. நாளை பிழைப்பத சாத்தியம், நரகப்பாடுன் சம்பாத்தியம்;
வேளை இதுவே, பரிசுத்தாவியும் வெகுவாய்த் தூண்டப் பிகு
செய்யாதே. – இன்

3. அந்தியக்[1] காலம் பார்க்கலாம், அதுவரை தனம் சேர்க்கலாம்.
முந்தி போகாதெனச் சிந்தை கொள்வது மோசடியாய் முடியும்,
முடியும்.– இன்

***– திரு. ஆபிரகாம் அல்லின், திண்டுக்கல்.***

**168. இராகம்: கமாசு** **ஆதிதாளம்**

***பல்லவி***

**சீர் அடை தருணம் இதறி, மனமே;**
சிதைவு படும் முனமே
சீர் அடை; தருணம் இதறி, மனமே;

***அனுபல்லவி***

பார் உடலொடு வலு போர் இடும் அலகை[2]யும்–(ரீ)
ஆரவாரம் எடுத் தழிக்கும் உனை க்ஷணத்தில். – சீர்

---

1 வயோதிப 2 பேய்

*சரணங்கள்*

1. நொடியதில் அழிவடை புடவியில்[1] நணுகுதல் நலமோ,–
பேதாய்?
நோய் துயர் உறும் இது? மேலுலகிற்கிணை பங்கோ?
கடினப்படுத்து வலு மறம் அது நிலை அற–(ரீ)
காதலோடு நல் வேத நெறி தொடர்ந்து. – சீர்

2. பொருள் அதில்உறு விருப்பதி சிதைவுளதென அறியாய்?
–ஓகோ
போர் இடு பல பல தீதுகளுக் கது வேரே;
மருளைத் தவிர்க்கும் இறை அருளைக் கருதி நனி–(ரீ)
மாசிலாத தெய் வீகன் அடி பணிந்து. – சீர்

***– ஜாண் பால்மர்***

**169. இராகம்: இந்துஸ்தானி**

*பல்லவி*

**குணப்படு, பாவி; தேவ கோபம் வரும் மேவி–இப்போ.**

*அனுபல்லவி*

கணப்பொழுதினில் காயம்[2] மறைந்துபோம்;
காலமிருக்கையில் சீலமதாக நீ. – குணப்படு

*சரணங்கள்*

1. வேதத்தில் உன்தனைப் பார்;–அந்த
வேத விதிப்படி நேர்
நீதியைச் செய்தவனார்?–தூய
நின்மலன் வாக்கதோ கூர்;
தீதுறும் பாவியின் தீமையறிந்துகொள்;
நாதன் கிறிஸ்து இப்போதே உரைக்கிறார். – குணப்

---

1 பூமி 2 உடல்

2. துக்கமடையாயோ?–பாவி
துயரமாகாயோ?
மிக்கப் புலம்பாயோ?–மனம்
மெலிந்துருகாயோ?
இக்கணம் பாவக் கசப்பை யுணராயோ?
தக்க அருமறைப் பக்கந் தொடராயோ? – குணப்

3. தாவீ தரசனைப் போல்;–தன்னைத்
தாழ்த்தும் மனாசேயைப் போல்,
பாவி மனுஷியைப் போல்,–மனம்
பதைத்த பேதுருபோல்,
தேவனுக்கேற்காத தீமைசெய்தேனென்று
கூவிப் புலம்பு நல் ஆவியின் சொற்படி. – குணப்

4. உன்னை நீ நம்பாதே; இவ்
வுலகையும் நம்பாதே;
பொன்னை நீ நம்பாதே;–எப்
பொருளையும் நம்பாதே;
தன்னைப் பலியிட்டுத் தரணி மீட்டவர்
நின்னையும் ரட்சிப்பார், அனைவரைப்பற்று – குணப்

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**170. இராகம்: கல்யாணி** **ஆதிதாளம் (429)**

**பல்லவி**

**எதற்காய் அஞ்சுகின்றனை, பாவி? மனுவேல் நான் இருக்க**
எதற்காய் அஞ்சுகின்றனை; பாவி

**அனுபல்லவி**

சதைக்கவும் பேய்ச் சிரத்தைச்
சிதைக்கவும், ஜீவ வித்தை
விதைக்கவும், பவம் அறப்
புதைக்கவும், விதம் உண்டிங் – எதற்

**சரணங்கள்**

1. பண்டுனது முன்னோர்கள்
கொண்ட தீவினை புவி மேலே–பரந்தே இப்பூ
தண்டனைக்குள் அமைந்த தாலே–அவரை மீட்க
விண்டல ஸ்திதி[1] விட்டிம்
மண்டலத் தினில் ஏழைபோல–எழுந்த வந்தேன்
அண்டர்க[2] ளோடெனது
தொண்டர் களும் களிக்கச் சாலே–எதிர்த்து வந்த
வண்ட அலகை[3] யதின் மண்டை உடைய வெற்றி
கொண்டவல்ல அகண்டா கண்டன் உனக்கிருக்க – எதற்

2. கேட்டின் வழி விட்டு விண்
நாட்டின் நெறியைத் தொடர்ந்தேக,–செல்லும் முறையைக்
காட்டி, உரிமை பா
ராட்டி, பவத்தின் பலியாக மரித்த தேவ
ஆட்டுக்குட்டி நான் அன்றோ?
மீட்டுயிர்த் ததி ஜெயமாக–வென்று பரம
வீட்டில் இருப்பிடங்கள்
நாட்டித் தினுசு தினிசாக–வைத்திருக்கையில்
வாட்டம் அடையவே திண்டாட்டமேன்? உனை ஏற்க
மாட்டேனோ? யாரைத் தள்ளிப்போட்டேன் அண்டினபேரில்?
– எதற்

***– ஜாண் பால்மர்***

**171. இராகம்: கௌசிகை ஆதிதாளம்**

***பல்லவி***

**ஓகோ! பாவத்தினைவிட் டோடாயோ?**
உள்ளமே, ஏசு அன்பை நாடாயோ?

---

1 மேன்மை 2 வானோர் 3 பேய்

***சரணங்கள்***

1. மா கிருபையாக, ஏகன் அன்பை?
வந்ததிலையோ பூவில் உனக்காக? – ஓகோ!

2. நாற்பது நாளாய்த் தீப்பசிக் காளாய்
நாதன் உன் பொருட்டிருந்தார், கேளாய்? – ஓகோ!

3. யூதர்கள் வைய[1], வேதனை செய்ய,
உன் பவம் செய்த தவர் உளம் நைய[2]. – ஓகோ!

4. சிலுவையில் இறுக்க, உலகரும் நொறுக்க;
செய்த துன் பவம் மேசியா இறக்க. – ஓகோ!

5. அலகை[3] உன் மீது பல வகைத் தீது
ஆவல் உடன் செய்வதால் புவி மீது. – ஓகோ!

6. ஐயோ! என் மனமே, வையகம் வனமே;
அழியா உலகில் அன்புற் றனுதினமே. – ஓகோ!

***– ஜாண் பால்மர்***

**172. இராகம்: கௌசிகை ஆதிதாளம்**

***பல்லவி***

**மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ?–மோட்ச**
வாழ்வைத் தருவேன், இது பாராயோ?

***சரணங்கள்***

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே,–பாவ
அழுக்கை நீக்கி யருள் கொடுப்பேனே – மகனே

2. உன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே–அதை
உண்மையாய் அகற்ற யான் மரித்தேனே. – மகனே

---

1 ஏச 2 வருத்த 3 பேய்–பிசாசு

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ?–நித்ய
பரகதி[1] வாழ்வை இன்றே தேடாயோ? – மகனே

4. உலக வாழ்வினை விட்டகல்வாயே,–மகா
உவப்பாய்க் கதி[2] ஈவேன்; மகிழ்வாயே. – மகனே

5. உன்றன் ஆத்துமத்தை நீ படைப்பாயே,–அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே. – மகனே

*– ச. யோசேப்பு*

**173. இராகம்: செஞ்சுருட்டி ஆதிதாளம்**

*பல்லவி*

**பாவி, இன்றே திரும்பாயோ?–நேச**
ஆவியின் சத்தம் கேளாயோ?

**அனுபல்லவி**

மேவி தயை நிரம்பி, ஏவி உனை விரும்பிக்
கூவி அழைக்கையிலே தாவி யேசுவை நோக்கி. – பாவி

*சரணங்கள்*

1. பாவம் தொடர்ந்து செல்லுமே;–பாவ
சாபம் அடர்ந்து கொல்லுமே;–உனின்ப
லாபம் எல்லாமே சாபம்; காலமிதுவே காலம்;
தாபம்[3] உளவுன் யேசு மா பரிதாபம் கண்டு. – பாவி

2. எத்தனை போதனை பெற்றாய்,–ஐயையோ!
சுத்தமாய்ச் சாதனை அற்றாய்,–என்றாலும்
அத்தனை பாவத்தையும் உத்தமமாய் வெறுத்து,
அத்தனே, தத்தம் செய்தேன், நித்தமும் காருமென்று. – பாவி

---

1 மோட்சம் 2 மோட்சம் 3 தாகம்

3. கல்வாரியில் தொங்கினோர் யார்?–உனக்
கல்லோ நேசர் ஏங்கினோர் பார்!–இன்னும்
பொல்லா மனதுடனே கல்போல் கடினமாகிச்
செல்வோரையும் நிந்தித்து எல்லாக்கேட்டுக்குள்ளான. – பாவி

4. நிலை யின்றலை கின்றோரே,–ரத்த
விலை மதியாமல் சென்றோரே,–போதும்;
மலையாமல்[1] யேசுவிடம் தொலையாத கவலை சொல்லி,
உலையா, நம்பிக்கை வைத்து நிலையான ரட்சைபெற. – பாவி

***– ஜே.டி. சாமுவேல்***

**174. இராகம்: சேனாவதி ரூபகதாளம்**

**பல்லவி**

**பாவியே, பாவியில் பாவியே, உனில் அன்புண்டோ? சொல்**
பாவியே, பாவியில் பாவியே.

**அனுபல்லவி**

கூவியே, கர்த்தரு ரைக்கிறார்; கூர்ந்துகேள், உள்ளிந்திரியமே
பாவியே, என்கிறார் இயேசு பாவியா முனையே பார்த்து –பாவி

**சரணங்கள்**

1. பாவத்தால் கட்டுண்டிருந்தாயே – பராபரனுடை
கோபத்தால் காயமுங் கொண்டாயே;
தேவனை விட்டகன்றாய்; பாவ விருள் அடைந்தாய்;
பாவனையாக வுன்னையும் பவுசாக வைத்தவர் நானே. –பாவி

2. தாயுட அன்பு மாறுமோ? – தன்னருமைப் பிள்ளையைத்
தயவுடன் அழைக்க மாட்டாரோ?
தாயுமே மறந்திட்டாலும், தயவை நான் மறப்பதில்லை;
நேயமே யுனை யோர்க்காலும் நினையாதே யிருப்பதில்லை
–பாவி

[1] திகைக்காமல்

3. என்னுடைய அன்பு மாறாததே – ஆகாய உயரமும்
என்னன்பை எட்டி முடியாதே,
பின்னுங்கேள்; பாதாளத்திலும் அன்பினுக்காழம் பெரியது;
எண்ணுமுன் சாவினுறுதிபோல் என்னுடை அன்பு முறுதியே,
–பாவி

4. கிருபையின் கிரியை முடியவே – அதிசீக்கிரமாகவே
பெருமையாய் மகிமை காண்பையே
விருத்தவா சனத்திலேயே வீற்றுமே யிருப்பதற்கு
கர்த்தராம் என்னோடே நீ கனத்த பங்காளியாவாய் –பாவி

***– பாளையங்கோட்டை பாடல்.***

**175. இராகம்: கமாஸ் ஆதிதாளம்**

*பல்லவி*

**இயேசு நாயகனைத் துதி செய், செய்**
செய், செய், செய், ஏசு நாயகனை.

*சரணங்கள்*

1. பாசந் தனிலுழலும் பேய் மதியே ஐயன்
பாதத்தை அன்றி உனக்கார் கதியே?
பூசும் மாங்கிஷ[1] மொடு புவி நிதியே வெறும்
பொய், பொய், பொய், பொய், பொய். – இயேசு

2. ஆணுவ மெனும் பேயினை முடுக்கும், பர
மானந்த சுககிரக[2] பதம் கொடுக்கும்,
வேணஅபீஷ்டங்கள்[3] வந்தடுக்கும், இது
மெய், மெய், மெய், மெய், மெய். – இயேசு

---

1 மாமிசம் 2 வீடு–மோட்சம் 3 அதிகம் விரும்பப்பட்டவை

3. தகை பெறும் விண்டலந் தனிலுதயம் செயும்
சசி[1], கதிர்,[2] மீன் முதல் பொருளெதையும்
வகையுடன் அருள் கடவுளை இருதயந்தனில்
வை, வை, வை, வை, வை. – இயேசு

4. நாதபூத பௌதீக[3] ஸ்தாபகனை, வேத
நாவலர் மீதிலென்றும் ஞாபகனை
ஓதரிதான சர்வ வியாபகனைப் பணிந்து
உய், உய், உய், உய், உய். – இயேசு

***– தேவவரம் முன்ஷி***

**176. இராகம்: முகாரி** **செம்படைதாளம்**

*பல்லவி*

**தீயன் ஆயினேன், ஐயா; எளியேன் உற்ற**
தீவினை அனைத்தும் தீரும்;
தேவரீர் மேலே என் பாரம்,
தீயன் ஆயினேன், ஐயா.

*அனுபல்லவி*

மாயவலை வீசுவலு பேயின் வினை தீர,
நேயமுடனே உறுசகாயனாய் எமக்கென்றிங்கு
நிச்சயித்தெழுந்த எங்கள்
அச்சயா[4] திருக்குமாரா. – தீய

*சரணங்கள்*

1. நன்மை செய்யவே நான் நினைத்தாலும், என்
தன்மை வேறதாய்ப் பின்னம் ஆகுமே;
என்ன என்தன் நீதி கந்தை
அன்ன அருவருப் பாமே;
எத்தனை ஆனாலும் உன்தன்
சித்தம் வைத்தனுக்கிரகிப்பாய். – தீய

---

1 சந்திரன்
2 சூரியன்
3 உலகம்
4 கடவுளே

2. பாவம் மீறி என் ஆவி தள்ளாடி நற்
சீவ பாதையைத் தாவி ஓடியே,
ஆவலாய் அழிவுறும் துர்ச்
சாவின் வழியே தொடர்ந்து
அக்கிரமச் செய்கைகளில்
சிக்கினேன்; ஐயோ, உன் தஞ்சம்! – தீய

3. தீது செய்பவன் தேவன் முன்னே உத்ர
வாதியாய் உறு நீதம் உண்டென,
போதம்[1] உற வேத நெறி
ஓதிய ஏசு நாதா, உன்
புண்ணியத்தால் என்னை உய்யப்
பண்ணிடக் கிருபை செய்வாய். – தீய

***– ஜாண் பால்மர்***

**177. இராகம்: சுருட்டி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**பாவி எனைச் சற்றே கண்பாரும், ஸ்வாமி**

**அனுபல்லவி**

தேவதிருப் பாலனான ஜீவனின் மன்னாவே
சிந்தை விசாலா, மனோலா, குணாலா
தேவசுலாவு[2] திவ்ய நேசா, ஏசு சர்வேசா –பாவி

**சரணங்கள்**

1. இந்த லோக வாழ்வை நாடி, என்தன் மனம் வாடுதே
தந்திரப் பசாசது நிர்பந்தம் உறச் சாடுதே!
இடுக்கண் மிகுதுயர் படுத்துதெனையே;
திடத்த உன துயிர் விடுத்ததிலையோ? –பாவி

---

1 அறிவு 2 ஒளி

2. பந்தினம்[1] திரண்டு கூடி, கொந்தளித்துப் பேசுதே;
அந்தியும் சந்தியுமாக நிந்தனை செய் தேசுதே;
பினும் உடல் அடமோ டெனோடு சமர்[2] இடுதே;
நினைவு தவறிடவும் மனது பதறுதே —பாவி

3. பத்துரை[3] மறுத்து பேயின் எத்தினில் போனேனே;
குத்திரத்[4] துரோகத்தினால் சத்துருவானேனே;
பதைக்க மனமது கொதிக்கு துலகொடு
கதிக்க அலகை[5]யும் வதைக்கு தையோ? —பாவி

*— வேதநாயகம் சாஸ்திரியார்*

**178. இராகம்: நீலாம்புரி** **ஆதிதாளம்**

**திபதை—கண்ணிகள்**

**ஐயோ, நான் ஒருபாவ ஜென்மி ஆனேனே;**
ஆண்டு ரட்சித் தருள்வாய்,—பரப்பொருளே!
உய்யும்படி[6], தெய்வமே உன்னை அல்லால் எனக்கோர்
ஒதுக்கிட முண்டோ வேறே?—பரப்பொருளே!

2. நல் வரமாய்ப் பெற்ற நீதி, சுசி[7], பாக்கியம்
ஞானம் எலாம் இழந்து—பரப்பொருளே!
சொல்ல வெட்கம் அநீதி—சுசிகேடு, நிர்பாக்கியம்,
துர்ப்புத்தியும் அடைந்தேன், —பரப்பொருளே!

3. மாட்சி உறும் சிங்கார வனமாம் என துளத்தை
மங்கு[8] கடாக்கி னேனே,—பரப்பொருளே!
ஆட்சி கொளும் உன் சுத்த ஆலயமாம் என் நெஞ்சை
அலகை[9]க் கிடம் ஆக்கினேன்,—பரப்பொருளே!

---

1 உறவினர்
2 போர்
3 பத்துக் கற்பனை
4 வஞ்சகம்
5 பேய்
6 பிழைக்கும்படி
7 தூய்மை
8 வாடிய
9 பேய்

4. உன்னை முழுப் பெலத்தால் நேசியாமலே நெஞ்சம்
உரங் கொண்ட பாவி ஆனேன்;–பரப்பொருளே!
என்னை நிகராக என் பிறனை நேசியாமல் நான்
இகலுற்[1] றிருந்தேனையா,–பரப்பொருளே!

5. துப்புர வாம் சுத்தக் கண்ணனே, உன் முன் இன்னும்
துணிகர மாய் நடந்து,–பரப்பொருளே!
இப்படி ஜென்ம கன்ம[2] பாவத்தால் கேடடைந்த
ஏழைப் பாவிக் கிரங்காய்,–பரப்பொருளே!

***– ஜாண் பால்மர்***

**179. இராகம்: வசந்தபைரவி** **ஆதிதாளம்**

**கண்ணிகள்**

**பாவியாம் எனை மேவிப்பார், ஐயா;–யேசுநாதா, ஸ்வாமி;**
பட்சமாக என் பாவந் தீர் ஐயா.

2. தேவத்ரோகி பாவி நான் அன்றோ,–யேசுநாதா, ஸ்வாமி,
சீர்பதம் துணையன்றி வேறுண்டோ?

3. தீவினையுறு சாவு மேவிற்றே,–யேசுநாதா, ஸ்வாமி;
சித்தம் வைத்திரட்சித்தாள் ஏழையே.

4. சஞ்சல மிகுந்தஞ்சல் ஆயினேன்,–யேசுநாதா, ஸ்வாமி;
தங்கும் உனை விட்டெங்கே ஏகுவேன்?

5. மன்னுயிர்க் கெனத் தன்னுயிர் விட்ட,–யேசுநாதா, ஸ்வாமி;
வந்தெனது நிர்ப்பந்தம் பார், ஐயா.

6. மனது, வாக்கு, வினைகளில் எல்லாம்,–யேசுநாதா, ஸ்வாமி;
மாசு[3]ளோனாய்க் கூசினேன், ஐயா.

7. என்தன் நீதி ஓர் கந்தை அல்லவோ,–யேசுநாதா, ஸ்வாமி;
என்செய்வேனே? மறு தஞ்சம் இல்லையே.

---

1 பகைகொண்டு 2 தீவினை 3 குற்றம்

8. அலகை[1]யோடெனை உலகம் ஏய்க்குமே,–யேசுநாதா, ஸ்வாமி;
ஆதரவில்லை, பாதுகா, ஐயா.

*– ஜாண் பால்மர்*

**180. இராகம்: ஆகிரி** **அடதாளசாப்பு (430)**

*புலம்பல்*

**ஆதி பராபரனின் சுதனே, கிறிஸ்தேசு நாதா,–எனக்**
காகவே இத்தனை பாடுகள் பட்டீரோ, யேசுநாதா?
தீதணுகாத பராபரன் சேய் அல்லோ, யேசுநாதா?–நீர்
செய்த குற்றம் அணுவாகிலும் தான் உண்டோ, யேசுநாதா?
பாதகன் நான் அல்லோ கட்டுண்ண வேண்டிய தேசுநாதா?
–சற்றும்

பாவம் இல்லாத நீர் கட்டுண்ணப் பட்டதேன், யேசுநாதா?
வாதை எனக்கு வரத்தகும் அல்லவோ, யேசுநாதா?–சற்றும்
மாசணுகாத நீர் வாதைக்குள் ஆனீரோ, யேசுநாதா?

2. மத்யஸ்தனாய் எனக்காக வந்தீர் அல்லோ, யேசுநாதா?–இந்த
வஞ்சகன் சொந்தப் பிணையாளி நீர் அல்லோ, யேசுநாதா?
எத்தனை பாதகம் செய்தவனாகிலும், யேசுநாதா?–எனை
ரட்சிப்பதுன் கடன் அல்லாமல், ஆர் கடன், யேசுநாதா?
சத்துரு நான் என் றறிந்தும் இருந்தீரே, யேசுநாதா?–கெட்ட
சண்டாளன் சிந்தையை முற்றும் அறிவீரே, யேசுநாதா?
சித்தம் இரங்கி, எனை முகம் பார்க்கவே, யேசுநாதா?–என்னைத்
தேடி, வலிய வரத் தயவானீரோ, யேசுநாதா?

3. பத்தம் இல்லாததுரோகி நான் அல்லவோ, யேசுநாதா?–உமைப்
பாடுபடுத்தின பாதகன் நான் அல்லோ, யேசுநாதா?
பெத்தரிக்கமான பெருமையினாலே நான், யேசுநாதா?–கெட்ட
பேயைச் சிநேகித்து, இக்கோலம் ஆகினேன், யேசுநாதா?

---

1 பேய்

புத்தி யில்லா மிருகம்போல் ஆயினேன், யேசுநாதா?–மனம்
போன வழியெல்லாம் போய் அலைந்தேங்கினேன், யேசுநாதா!
சித்தம் வைத்தென் பேரில் திருக்கடைக் கண்ணோக்கி, யேசு
நாதா!–உன்தன்
சீர்பதம் சாஸ்வதம் சேவை புரியச்செய், யேசுநாதா?

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**181. இராகம்: தன்யாசி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!**
எளியன்மேல் இரங்கையனே

*அனுபல்லவி*

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே;
நிலைவரம் எனில் இல்லை! நீ என் தாபரமே – எத்

*சரணங்கள்*

1. பந்தம்[1] உன்மேல் எனக்கில்லை என்பேனோ?
பணிந்திடல் ஒழிவேனோ?
சுத்தமுறுங் கரம் கால்கள், விலாவினில்
தோன்றுது காயங்கள், தூய சிநேகா – எத்

2. என்றன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடா திருக்கையிலே,
உன் தன் மிகுங் கிருபை, ஓ! மிகவும் பெரிதே
உத்தம மனமுடையோய்; எனை ஆளும் – எத்

3. ஆயங்[2] கொள்வோன்போல், பாவ ஸ்திரீபோல்,
அருகிலிருந்த கள்ளன்போல்,
நேயமாய் உன் சரண் சரண் என வணங்கினேன்;
நீ எனக்காகவே மரித்தனை, பரனே – எத்

---

1 உறவு 2 வரி

4. கெட்டமகன்போல் துட்டனாய் அலைந்தேன்,
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்;
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அல நான்,
எனை ரட்சித்திடல் உன்தன் நிமித்தமே, அப்பனே – எத்

***– அருள்திரு. த. பலவேந்திரம்***

**182. இராகம்: மோகனம் அடதாளசாப்பு**

***பல்லவி***

**பாவியாகவே வாறேன்;[1] பாவம் போக்கும்**
பலியாம் என் யேசுவே, வாறேன்.

***சரணங்கள்***

1. பாவக்கறை போமோ என் பாடாய்? உன் பாடாலன்றிப்
போவதில்லை என்றே பொல்லாத பாவியே நான் –பாவி

2. நீ வா, உன் பாவம் என்னால் நீங்கும் என்று சொன்னீரே;
தேவா, உன் வாக்கை நம்பி, சீர்கேடன் நீசனும் நான் –பாவி

3. பேய்மருள் உலகுடல் பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு போரில் அயர்ச்சியாய் நான் –பாவி

4. ஜீவ செல்வ ஞான சீல சுகங்கள் அற்றேன்,
தாவென்று வேண்டிய சாவில் சஞ்சரித்த நான் –பாவி

5. துன்பங்கள் நீக்கி உன்னைத் தூக்கி அணைப்பேன் என்றீர்;
இன்ப வாக்குத்தத்தத்தை இன்றைக்கே நம்பியே நான் –பாவி

6. உன்னைச் சேர ஒட்டாமல் ஊன்றிய தடை யாவும்
உன்னன்பால் நீங்கி நல் உயிர் அடைந்தோங்கவே நான் –பாவி

***– அருள்திரு. ஈ. வெப்***

---

1 வருகின்றேன்

**183. இராகம்: காம்போதி** **அடந்தைதாளம்**

***திபதை – கண்ணிகள்***

**திருமுகத் தொளிவற்று; பெருவினைகளில் உற்று**
சீர்கெட்ட பாவி ஆனேன்;–நான்
ஒரு முகமாய் உனதிடம் மனந்திரும்பிட,
ஊக்கம் அருள், பரனே.

2. துரிச்சையினால் என் அசுத்தம் நிறைந்து நல்
சோபிதம் நான் இழந்தேன்;–பேய்ப்
பரீட்சையினாலும் மயக்கம் அடையும் இப்
பாவிக் கிரங் கையனே.

3. பாதகர் மீதில் பரிதபியாமலும்,
பாவம் பெறாமலும் நீ–சுத்த
நீதியை நோக்கில், உனது சமூகத்தில்
நிற்பவர் ஆர், துய்யனே?

4. தன் புண்ணி யத்தால் எவனும் மன்னிப்புறத்
தக்கவன் இல்லை மெய்யாய்; எந்தை
உன் தயையால் உன் திருச்சுதன் மூலமாய்
உண்டு பொறுப் பெனக்கே.

5. மண்ணையே நோக்கி உழன்று தவிக்கும் என்
வஞ்சக நெஞ்சதனை–நேராய்
விண்ணையே நோக்கிடப் பண், இறைவா; உனை
வேண்டி மன்றாடுகின்றேன்.

6. மாறுபாடான இவ் வேழைக்கிரங்கி நீ
மன்னிப்பருள் வதன்றி,–எனக்
காறுதலாக உனது நல் ஆவியை
அனுக்கிரகித்தாள், பரனே.

***– ஜாண் பால்மர்***

**184. இராகம்: முகாரி** **அடதாளசாப்பு**

*பல்லவி*

**ஆரும் துணை இல்லையே, எனக்**
காதியாம்[1] திருப்பாலா;–உன்தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவாய், யேசுநாதா.

*அனுபல்லவி*

சீர் உலாவு பூங்காவில் ஓர் கனி
தின்ற பாதகம் மாற்றவே,
சிலுவை மீதினில் உயிர்விடும்
தேவனே, என் சுவாமி. – ஆரும்

*சரணங்கள்*

1. முந்து மானிடர் தந்த தீவினை முழுவதும் அறவேண்டியே,
முள்முடியுடன் குருசில் ஏறிய முன்னவா, கிருபை கூர்வையே;
சிந்தும் உன் உதிரத்தில் என் வினை தீர்த்திரட்சியும், ஐயனே;
தீயபாவி எனக்கு வேறொரு செயலிடம் துணை இல்லையே!
– ஆரும்

2. தந்தை தாயரும், மைந்தர் மாதரும் சகலரும் உதவார்களே;
சாகும்நாளதில் நீ அலால் எனைத் தாங்குவார்களும்
உண்டுமோ?
சொந்தம் நீ எனக்கன்றி, வேறொரு சொந்தமானவர் இல்லையே,
சுற்றமும், பொருள் அத்தமும்[2] முழபத்தமே,[3] என் தத்தனே!
– ஆரும்

3. கள்ளனாயினும் வெள்ளனாயினும்[4] பிள்ளை நான் உனக்
கல்லவோ?
கர்த்தனே, வலப் பக்கமேவிய கள்ளனுக் கருள் செய்தையே;
தள்ளி என்னைவிடாமல் உன்னடி தந்து காத்தருள், அப்பனே.
தயவாய் ஒரு குருசில் ஏறிய சருவ ஜீவ தயா பரா. – ஆரும்

---

1 முன்னவன்
2 செல்வமும்
3 முழு அபத்தமே
4 வெண்ணிறத்தவன்

4. நன்றி அற்றவனாகிலும் எனைக் கொன்று போடுவதாகுமோ?
நட்டமே படும் கெட்ட மைந்தனின் கிட்ட ஓடினதில்லையோ?
கொன்றவர்க் கருள் செய்யும் என்று பிதாவை நோக்கிய
கொற்றவா,[1]
குற்றம் ஏது செய்தாலும் நீ, எனைப் பெற்றவா,
பொறுத்தாள்வையே. - ஆரும்

5. பத்தியேதும் இலாது மாய சுகத்தை நாடிய பித்தனாய்ப்
பாழிலே என்றன் நாள் எலாங் கெடுத் தேழையாகினேன்,
என்செய்வேன்?
சத்ருவான பிசாசினால் வரும் தந்திரம் கொடிதல்லவோ?
தஞ்சம் அற்றவன் ஆகினேன், உன தஞ்சல்[2] கூறும் அனாதியே.
- ஆரும்

6. அறிவிலாதொரு மிருகமாக நான் அலைந்த பாதகன் ஆயினும்,
அருமை ரட்சகனே, திரு மனம் உருகுமே; மிக உருகுமே,
மறுதலித்த பேதுருவைக் கைவிட மனது வந்ததும் உண்டுமோ?
மகதலா மரியாளின் மேல் அருள் வைத்தவா உனின் சித்தமே
- ஆரும்

***- வேதநாயகம் சாஸ்திரியார்***

**185. இராகம்: மலையாமி** **திரிசுரதாளம்**

***பல்லவி***

**ஐயையா, நான் பாவி,-என்னை - ஆளும் தயாபரனே,**

***சரணங்கள்***

1. பொய்யாம் உலக உல்லாசாத்தினால்
மனம் போனவழி நடந்தேன்;-ஏ
சையா, அபயம்! அபயம்! இரங்கும்,
மேசையா, என் தாதா[3]வே. - ஐயையா

1 அரசனே 2 அஞ்சாதே என்று 3 தந்தை

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள்;
எத்தனை தீதுகளோ?–என
அத்தனே? என் பிழை அத்தனையும்
பொறுத்தாண்டருளும், கோவே. – ஐயையா

3. வஞ்சகமோ, கரவோ, கபடோ,
மாய்மாலமோ, ரண்டகமோ?–மனச்
சஞ்சலம் நீக்கி எனக்கருள் செய்யும்,
சமஸ்த[1] நன்மைக் கடலே. – ஐயையா

4. பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும்,
பொறாமையும், ஆணவமும்–விட்
டுய்யும்படி அருள் செய்யும், அனாதி
ஓர் ஏக திரித்துவனே. – ஐயையா

5. உன்னை எல்லாத்திலும் பார்க்கச்
சிநேகித் துனதடியார்களையும்,–நான்
என்னைச் சிநேகிக்கிறாற் போல்
சிநேகிக்க ஏவும் பராபரனே – ஐயையா

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**186. இராகம்: பைரவி** **திரிசுரதாளம்**

***பல்லவி***

**இரங்கும் இரங்கும், கருணைவாரி,**
ஏசு ராசனே,–பவ–நாச–நேசனே

***சரணங்கள்***

1. திரம் கொண்டாவி வரங்கொண்டுய்யச்
சிறுமை பார், ஐயா;–ஏழை–வறுமை தீர், ஐயா. – இர

2. அடியன் பாவக் கடி[2] விஷத்தால்
அயர்ந்து போகின்றேன்;–மிகப்–பயந்து சாகின்றேன். – இர

1 அனைத்து 2 பேய்

3. தீமை அன்றி வாய்மை செய்யத்
தெரிகிலேன், ஐயா,–தெரிவைப்[1]–புரிகிலேன், ஐயா. – இர

4. பாவி ஏற்றும் கவி மன்றாட்டைப்
பரிந்து கேள், ஐயா;–தயை–புரிந்து மீள், ஐயா. – இர

***– அருள்திரு. அ. வேதக்கண்***

**187. இராகம்: பந்துவராளி** **ஆதிதாளம்** (431)

**பல்லவி**

**வேதா; தயை நிறை தாதா[2],–ஏசு**
நாதா, அருள் தா.

**அனுபல்லவி**

போதா மனுடர்கள் பரி பவம் அற, நரனாய்[3] தீயன்
போலே துயர் அடைந்த மாதயை
யாலே மரித்தெழுந்த தேவனே. – வேதா

**சரணங்கள்**

1. என் தன் நீதி ஓர் கந்தை அல்லவோ, பரனே?–ஏழைக்
கேது துணை உன் தன் தாரகம்[4] அன்றி, தற்பரனே?
வந்தடைந்தனன் உன்தனை; அன்பு
தந்தரவணைத் தெந்தனைத் தய
வாக உரு பவம் அடங்கலும்;
போகத் துய்யன்[5] ஆகவே என்றும் –வேதா

2. பாவம் தென்தனை மேவிக் கெடுத்ததே, தேவா; உன்தன்
பற்ற தல்லா தினி உற்றதுணை இல்லை கா, வா;
சாவுவரில் என் ஆவி கலங்கித்
தவித்திடாமலே களித்து; நன்ம
தாகப் பர[6]கதியை நோக்கி அங்
கேக, நித்திய பாகம் அடைய –வேதா

***– ஜாண் பால்மர்***

---

1 தெரிந்தவை
2 தந்தை
3 மனிதனாய்
4 புகலிடம்
5 தூயன்
6 மோட்சம்

**188. இராகம்: துசாவந்தி** **ஆதிதாளம் (432)**

**பல்லவி**

**அப்பனே, நீர் எனக்கு எப்படியும் இரங்கி**
அருளிச் செய்ய வேணும் நல் வகையை;

**அனுபல்லவி**

தப்பிக் கெட்ட எனக்காய் ஒப்புடன் ரத்தம் சிந்திச்
செப்பமுடன் எனை மீட்டநன் மெய்ப்பரனே, கிறிஸ்தரசே – அப்

**சரணங்கள்**

1. வஞ்ச வினைக்குட் பட்டேன்; நெஞ்சம் உருகிப் புண்ணாய்
வாடி லைந்து, பவமதினாலே–தினம்
சஞ்சலப் பட்டுழன்று, நஞ்சுண்ட கெண்டையைப்போல்
தயங்கி மயங்கி மிகத் தியங்குவனோ?–ஏழை
தஞ்சம் எனக்கு நீர் என் கெஞ்சுதலுக்கு இரங்கிப்
பஞ்ச பவங்களைத் தீர்த்தருள்; மிஞ்சும் கிருபை வழிபாரும்,
மெய் – அப்

2. நாடிப் பவத்தில் விரைந் தோடி விழுந்து கெட்டு
நைந்து கரைந்து மனம் மெலிவேனே?–மிக
வாடித் தவித்த என்னைத் தேடி ரட்சிக்க நீர்தாம்
வலிய வந்துதிரத்தைச் சொரிந்தீரே;–இப்போ
பாடிக் கெஞ்சம் எனக்குச் சூடிக் கிருபை அருள்;
நீடி தயையினைப் புரியும்; கொண்டாடி உமக்கூழியம் செய்ய
மெய் – அப்

3. முன்னாள் நீர் ஈந்ததெல்லாம் என்னாலே நான் அழித்து
முழுவதையும் இழந்து போனேனே,–பாவி
தன்னாலே கெட்டவன் நான் பின் ஆரிடம் போவேன் நீர்
தாமே எனக்குப் பிணைப்பட்டீர், ஐயா–தேவ
மன்னா, மெய் மன்னா ஓசன்னா, க்ருபை செய்யும்;
இந்நாள் முதல் நான் மகிழ்ந்தினி எந்நாளும் உமக்கூழியம்
செய்ய மெய் – அப்

***– மரியான் உபதேசியார்***

**189. இராகம்: இந்துஸ்தான் டப்பா.** **ஆதிதாளம்.**

**பல்லவி**

**பார், ஐயா; எளியேன் செய் பவ வினை தீர், ஐயா.**

**சரணங்கள்**

1. பார், ஐயா, உன் பதமே கதி–ஏழைப்
பாவிமேல் கண் பார்த்திரங்கி,–எனைப் – பார்

2. தீதினை உணர்ந்த சோரனைப்[1]–பர
தீசிலே அன்று சோக்கலையோ?–எனைப் – பார்

3. மாசிலா கிறிஸ் தேசுபரா,–உனைப்
வந்தடைந்தனன்; தஞ்சம், என்றே–எனைப் – பார்

4. தஞ்சம் என்றுனைத் தான் அடைந்தோர்–தமைத்
தள்ளிடேன், என்று சாற்றினையே;–எனைப் – பார்

5. பாவம் மாசிவப் பாயினும்,–அதைப்
பஞ்செனப் செய்வேன், என்றனையே–எனைப் – பார்

6. தீயர்க்காய்ப் பிணையாய் மரித்த–ஏசு
தேவனே, கருணா கரனே,–எனைப் – பார்

***– ஜாண் பால்மர்***

**190. இராகம்: மோகனம்** **அடதாளசாப்பு**

***பல்லவி***

**சருவேசுரா, ஏழைப்பாவி–என் பேரிலே**
தயவாய் இரும், சுவாமி

***அனுபல்லவி***

திரியேக பரதேவா, நெறி மேவும் ஒரு யோவா,
சித்தம் இரங்கிக் காத்துக் கிறிஸ்தின் முகத்தைப் பார்த்து. – சரு

---

1 கள்ளன்

**சரணங்கள்**

1. தந்தை நின் ஒன்றான மைந்தன் தனைக் கொடுத் தித் தகைமை[1]
உலகை நேசித்தாய்;–நின்
சொந்தக் கிருபை தனைச் சிந்தித்துணர மறை தொகுத்
தெனக் குபதேசித்தாய்;
இந்தப் பெரிய நேசம் புந்திக்[2] கொளிய தாக்கும்;
எந்தப் படியும் என் நிர் பந்தம் அனைத்தும் போக்கும்! – சரு

2. தேவரீர்க் கேற்காத தீவினைகளைச் செய்தும் தண்டியாமல்
பொறுத்தீர், – நீர்
யாவும் அறிந்திருந்தும், கோபித்துக் கைவிடாதென் நன்றி
கேட்டை மறுத்தீர்,
ஜீவனே, உமக்குப் பாவி பதில் என்செய்வேன்?
மேவி அடி தொழாமல் ஆவி எங்ஙனம் உய்வேன்? – சரு

3. நெஞ்சில் தெய்வ பயம் கொஞ்சமேனும் இல்லாமல்
நீதி வழியைக் கடந்தேன்;–கெட்ட
வஞ்ச உலக வாழ்வை மிஞ்சத் தேடிப், பேயின் மனதுக்
கேற்க நடந்தேன்,
பஞ்ச பாவி கூவிக் கெஞ்சும் ஜெபத்தைக் கேளும்,
தஞ்சம் என்றேன்; உனக்கே அஞ்சல் என்றெனை ஆளும். –சரு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**191. இராகம்: ஆனந்தபைரவி செம்படைதாளம்**

***பல்லவி***

**தருணம் இதில் அருள் செய், ஏசுபரனே, பாவச் சுமையானது**
தாங்க ஏழையாலே அரி தேங்கல் உற லானேன்

---

1 இவ்விதமாய் 2 புத்தி

***அனுபல்லவி***

மரண மதின் உரமே[1] ஒழித் தலகை[2] திறம் அறவே செய்து,
வதையே விளைத்திடு தீவினை சிதைய வகை புரி, பரனே. – தரு

***சரணங்கள்***

1. உலகர் உறு பவமானதைத் தலைமேல் சுமந்ததனை அற
ஒழிக்க, நண்பர் செழிக்க, வனம் தெளிக்க வந்த பரப்பொருளே,
பல காலம் இத் தலமே ஒரு நிலையே எனப் புலமீ[3] துன்னி[4]
பாழில் அழி ஏழை தனை ஆளவே இவ்வேளை வர. – தரு

2. வருத்த முடன் அகப் பாரமே தரித்தோர் தமை, விருப்போடு நீர்
வாரும், எனைச் சேரும், என்றன் சீரை அறிந்தே ஏழையேன்;
திருத்தமுடன் எனைக் காத்து, நற்கருத்தை அளித்திருத்த
அருள்
செய்ய, நானும் உய்யக்கருணை பெய்யக் கெஞ்சினேன்,
ஐயனே. – தரு

***– ஜாண் பால்மர்***

**192. இராகம்: பியாகு** **ரூபகதாளம்**

**பல்லவி**

**நினைந்து நினைந்து கண்ணீர் சொரிந்து**
மனதுமே கசிந்தான்–பேதுரு;
கனிவதா யுணர்ந்தான்.

**சரணங்கள்**

1. சாகும்பொழுது நானும் உம்முடன்
சாவேனென்றேனே! துட்ட
சாகசரோடு கூடி யவரை
மோசஞ் செய்தே னென்று – நினை

---

1 வலிமை
2 அலகை–பேய்
3 உலகம்
4 நினைத்து

2. அறியேனென்று நான் மறுதலித்து
ஆணையு மிட்டேனே!–ஜீவ
அறிவு உம்மிலுண்டென்று யான் சொல்லியும்
எதிரியானே னென்று – நினை

3. கண்ணாலே என்னை யுற்றுப் பார்க்கவும்
கலங்குதே மனது–நீர்
சொன்ன சொற்படி கூவுதே சேவல்
என்ன செய்வே னென்று – நினை

4. என்தன் துணிவால் உம்மை மறுத்து
ஏத்தினேன்[1], சுவாமி!–இப்போ
சிந்தனை கொண்டு சேவடி வந்தேன்,
சேர்ப்பீர் என்னை என்று – நினை

*– அருள்திரு. ச. சீமோன்*

**193. இராகம்: எதுகுலகாம் போதி** **ஏகதாளம் (433)**

**ஐயையோ! என்தன் அக்ரமம் போக்க**
அவனியிற் பிறந்தாய்,
உயிர் துறந்தாய்;
மகிமை சிறந்தாய்,–பரனே
ஐயையோ! ஐயையோ! ஐயையோ! கிறிஸ்தரசே – துரையே

2. துட்ட அரவினாற் கெட்டிறந்தோரைச்
சுத்தர்களாக்க,
பாதுகாக்க
கதி சேர்க்கப்–பரனே
தோன்றினாய், தோன்றினாய், தோன்றினாய், கிறிஸ்தரசே
– துரையே

1 ஏமாற்றுதல்

3. பாவியென்னை நீ பரத்துக் கேற்றிடப்
பார்தனை யடுத்தாய்,
சிலுவை யெடுத்தாய்,
உயிர் விடுத்தாய், பரனே
பாலனே, பாலனே, பாலனே, கிறிஸ்தரசே – துரையே

4. மாபாவிபோல மரத்திற் றொங்கிய
மனிதாவதாரனே;
உபகாரனே,
பர குமாரனே, பரனே
மன்னவா, மன்னவா, மன்னவா; கிறிஸ்தரசே – துரையே

5. சுத்த சத்திய துங்கமெய்ப் பரஞ்
ஜோதியே குருவே;
மனுவுருவே
என்தன் திருவே,–பரனே
ஜோதியே, ஜோதியே, ஜோதியே; கிறிஸ்தரசே – துரையே

*– D.A.*

**194. இராகம்: நீலாம்புரி** **ரூபகதாளம் (434)**

**பல்லவி**

**சந்துஷ்டி[1] கொண்டாடினானே**
தனை உணர்ந்துறு புதல்வனைத் தாதை[2] நோக்கி.

**அனுபல்லவி**

மைந்தன் கிட்டி வரும் முன்னே
மனதே உருகி எதிரோடி அணைத் தவனை மருவியே – சந்

**சரணங்கள்**

1. வந்த பிள்ளை ஆனவன் தான்
வலுகளை உறு மன தொடுவாய் குளறி
எந்தையே, நான் மா துரோகி
எனை ஓர் தொழும்பாக[3] வைத்தாளும் என்றிட, உளம் இளகியே
– சந்

1 மகிழ்ச்சி 2 தந்தை 3 அடிமை

2. மாண்[1] ஏதும் இல்லாத மைந்தன்
வழுத்திய மிகு சலிப் புள வார்த்தை கேட்டு,
காணாமல் போன குமாரன்
கணிலே[2] உறமேவினனே, என உரைத்துக் கசிவொடு - சந்

3. காய்ந்த மனதோடிருந்து
கருதிய புதல்வனின் மிகு காதல் கொண்டு,
மாய்ந்தவன் போல் சென்ற மைந்தன்
மனை மேவினன் ஆவி உளோன், என இசைத் ததி மகிழொடு
- சந்

4. இந்த வித மாகத் தந்தை
இனம் அய லவரையும் வரவே அழைக்க
வந்த நண்பர் யாவரோடும்
வளமாய்க் களிகூர எல்லார்க்கும் திருப்திஉற வகுத்ததி - சந்

***- ஜாண் பால்மர்***

**195. இராகம்: பங்காளா** **ஆதிதாளம்**

***பல்லவி***

**விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்;-மெய்**
விசுவாசமுள்ளவன் தான் தழைப்பான்.

***சரணங்கள்***

1. நிசமாக நாம் பாவத்தினில் பிறந்தோர்; முழு
விஷமான பாவத்தினால் இறந்தோர். - விசு

2. உய்யும்[3] வகையறியோம்; பெலனேயில்லை;-நரர்[4]
செய்யும் கிரியைகளில் நலனேயில்லை. - விசு

3. பாவக் கடனொழிக்கப் பலமே யற்றோம்;-எச்
சாபம் அழிவினுக்கும் தகைமை யுற்றோம். - விசு

---

1 மாட்சிமை
2 கண்ணில்
3 பிழைக்கும்
4 மானிடர்

4. தேவன் கிருபையொன்றே நமைப்பார்க்கும்; அவர்
மாவன்பே பாவிகளின் கடன் தீர்க்கும். – விசு

5. நீதிமானைக் குற்றஞ்சாட்ட யாராலேயாகும்? அவன்
பாதகம் பழிமரணம், யாவுமே போகும். – விசு

6. தேவனின் பிள்ளை நானென்றேயவன் துள்ளுவான்; தீய
பாவ வழிதனைப் பகைத்தே தள்ளுவான். – விசு

*– அருள்திரு. ஞா. சாமுவேல்*

**196. இராகம்: எதுகுலகாம்போதி** **ஏகதாளம்**

*பல்லவி*

**கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே;–நல்ல**
கேடகத்தைப் பிடி நீ;–விசுவாசக்
கேடகத்தைப் பிடி நீ.

**அனுபல்லவி**

வஞ்சனையாகவே பேய் எதிர்த்துன்றனை
வன்னிக்[1] கணைதொடுத் தெய்கின்ற வேளையில்,
நெஞ்சில் படாமல் தடுக்க அது நல்ல
நிச்சயமான பரிசை[2] அறிந்து நீ. – கிஞ்

**சரணங்கள்**

1. பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்க,
பத்தியில் தெளிக்கவும்,–நித்ய
ஜீவனைப் பிடிக்க, லோகத்தை ஜெயிக்க,
திறமை அளிக்கவும்,
சாவே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன்
ஜெயம் எங்கே? என்று நீ கூவிக் களிக்கவும்,
தேவன் உகந்துனைத்[3] தான் அங்கீகரிக்க,
செய்யவுமே அது திவ்ய நல் ஆயுதம். – கிஞ்

---

1 அக்கினி 2 கேடகம் 3 விரும்பி

2. பண்டையர்[1] அந்தப் பரிசையினால்[2] அல்லோ,
கண்டடைந்தார் பேறு?[3]–நல்ல
தொண்டன் ஆபேல் முதலான வைதீகரைத்
தொகுத்து வெவ்வேறு
விண்டுரைக்கில்[4] பெருகும்; தீ அணைத்ததும்,
வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்,
கண்டிதமாய் வெற்றி கொண்டது மாம்பல
காரியங்களையும் பார்; இது மா ஜெயம். – கிஞ்

3. ஊற்றமுடன்[5] இப்பரிசைப் பிடித்திட
உன் செயல் மா பேதம்;–அதின்
தோற்றமும் முடிவும் ஏசுபரன் செயல்,
துணை அவர் பாதம்;
ஏற்றரவணைக்கவே பணிவாக
இறந்து மன்றாடி அவர் மூலமாகவே,
ஆற்றல் செய் தேற்றரவாளி பரிசுத்த
ஆவி உதவியை மேவி, அடைந்து நீ. – கிஞ்

*– ஜாண் பால்மர்*

**197. இராகம்: சாவேரி** **செம்படைதாளம்**

**பல்லவி**

**ஆர் இடத்தில் ஏகுவேன் நான்? ஆதரி, ஐயா,**

**அனுபல்லவி**

தாரகமாய் நீசர் உற்ற சாபம் மாற்றிட வந்த சகாயா, – ஆர்

**சரணங்கள்**

1. அலகை[6] மடங் கவடித் தோட்டின ஜெய கிறிஸ்
தையனே, உனை நம்பினேன்;
மலைவு[7] கொளும், எனக்குன் பாதமே கதி அல்லால்,
மற்றொரு துணை இல்லையே, பரனே இனி – ஆர்

---

1 முன்னோர்
2 கேடகம்
3 முத்திப்பேறு
4 விரித்து
5 வல்லமையுடன்
6 பிசாசு
7 வருத்தம்

2. அணுக ஈனவரை வரவழைக்கும் மனோகரா,
அடியனை அரவணைத்தாள்;
பணிவுடன் உனதடி சேர்ந்து, சரண் புகுந்த
பாவியை நீ கைவிடாமல், அனுக்ரகி – ஆர்

3. முடிவு வரை நடத்தி ஆண்டு ரட்சிக்க எனை
முழுதுமே கை அளித்தேன்;
அடிதொளும் பலவினை சூழ்ந்திடும் பொழுதெல்லாம்
ஆதரிப்பதுனது மேல் உற்ற பாரமே – ஆர்

***– ஜாண் பால்மர்***

**198. இராகம்: கல்யாணி** **சாபுதாளம்**

**பல்லவி**

**என்னையும் உம தாட்டின் மந்தையோ**
டேற்றுக் காத்திடும், யேசுவே.

**சரணங்கள்**

1. வன்னியான[1] தோர் அலகைப் பேய் தனை
வதைத்திட ஞானப் பெலத்துடன் சிறந்
திந்நிலத்தினில் வந்துதித்த நல்
ஏசுவே, எனைச் சேர்த்திடும். – என்

2. ஆயக்காரரோடு பாவிகளின் கும்பை[2]
அழைத்து நல் விதை முளைத்திட, வெகு
நேயமாகவே ஜீவ புனல் ஈந்த
நிமலனே; எனைச் சேர்த்திடும் – என்

3. ஐயிருபது ஆட்டினில் ஒன்
றகன் றிட்டால், மனம் உகந்து கோன் அதை
மெய்யதாகவே தேடுவான் என்ற
மேய்ப்பரே, எனைச் சேர்ந்திடும். – என்

---

1 நெருப்பான 2 கூட்டம்

4. வாசலாகவே இருக்கிறேன், எனால்
வந்தவன் மனம் நொந்திடான், வெகு
நேசமாகவே வாழ்வான், என்ற நல்
நிமலனே, எனைச் சேர்ந்திடும்; – என்

5. நல்ல மேய்ப்பன் நான்; என மொழிந்த என்
நாதனே, ஞான போதனே,–ஜீவ
புல்லுள்ள ஸ்தலந் தன்னில் கொண்டெனைப்
போஷித்து முசிப்பாற்றிடும். – என்

6. மேய்ப்பராகவே இருக்கிறீர், எந்தன்
மேய்ச்சலும் நீர் தாமலோ? ஞான
வாய்ப்புள்ள சத்ய மறையில் மேய்ந்து நான்
வளர்ந்திட அருள் புரிந்திடும். – என்

7. அன்புடைய மெய் மேய்ப்பராயிருந்
தாட்டுக்காய்ச் சொந்த ஜீவனை வெகு
இன்பமாகவே ஈந்து மீட்ட நல்
ஏசுவே, எனைச் சேர்த்திடும்; – என்

*– மரியான் உபாத்தியாயர்*

**199. இராகம்: பைரவி** **சாப்புதாளம்**

**பல்லவி**

**பின் செல்வேன், என் மீட்பரே;–நானும்மைப்**
பின் செல்வேன், என் மீட்பரே.

**அனுபல்லவி**

நான் செய்த பாவங்கள் நின் தயவால் தீர;
நாதா, ஜீவன் விட்டாய் வன் குருசிலதால், – பின்

**சரணங்கள்**

1. என் சிலுவை எடுத்தேன்,–எல்லாம் விட்டு
என்றும் நின்னையே அடுத்தேன்;
நின் திருப் பாதத் தடங்களை நோக்கி நான்
நித்தமும் வாழ்வேன் உன் சித்தம் என்றும் செய்து, – பின்

2. சிங்கம் போல கெர்ச்சித்தே–என்தன் நேரே
சீறி மிக வெதிர்த்தே;
கங்குல்[1] பகலும் தீ அம்பு என்மேல் எய்யும்
கடியின்[2] மேல் ஜெயம் பெற்று, அடியேன் நின்னருள் பெற்று,
– பின்

3. நெருக்கம் செய்தால் மனுஷர்–அதென்னையும்
நெஞ்சண்டை யோட்டுவதாம்;
பாரிடத்தில் பல சோதனை; வதைத்தாலும்,
பார்த்திபனே[3]; உன்னை ஒரு போதுமே விடேன், – பின்

4. காசினி யோர்கள் என்னைப்–பகைத்தாலும்
காதல னேசு உன்னைப்
பாசம தாகவே பணிந்து தொழுவேனே;
பாக்கிய நகரில் பின் உன்னோடு வாழ்வேனே. – பின்

***– ஜோசப் ஜோயல்சிங்***

**200. இராகம்: சாவேரி** **செம்படைதாளம் (435)**

***பல்லவி***

**ஆரிடத்தில் ஏகுவோம்?–எம் ஆண்டவனே,**
ஆரிடத்தில் ஏகுவோம்?

***அனுபல்லவி***

ஆரிடத்தில் ஏகுவோம்? சோரார் நித்திய ஜீவ
நேரார்[4] வசனங்கள் உமது சாரில் இருக்க, இனி. – ஆரி

***சரணங்கள்***

1. பாவிகளாம் எங்களுக்கு–உமையல்லாது
தாவரமில்லை; நீரே
ஜீவன் தனையுடைய தேவகுமாரனாக
மேவு கிறிஸ்தென்றுமையே–ஆவலுடன் நம்பினோம். – ஆரி

---

1 இரவு
2 பேயின்
3 அரசன்
4 நன்னெறி

2. போனவர்போல நாங்களும்–உமை நெகிழ்ந்து
போவதில்லை, பரமனே,
ஞானோபதேச குருவான வும்மை யண்டின
ஈனர் இனிதுற்ற வுமது–தானமதைப் பிரிந்து. – ஆரி

3. உற்றார் சிநேகர் யாரையும்–எம் வீடுவாசல்
உள்ள பொருளனைத்தையும்
முற்றாய் வெறுத்தும்மையே பற்றியிருக்க நாங்கள்
தெற்றாய்,[1] இனியும்மை நன்றியற்றோர் போலே நெகிழ்ந்து.
– ஆரி

4. பொன் னுலகத் திருந்தெம்மைப்–புரக்க வந்த
புண்ணிய நாதன் நீரல்லவோ?
பின்ன பேதகமற்ற மன்னவனே, உமது
நன்னய முகப்பிர–சன்ன மதனை விட்டு. – ஆரி

***– ஜாண் பால்மர்***

**201. இராகம்: கமாசு ரூபகதாளம்**

***பல்லவி***

**நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி,**
நீயுனக்குச் சொந்தமல்லவே.

***அனுபல்லவி***

நீயுனக்குச் சொந்தமல்லவே,–ரீ–ரீ–ரீ–ரீ
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம். – நீ

***சரணங்கள்***

1. சிலுவைமரத்திற்றொங்கி மரித்தாரே; திருரத்தம், ரத்தம்
திரு விலாவில் வடியுது, பாரே;
மிகுந்த பரிசத்தால்[2] கொண்டாரே;–ரீ–ரீ–ரீ–ரீ
மோட்ச மகிமை யுனக்கீவாரே. – நீ

---

1 நிச்சயமாய் 2 கிரையம்

2. இந்த நன்றியை மறந்து போனாயோ? யேசுவைவிட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுன திதயங் காயமும்[1],–ரீ–ரீ–ரீ–ரீ
சுவாமி கிறிஸ்தினுடைய தல்லவோ? – நீ

3. பழைய பாவத்தாசை வருகுதோ? பசாசின் மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமிஷத் தாசை காட்டியே,–ரீ–ரீ–ரீ–ரீ
அக்கினிக்கடல் தள்ளுவானேன்? – நீ

4. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே; உலகைவிட்டுப்
பிரியினும் அவர்க்கே மரிப்பாயே,
மரித்து உயிர்த்த யேநாதரின்,–ரீ–ரீ–ரீ–ரீ
மலரடி எந்நாளும் நிலைப்பாய் – நீ

***– தேவசகாயம் உபாத்தியாயர்***

## 202. இராகம்: முகாரி சாபு தாளம்

*பல்லவி*

**ஐயையா, நான் வந்தேன்;–தேவ**
ஆட்டுக்குட்டி, வந்தேன்.

*சரணங்கள்*

1. துய்யன்[2] நீர் சோரி[3] பாவி எனக்காய்ச் சிந்தித்
துஷ்டன் எனை அழைத்தீர்,–தயை
செய்வோம் என்றே; இதை அல்லாது போக்கில்லை;
தேவாட்டுக்குட்டி, வந்தேன். – ஐயையா

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன், என்று–நில்லேன்;
தெள் உம் உதிரம் கறை யாவும் தீர்த்திடும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன். – ஐயையா

---

1 காயமும்–உடலும் 2 தூயவர் 3 இரத்தம்

3. எண்ணம், வெளியே போராட்டங்கள், உட்பயம்
எத்தனை, எத்தனையோ! – இவை
திண்ணம் அகற்றி எளியனை ரட்சியும்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன். – ஐயையா

4. ஏற்றுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும்;–மனம்
தேற்றிக்கொண்டேன் உந்தம் வாக்குத்தத்தங்களால்;
தேவாட்டுக்குட்டி, வந்தேன். – ஐயையா

5. மட்டற்ற உம் அன்பினால் தடை எதும்
மாறி அகன்றதுவே,–இனி
திட்டமே உந்தம் உடைமை யான் என்றென்றும்
தேவாட்டுக்குட்டி, வந்தேன் – ஐயையா

***– அருள்திரு. அ. வேதக்கண்***

**203. இராகம்: சங்கராபரணம் திரிசுரதாளம்**

***பல்லவி***

**என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்,**
ஏற்றுக் கொள்ளும், ஏசுவே.

***அனுபல்லவி***

அன்னை தந்தை உந்தம் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத்தத்த மல்லாது, இப்போது – என்னை

***சரணங்கள்***

1. அந்தகாரத்தி னின்றும், பவப் பேய்
அடிமைத் தனத்தி னின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனைமீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன். – என்னை

2. ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்;
பாத்ரமதாய் அதை பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன்; கருணைசெய், தேவா. – என்னை

3. நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டே னுமக்கு;
ஜோதி பரிசுத்த ராலயமாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை. – என்னை

***– அருள்திரு. சீமோன். ச.***

**204. இராகம்: பைரவி** **திரிசுரதாளம்**

**சரணங்கள்**

**என்தன் ஜீவன் சொந்தமதாகத் தத்தம் செய்கிறேன்**
ஜீவன் தந்த நாயகா.

2. என்தன் வினாடி நாட்கள் யாவும் தத்தம் உமக்கே
உமை என்றும் போற்றவே.

3. என்தன் வெள்ளி தங்கமெல்லாம் பாதம் படைக்கிறேன்
என்தன் சொந்தம் சூனியமே,

4. எனது புத்தி யுத்தியாதி மனது தத்துவம்
யாவும் உமது பாத்தியம்,

5. என்தன் சித்தம் உந்தனின் சித்தம் நித்தமுமதே
என்தன் சொந்த நாதனே,

6. எந்த னிதயம் தந்தேனுமது ஆசனமாக
என்றும் வந்து தங்கவே,

7. நீர் எப்பொழுதும் என்னை முழுதும் சொந்தமாகவே
ஏற்றுவீரே, நாயனே.

***– ஜே.எம். தாவீது***

**205. இராகம்: கமாஸ்** **ஜாவளிமெட்டு**

*பல்லவி*

**அன்பே பிரதானம்,−சகோதர**
அன்பே பிரதானம்.

*சரணங்கள்*

1. பண்புறு ஞானம்,−பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம்,−இவைகளி லெல்லாம். − அன்பே

2. பலபல பாஷை−படித்தறிந்தாலும்,
கலகல வென்னும்−கைமணியாமே. − அன்பே

3. என் பொருள் யாவும்−ஈந்தளித்தாலும்,
அன்பிலையானால்−அதிற்பயனில்லை. − அன்பே

4. துணிவுட னுடலைச்−சுடக்கொடுத்தாலும்,
பணிய அன்பில்லால்−பயனதிலில்லை. − அன்பே

5. சாந்தமும் தயவும்−சகல நற்குணமும்
போந்த சத்தியமும்−பொறுமையுமுள்ள. − அன்பே

6. புகழிறு மாப்பு,−பொழிவு[1] பொறாமை,
பகைய நியாயப்−பாவமுஞ் செய்யா. − அன்பே

7. சினமடையாது,−தீங்கு முன்னாது,
தினமழியாது,−தீமை செய்யாது. − அன்பே

8. சகலமுந் தாங்கும்,−சகலமும் நம்பும்,
மிகைபட வென்றும்−மேன்மை பெற்றோங்கும். − அன்பே

***− அருள்திரு. ச.பே. ஞானமணி***

1 தற்புகழ்ச்சி

**206. இராகம்: லாவணி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்விய மதுரமாமே;**
–அதைத்
தேடியே நாடி ஓடியே வருவீர், திருச்சபையானோரே.

*சரணங்கள்*

1. காசினிதனிலே நேசமதாகக் கஷ்டத்தை உத்தரித்தே[1];–பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்; கண்டுணர் நீ,
மனமே. – தேன்

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத் தாமே ஈந்தவராம்;
–பின்னும்
நேமியாம்[2] கருணை நிலைவரமுண்டு; நிதம் துதி, என் மனமே.
– தேன்

3. காலையில் பனிபோல் மாயமாய் உலகம் உபாயமாய்[3] நீங்கி
விடும்;–என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ, மனமே. – தேன்

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல துணைவராம்
நேசரிடம்;–நீயும்
அன்பதாய்ச் சேர்த்தால் அணைத்துனைக் காப்பார்; ஆசை
கொள் நீ, மனமே. – தேன்

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழ்ந்து போற்று நாமம்;
–அதைப்
பூண்டு கொண்டால் தான் பேரின்ப வாழ்வைப் பெறுவாய் நீ,
மனமே. – தேன்

***– அருள்திரு. ஆ. சவரிமுத்து***

---

1 சகித்து 2 கடல் 3 விரைவாய்

**207. இராகம்: இந்துஸ்தான்டப்பா** **ஏகதாளம்**

*பல்லவி*

**விசுவாசியின் காதில் பட, யேசுவென்ற நாமம்**
விருப்பாயவர் செவியில் தொனி இனிப்பாகுது பாசம்.

*சரணங்கள்*

1. துயரையது நீக்கிக் காயந் தீர்த்துக் குணப்படுத்தும்;
பயங்கள் யாவும் யேசுவென்றால் பறந்தோடியே போகும். – விசு

2. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்,
தியக்கமுள்ள நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கும் – விசு

3. பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே;
முசிப்பாறுதல்[1] இளைத்தோர்க்கெல்லாம் முற்றுமந்தப் பெயரே.
– விசு

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்றுநிறைந்திருக்கும்,
எல்லா நாளும் மாறாச் செல்வம் யேசு வென்ற பெயரே. – விசு

5. என்னாண்டவர், என் ஜீவனே என் மார்க்கமே, முடிவே
என்னால் வருந் துதியை நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே. – விசு

***– பாளையங்கோட்டைப் பாடல்***

**208. இராகம்: யமுனாகல்யாணி** **ரூபகதாளம்**

*பல்லவி*

**ஆசையாகினேன், கோவே–உனக்**
கனந்த ஸ்தோத்திரம், தேவே!

*அனுபல்லவி*

யேசுகிறிஸ்து மாசத்துவத்து ரட்சகா, ஒரே தட்சகா![2] –ஆசை

---

1 களைப்பு  2 தாங்குபவர்

***சரணங்கள்***

1. வேதா, ஞானப் பர்த்தா,[1]–என்–தாதா[2], நீயே கர்த்தா;
மா தாரகம்[3] நீ என்றே, பரமானந்தா, சச்சிதானந்தா. – ஆசை

2. கானான் நாட்டுக் கரசே,–உயர்–வான் நாட்டார் தொழும் சிரசே,
நானாட்ட முடன் தேடித், தேடி நாடிப், பதம்[4] பாடி. – ஆசை

3. வீணாய்க்காலம் கழித்தேன்; சற்றும் தோன்றாமல் நின்று விழித்தேன்
காணா தாட்டைத் தேடிச் சுமந்த கருத்தே, எனைத்திருத்தே. – ஆசை

4. வந்தனம், வந்தனம், யோவா[5]!–நீ–சந்ததம் சந்ததம் கா, வா,
விந்தையாய் உனைப்பணிந்தேன், சத்யவேதா, யேசு நாதா! – ஆசை

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**209. இராகம்: பரசு** **ஆதிதாளம்**

***பல்லவி***

**நினையேன், மனம், நினையேன் தினம்**
உனை மீட்ட ஏசுவையே.

***அனுபல்லவி***

கன மேவிய மனு வேலனைக் கன[6] காசன சுதனை. – நினை

***சரணங்கள்***

1. கவனமுடன் நீடி[7], உனக்காக அருள் தேடிப்,
புவன மதில் பிறந்து திவ்ய புதுமை மிகச் சிறந்து,
தவனமுறு[8] ஆத்மா ஜீவத் தண்ணீர் உண, சும்மா
பவம் நீக்கிய வானாசன பதியை, சுரர்[9] கதியை. – நினை

---

1 கணவன்
2 தந்தை
3 புகலிடம்
4 பாதம்–திருவடி
5 யெகோவா
6 பொன்
7 தாண்டி
8 தாகம்
9 வானோர்

2. நரக அழலாலே[1] கெடு நாசம் வந்த காலே
உருகி, மனம் இரங்கித், தொலைத் துண்மையுடன் இணங்கி,
பரமனோடு உறவாக்கி, மெய்ப்பலனும் பெறத் தாக்கி,
பெருக நலம்புரிந்தோன், மறைபேதம் இன்றி அறைந்தோன்[2].
– நினை

3. ஜெயமும், புத்ர சுவிகாரமும், சிறந்த நீதியும், மகா
நயந்த பரிசுத்தம் தேவ ஞானமுடன் மீட்பும்
சுயமாக்கியும் அளித்தும் தனதுயிரைப் பலிகொடுத்தும்
பயன் ஏலவே[3], தூய ஆவியைப் பரிந்தோனையே கனிந்தே.
– நினை

***– ஆபிரகாம் அல்லின்***

**210. இராகம்: இந்துஸ்தானி** **தாளம்: ஆதிதாளம்.**

**பல்லவி**

**வாரீரோ? வினை தீரீரோ? எனைக்**
காரீரோ? ஜீவன் தாரீரோ, யேசு

**அனுபல்லவி**

வாரேனென்றீர், வரந் தாரேனென்றீர், சுவாமி;
பாரினிலே யெனக்கு யாருமில்லை, துணைக்கு. – வாரீரோ

**சரணங்கள்**

1. தேனே, மரிமகனே, தேடி மறுகுங்[4] கோனே,
சேனைகளின் சீமோனே, சிந்தை கலங்கி நானே
கானகமே மேவும் மானது போலானேன்;
வானகம் போன தேவா, ஏனோ வரத் தாமதம்? – வாரீரோ

2. அட்ட[5] திக்கெங்கு மென்னைத் துட்டப் பாசாசுக் கூட்டம்
இட்டப் படுத்தவல்லோ கிட்ட வளையது, பார்
அடுத்தாலோ, அம்பைத் தொடுத்தாலோ என்ன!
அடுபடையாக[6] நின்று தடு படை[7] செய்வீர், யேசு, – வாரீரோ

---

1 நெருப்பு
2 கூறியவர்
3 பெறவே
4 மயங்கும்–அலைதல்
5 எட்டு
6 அழிக்கும் படை
7 மறுக்கிற ஆயுதம்

3. கோழி தன் குஞ்சு தன்னைக் கூவியழைக்கு நேராய்
கூளி[1] எனை யிறாஞ்சி[2] ஆழியிலாக் கிடாமல்
கூப்பிட்டீரே; எனக்கு மாப்பீட்டீரே! ஒதுங்க
தாப்பிட்டீரே[3]; வர வாக்கிட்டீரே! பின்னை – வாரீரோ

4. காணாத ஆட்டைத் தேடிக் காடெங்கும் சென்றகோன் நீர்
கண்டுபிடித்த ஆட்டைக் கொண்டு தொழுவஞ் சேர்க்கக்
கருத்துடனே மிக உரித்துடனே[4] இரு
கரத்திலேந்தி வலப் புறத்தில் வைப்பீர் திண்ணம். – வாரீரோ

5. வீடு எனக்குச் செய்ய மேலோகம் போன தேவா,
கூட இருத்தி வைக்கக் கூப்பிட வாறேனென்றீர்;
கொண்டு வருவீர் முடி, நின்று வருவீர் நொடி;
கண்டு மகிழ்வேன், கூடி நின்று புகழ்வேன் கெடி[5]. – வாரீரோ

***– அருள்திரு. மு. தேவசகாயம்***

### 211. இராகம்: உசேனி ஏகதாளம்

*பல்லவி*

**இயேசு நேசிக்கிறார்,–இயேசு நேசிக்கிறார்;**
இயேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மாதவமோ!

*சரணங்கள்*

1. நீசனா மெனைத்தான் இயேசு நேசிக்கிறார்,
மாசிலாத பரன் சுதன்றன் முழு
மனதால் நேசிக்கிறார். – இயேசு

2. நாதனை மறந்து நாட்கழித் துலைந்தும்,
நீதன், இயேசெனை நேசிக்கிறாரெனல்
நித்த மாச்சரியம். – இயேசு

---

1 பிசாசு
2 கவரும் ஒலி
3 பாதுகாப்பு
4 உரிமை
5 கீர்த்தி

3. ஆசை இயேசுவென்னை அன்பாய் நேசிக்கிறார்;
அதை நினைந்தவ ரன்பின் கரத்துளே
ஆவலாய்ப் பறப்பேன் – இயேசு

4. இராஜன் இயேசுவின் மேல் இன்பக்கீதஞ் சொலில்,
ஈசன் யேசெனைத்தா னேசித்தாரென்ற
இணையில்[1] கீதஞ் சொல்வேன். – இயேசு

*– ஆர். பிரக்கன்ரிட்ஜ்*

**212. இராகம்: நாட்டை** **அடதாளம்**

*பல்லவி*

**எல்லாம் யேசுவே,–எனக்கெல்லா மேசுவே.**

*அனுபல்லவி*

தொல்லைமிகு மிவ்வுலகில்–துணை யேசுவே. – எல்

*சரணங்கள்*

1. ஆயனும் சகாயனும் நேயனு முபாயனும்[2],
நாயனும் எனக்கன்பான ஞானமண வாளனும், – எல்

2. தந்தைதா யினம்ஜனம் பந்துளோர்[3] சிநேகிதர்,
சந்தோட சகலயோக, சம்பூரண பாக்யமும், – எல்

3. கவலையி லாறுதலும், கங்குலிலென்[4] ஜோதியும்,
கஷ்டநோய்ப் படுக்கையிலே கைகண்ட ஔஷதமும்[5] – எல்

4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளிமென் தோழனும், – எல்

---

1 ஒப்பில்லாத
2 உபாயன்–உபகாரி
3 உறவினர்
4 இரவு
5 மருந்து

5. அணியும் ஆபரணமும் ஆஸ்தியும் சம்பாத்யமும்
பிணையாளியும்[1] மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும், – எல்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்,
ஞான கீதமும் சதுரும்[2] நாட்டமும் கொண்டாட்டமும், – எல்

*– ஒய். ஞானமணி*

**213. இராகம்: நாதநாமக்ரியை** **சாபுதாளம்**

*பல்லவி*

**ஜெப சிந்தை எனில் தாரும், தேவா,–என்னை**

*அனுபல்லவி*

அபயமென்றுனக்குக் கையளித்தேன் பொற்பாதா. – ஜெப

*சரணங்கள்*

1. உண்மை மனதோ டுன்னைக் கெஞ்ச,–உல
கெண்ண மெல்லாம் அகற்றி உரிமையே மிஞ்ச,
தொன்மை ஆயக்காரன் போலஞ்ச,–பவ
தோஷமகலத் திரு ரத்தம் உள்ளிஞ்ச.[3] – ஜெப

2. இடைவிடாமல் செய்யும் எண்ணம்–என்
இதயத்தி லுதயமா யிலங்கிடப் பண்ணும்;
சடமுலகப்[4] பேயை வெல்லும்–நற்
சாதக முண்டாகத் தயைசெய் என்னுள்ளம். – ஜெப

3. ஊக்கமுடன் ஜெபம் செய்ய, தகா
நோக்கமெல்லாம் கெட்டு நொறுங்கியே நைய,
பேய்க்கண மோடுபோர் செய்ய,–நல்
ஆக்கம் எனில் தந்து ஏக்கம் தீர்ந்துய்ய. – ஜெப

*– அருள்திரு. ச. சீமோன்*

---

1 பதிலாள்
2 நடனம்
3 உள்ளிழுக்க
4 சடம்– மாமிசம்

**214. இராகம்: மோகனம்** **ஆதிதாளம்**

**பல்லவி**

**கிருபை கூரும் ஐயனே;–பாவி என்**
சிறுமை தீரும், மெய்யனே.

**அனுபல்லவி**

பொறுமையே மிகுந்த அருமை தேவனே, நீர். – கிரு

**சரணங்கள்**

1. ஆறு லட்சண தேவா,–அடியார்க்கு
தேறுதல் அருள் தா,வா;–திருமறை
கூறும் கருணை நாவா,–குறை அறப்
பேறு பெறச் செய் ஜீவா,–பெரியவா,
ஈறிலா துயர்ந்த மாறிலா வஸ்துவே, நீர் – கிரு

2. பத்தர் தொழும் சருவேசா,–பரிந்தருள்
வைத்த சத்திய வாசா,–மகா பரி
சுத்தக் கிருபையின் நேசா,–சுயாதிப
முத்தொழில் தரும் ஈசா, முழுதும் என்
மத்தியஸ்தனான நித்ய கிறிஸ்துவே, நீர் – கிரு

4. சரணம், சரணம், நாதா!–தவிக்கிற
தருணம், தருணம், வேதா!–தயாபர
கிரணம் இலங்கும் பாதா!–கிலேசங்கள்
திரணம்[1] உறாத நீதா!–திடுக்கிடும்
மரண வேளையிலும் கரணம்[2] மயங்கும் போதும். – கிரு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**215. இராகம்: ஆனந்தபைரவி** **சம்பைதாளம் (437)**

**பல்லவி**

**நித்தி யானந்தனே, சித்தம் வைத்திரங்குவாய்,**
நித்தி யானந்தன.

---

1 அற்பம் 2 புத்தி

**அனுபல்லவி**

சத்திய திரித்துவ தேவ நித்திய கர்த்தாவே,
முற்றும் இரட்சித்து நடத்தும், கிறிஸ்தையாவே – நித்

**சரணங்கள்**

1. உன்னை அன்றித் தஞ்சம் இல்லையே,–காசலையே
உலகம் அனைத்தும் தொல்லையே;
என்னுயிர்க் குயிரதான மன்னவா நின் தேவ திருச்
சன்னதிக்கபயம்! என்தன் முன் எழுந்தனுக் கிரகிப்பாய் – நித்

2. கருணைப்ர வாக நேமியே–நான் காமியே;
கடுக வாரும், என் சுவாமியே,
அரணும் ஜெயமும் நீயே; கிரணம் இலங்கும் தூயா,
தருணம் கைவிடாதேயும், சரணம், சரணம், ஐயா! – நித்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**216. இராகம்: உசேனி ரூபகதாளம்**

***பல்லவி***

**தந்தைசரு வேஸ்பரனே, உன்தன் மகன் யேசுவுக்காய்**
எந்தன் முகம் பார்த்திரங்கு வாயே–இம்மாத்ரம் நீயே,

***சரணங்கள்***

1. அந்தமதிலா[1] அகாரி[2] சந்ததமுமே விசாரி,
விந்தை அருள் மேவும் அசரீரி, மெய்ஞ்ஞான வாரி[3]! – தந்தை

2. ஞானபரனே, ஒருத்வ மான முதலே, திரித்வ
மேன்மை வடிவான மகத்வ மேலான தத்வ! – தந்தை

3. விற்பன[4] விவேக நூலா, அற்புதமான சீலா,
நற்பரம லோக அனுகூலா, நன்மை கிருபாலா![5] – தந்தை

1 முடிவில்லா
2 கடவுள்
3 கடல்
4 அறிவுக்களஞ்சியம்
5 கிருபையளிப்பவனே

4. ஆதி முதலான நேசா; வேதமறை மீதுலாசா,
பேதகம் இலாத சத்ய வாசா, ஞானப் பிரகாசா – தந்தை

5. வந்த வினை யாவும் தீரும், நிந்தை அணுகாமல் காரும்;
சிந்தைமகிழ்ந்தே, கண்ணாலே பாரும்; சீர்பாதம் தாரும்! –தந்தை

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**217. இராகம்: கல்யாணி** **செம்படைதாளம்**

**பல்லவி**

**இறைவன் நீயே;–எளியனுக்**
கிரங்குவாயே.

**அனுபல்லவி**

மறை விளக்கி இந்நரரை மீட்க,–இம்
மானுவேல் எனும் நாமம் மேவியே,
தரையில் வந்தவ தரித்த ஏழைகள்
தாதா[1], ஏசுநாதா, என். – இறை

**சரணங்கள்**

1. அண்டர்கள்[2] போற்றும் விண்ணோனே–எங்கள்
ஆதரவாய் உற்ற கோனே,–நல்ல
தொண்டர்களுக் கருள் புரியும் நன் மனத்
தூயா, அன்பர் நேயா, என். – இறை

2. நன்று திகழ்[3] பெரியோனே–திவ்ய
ஞானம் எனும் பெயரோனே,–இயல்
அன்றும் இன்றும் ஒன்றுபோல உறும்
ஐயா, ஒளிர் மெய்யா, என். – இறை

---

1 தந்தை 2 வானோர் 3 ஒளிவீசும்

3. எங்கும் நிறைந்த வல்லோனே,–அன்பர்க்
கின்பு செய்கின்ற நல்லோனே,–மிக
இங்கிதமாய்[1] உனை ஏத்தித்[2] தொழ அருள்
ஈவாய்; க்ருபை ஆவாய்; என். – இறை

***– ஜாண் பால்மர்***

**218. இராகம்: செஞ்சுருட்டி ஆதிதாளம்**

***பல்லவி***

**தேவா, இரக்கம் இல்லையோ?–இயேசு**
தேவா, இரக்கம் இல்லையோ?

***அனுபல்லவி***

ஜீவா, பரப்ரம[3]ஏ கோவா, திரித்துவத்தின்
மூவாள் ஒன்றாக வந்த தாவீதின் மைந்தன், ஒரே –தேவா

***சரணங்கள்***

1. எல்லாம் அறிந்த பொருளே,–எங்கள்
இல்லாமை நீக்கும் அருளே,–கொடும்
பொல்லா மனதுடைய கல்லான பாவிகளைக்
கொல்லா தருள் புரியும் நல்லாயன் யேசுநாதா! –தேவா

2. எங்கும் நிறைந்த ஜோதியே,–ஏழைப்
பங்கில் உறைந்த நீதியே,–எங்கள்
சங்கடமான பாவ சங்கதங்களை[4] நீக்கும்
துங்க இஸ்ரவேலின் வங்கிஷ[5] கிரீடாபதி! –தேவா

3. வேதாந்த வேத முடிவே,–ஜெக
ஆதாரம் ஆன வடிவே,–ஐயா,
தாதாவும் எமைப் பெற்ற மாதாவும் நீயே; யேசு
நாதா, ரட்சியும், வேறே ஆதாரம் எமக்கில்லை. –தேவா

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 இனிமையாய்
2 துதித்து
3 பரம்பொருள்
4 நட்புகளை
5 வம்சம்

## 219. இராகம்: கௌசிகை ஆதிதாளம்

*பல்லவி*

**பரனே, திருக்கடைக்கண் பாராயோ?–என்றன்**
பாவத்துயர் அனைத்தும் தீராயோ?

*சரணங்கள்*

1. திறம் இலாத எனை முனியாமல்,[1]–யான்
செய்த குற்றம் ஒன்றும் நினையாமல். – பரனே

2. மாய வலையில் பட்டுச் சிக்காமல்,–லோக
வாழ்வில் மயங்கி மனம் புக்காமல். – பரனே

3. அடியேனுக் கருள் செய் இப்போது,–உன
தடிமைக் குன்னை அன்றிக் கதி ஏது? – பரனே

4. வஞ்சகக் கவலை கெடுத் தோட்டாயோ?–என்றன்
மனது களிக்க வர மாட்டாயோ? – பரனே

5. ஏசுவின் முகத்துக் காய் மாத்ரம்–எனக்
கிரக்கம் செய்யும்; உமக்கே தோத்ரம்! – பரனே

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

## 220. இராகம்: லாவணி ஆதிதாளம்

*பல்லவி*

**என் ஐயா, தினம் உனை நம்பி நான்**
இருப்ப தறியாயோ?–மன
தேங்கும் என் கலி[2] நீங்கும் படி நல்
பாங்கு புரியாயோ?

*அனுபல்லவி*

அன்னை யிடத்தில் என்னை உருவதாய்
வகுத்தவா, கிறிஸ்தையா எனதையா,
அருள் செய்யாதது மெய்யா இது? – என்

---

1 கோபிக்காமல் 2 துன்பம்

***சரணங்கள்***

1. குற்றத்தால் உனைக்கிட்ட என் மனம்
கூசி நாணுதே;–என்தன்
கோதும்[1] நான் செய்த தீதும் மனதில்
கூடத் தோணுதே;
சுற்றும் உலகச் சத்துருப் பகை
சூழக் காணுதே;
சுருதி[2] மொழி உறுதி தனைக்
கருதி வந்தேன்; பொறுதி அருள்! – என்

2. உன்னை அல்லாமல் பின்னை
வேறெனக் குதவி இல்லையே;–என
துற்ற ஜனமும் சுற்றத் தோர்களும்
உரிமை இல்லையே;
பின் எவரிடம் போவேன், சொல்? அது
பெரிய தொல்லையே;
பேசும் விசு வாசம் வளர்
நேசக் கதிர் வீச அருள்! – என்

3. அத்தனே[3], உன்றன் ரத்தத்தால் எனை
ஆற்றித் தேற்றையா,–தேவ
ஆவியாகிய ஈவெனும் உன
தருளை ஊற்றையா,
நித்தனே[4], என்றன் குற்றத்தை எல்லாம்
நீக்கி ஆற்றையா,
நேசா, பவ நாசா, மறை
வாசா, ஏசு, ராசா அருள்! – என்

***– மரியான் உபதேசியார்***

---

1 குற்றமும்
2 வேதம்
3 இறைவன்
4 இறைவன்

**221. இராகம்: உசேனி** **ரூபகதாளம் (438)**

*பல்லவி*

**ஏசுநாதனே!–இரங்கும் என்–ஏசு நாதனே!**

*அனுபல்லவி*

ஆசைக்கிறிஸ் தெனதன்புள்ள நேசனே!
அருளே! தெருளே! பொருளே!
ஆவல் ஆகினேன்,–மகா பிரலாபம்[1] மூழ்கினேன்;
ஆயா! ஆயா! தூயா! ரட்சியும்;
ஆபத்தினால் பரி தபித்து நிற்கிறேன். – ஏசு

*சரணங்கள்*

1. அருமை ரட்சகனே! உனை அல்லாமல் ஆதரவார்? ஐயா!
ஆத்தும நாயகன் நீ என்னக்கல்லவோ? அன்புகூர் மெய்யா!
தருணம், தருணம், கைவிடாதேயும்;
தலைவா! வலவா! நலவா!
தாமதியாதே–கிருபை செய்யும்–சாமி இப்போதே
தாதா! நாதா! நீதா! நீ கா,
தருமப் பிரகாசனே! பரம சருவேசனே! – ஏசு

2. ஐந்து காயத்தின் கிருபைக் கோட்டையில் அடைக்கலந்தாவே
ஆதாமின் பாவத்தாலே மானிடன் ஆனமெய் வாழ்வே
விந்தைக் கிருபை அளிக்க வேண்டும்;
விமலா! நிமலா! அமலா!
வேறு பண்ணாதே–மிகும் சீறு–மாறு நண்ணாதே;
மேலா! கோலா! நூலா! நீயே
விரும்பிச் சேரும், கோவே! திரும்பிப் பாரும் தேவே – ஏசு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 குறைகூறி புலம்புதல்

**222. இராகம்: சயிந்தவி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**தருணமே, பரம சரீரி[1]; எனைத்**
தாங்கி அருள், கருணை வாரி[2].

*அனுபல்லவி*

உரிமை அடியர் அனுசாரி[3],–உயர்
எருசலை நகர் அதி காரி, அதி – தரு

**சரணங்கள்**

1. வரர்[4] அடி தொழும் வெகுமானி,[5]–பரன்
மகிமை ஒளிர் தேவ சமானி,
நரர் பிணை ஒரு பிரதானி,–யேசு
நாயகன் என தெஜமானி, அதி. – தரு

2. ஆதாரம் உனை அன்றி யாரே?–எனை
அன்பாய்த் திருக்கண் கொண்டு பாரே;
பாதாரவிந்தம்[6] கதி சேரே,–இஸ்ரேல்
பார்த்திபன்[7] தவிது வங்கிஷ[8] வேரே, அதி. – தரு

3. நித்த நித்த மாக என்றன் மேலே–வருவ
தெத்தனை துன்பங்கள் ஒருக்காலே;
அத்தனையும் நீக்குதற்குன் காலே–எனக்
குத்தம துணைதான், மனு வேலே, அதி. – தரு

4. கங்குல்[9] பகலும் துயரம், கோவே;–வரும்
கலக்கம் ஒழித்தெனைத் தற் காவே!
பங் கெனக்குத் தந்த மெய் மன்னாவே,–ஏழைப்
பாவியை ரட்சியும், ஏசு தேவே! அதி. – தரு

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

---

1 ஆன்மா
2 கடல்
3 உதவியாள்
4 வானோர்
5 பெரியோர்–கனவான்
6 பாதமாகிய தாமரை
7 அரசன்
8 வம்சம்
9 இரவு

**223. இராகம்: செஞ்சுருட்டி** **ஆதிதாளம் (439)**

**பல்லவி**

**அன்பே, பிரலாபம்[1] அகற்றும், என் அன்பனே,**

**சரணங்கள்**

1. இந்த வேளை வந்து நிர்ப்பந்தம் தீரும் ஐயா;
சொந்தம் என் ஏசுதேவா, நிந்தை துயரும் நீக்கி – அன்

2. மெத்தவும் பவம் செய்தேன் சத்திய மறந்து முற்றும்;
இத்தரையை நாடி, உன் சத்துருவானேன் ஐயா – அன்

3. நோயால் வருந்தி யானும் தீயாய் எரிகின்றேனே,
நேயா, கிறிஸ்து வெனும் தூயா, என தேசுவே – அன்

4. துன்பம் துயரம் நீக்கி இன்பம் அளியும், ஐயா,
உம்பர்[2] ஒளியே, எந்தன் தம்பிரா, ஏசுநாதா – அன்

***– ச. யோசேப்பு***

**224. இராம்: கமாஸ்** **ஆதிதாளம்**

***பல்லவி***

**ஜீவனேசு கிருபாசன்னா, எனின்**
சிறுமை தீர்த்தருள் ஓசன்னா!

***சரணங்கள்***

1. காவில்[3] ஆதஞ் செய் பாவமுடவே,
கடிய பேய் நரகோடவே,
பூவுள்ளோருமைப் பாடவே, பரி
பூரண க்ருபை நீடவே. – ஜீவ

---

1 புலம்பல் 2 வானோர் 3 ஏதேன்

2. தொண்டர் பாதக ரண்டகங் கெட,
துயரமேபடும் அத்தனே,
தொண்டன் நின் சரணண்டினேன்; எனின்
நோயைத் தீர், பரிசுத்தனே! – ஜீவ

3. அடியர் அடி பெற, அலகை[1] அழல் விழ,
அரிய பொன்முடி கொடுபட[2],
படியில்[3] நான் படுங் கொடிய விடர் கெட,
பலது தீமையு முறிபட. – ஜீவ

*– தேவசிகாமணி சாஸ்திரியார்*

**225. இராகம்: காம்போதி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**ஏசுவே, கிரு பாசனப்பதியே, கெட்ட**
இழிஞன் எனை மீட்டருள்,
ஏசுவே, கிரு பாசனப்பதியே.

*சரணங்கள்*

1. காசினியில் உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து
நித்தனே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி, –ஏசுவே

2. பேயுடைச் சிறையதிலும், காய[4] வினைக் கேடதிலும்,
பின்னமாகச் சிக்குண்ட துர்க் கன்மி[5] ஆயினேன்;
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே, எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி.
–ஏசுவே

---

1 பேய்
2 கொடுக்கப்பட
3 பூமி
4 உடல்
5 செய்கையுள்ளோன்–பாவி

3. சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்ட அதி
தீரமுள்ள[1] எங்கள் உப கார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவே தீர்த்து, முற்றுமுடியக் கண் பார்த்து,
–ஏசுவே

4. பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை,
புண்ணியனே, உன் சரணம் நண்ணி[2] அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம் நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து, –ஏசுவே

***– ஜாண் பால்மர்***

**226. இராகம்: காம்போதி** **அடதாளசாப்பு (440)**

*பல்லவி*

**நின் பாதம் துணை அல்லால், வேறொரு துணை**
இல்லை,– நித்ய பரம போதா.

*அனுபல்லவி*

என் பாவம் போக்கியே கிருபை புரியும், சுவாமீ,
ஏக வஸ்துவான ஏசுக் கிறிஸ்து நாதா! – நின்

**சரணங்கள்**

1. ஆதி மனிதருக்கன் றோதியபடி மனு அவதாரமாய்ப் பிறந்தீர்;
ஜாதி அனைத்தும் உய்ய,[3] நீதிக்கென்று தலைசாய்த்துக் குருசில் இறந்தீர்;
வேதம் முழுதும் நிறைவேற்றிக் கடைசியிலே வெற்றி முடியும் சிறந்தீர்;
ஏதம்[4] இல்லாத அ னாதி திருமகனே.
எங்கும் நிறைந்திலங்கும் ஏசுகிறிஸ்தென் தேவா! – நின்

---

1 வல்லமையுள்ள
2 விரும்பி
3 பிழைக்க
4 குற்றம்

2. தேவரீருக் கேற்காத குற்றம் செய்திருந்தாலும், சித்தம் இரங்கி வாரும்;
மேவி எனது வினை யாவும் அகல இந்த வேளை எனையும் காரும்;
பாவிக்குதவியாக, மனுவேலே, நீர் பட்ட பாடனைத்தையும் பாரும்;
ஆவலாக உனை அடைந்து சரண் புகுந்தேன்;
ஆபத்தை நீக்கும், ஐயா, இப்போ மெய்யாய்! – நின்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**227. இராகம்: சங்கராபரணம்** **ஏகதாளம்**

**பல்லவி**

**நல்லனே, வேண்டல் கேள்; என் நாயனே,**
வல்லனே, அமிர்த[1] சொல்லின் வாயனே.

**சரணங்கள்**

1. அல்லலால் என் உள்ளமே–சில்லப்பட்டு[2] வெள்ளமாம்
தொல்லையில் அமிழ்ந்திக் கெஞ்சும்கால்
தூக்கிவை கன் மேட்டிலே – நல்

2. சத்துருக்கு நீங்க நீர்–கொத்தளம் தாகினீர்
பத்திரமாய் உந்தன் செட்டையில்
நித்தமு மொதுங்குவேன் – நல்

3. கோரிக்கை ஈடேற்றினை;–பாரித்தயை[3] ஊற்றினை!
சீருடன் பிழைக்க என்றுமே
திவ்ய வரம் தாருமே – நல்

4. கிருபை உண்மை காண்பியும்,
உறுப்பாய் எனை ஸ்தாபியும்
பிரசுரிப்பேன் நித்தமே – நல்

*– தீ. யோசேப்பு*

---

1 இனிய 2 துன்பப்பட்டு 3 காத்து அருள் ஊற்றுதல்

**228. இராகம்: மலையாமி** **ரூபதாளம்**

***பல்லவி***

**தேவா, திருக்கடைக்கண் பார், ஐயா!**
வினைதீர், ஐயா, வினைதீர், ஐயா.

***அனுபல்லவி***

கோவாய் உலகில் வந்த யோவா[1], சச்சிதானந்தா! – தேவா

**சரணங்கள்**

1. மேவிய தயை நிரம்பி, ஆவலுடனே விரும்பி,
பாவி எனையே திரும்பிப் பார், ஐயா, ஸ்வாமி! – தேவா

2. பொல்லா உலகம் பகை, எல்லாச் செல்வமும் புகை;
வல்லா, உனின் கிருபை கூர், ஐயா, ஸ்வாமி. – தேவா

3. அந்தி சந்தியும் விடாமல், தந்திரப் பசாசடாமல்,
எந்த விதமும் கெடாமல் ஆளுமே, ஸ்வாமி! – தேவா

4. சர்ப்பனை[2] யதாய் உலகம் இப்படித் துரோகம் செய்தால்,
எப்படி அடிமை கரை யேறுவேன், ஸ்வாமி! – தேவா

5. எத்தனை துயர் அடைந்தேன்! மெத்தவும் மன துடைந்தேன்;
சித்தம் இரங்காய், என் மணவாளனே, ஸ்வாமி! – தேவா

6. இந்தத் தினத்தில் எனக்குத் தந்த சுகத்துக்குனக்கு
வந்தனம்! அனந்தனந்தம்[3] ஸ்தோத்திரமே, ஸ்வாமி! – தேவா

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**229. இராகம்: செஞ்சுருட்டி** **ஏகதாளம்**

**பல்லவி**

**பரனே, உனை நம்பினேன்; உரமுடன்[4] தாங்கையா**

---

1 இறைவா
2 வஞ்சகம்
3 அளவற்ற
4 வலிமை

**சரணங்கள்**

1. அருள் தருவாயே; அகம் வருவாயே;
திரிவினை தீர்த்து விடுவாயே; ஓகோ! - பரனே

2. மானில மீது வரும் பலன் ஏது?
வானில் எனைச் சேர்த்திடு வாயே; ஓகோ! - பரனே

3. அலகையை[1] ஜெயித்தாய், அதின் திறம் அழித்தாய்;
உலக அழுக்கனைத்தும் துடைத்தாய்; ஓகோ! - பரனே

4. பாவிகட்காக, பரனே, நீ சாக
பூ உலகில் வந்ததற்காக, ஓகோ; - பரனே

5. தீயர்கள் உய்யத் தேவரீர் செய்ய
மாய உலகில்வந்து மாண்டாய், ஓகோ! - பரனே

6. விசுவாசம் தரவும், விசும்பில்[2] யான் வரவும்
அசுசி அகற்றவும், அடியேனே ஓகோ! - பரனே

***- ஜாண் பால்மர்***

**230. இராகம்: எதுகுலகாம்போதி ஆதிதாளம்**

***பல்லவி***

**கிருபை புரிந்தெனை ஆள்;-நீ பரனே!**
கிருபை புரிந்தெனை ஆள்;-நிதம்

***சரணங்கள்***

1. திரு அருள் நீடு மெய்ஞ்ஞான திரித்து,
வரில் நரனாகிய மாதுவின் வித்து! - கிருபை

2. பண்ணின பாவமெலாம் அகல்வித்து,
நிண்ணயமாய்[3] மிகவும் தயை வைத்து, - கிருபை

3. தந்திரவான் கடி[4]யின் சிறை மீட்டு,
எந்தை, மகிழ்ந் துன்றன் அன்பு பாராட்டு. - கிருபை

---

1 பேய்
2 வானில்
3 திட்டமாய்
4 பேய்

4. தீமை உறும் பல ஆசையை நீக்கி
சாமி! என்னை உமக் காலயம் ஆக்கி. – கிருபை

5. தொல் வினையால் வரும் சாபம் ஒழித்து,
நல் வினையே செய் திராணி அளித்து. – கிருபை

6. அம்பர[1] மீதுறை வானவர் போற்ற
கெம்பீரமாய் விசுவாசிகள் ஏத்த. – கிருபை

***– மதுரநாயகம் உபதேசியார்***

**231. இராகம்: ஆனந்தபைரவி. அடதாளம் (441)**

**பல்லவி**

**காட்டும், நல் வகை காட்டும், ஐயரே; ஏழைப் பாவிக்குமது**
கருணை அருளைச் சூட்டும் ஐயரே.

**அனுபல்லவி**

நீட்டும் கரத்தைச் சூட்டும் கிருபை
நிறைந்த நின் அருள் சிறந்த சபையில்
நாட்டுவீர், எனைத் தேற்றுவீர்; உமை
நம்பினேன், கிறிஸ்தம்பரா, என்பரா. – காட்

**சரணங்கள்**

1. கிருமியே[2], நீ திகையாதே, எனவும்,–நாம் எப்போதும் உன்தன்
கிட்டவே தரித்திருக்கிறோம், எனவும்
நெருக்கத்தில் நமைக்கூப்பிடும், எனவும்–நாம் உன்னோடிருந்து
நேச மகிமை அருள்செய்வோம், எனவும்,
வருத்தத்துடனே பாரம் சுமந்து
வந்தோர்களின் நிர்ப்பந்தம் அகல
உரித்தாய் ஆறுதல் செய்வோம்; எனவும்
உரைத்த யாவையும் நினைத்துத் தேற்றும் – காட்

---

1 வானுலகு 2 புழு

2. தேடுங்கள், கண்டடைவீர்கள் எனவும்–தட்டுங்கள், அப்பொழுது
திறந்திடப்படும் உங்களுக்கெனவும்
நாடிப் பணிந்து கேளுங்கள், எனவும்,–அப்பொழுதுங்களுக்கு
நலமுடன் கொடுக்கப்படும், எனவும்
சூடும் கிருபைத் திருவாய் மலர்ந்து
சொன்ன உமது நன் மொழிப்படிப்
பாடும் அடியேன் பலன் பெற நீர் என்
பங்கிலே தங்கும், விளங்கிய தெய்வமே – காட்

3. பெரு வானும் பூவும் ஒழிந்துபோயினும்–என் திருஉரை ஒன்றும்
பிசகிடா தென்றீர், இது மெய்யே என்றும்;
பருவதங்கள் நிலை விலகினும்–மேடாக உயர்ந்த
பலத்த குன்றுகள் யாவும் சாயினும்
கிருபையும் சமாதானமும் நிறைந்த
கீர்த்தியன் எனதுடம்படிக்கையும்
ஒரு போதும் உனை விட்டிடாதென
உரைத்தவா, எனை நினைத்துத் தேற்றுமே – காட்

***– மரியான் உபதேசியார், திருநெல்வேலி.***

## 232. இராகம்: ஆனந்தபைரவி ரூபகதாளம்

*பல்லவி*

**நம்பினேன், உன தடிமை நான், ஐயா;–திடப்படுத்தி என்தனை–**
நடத்திக் காப்ப துன்கடமை தான், ஐயா

*அனுபல்லவி*

உம்பரும்[1] புவி நண்பரும் மற்ற
உயிர்களும் பல பொருள்களும் தொழும்
தம்பிரானே, மெய் யம்பராபரா,
தாசன் மீது நன் னேசு அருள் செய். – நம்பி

1 வானவரும்

***சரணங்கள்***

1. தீதாம் என் பாவம் யாவையும் பொறுத்து,–திருக் கருணையின் அருள்
செய்து பின்வரும் இடர்களை அறுத்து,
வேதாந்தப்படி என்னைத் தான் வெறுத்து–நான் உனைப்பின் செல்ல, உன்
மெய் அருளை என் உள்ளத்தில் நிறுத்து;
ஆதாரம் எனக்கார், உனை அன்றி?
அம்புவியில்[1] யான் நம்ப வேறுண்டோ?–உன்
பாதா தாரத்தில் ஒதுங்கினேன்; எனைப்
பாரும், கிருபையைத் தாரும், ஐயனே! – நம்பி

2. என்னைப் படைத்த தேவனும் நீயே; திரு உதிரத்தைச் சிந்தி
ஈடேற்றிக் கொண்ட மீட்பனும் நீயே,
இன்னமும் பின்னும் காப்போனும் நீயே;–ஒருபோதும் குன்றிடா
இன்பத்தில் வைக்கும் ஜீவனும் நீயே,
உன்னை யன்றி யான் சொன்னவை வேற
துண்டோ? உன்தன் வாய் நிண்டுரை செய்யேன்,
ஏன் ஐயா, இதை யாவும் சொல்லுமே;
ஏழைக்குன் திருத்தாள்[2] அருள் செய்யுமே – நம்பி

3. சுத்த இருதயத்தினைத் தருவாய்–பரிபூரணானந்த
ஜோதி ஆவியின் நல்துணை அருள்வாய்,
நித்தமும் பய பக்தியைத் தருவாய்;–நான் ஊழியஞ் செய்ய,
நீதனே, எந்தன் முன் எழுந்தருள்வாய்;
அத்தனும் அனு கூலனுமான
பத்தனே; பரிசித்தனே, உனைப்
பாடினேன்; கிருபை சூடி ஆள், ஐயா! – நம்பி

---

1 உலகு 2 திருப்பாதம்

3. ஊக்கமும் மனத்தீர்க்கமும் வேணும்;–சுவிசேஷ உரையை
உற்றுப் பார்த்ததில் தேறவும் வேணும்;
ஆக்கமும் அன்பர்ச் சேர்க்கையும் வேணும்;–உனக்கூழியம் செய்ய
ஆவியும் அதின் ஈவதும்[1] வேணும்;
ஏக்கமும் மனக்கவலையும் நித்ய
இன்பமுள்ள உன் அன்பின் நல்திரு
வாக்கையே நோக்கி இருப்பதால் என் முன்
வாரும், கிருபை தாரும், ஐயரே! – நம்பி

***– மரியான் உபதேசியார்***

### 233. இராகம்: இந்துஸ்தானி ரூபகதாளம் (442)

**பல்லவி**

**பாக்கியம் தந்தருளே–பர–மானந்த மெய்**
பொருளே–மெய்ஞ்ஞான

**அனுபல்லவி**

வாக்குத் தத்தத்தின்படி வார்த்தை மாமிசமாக
வானத்திலிருந்து வந்த ஞான குணா நிதியே – பாக்

**சரணங்கள்**

1. சத்ய கிருபா சன்னா–கனம்–உற்ற தயாள மன்னா.
நித்ய திரித்வமின்னா–கதியின்–நிமலா, உமக்கே ஓசன்னா!
மொத்த உலகினாலே கஸ்தி அனுபவிக்கும்
புத்ரர் அனைவருக்கும் நித்ய அனந்தமான – பாக்

2. இரட்சிப்பின் செங்கோலோ, ஞான–நீதி நெறி நூலா
அச்சய அனுகூலா,–அன்பான–ஆனந்த தயை ஞாலா
உச்சித மேலாம் பரம உன்னத விசால சீலா;
நிச்சயம் அனக்கிரகித்தாள், முச்சுடர் ஒன்றான மூலா – பாக்

***– தைரியம் ரைட்டர்***

---

1 வரங்கள்

**234. இராகம்: பியாகடை** **ரூபகதாளம் (443)**

*பல்லவி*

**ஆரணத்[1] திரித்துவமே,–எமை**
ஆண்டருள், மகத்துவமே.

*அனுபல்லவி*

பூரண தேவ பிதா, சுதன், ஆவியே,
பொன்னுலகத்தெழும் உன்னதமான
போத க்ருபையா பத்ததி[2] நீதிச் சுடரே, நித்திய – ஆரண

*சரணங்கள்*

1. அன்றன்றை அப்பத்தைத் தாரும்;–எங்கள்
ஆபத்தனைத்தையும் தீரும்;
இன்றும் என்றெங்களைச் சேரும்;–திரு
இரக்கத்தால் முகம் பாரும்;
நன்றி கெட்டோர்களைக் கொன்று போடாதேயும்;
நம்பரா, கருணாம்பரா,
ஞானத் தனு மானத் தொளிர்
மேன்மை திவ்விய பானத்தருள். – ஆரண

2. மூவர் ஒன்றான யெகோவா,–உயர்
முக்ய கிருபையின் தேவா,
மேவி அடியாரைத் தேவா,–பல
வெவ்வினையினின்றும் கா, வா;
பாவிகள் நாங்கள் ஏவையின் மக்களே,
பக்ஷமே[3], பரம பொக்ஷமே,
பாடும் புகழ் நாடும் பரி
வோடும் தயை நீடும்பரா! – ஆரண

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

---

1 ஆரணம்–வேதம் 2 ஒழுங்கு 3 இரக்கம்

**235. இராகம்: புன்னாகவராளி** **அடதாளம்**

*பல்லவி*

**ஆதியாம் மகா ராஜனே,–எந்த வேளையும்**
அடிய னோடிரும், ஈசனே

***அனுபல்லவி***

தீதில்லா சருவேசா, தேசுறும்[1] பிரகாசா,
பாதகன் யான் மிகு பலவீனன் ஆனதால், –ஆதி

**சரணங்கள்**

1. பாவி பெலனால், ஐயனே,–நின்றால் என்னைப்
பகைவர் ஜெயிப்பார், மெய்யனே;
தேவா, துணை நீர் ஐயனே;–சிறியனிடம்
சேர்ந்தே வசியும், துய்யனே[2],
மேவும் தஞ்சம் எனக்கு வேண்டும், காவலன் நீரே;
சாவுவரையும் என்னைத் தாங்கி அரவணையும். –ஆதி

2. இரக்கம் பொழிய வாருமே,–கிருபையாக,
இறைவா, என்னிடம் சேருமே;
உருக்கம் நிறைந்த நீருமே;–அனவரதம்[3]
உந்தம் அருளைத் தாருமே;
செருக்காய் எம் மீதி கலோர்[4] சேதம் செய்ய நினைக்கும்
திருக்கை[5] அகற்றி என்னில் தினமும் அருள்புரியும். –ஆதி

3. என்தன் மரண மட்டுமே–அருகில் நீரே
இருந்தால் மகா இஷ்டமே
எந்த அகிதர்[6] கெட்டுமே–இமைப்பொழுதில்
ஏகிப் போவார் திட்டமே;
தந்தை சுதன் நீரல்லால் தஞ்சம் வேறாரும் இல்லை;
விந்தைமேவும் கதியில் மேன்மையுடன் வாழ்கவே! –ஆதி

*– ச. யோசேப்பு*

---

1 ஒளி
2 தூயவரே
3 தினந்தோறும்
4 பகைவர்
5 வஞ்சகம்
6 தீயர்

**236. இராகம்: காம்போதி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**காரும், கிறிஸ்தேசுவே, எனைக் காரும், கிறிஸ்தேசுவே;**
சிறியேன் தனைக் கை நெகிழாமல், நீர் காரும், கிறிஸ்தேசுவே

**சரணங்கள்**

1. சாரும் துணை நீர் அல்லால், பாரின்[1] மிசை வேறிலை;
தயை மல்கிய உம்மிடத்தே எனைக் – காரும்

2. துட்ட மைந்தனைப் பிதா விட்டதில்லை, என்றுரைத்
திட்ட வசனப்படியே எனைக் – காரும்

3. வஞ்சமதில் நீங்கி உன் தஞ்சமதில் ஓங்க என்
நெஞ்சிலும் கிருபை செய் தெளி யேனை நீர் – காரும்

4. துர்க்குணத்தைத் தாக்கவும், நற்குணத்தைக் காக்கவும்,
சற் குணத்தா ரோடுறவாகவும் – காரும்

5. வன் மனம் உருகவும், நன் மனம் வருவகவும்;
கன் மனத்தோர்க் காம் வழி பகரவும் – காரும்

***– தேவவரம் முன்ஷி***

**237. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதிதாளம்**

**சரணங்கள்**

**அடியேன் மனது வாக்கும் கொடிய நடத்தையுமே**
ஆவியால் சீர்படுத்தும், ஸ்வாமீ.

2. உமக்கே யான் சொந்தம்; தீயோர் தமக் கந்நியனாய்ப் போக
உதவும் எளியேனுக்கென ஸ்வாமீ!

---

1 உலகில்

3. பூமியில் வசித்தும், நீர் தாமே எனது வாஞ்சை;
புகலிடம் அளியும், என் ஸ்வாமீ.

4. சஞ்சல மேதெனக்கு? பஞ்சம் படைகளேது?
தஞ்சம் நீர் தாம் எனக்கென் ஸ்வாமீ.

5. விண்ணி லோரிடமும், யான் மண்ணுலகை வெறுக்க
மெய்த் தவமும் தாரும். என் ஸ்வாமீ.

***– தேவவரம் முன்ஷி***

**238. இராகம்: இந்துஸ்தான் காபி ஆதிதாளம்**

***பல்லவி***

**ஏற்றுக் கொண்டருளுமே, தேவா–இப்போ**
தேழையேன் ஜெபத்தை யேசுவின் மூலம்.

***சரணங்கள்***

1. சாற்றின ஆதி ஆயத்த ஜெபமும்,
சாந்தமாய் ஜெபித்த பாவ அறிக்கையும்,
தேற்றிக்கொண்டருளும் மன்னிப்பின் மருவும்[1]
யேசுவின் பாதத்தில் வைக்கிறேன், ஸ்வாமி – ஏற்றுக்

2. குறைவுண்டு இதிலே, அருமைப் பிதாவே,
குற்றம் மன்னித்திடும் யேசுவின் மூலம்;
முறைப்படி கேட்க நான் தெரியாத பாவி;
முழுதும் மேசையாமேல் வைக்கிறேன், ஸ்வாமி. – ஏற்றுக்

3. மறுரூப ஆவி வேண்டுமென் ஸ்வாமி;
மனமெல்லாம் புதிதாக்கிடும் ஸ்வாமி;
சிறுமைப்பட் டடியேன், கேட்கிறேன் ஸ்வாமி;
தேற்றிடும், புது பெலன் ஊற்றிடும், ஸ்வாமி. – ஏற்றுக்

---

1 வாசனை

4. விசுவாசம் பெருகி நிலைத்திடச் செய்யும்;
வெளிப்படும் மறைபொருள் பலப்படச் செய்யும்;
சிசுவைப் போல் மறுபடி பிறந்திடச் செய்யும்;
தேவாவி என்னுளந் தங்கிடச் செய்யும். – ஏற்றுக்

***– அருளாநந்தம் பிரசங்கியார்***

**239. இராகம்: பைரவி ஆதிதாளம்**

***பல்லவி***

**ஆ! இன்ப கால மல்லோ–ஜெப வேளை?**
ஆனந்த காலமல்லோ?

***அனுபல்லவி***

பூவின் கவலைகள் போக்கி என் ஆசையை
பொன்னுல காதிபன் முன்னே கொண்டேகிடும். – ஆ!

***சரணங்கள்***

1. துன்பம் துயர் நீக்கி,–பொல்லாங்கன்–சோதனைகள் போக்கி
அம்பர[1] வாசிகளோ–டிதயத்தை–இன்ப உறவாக்கி
கெம்பீரமாகவே தம்பிரான் ஆசனம்
கிட்டி மகிழ்வுடனுற்று வரச் செய்யும். – ஆ!

2. ஜீவ ஆறுதல் பெற்று,–பிஸ்காவின்–சிகரமதனில் உற்று,
தேவ நகர் கண்ணுற்று–சடலத்தை[2]–ஜெகத்தில் எறிந்துவிட்டு,
ஆவி களிப்புடன் ஆகாயஞ் செல்லவே,
அன்போடு பார்த்து நல் வந்தனஞ் சொல்லுவேன். – ஆ!

***– அருள்திரு. ம. வேதமாணிக்கம்***

**240. இராகம்: கமாசு ஆதிதாளம்**

**பல்லவி**

**வாருமே வழி காட்டுமே–யேசு, வறியன் என் கலி ஓட்டுமே.**

1 வானோர் 2 உடல்

**சரணங்கள்**

1. சீரில்லான் மிகப் பாடுள்ளோன்; சிறியன் யான், துயர் நீடியே,
பாரினில் பலவீனனாயினன்; பண்புடன் தயை யீயவே – வாருமே

2. இந்த லோகம் மிகுந்த கேடுதான்; இங்கிருப்பது பாடுதான்;
வந்து ஞான காரந் தந்தெனை வழி நடத்தியே காத்திட–வாருமே

3. ஜீவ நீரது சுரக்கும் ஊற்றினைத் திறந்து தாகத் தீரையா;
தீபமேக ஸ்தம்பங் காட்டியே, செல்வழியில் நடத்தையா
–வாருமே

4. சாவின் அந்தகாரம் வந்தெனை சாலவுந் திகிலாக்கையில்,
மேவியேயருள் வெற்றி தந்தென்னை விண் கதியினில் ஏற்றவே
– வாருமே

***– ப.ஈ. யோவான்***

**241. இராகம்: மோகனம்** **அடதாளசாப்பு (444)**

**பல்லவி**

**பாவப்பாரில் உன்னத–சமாதானம்; ஓ!**
தேவ வாக்கிதுவல்லோ?

**சரணங்கள்**

1. பாவீ, உன்தனுக் கிந்த ஓவிய வாக்கை யீந்த
பாவநாசர் யேசுரத்தம் ஆறுதலைப் பேசுஞ் சத்தம். – பாவப்

2. கடுத்த வேலை கூடவே, வருத்தந் தொல்லை நீடவே,
கர்த்தரின் சித்தந்தனைக் கருத்தாய்ச் செய்வ தாறுதல், மா
– பாவப்

3. உறவர், நம் முற்றநேசர் புறமொதுங்கினும் ஏசு
உறங்காது யாவரையும் உரமாக அரவணைப்பார். – பாவப்

4. வருங்கா லானவைகளும் மரண கால விருளும்
அருகுறவே ஏசுவேந்தர் அருளுவர் சமாதானம், மா – பாவப்

5. பரமானந்தமே யோங்கும், தரணித் துன்பமும் நீங்கும்,
பரலோகச் சமாதானப் பரவசம் ஆகுவோம் நாம். – பாவப்

***– ஜா.ச. சாண்ட்லர்***

**242. இராகம்: செஞ்சுருட்டி ஆதிதாளம்**

**பல்லவி**

**சதி பேய் செயுது, துணை நீயே,**

**அனுபல்லவி**

முதல்வா, கிருபை செய்யும் உன் மைந்தனை நினைத்து, சதி

**சரணங்கள்**

1. மயல்[1] வலைவீசுதே, மருட்டியும்[2] ஏசுதே;
துயரமோ டனுதினம் தூறு[3] பேசுதே – சதி

2. கவலை புரியுதே, கனல் போல் எரியுதே;
எவரை விழுங்கலாம் என்று திரியுதே – சதி

3. மிகை வலி[4] மூட்டுதே மிகப்பயம் காட்டுதே;
அகலக் கெடுத்துவிட்டையோ! குற்றம் சாட்டுதே – சதி

4. சிங்கமாய்க் கெர்ச்சிக்குதே; சீறி, எதிர் நிற்குதே
கங்குல், பகல் என்மேல் கனல்கணை[5] இறைக்குதே – சதி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

1 பிசாசு
2 பயமுறுத்தி
3 பழிச்சொல்
4 துன்பம்
5 அக்கினியம்பு

**243. இராகம்: ஆனந்தபைரவி** **அடதாளசாப்பு (445)**

**பல்லவி**

**மன வாதை[1] அடைந்த கனபாதகன் வஞ்சம்**
அறவே கிருபை கூர், ஐயா,

**அனுபல்லவி**

ஜனவானவர் சங்கம் அனைவோரும் வணங்கும்
தவிராஜ்[2] சுதந்தரா, திவ்ய ஏசு நாதேந்திரா – மன

**சரணங்கள்**

1. பாவிக்குந்தன்மேல் விசுவாசமே–திருப்
பாதம் துணை தரும் விலாசமே,
ஜீவனே, நீர் எனக்கதி நேசமே;–தேவரீர்
சித்தத்தின்படி நடக்கச் செய்யும், ப்ரகாசமே – மன

2. கடி[3]யும் கொடுமையாகச் சீறுதே; மாய
கலக உலகும் பழி கூறுதே;
சடமும்[4] திடம் இல்லாமல் மாறுதே;–மிகத்
தயங்கி, மனதெல்லாம் வே[5] சாறுதே, சுவாமி – மன

3. நியாயப் பிரமாணம் குற்றம் சாட்டுதே; என்றன்
நடக்கை எலாம் பொல்லாப்பில் மட்டுதே
மாயப் பிரபஞ்சம் இச்சை காட்டுதே, பாவ
வழியில் என்னை இழுத் தாட்டுதே, சுவாமி – மன

4. கங்குல் பகலும் கண்ணீர் ஓட்டுமே;–நித்தம்
கவலை பிடித்தென் முகம் வாட்டமே;
எங்கே பார்த்தாலும் மா போராட்டமே;–கெட்ட
ஏழைக்குன் பதத்தில் மன்றாட்டமே, சுவாமி – மன

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 துன்பம்
2 தாவீது
3 பிசாசு
4 உடல்
5 சோர்வு

**244. இராகம்: இந்துஸ்தான் காபி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**ஐயா, உமது சித்தம் ஆகிடவே வேணும்,**

*அனுபல்லவி*

மெய்யாய் எனது சித்தம் வெகுமோசமே காணும்; – ஐயா

*சரணங்கள்*

1. ஆடுபோல் வழிதப்பி அவனவன் வழியொப்பிக்
கேடடைந்தோர் பாவத்தைக் கிறிஸ்துமேல் சுமத்தினீர். – ஐயா

2. ஜீவனோ, மரணமோ, செல்வமோ, வறுமையோ,
யாவி[1]லெனை நிறுத்த தேவரீர் நினைக்கினும். – ஐயா

3. வசை, இசை,[2] பகை, நேசம், வாழ்வுயர் வதிமோசம்,
பசி, நிருவாணம், நாசம், பாடு, நோயடைகினும் – ஐயா

4. என்னிஷ்டம் வாயாததால்[3] எத்தனை துயர்கொண்டேன்,
பொன்னடிக் கீழடங்கிப் புகழுமக்கென்று வாழ்வேன். – ஐயா

5. குயவன்கைக் களிமண்ணாய்க், குருவே யுமக்கமைவேன்,
நயமிது வென் றறிந்த ஞானமுள்ள பிதாவே! – ஐயா

*– அருள்திரு. ஜி.சே. வேதநாயகம்*

**245. இராகம்: இங்கிலீஷ்** **ஆதிதாளம்**

*பல்லவி*

**தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ?**
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே.

*அனுபல்லவி*

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார். – தேவ

---

1 எதில் 2 புகழ் 3 வாய்க்காமல்

*சரணங்கள்*

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி,
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார். – தேவ

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்,
சற்றும் தீங்குக் கண்டஞ்சேனே;
வானபரன் என்னோடிருப்பார்,
வளை தடியும் கோலுமே தேற்றும். – தேவ

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்,
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார். – தேவ

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்,
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன். – தேவ

*– தீ. யோசேப்பு*

**246. இராகம்: இந்துஸ்தானி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்**
கென்ன குறைவுண்டு? நீ சொல், மனமே.

*சரணங்கள்*

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுல குயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்,
மித்திரனே[1], சுகபத்திர மருளும். – என்

---

1 நண்பன்

2. பாபமோ, மரணமோ, நரகமோ; பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்,
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்;
சஞ்சலமினியேன்? நெஞ்சமே, மகிழாய். – என்

3. ஆசிசெய்திடுவார், அருள்மிக அளிப்பார்,
அம்பரந்[1] தனிலெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்;
மோட்சவழி சத்யம் வாசல் உயிரெனும். – என்

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்,
கடைசிமட்டும் கைவிடா திருப்பார்;
பவமனிப் பளிப்பார், பாக்கியங் கொடுப்பார்,
பரம பதவியினுள் எந்தனை எடுப்பார் – என்

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**247. இராகம்: செஞ்சுருட்டி ஆதிதாளம்**

***பல்லவி***

**நம்பிவந்தேன் மேசியா, நான் நம்பிவந்தேனே,–திவ்ய**
சரணம்! சரணம்! சரணம் ஐயா, நான் நம்பிவந்தேனே.

***சரணங்கள்***

1. தம்பிரான் ஒருவனே, தம்பமே[2] தருவனே;–வரு
தவிது குமர குரு பரமனுவேலே, நம்பி வந்தேனே. – நான்

2. நின்பாத தரிசனம் அன்பான தரிசனம்;–நித
நிதசரிதொழுவ திதம் எனவும் உறுதியில் நம்பிவந்தேனே. – நான்

3. நாதனே, கிருபை கூர்; வேதனே, சிறுமை தீர்;–அதி
நலம் மிகும் உன திருதிரு வடி அருளே நம்பி வந்தேனே – நான்

4. பாவியில் பாவியே, கோவியில் கோவியே,[3]–கன
பரிவுடன் அருள் புரி, அகல விடாதே; நம்பி வந்தேனே – நான்

---

1 வானுலகம் 2 பற்றுக்கோடு 3 கோபம் உள்ளவன்

5. ஆதி ஒலோலமே,[1] பாதுகா காலமே[2]–உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த; நம்பிவந்தேனே – நான்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**248. இராகம்: புன்னாகவராளி** **அடதாளசாப்பு**

**பல்லவி**

**நல்வழி, மெய், ஜீவன் எனும் நாம[3] தேயனே,–உனை**
நம்பினேன், ஏழைக்கிரங்கி ஆள், என் நாயனே.

**அனுபல்லவி**

செல்வழி விலகு தீயர் ஜீவனில் சேர–நர
ஜென்மமாய் மரித்துயிர்த்தாயே, வினைதீர;
திருமறை வேதா, அருள் நிறை போதா,
கருணை மெய்த் தாதா, உரிமையுள்ளெம் ஏசுநாதா! – நல்

**சரணங்கள்**

1. சத்தியத்தையே போதிக்கும் சத்தியம் நீயே;–அந்த
சத்தியத்தில் நான் நடக்கச் சக்தி ஈவாயே;
சுத்தமறையாம் சுவிசே டத்தை ஈந்தாயே;–அதின்
சுத்தாங்க மெய்ம்மை உணர்த்து வித்தருள்வாயே;
தொழுதகம் நேர்ந்தேன், அழுதகம் ஓர்ந்தேன்,[4]
எளியனுள் சோர்ந்தேன், முழுதுமே சார்ந்தேன் உனதடி – நல்

2. செத்த பிரேதம் போல் செயல் அற்றவன் நானே–நல்ல
ஜீவனைக் கொடுக்கும் நித்ய ஜீவன் நீ தானே;
முத்தி நெறி காட்டும் மார்க்கம், சுத்த நல் தேனே,–அதின்
மூலம் நான் உயிர்க்க உனதாவி ஈ, கோனே;
முடவியல்[5] மாற, நடையது தேற,
அடமது[6] பாற,[7] திடமனதாய்க் கரையேற. – நல்

*– ஜாண் பால்மர்*

---

1 வார்த்தையானவர்
2 காலங்கள் தோறும்
3 பெயருடையவர்
4 ஆராய்ந்தேன்–உணர்ந்தேன்
5 ஊனம்
6 பிடிவாதம்
7 அழிய

**249. இராகம்: துசாவந்தி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**சிந்தனைப் படாதே, நெஞ்சமே,–உனை ரட்சித்த**
தேவ சுதன் இருக்கிறார்.

**அனுபல்லவி**

அந்தியும் சந்தியுமாக ஆர் பகை செய்தாலும் என்ன?
எந்த வினை வந்தும், மயிர் எண்ணப்பட்டிருக்கையிலே. – சிந்

**சரணங்கள்**

1. ஐந்து சிட்டு ரண்டு காச தாக விற்றும் அங்கதில் ஒன்
றும் தரையி லேவிழாதென் றுத்தமன் உரைத்திருக்க,
புந்தியில்[1] விசாரமுடன் போக்கிடம் அற்றவர் போல,
சந்தேகத்தினால் உழன்று, தவித்துத் தவித்து நின்று. – சிந்

2. சோங்கில்[2] அயர் சீடரின் முன் பாங்குடன் தயவளித்துத்
தூங்கினோர் உனையும் வந்து தாங்குவார், என வந்தாலும்;
ஓங்கும் இஸ்றாவேல் ராசன் தூங்கவும் இலையே; சும்மா
ஏங்கி ஏங்கிச் சஞ்சலம் கொண்டேமாந்து ஏமாந்துநின்று – சிந்

3. எத்திசையினும் அடர்ந்த சத்துரு எல்லாம் ஜெயம்கொண்
டத்தனின் வலத்தில் நித்திய துத்தியத்[3] திருத் தரசாள்
கர்த்தனாம் கிறிஸ்துநாதர் சித்தம தல்லாமல் வீணில்
தத்தி[4] விழுந்தென்ன வரும், பித்தது பித்தது கொண்டு. – சிந்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**250. இராகம்: கரஹரப்பிரியை** **ரூபகதாளம்**

***பல்லவி***

**அஞ்சாதே யேசு ரட்சகர்**
ஆத்மத் துயர் நீக்க வல்லவர்.

---

1 புகழ்
2 படகில்
3 புகழ்
4 குதித்து–தடுமாறி

*அனுபல்லவி*

வஞ்சமே மிஞ்சுமா? பஞ்ச பாதகன் நானென்று. –அஞ்

*சரணங்கள்*

1. திருடன் ஒருவன் மரிக்கும் வேளையில்
திருச்சுதன் பதம் தழுவி நற்கதிக்
கருள் பெற்றான், என் வேதஞ் சொல்வதை
ஆய்ந்து மனஞ் சாய்ந்து நீ செல். –அஞ்

2. வெள்ளிக் காசொன்றை இழந்து விட்டவள்
வீட்டைப் பெருக்கிப் பார்த் தெடுத்தபின்,
துள்ளிப் பூரிக்கும் போதுன் மேலே
தூதர் சங்கமும் களிப்பதாலே. –அஞ்

3. மேய்ப்பன் மந்தையை விலக்கின ஆட்டை
வெகு கவலையாய்த் தேடிக் கண்டபின்,
வாய்ப்புடன் மனம் மகிழும் போலே
மானுவே லுனைத் தழுவாமலே. –அஞ்

4. தொண்ணூற் றொன்பது நீதிமான்களில்
துயரடை பாவி யொருவன் மீதினில்
எண்ணருந் தூதர் மகிழ்வதாலே
ரட்சிப் புனக்குப் பலித்ததாலே. –அஞ்

5. மரணத்தின் கூரை ஒடித்த வல்லவன்
வருந்தி அழைத்த விருந்துக்கு வரத்
தருணம் ஈதெனத் தாசர் கூடி,
சாற்றும் மொழியை ஏற்று நீவர. –அஞ்

***– லுத்தரன் பாடல்***

**251. இராகம்: தன்சரி** **ஆதிதாளம்**

*பல்லவி*

**நெஞ்சே நீ கலங்காதே;–சீயோன் மலையின்**
இரட்சகனை மறவாதே;–நான் என்செய்வேனென்று.

***அனுபல்லவி***

வஞ்சர் பகை செய்தாலும், வாராவினை பெய்தாலும் – நெஞ்சே

***சரணங்கள்***

1. வினைமேல் வினை வந்தாலும்,–பெண்சாதி பிள்ளை,
மித்ரு[1] சத்ரு[2] வானாலும்,
மனையொடு கொள்ளை போனாலும், வானம் இடிந்து
வீழ்ந்தாலும். – நெஞ்சே

2. பட்டயம், பஞ்சம் வந்தாலும்,–அதிகமான
பாடு நோவு மிகுந்தாலும்,
மட்டிலா வறுமைப் பட்டாலும்,
மனுஷர் எல்லாம் கைவிட்டாலும் – நெஞ்சே

3. சின்னத்தனம் எண்ணினாலும்,–நீ நன்மை செய்ய
தீமை பிறர் பண்ணினாலும்,
பின்ன பேதகம்[3] சொன்னாலும்,
பிசாசு வந்தணாப்பினாலும்[4] – நெஞ்சே

4. கள்ளன் என்று பிடித்தாலும்,–விலங்கு போட்டுக்
காவலில் வைத் தடித்தாலும்,
வெள்ளம் புரண்டு தலை மீதில்
அலை மோதினாலும். – நெஞ்சே

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**252. இராகம்: செஞ்சுருட்டி பிலந்திதாளம்**

**பல்லவி**

**என்னோ பல நினைவாலும் நீ உன்னை அலைக்கழிப்பாய்?**

**அனுபல்லவி**

மன்னர்கள் மன்னவன் ஆகிய யேசு உன்
மன்னவராய் இருக்கையிலே. – என்னோ

---

1 நண்பன்
2 பகைவன்
3 தவறான குற்றச்சாட்டு
4 ஏமாற்றினாலும்

**சரணங்கள்**

1. அன்னை யிடத்துருவாய், உன்னை
அமைத்த தந்தை அல்லவோ?–பின்னும்,
ஆகாரமும் உடையும் ஜீவனும்
அளிப்பதவர் அல்லவோ? – என்னோ

2. மாதானவள்[1] சேயை[2] ஒரு வேளை
மறந்தாலும்,–உன்னை
மறவோம் ஒருகாலும், என
வார்த்தை கொடுத்தாரே – என்னோ

3. இஸ்ரேலரைக் காப்போர் உறங்கிடுவோர்,
என நினையேல்;–அவர்
நிசமாக உன் வலப்பாகத்தில்
நிழல் ஆவர் என்றறிவாய். – என்னோ

4. சிங்கங்கள் பட்டினியாய் இருக்கக் கண்டேன்,
தேசம் எங்கும் சுற்றிப் பார்த்தும்,–தேவ
சேயர்கள் பட்டினியாகக் காணேன்,
என்ற திவ்ய உரையும் பொய் ஆமோ? – என்னோ

5. தேகமும் கெட்ட உலகமும் பேயும்
திரண்டு உனைப் பொருதாலும்[3], அதை
ஜெயித்த யேசு உன் மன்னவர்,
ஆகையில் சிந்தனை வேறென்ன உனக்கு? – என்னோ

6. தேவ பிதா நின் பிதாவும் இயேசு
நின் சிநேகிதரும் சுத்தாவி–உன்தன்
தேற்றர வாளனும் ஆவதைப்பார்க்கிலும்,
தேவை உனக்கொன்றும் இல்லையே. – என்னோ

***– சவரிமுத்து உபாத்தியாயர்***

---

1 தாய் 2 பிள்ளையை 3 சண்டை செய்தாலும்

**253. இராகம்: பிலகரி** **ஏகதாளம்**

*பல்லவி*

**உனக் கொத்தாசை வரும் நல் உயர் பருவதம்,–இதோ!**

*அனுபல்லவி*

தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவோனே. – உனக்

*சரணங்கள்*

1. வானம் புவி திரையும்[1] வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ? – உனக்

2. காலைத் தள்ளாட வொட்டார், கரத்தைத் தளரவொட்டார்;
மாலையுறங்கமாட்டார்; மறதியாய்ப் போகமாட்டார். – உனக்

3. கர்த்தருன் னைக்காப்பவராம், கரமதில் சேர்ப்பவராம்;
நித்தியமு முந்தனுக்கு நிழலாயிருப்பவராம். – உனக்

4. பகலில் வெயிலெனிலும், இரவில் நிலவெனிலும்,
துயர் தருவதுமில்லை, துன்பஞ் செய்வதுமில்லை. – உனக்

5. தீங்கு தொடராதுன்னை, தீமை படராதுன்மேல்;
தாங்குவார் தூதர் கோடி, தாளிடறாதபடி. – உனக்

6. போக்கும் ஆசீர்வாதமாம், வரத்தும் ஆசீர்வாதமாம்;
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பிவிடுமே. – உனக்

7. துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்,
இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே. – உனக்

***– பாளையங்கோட்டைப் பாடல்***

---

1 கடல்

**254. இராகம்: பியாகடை** **ஆதிதாளம்**

*பல்லவி*

**நல்லாயன் ஏசு சாமி, ராஜ தாவீதுடை மகவு,–**
ஒரே மகவு, ஆட்டுக்காய் உயிர் தாரார்.

*சரணங்கள்*

1. எல்லார்க்கும் பெரியான், எம்பிரான் தம்பிரான்,
ஏகவஸ்தோரே ஏகோவா,–மா
தேவ கிறிஸ்து நீ கா, வா, வா. – நல்

2. மன்னர் மன்னர் கொண்டாடிய நீடிய
வானப் பரமகு மாரா வோ,–அதி
ஞானத் திறம் மிகும் வீராவோ. – நல்

3. விண்ணாடர் முழங்க, மண்ணாடர் விளங்க,
மேவி வந்தமே சையாவே,–படு
பாவி சொந்தம் ஏசையாவே. – நல்

4. சீராட்டுக் காட்டி எந்தையார், தந்தையார்
திருக்கடைக் கண்ணால் பார்த்தாரே;–வந்து,
திரும்பத் திரும்ப எனைச் சேர்த்தாரே. – நல்

5. ஆட்டைக் கூட்டி ஓர் தொழுவத்தில் அடைப்பார்,
அரிய நல்ல மேய்ச்சல் கொடுப்பார்,–அன்
பாகத் தோளினிலே எடுப்பார். – நல்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**255. இராகம்: சங்கராபரணம்** **ஏகராளம்**

**பல்லவி**

**ஏசையா, பிளந்த மலையே**
மோச நாளில் உன்னில் ஒளிப்பேனே.

**சரணங்கள்**

1. மோசமுள்ள பாவ நோய் முழுவதும் என்னில் தீர், ஐயா;
தோஷம் நீக்கும் இரு[1]மருந்தாமே–சொரிந்த உதிரம் நீருமே.
– ஏசையா

2. இகத்தில் என்னென் செய்தாலும் ஏற்காதே உன் நீதிக்கு,
மிகவாய் நொந்தழுதும் தீராதே–மீளாப் பாவரோகமே; – ஏசையா

3. பேரறம் அருந்தவம் பெருமிதமாய்ச் செய்திடினும்,
நேரஸ்தரின்[2] பாவம் நீங்குமோ?–நீங்காதே உன்னாலல்லால்;
– ஏசையா

4. வெறுங்கையோடோடி வந்து, வினை நாசன் பேரருள் கெஞ்சி
திருச்சிலுவை தஞ்சம் புகுந்து,–தியங்கி அணைத்தே நிற்பேன்;
– ஏசையா

5. அருளிலிருளோன் ஆனாலும், அபயமுன் தன் நீதிக்கே!
கருணை ஊற்றில் கழுவமாட்டாயோ?–கழுவாயாகில்
சாவேனே; – ஏசையா

6. ஜீவனோடே தங்கினாலும், தெளிகண் சாவில் மங்கிலும்,
தேவாசனமுன் அஞ்சி நிற்க–தேவலோக மேறிலும், – ஏசையா

***– உயர்அருள்திரு. ஆர்.சி. கால்டுவெல்***

**256. இராகம்: மலையாமி** **திரிகரதாளம் (446)**

**பல்லவி**

**நித்திய கன்மலை எனக்காய்ப் பிளந்தது**
நேயமாய் மறைந்துய்குவேன்

---

1 அரிய 2 பாவி

**சரணங்கள்**

1. சுத்த உதிரமும் நீரும் வடிந்தது
தூயன் விலாவினின்று;–அதால்
சுத்தமடைந்து பாவக்குற்றம் நீங்கிச்
சுகமாக வாழ்வேனே. – நித்

2. என்றன் கிரியைகளால் தேவ நீதிக்கு
ஈடு நான் செய்வதில்லை;–தினம்
சிந்துகினிங் கண்ணீர், ஏதேது செய்கினும்,
தீங்கு நீங்குவதில்லை – நித்

3. கொண்டுவரக் கையிலொன்று மில்லை, உன்
குருசுடன்தான் ஒன்றினேன்;–குருதி
கொண்டு கழுவி உடுத்திப் பெலனருள்,
கோவே; அல்லாது துய்ந்திடேன் – நித்

4. ஜீவ னிருக்கையில், சாவில் கண் மூடுகையில்,
தெரியா வுலகிற் செல்கையில்,–ஒளி
மேவு பத்ராசன் மீதுனைக் காண்கையில்
விரைந்துனில் மறைந் துய்குவேன் – நித்

***– த. பலவேந்திரம்***

**257. இராகம்: சங்கராபரணம் ஆதிதாளம்**

***பல்லவி***

**துங்கனில் ஒதுங்குவோன் பங்கமின்றித் தங்குவான்**

***அனுபல்லவி***

கங்குல்[1] பக லும்பரனார் காவல் அர ணாதலால். – துங்

1 இரவு

***சரணங்கள்***

1. வேடன் கண்ணி குத்துங்கால், விக்கினங்கள் சுற்றுங்கால்,
மூடி உனைக் காப்பரே, ஒர் மோசமின்றிச் சேர்ப்பரே. – துங்

2. பக்கத்திலே ஆயிரம், பாலே பதினாயிரம்
சிக்கென வீழ்ந்தாலுமே, தீங்குனை அண்டாதுகாண். – துங்

3. கண்ணினாலே பார்க்குவாய், கடவுள் செயல் நோக்குவாய்;
அண்ணலே உன் அடைக்கலம், ஆண்டவர் உன்தாபரம். – துங்

4. தீங்குனை அண்டாமலும், தீனங்கள் தீண்டாமலும்,
பாங்கு தூதர் காபந்தில்[1] பத்திரமாய் வாழ்வையே. – துங்

5. பாதம் கல்லிடறாமல், பகைவர் உக்ரம் மீறாமல்,
தூதர் உனைக் கைகளில் தூக்கி ஏந்திக் கொள்வரே. – துங்

6. நீடுநாட்க ளாகவே கேடு துன்பம் போகவே,
வீடுபர தீசினில் சூடுவான் மா மகிமைகள். – துங்

***– தீ. யோசேப்பு***

**258. இராகம்: இந்துஸ்தான் டப்பா** **ஆதிதாளம்**

**பல்லவி**

**தேவனே துயர்காலத் தடைக்கலம், தேவனே**

**சரணங்கள்**

1. ஜீவநாயகம் நம்பெலன்–துணை
காவலே இடர் காலமதில்–யேசு – தேவ

2. நேமிதான்[2] நிலை மாறினும்–மலை
நேசர் நடுக்கடல் சாய்திடினும்–யேசு – தேவ

3. வாரியின்[3] ஜலம் கொந்தளித்துப்–பொங்கி
மாதிரம்[4] அதிர்ந் தாலும் அஞ்சேல்;–யேசு – தேவ

---

1 காவல்
2 அரசன்
3 கடலின்
4 மலை

4. நாயகன் அதி காலையில்-துணை
நல்குவார் மிக நண்புடனே,-யேசு - தேவ

5. ஜாதிகள் மா கொந்தளித்தே-ராஜ்யம்
தத்தளித் தாலும் அஞ்சிடாதே-யேசு - தேவ

6. சந்ததம் பரன் நம்முடனே-கூடி
சஞ்சரிக்கிறார்; அஞ்சல் இல்லை;-யேசு - தேவ

7. யுத்தங்கள் புவி அந்தம் வரை-நீக்கி
உத்தம சமா தானம் செய்வார்-யேசு - தேவ

8. யாக்கோபின் பரன் ஏற்ற அடைக் கலம்,
நம்பெலன் துணையும் அவரே-யேசு - தேவ

*- ச. யோசேப்பு*

**259. இராகம்: சங்கராபரணம் ஏகதாளம்**

*பல்லவி*

**வாரா வினை வந்தாலும் சோராதே மனமே;**
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.

*சரணங்கள்*

1. அலகை[1] சதித்துன் மீது வலை வீசினாலும்,
அஞ்சாதே, ஏசுபரன் தஞ்சம் விடாதே. - வாரா

2. உலகம் எதிர்த்துனக்கு மலைவு[2] செய்தாலும்,
உறுதிவிட் டயராதே, நெறி தவறாதே. - வாரா

3. தேகம் மோகம் மிஞ்சி வேகங் கொண்டாலும்,
திடமனதாயிருந் தடல்[3] புரிவாயே; - வாரா

1 பேய் 2 துன்பம் 3 போர்

4. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே;
பிள்ளையாகில் அவர் தள்ளிவிடாரே. – வாரா

5. தன் உயிர் ஈந்திட்ட உன் ஏசுநாதர்
தள்ளுவரோ அன்பு கொள்ளவர் மீதே. – வாரா

6. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்,
மருள விழாதே, நல் அருளை விடாதே. – வாரா

***– ஜாண் பால்மர்***

**260. இராகம்: சஹானா** **மிசுர தாளம்**

***பல்லவி***

**நெஞ்சமே, தள்ளாடி நொந்து, நீ கலங்காதே;–கிறிஸ்**
தேசுவே உனக்கு நல்ல நேச துணையே.

***சரணங்கள்***

1. நேசமான தோழர்களும் மோசமாகச்–சற்றும்
நேரறப்[1] பகைஞராக நின்றபோதிலும். –நெஞ்

2. அன்னை தந்தை ஆனவரும் பின்ன[2] பேதமாய்–உனை
அங்கலாய்க்க விட்டெளிஞன் ஆன போதிலும். –நெஞ்

3. ஜீவனம் இழந்து துன்பம் மேவினாலும்,–மா
சிறுமையாய்ச் சகிக்கொணா வறுமை கொண்டாலும். –நெஞ்

4. பஞ்சமும் பசியும் வந்து கெஞ்ச வைத்தாலும்,–மிகு
பாரமாய்ச் சுமை உன்மேலே பற்றி நின்றாலும். –நெஞ்

5. கெட்ட நோயிலும் நீ அகப் பட்டுழன்றாலும்,–எந்தக்
கேடுகள் உன்மேலே வந்து மூடினாலும். –நெஞ்

6. ஆன வீடு தானும் கொள்ளை ஆனபோதிலும்,–கிறிஸ்
தண்ணலே, உனக்கெல்லாம் என்றெண்ணி நிறைவாய் –நெஞ்

***– ஜாண் பால்மர்***

---

1 கொடிய 2 மாறுபட்டு

**261. இராகம்: கரகரப்பிரியை** **ஆதிதாளம்**

*பல்லவி*

**பாதம் ஒன்றே வேண்டும்;–இந்தப்**
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் – உன்

**சரணங்கள்**

1. நாதனே, துங்க மெய்–வேதனே, பொங்குநற்
காதலுடன் துய்ய–தூதர் தொழுஞ் செய்ய[1] – பாதம்

2. சீறும் புயலினால்–வாரிதி[2] பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல்–நீர் மேல் நடந்த உன் – பாதம்

3. வீசும் கமழ் கொண்ட–வாசனைத் தைலத்தை
ஆசையுடன்–மரி–பூசிப் பணிந்த பொற் – பாதம்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந்–தூக்கி நடந்த நற் – பாதம்

5. நானிலத்தோர் உயர்–வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திட–தானே கொடுத்த உன் – பாதம்

6. பாதம் அடைந்தவர்க்–காதரவாய்ப் பிர[3]
சாதம் அருள் யேசு–நாதனே, என்றும் உன் – பாதம்

*– சு.ச. ஏரேமியா*

**262. இராகம்: நாதநாமக்ரியை.** **ஆதிதாளம்**

**திபதை – கண்ணிகள்**

**ஆத்தும அடைக்கலம் அன்புள்ள யேசுவே,**
அய்யா, புகலிடம் தாரும்;
காற்றுப் பெருவெள்ளம்போல் சீற்றங் கொள்ளுது துன்பம்,
கை கொடுத்தெனை ஆற்ற வாரும்.

---

1 சிவந்த 2 கடல் 3 பிரசாதம்–கிருபை

2. நீரே என் நம்பிக்கை, நீரே என் தஞ்சம்;
நீசன் எனக்கு வேறார் அய்யா?
சாரும் நிராயுதன் யான் போரில் விழாப்படித்
தாங்கும் உன் மறைவினில், அய்யா.

3. நீதம் கெட்ட பாவியான், நீதி பரி சுத்தமும்
நிறைந்த நீர் எனக்குத்ரவாதி;
பாதகத்தால் நிறைந்த பேதையான்; கிருபை சத்தியம்
பரிபூரணம் உள்ளோன் நீர் ஜோதி.

4. எந்தப் பாவமும் மூடும் விந்தைக் கிருபை உண்டும்மில்,
என் பாவம் தீர்த்தருளும், கோவே!
நொந்த எனை நீர் ஆற்றிச் சிந்தையைப் புதுப்பித்து
நோக்கும் அதைத் துய்யதாய்[1], தேவே.

5. சீவ ஊற்றே, உம்மில் யான் தெளிந்து குடிப்பேனாக;
தீராத தாகங்கள் தீரும்;
ஓவா[2] நித்தியமட்டாகப் பாவி என் நெஞ்சில் ஊறும்
உன்னத அன்பன் யேசு, வாரும்.

***– அருள்திரு. அ. வேதக்கண்***

**263. இராகம்: சங்கராபரணம்** **ஏகதாளம்**

***பல்லவி***

**மாற்றீரென் கவலை அருள்பெற;–மிக**
மாற்றீயே கலி[3] தீர்த்தீர் உமது மகிமையை நிறைவேற்றி.

***சரணங்கள்***

1. சமானவரசே,[4] நீர் தந்தை
சமானவரசே, நீர்–ஒரு
சந்திர பதம்[5] போல் சுடரே விடுத்தீர்,
தாசனுரு வெடுத்தீர். – மாற்

---

1 தூய்மை
2 ஓயாத
3 துன்பம்
4 ஒப்பற்ற
5 இனிமை

2. சூதலகையை[1] நீக்கி, அழலின்
சூதலகையை நீக்கி,–என் கை
தூக்கி, உலகிடர் போக்கி, எமையே
துதிக்கவும் மயலாக்கி.[2] – மாற்

3. சடலமுலகம் சூது, பொல்லாச்
சடலமுலகம் சூது;–இது
தகாததின் மடவாது கொடியது;
சஞ்சலம் இனி யேது? – மாற்

4. நலங்கடமை[3] வழுவி, சுகிர்தன்
நலங்கடனை[4] வழுவி,–வழி
நழுவி விழுமெனைக் கழுவி அழகாய்
நலமாக்கவே வருவீர். – மாற்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**264. இராகம்: சங்கராபரணம் ஆதிதாளம் (447)**

**பல்லவி**

**சன்மார்க்கர் பண்பும்–சாற்றக் கேளும்**
துன்மார்க்கர் பண்பும்.

**அனுபல்லவி**

நன் மார்க்கமாம் வேதம் நவிலுகின்றபடி
சன்மார்க்கர் துன்மார்க்கர் சமாசாரம் கேளும் – சன்

**சரணங்கள்**

1. கயவரின் பொல்லா–ஆலோசனை
கற்றதில் செல்லா,
பயமில் பவிகளின்[5] பாதை நில்லாமல்
பரிகாசர் இட முனி[6] பண்போர் சன்மார்க்கர் – சன்

---

1 அலகை–பேய்
2 ஆசையாக்கி
3 நலன்கள் தமை
4 நல்ல கட்டளையை
5 பாவிகள்
6 வெறுக்கின்ற

2. கர்த்தரின் வேதம்–அல்லுபகல்
கருத்துற்ற போதம்;
நித்தமும் தியானித்து நேர்நெறி நடப்போர்
நிமிலனார் உகக்கின்ற[1] நேய சன்மார்க்கர் – சன்

3. நீர்க்காலின் ஓரம்–நடப்பட்டு
நீர்மை நற் சாரம்
தேக்கியே கனி தந்து இலை உதிராத் தருச்
சிறப்பென வாழ்ந்து சித்திப்பார் சன்மார்க்கர் – சன்

4. அதமர்கள்[2] காற்று–போர்கள் மேலே
அடிக்கும்கால் தூற்று
பதர்கள் போலேஓடிப் பரனிடம் தீர்ப்பிலும்
பரிசுத்தர் சபையிலும் தரியாத் துன்மார்க்கர் – சன்

*– தீ. யோசேப்பு*

**265. இராகம்: சங்கராபரணம் ஆதிதாளம் (448)**

**பல்லவி**

**பாக்கியர் இன்னார்–என்றிறைவன்**
பண்புடன் சொன்னார்.

**அனுபல்லவி**

ஆக்கியோன் ஏசுவின் வாக்கியம் கேட்கவே
அனந்தமான[3] ஜனம் வனந்தனில் நிற்கையில், – பாக்

**சரணங்கள்**

1. ஆவி பணிந்தோர்,–மனத்தாழ்மை–யான தணிந்தோர்,
பாவிகள் தாமென்று பயந்து நடப்போர்
தேவனின் ராஜ்யம் சேர்வதால் பாக்கியர். – பாக்

2. துக்கப்படுவோர்,–பவத்துக்காய்த்–துயரப்படுவோர்
விக்கினமின்றி என் தேவன் அருளினால்
மிக்க மெய்யாறுதல் மீட்புறும் பாக்கியர். – பாக்

1 விரும்பும் 2 தீயோர் 3 ஏராளம்

3. சாந்த குணத்தோர்,-சண்டை கோப-தாபம் வெறுத்தோர்,
வந்தனார் செய்கையுள் சாந்தனையும் கொள்வோர்
மேதினி வாழ்விலும் விண்ணிலும் பாக்கியர்; - பாக்

4. நீதியின் பேரில்-பசி தாகம்-நித்தம் கொள்வோரில்
போத மெய்ப் புத்தியும் பூரண பத்தியும்,
காதலன் ஆவி கடாட்சிப்பர்; பாக்கியர்; - பாக்

5. இரக்கமுடையோர்,-பிறர்மீது-உருக்கமுடையோர்,
நெருக்கப்படுவோர்க்கு நேயமுற் றுதவுவோர்
பெருக்க இரக்கம் பெற்றிடும் பாக்கியர்; - பாக்

6. சுத்தநெஞ்சத்தார்,-தேவனருன்-சுகிர்த ஜென்மத்தார்
பத்தியில் வர்த்தித்து நித்தமும் தேவனின்
பரிசுத்த சமுகத்தைத் தரிசிக்கும் பாக்கியர். - பாக்

7. சமாதானத்தை-நடப்பித்து-சல்யம்[1] வாதத்தை
தமதுரை நடக்கையால் தள்ளி ஒழுகுவோர்
எமதேகன் சேயர்கள் என்னும் மெய்ப் பாக்கியர். - பாக்

8. நற்செய்கை யிட்டுப்-பகைஞரால்-நஷ்டங்கள் பட்டு
துர்செய்கை நீங்கியே துன்பப் படுவோர்
சுகலோகம் சேர்ந்தென்றும் முகியாத[2] பாக்கியர். - பாக்

*- தீ. யோசேப்பு*

**266. இராகம்: தோடி** **ரூபக தாளம் (449)**

**பல்லவி**

**மகிழ்ந்து, புகழ்ந்து, மிகப்பணிந்து; துதித்து கிறிஸ்தை**
வாழ்த்திப் போற்றும், என் ஆத்துமாவே.

**அனுபல்லவி**

தகுந்த காலத்தில் க்றிஸ்துன் அகந்தைப் பவம் தீர்த்துனைத்
தமது கிருபைச் சமுகந்தனில் சேர்த்ததால் - மகிழ்ந்து

---

1 உபத்திரவம் 2 முடிவற்ற

**சரணங்கள்**

1. சிந்தை மகிழ்ந்து சத்திய மார்க்கத்தில் ஓடு;
தினந் தினம் ஜெபத்தில் தேவாவியைக் கூடு;
விந்தையாய் மெய்ஞ்ஞான பதங்களைப் பாடு;
விண் உலகத்தின் நித்திய வாழ்வினைத் தேடு;
வீரமாய் மறை கூறும் சத்தியமே,
நயமே, ஜெயமே–திவ்விய
சாரமாய் வெகு தாரமாய்ப் பார்த்து,
தேறுவாய், களி கூருவாய் தினம் – மகிழ்ந்து

2. அவரைப் பின் சென்ற பின்பாசை ஆகாது;
அநித்திய உலகத்தின் பாசம் ஆகாது;
பவம் மிகும் மாமிச இச்சை ஆகாது;
பரிசுத்த நெறி விட்டுப் பிரியல் ஆகாது;
பந்தயப் பொருளைச் சிந்தையில் எண்ணியே,
நண்ணியே[1], உன்னியே[2],–மகா
விந்தைக் கிறிஸ்தரசன் உம்தன் சிரத்தின் முடி,
சந்தோஷமாய்ச் சூட்ட முந்தியோடு, மிக – மகிழ்ந்து

***– மரியான் உபதேசியார்***

### 267. இராகம்: சஹானா மிசுரதாளம்

***பல்லவி***

**ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன்;–அவர்**
ஆளுகையின் நீதி அன்பின் வாழி[3] சாற்றுவேன். – ஆண்

***சரணங்கள்***

1. உத்தம வழியில் நிதம் புத்தி கொள்ளுவேன்;–மன
உண்மையுடன் வாழ்ந்து தீய கன்மம்[4] தள்ளுவேன். – ஆண்

2. கெட்ட விஷயங்கள் எனை ஒட்டுவதில்லை–மதி
கேடரின் புரளிகளும் கிட்டுவதில்லை. – ஆண்

---

1 விரும்பியே
2 நினைத்து
3 புகழ்
4 செயல்கள்

3. வஞ்சகங்களை உகக்கும்[1] நெஞ்சை நீக்குவேன்;–பொல்லா
மார்க்கங்களிலே நடக்கும் தீர்க்கம் போக்குவேன். – ஆண்

4. மற்றவனை ஏசி வாயால் குற்றங்கள் செய்யும்–துஷ்ட
மாந்தர் மேலே பற்றாமலென் பாந்தவம்[2] நையும். – ஆண்

5. சீரியர்கள்[3] பேரில் அன்பு கூருவேனே;–நல்ல
சீரொழுகு சான்றோர் தயை சேருவேனே – ஆண்

6. பொய்யர்களை என்னுடனே உய்ய ஒட்டேனே;–மகா
புரளி செய்யும் எத்தர்களின் திரளில் கிட்டேனே. – ஆண்

*– தீ. யோசேப்பு*

**268. இராகம்: துஜாவந்தி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**புத்தியாய் நடந்து வாருங்கள்;–திருவசனப்**
பூட்டைத் திறந்து பாருங்கள்.

*அனுபல்லவி*

சத்தியத்தைப் பற்றிக்கொண்டு,
தன்னைச் சுத்தி பண்ணிக்கொண்டு,
நித்தமும் ஜெபம், தருமம்,
நீதி செய்து, பாடிக்கொண்டு – புத்தி

*சரணங்கள்*

1. ஒன்றான பிதாவின் மக்களே;–கிறிஸ்தின் ரத்தத்
தொன்றுடன் சகோதரர்களே,
குன்றாத சுதந்தரர்களே–நீங்கள் எல்லாரும்
கோதில்லாத[4] நீதிமான்களே;
சண்டாளப் பசாசின் மக்கள் தங்களைப்போல் வாதுபண்ணிக்
கொண்டுதிண்டு முண்டு செய்தால், கூற என்ன நீதி உண்டு;
–புத்தி

1 விரும்பும்
2 உறவு
3 சிறந்தவர்கள்
4 குற்றமற்ற

2. அன்பு கூர்ந்திருக்கச் சொன்னாரே,–கிறிஸ்து நமை
ஐக்கியமாய்ப் போகச் சொன்னாரே;
இன்பமாய் நடக்கச் சொன்னாரே;–ஆவியில் ஒன்றாய்
இசைவாகப் பேசச் சொன்னாரே;
பண்பிலா மிருகம் போலும், பாயும் பேயின் மக்கள் போலும்
துன்பம் பொய்கள் வன்மம்[1] பகை தூஷணம் செய்யாமல் நல்ல
– புத்தி

3. ஆருடைய பிள்ளைகள் நீங்கள்?–திரு உரையில்
அறிந்து உணர்ந்து பாருங்கள்;
சீருடைய தெய்வப் பிள்ளைகள்–நீங்கள்; ஏதிந்த
தித்தரிப்பு[2] செய்யும் வகைகள்?
கூருடன் மெய்த் திருமறை குறித்துச் சொல்வதைத் தினம்
நேருடன் ஆராய்ந்து பார்த்து நித்திய ஒளியில் தானே – புத்தி

4. ஆவியை அடக்காதிருங்கள்;–மறை சொல்லுவதை
அசட்டை செய்யாமல் பாருங்கள்;
ஜீவனை அடையத் தேடுங்கள்;–ஏசுக் கிறிஸ்தின்
சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள்;
மேவியே ஜெபம், மன்றாட்டு, விண்ணப்பம் வேண்டுதலோடு
தாவி, ஏசுவைப் பிடித்து தளரா நடையோ டுன்னிப்[3] – புத்தி

5. ஜாதி பேதம் சொல்வர் அல்லவோ? கிறிஸ்தவர்கள்
தாமே தெய்வ ஜாதி அல்லவோ?
நீதி பரிசுத்தர் அல்லவோ? மகிமையுள
நேசம் மிகு ராஜர் அல்லவோ?
வேதனை உண்டாக்கும் ஜாதி வேற்றுமையை விட்டு, மறை
ஓதியபடி[4] எல்லாரும் உத்தம கிறிஸ்தோராகப் – புத்தி

6. பொக்கிஷத்தை எங்கே வைத்தீர்கள்?–பரத்தில் வைத்தால்
பூரண பலன் அடைவீர்கள்;
கக்கிச[5] வழியே செல்வீர்கள்–கடைசியிலே
கண்டு ஜீவனை அடைவீர்கள்;
முக்கியமாய் எதைத்தேட முன்னவன் சொன்ன சொற்படி,
மெய்க்கிறிஸ் திருப்பிடத்தின் மேலானதை நாடித் தேடிப் – புத்தி

***– மரியான் உபதேசியார்***

---

1 தீராப்பகை
2 உபாயம்
3 நினைத்து
4 கூறியபடி
5 கடினம்

**269. இராகம்: துசாவந்தி** **ஆதி தாளம் (450)**

*பல்லவி*

**புத்தியாய் நடந்து வாருங்கள் – திரு வசனப்**
பூட்டைத் திறந்து பாருங்கள்.

*அனுபல்லவி*

சத்தியத்தைப் பற்றிக்கொண்டு,
தன்னைச் சுத்தி பண்ணிக்கொண்டு,
நித்தமும் ஜெபம், தருமம்,
நீதி செய்து, பாடிக்கொண்டு – புத்தி

*சரணங்கள்*

1. ஏசுக் கிறிஸ்தையன் பதத்தை துதித்துப் போற்றி,
இன்பமாய்ச் சத்திய வேதத்தை
வாசித்து ஆராய்ந்து, நலத்தைப்–பிடித்துளத்தில்
வைத்துக்கொண்டு, இவ்வுலகத்தை
நேசியாமல் பகைத்துங்கள் நித்திய ரட்சிப்பைத் தினம்
ஆசையோடு தேடி, நீங்கள் அடையும்படி முற்றிலும் – புத்தி

2. ஐயன் வருவார் நமைச் சேர்க்க, பூமியில் என்றும்
ஆளுகை செய்தொன்றாய் இருக்க
வையக மனுக்கள் திகைக்க, கிறிஸ்தோர்களின்
மகிமை மென்மேலும் கதிக்க,
துய்யன் சீயோன் மலையில் சுதந்தராய் வீற்றிருக்க,
மெய் இது பொய் அல்ல; உங்கள் மேன்மை இதை எண்ணித்தினம்

3. பரிசுத்த கூட்டம் அல்லவோ?–நீங்கள் எல்லாரும்
பரன்மகன் தேட்டம் அல்லவோ?
தரிசிக்க நாட்டம் அல்லவோ?–கிறிஸ்தின் உள்ளம்
தன்னிலே கொண்டாட்டம் அல்லவோ?
பரிசனை செய்தவர் போல, பாதத்தை மனதில் உன்னி,
கரிசனை யோடு தேடிக், காணத் தீயோன் நாணப் படிப் – புத்தி

4. எத்தனை என்று நான் சொல்லட்டும்–திருமறை தான்
எத்தித் தினம் சாற்றி வரட்டும்
சத்திய தேவாவி சொல்லட்டும்;–உங்கள் மனது
தன்னிலே நல் எண்ணம் வரட்டும்
நித்திய பிதா குமாரன் நேர் நல் ஆவி, மூவராலும்,
பத்தி, விசுவாசம், ஜீவ பாக்கியம் உண்டாக, ஆமென்! – புத்தி

*– மரியான் உபதேசியார்*

**270. இராகம்: சுருட்டி** **தாளம்: முறி அடந்தை (451)**

**பல்லவி**

**பரிசுத்த ஜீவியம் செய்வோம்,–கிறிஸ்தவரே;**
பரன்மறை பார்த்தொழுகுவோம்,

**அனுபல்லவி**

திரியேக பிதாசுதன் தேவாவி அருளாலே
வருகும் சோதனை எவையுஞ் ஜெயிக்கவே
வளமாய் சருவாயுத வர்க்கம் தரித்துமே – பரி

**சரணங்கள்**

1. சத்தியமாம் கச்சையதனை அரையில்–கட்டி
சார்ந்த நீதிமார்க்க கவசமும்
உத்தம சமாதான சுவி–சேட ஆயத்தம்
உயர் பாதரட்சை யதுவும்
பக்தர்கள் கேடயமாம் பலத்த விசுவாசமதும்
பார்தலைச் சீராவாம் ரக்ஷண்யமும்
பண்பாய் திரு உரை கட்கம்[1] அணிந்துமே – பரி

2. ஆவியின் கனிகள் நம்மிலே–சருவாங்கமும்
அயலோர்கள் கண்டு தம்மிலே
பூவில் நிறை சற்குணராக–புனிதராகிப்
பொன்னுலகுக் கேற்றவராக
மேவும் அன்பு சந்தோஷம் மேன்மை சமாதானமும்
வேண்டும் நீள் பொறுமை தயை சாந்தமும்
விளங்கும் இச்சையடக்கம் அமைந்துமே – பரி

**271. இராகம்: மோகனம்** **அடதாளசாப்பு (452)**

**பல்லவி**

**சேவித்துக் கொண்டேன், ஐயா;–சீர்பாதத்தைத்**
தெரிசித்துக் கண்டேன், ஐயா.

---

1 வாள்

**சரணங்கள்**

1. ஆவிக்குரிய மண வாளன் ஏசு கிறிஸ்து
ஜீவப்பிரான் ஒரு தேவ குமாரனை நான் –சேவி

2. சந்த க்ருபை சிறந்த சத்ய பிதாவின் ஒரு
மைந்த கிறிஸ்துவே, நின் மகத்வ ப்ரசன்னத்தைச் –சேவி

3. நீற்று பூச்சைத் துறந்து நெஞ்சம் உருகிச் சென்று
ஆத்துமத்தாலும் உண்மையாலும் பணிந்து நின்று –சேவி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**272. இராகம்: ஆனந்தபைரவி ஆதி தாளம் (453)**

**பல்லவி**

**தேவாதி தேவே, நீரே–சேவிக்கில் உமை**
ஜீவார்தம் தருவீரே

**அனுபல்லவி**

ஈவாகிய தயவை நாவாலும் நயம்பெறப்
பாவாலும் எவர்முனும் ஓவா[1] தறிக்கைசெய்து – தேவாதி

**சரணங்கள்**

1. நன்றே, அருள் என்றே கொலைக்குச் சென்றாய்;–மரித்
தன்றே நீ பேயை முற்றும் வென்றாய்;
நின்றே இவ்வுலகினில் அன்றாடகமே நம்பி,
நேசா, விஸ்வேசா, இராஜா, சருவ ஜீவ – தேவாதி

2. பொல்லா உலகம் அல்லோ? இதனில் செல்லா,–துணை
நல்லாயனே, என்பேன்; வல்லாய்,
சல்லாப[2] நூலில் அதி உல்லாச மேவி நிதம்
தாயா,[3] மாதூயா, நன்னேயா, சுரர்கள் பதி – தேவாதி

---

1 ஓயாது 2 சரசம் 3 தாய் போன்றவனே

3. பண்டே[1] மறை கைக் கொண்டே, இதயத் தொண்டே–புரிந்
தண்டே[2] வரும் உதவி உண்டே;
விண்டே[3] குறைகளும் தண்டை சுகிர்தமாகும்;
வேதா, என் தாதா,[4] அதீதா, மகத்வமான – தேவாதி

***– ஆபிரகாம் அல்லின்***

**273. இராகம்: சாவேரி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**புறப்படுங்கள், தேவ புதல்வரின் ஊழியரே,**

**சரணங்கள்**

1. கறைப்படா யேசுநாமம் கதித்து[5] மகிமைபெற,
பிறப்பினிலே யுங்களைப் பிரித்த தயை நினைந்து, – புறப்

2. மாமிச இரத்தத்தோடு மயங்கி யோசிப்பதாலே
தாமசம் செய்ய வேண்டாம்; தரித்தெங்கும் நிற்க வேண்டாம்
– புறப்

3. அழிவின் பாதையில் செல்லும் அநேகரைக் கண்டிருந்தும்
பழி சுமராதபடி பரனுரையைப் பகரப் – புறப்

4. சிலுவை மரத்தில் தொங்கி ஜீவனை விட்ட கர்த்தர்
வலுவான அன்பை உங்கள் மனதினிலே அணிந்து. – புறப்

***– அருள்திரு. ச. சீமோன்***

**274. இராகம்: பைரவி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**பொக்கிஷம் சேர்த்திடுங்கள்–பரத்திலே**

***அனுபல்லவி***

பக்கிஷமாகப் பரத்திலே பொக்கிஷம்
மிக்கவே சேர்ப்பது மேலான பாக்கியம். – பொக்

---

1 முற்காலம்
2 அருகில்
3 பிரிந்து
4 உபகாரா
5 சிறந்து–செழித்து

**சரணங்கள்**

1. பொட்டும் அரிக்காதே,–அங்கே புழுப்
பூச்சி கெடுக்காதே;
துட்டரங்கே கன்னமிட்டுத் திருடாரே;
துருவும் பிடியாது, குறையாது, அழியாது. – பொக்

2. விண்ணுலகந் தன்னிலே பொக்கிஷத்தை
விரும்பியே சேர்த்திடுவோர்
மண்ணிலும் விண்ணிலும் வாழ்வது திண்ணமே;
மாயப் பிரபஞ்சத்தின் வாழ்வெல்லாங் குப்பையே – பொக்

3. உங்கள் பொக்கிஷம் எங்கேயோ,–அங்கே யுங்கள்
உள்ளமுமே யிருக்கும்,
இங்கித மோட்சத்தை என்றும் நினைக்கவே,
என்றும் வைக்கப்பாரும் உங்கள் பொக்கிஷத்தை. – பொக்

4. ஜீவன் சுகத்துடனே–இருக்கையில்
ஆவலா யிப்பொழுதே,
தேவ லோகத்திலே ஜீவ பொக்கிஷத்தைச்
சேர்த்திடுவோர் மெத்தப் பாக்கியவான்களே. – பொக்

*– ஓய். ஞானமணி*

**275. இராகம்: எதுகுலகாம்போதி** **ஏக தாளம்**

*பல்லவி*

**ஆத்தும ஆதாயம் செய்குவோமே,–இது**
ஆண்டவர்க்குப் பிரியம்;–நாமதினால்
ஆசீர்வாதம் பெறுவோம்,

*அனுபல்லவி*

சாத்திரம் யாவும் தெரிந்த கிறிஸ்தையன்
தஞ்சத்தைப் பெற்று நாமிந்த மாவேலையில்
ஆத்திரமாக முயற்சி செய்வோமாகில்
அற்புதமான பலனை அடையலாம். – ஆத்தும

***சரணங்கள்***

1. பாழுலக முழுவதையு மொருவன் சம்
பாதித்துக் கொண்டாலும்,–ஒரு
நாளுமழியாத ஆத்துமத்தை அவன்
நஷ்டப்படுத்தி விட்டால்,
ஆளுந்துரையவ னாயிருந்தாலுமே,
அத்தாலவனுக்கு லாபமில்லை யென்று
ஏழை ரூபங்கொண்டு ஞாலமதில் வந்த
எம்பெருமான் கிறிஸ்தேசன்று சொன்னாரே. – ஆத்தும

2. கெட்டுப்போன ஆத்துமாக்களை ரட்சிக்க
மட்டில்லா தேவசுதன்–வானை
விட்டுலகில் கனபாடு பட்டு ஜீவன்
விட்டதும் விந்தைதானே;
துட்டை[1] யொருத்தியி னாத்துமத்தை மீட்க
தூயபரன் முன்னோர் கிணற்றருகிலே
இட்டமுடன் செய்த இரட்சண்ய வேலையை
இந்த நிமிஷமே சிந்தையி லெண்ணியே. – ஆத்தும

***– ஒய். ஞானமணி***

**276. இராகம்: உசேனி ரூபகதாளம் (454)**

**பல்லவி**

**பஜனைசெய், மனமே; மேசியா**
பஜனைசெய், மனமே; தினம், தினம்.

**அனுபல்லவி**

நிஜ மனதுடன் குரு ஏசு நாமம்
நினை, நல்ல சுகத்தைக் கொடுக்கும்; – பஜனை

1 ஒழுக்கமற்றவள்

**சரணங்கள்**

1. பாச வினை யெல்லாம் போக்கும்;–திவ்ய
பாதமலர்க் கதி சேர்க்கும்;–மகா
தோஷமென்பதையும் நீக்கும்;–பரி
சுத்த இருதயமாக்கும்; – பஜனை

2. துன்பம் கவலைகள் நீங்கும்; மனம்
சோர்பு கொள்ளாமலே தாங்கும்;–தேவ
அன்பும் சுசீலமும் ஓங்கும்;–இருள்
அந்தகாரம் வெளி வாங்கும்; – பஜனை

3. ஆசாபாசந் தனை அறுக்கும்;–பொல்லா
ஆணவ மென்பதை நொறுக்கும்–இந்த
நீச உலகத்தை வெறுக்கும்–வீண்
நினைவு கொள்ளாம லுறுக்கும்[1]; – பஜனை

4. மனதை யோர் வழி கூட்டும்; சன்
மார்க்க நெறியில் ஓட்டும்;–அது
தினம் மகிமையைக் காட்டும்;–நித்ய
ஜீவ முடியங்கு சூட்டும்; – பஜனை

*– ஈசாக்கு பாக்கியநாதன்*

**277. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**திபதை – கண்ணிகள்**

**சீர்மிகு வான்புவி தேவா, தோத்ரம்!**
சிஷ்டிப்பு யாவையும் படைத்தாய் – தோத்ரம்!
ஏர்குணனே[2] தோத்ரம்! அடியர்க்
இரங்கிடுவாய், தோத்ரம், மா நேசா!

1 அதட்டும் 2 நிறைகுணன்

2. நேர்மிகு அருள் திரு அன்பா, தோத்ரம்!
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்!
ஆர்[1] மணனே, தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம்! மா நேசா!

3. ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்!
தினம், தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்!
ஆவலுடன் தோத்ரம்! உனது
அன்பினுக்கே தோத்ரம், மாநேசா!

4. ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்!
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்!
சாற்றுகிறோம் தோத்ரம்! உனது
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா

5. மாறாப் பூரண நேசா; தோத்ரம்!
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்!
தாராய் துணை, தோத்ரம்! இந்தத்
தருணமே கொடு, தோத்ரம், மா நேசா!

***– அருள்திரு. வே. மாசிலாமணி***

**278. இராகம்: எதுகுலகாம்போதி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**போற்றிடுவாய், மனமே, நீ பரனைப்**
போற்றிடுவாய், மனமே, தினம்

**சரணங்கள்**

1. நாற்றிசையோர் பணிந்தேற்றிய நேசன்
வீற்றிருக்குமே கன[2] காசன வாசன் – போற்

2. ஞாலமெலாங் கிறிஸ்தேசுவை நாடும்;
பாலகக் குழந்தைகள் வாய் துதி பாடும் – போற்

---

1 அழகுமிக்க 2 பொன்

3. நாட்கள் பொல்லாததால் ஞானமாய் நடந்து
மீட்பராம் யேசுவின் நாமமே பணிந்து – போற்

4. எஜமான் வரும் நாழிகை அறிவோர்கள்
நிஜமே பரகதி வீடடைவார்கள் – போற்

***– ஜி. ஆசீர்வாதம்***

**279. இராகம்: காம்போதி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**பாடித் துதி மனமே; பரனைக் கொண்**
டாடித் துதி தினமே.

**அனுபல்லவி**

நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்துப் – பாடி

**சரணங்கள்**

1. தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னுறச்
செப்பின தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
வழுத்தின[1] அன்பை விழித்து தியானித்துப் – பாடி

2. சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையில் கிடந்த புறச்சாதியாம் எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோஷத் துக்காகப் – பாடி

3. எத்தனை தீர்க்கர்,அநேக அப்போஸ்தலர்,
எத்தனை போதகர்கள், இரத்தச் சாட்சிகள்,
எத்தனை வேண்டுமோ அத்தனையும் தந்திங்
கித்தனையாய் க்ருபை வைத்த நம் கர்த்தனைப் – பாடி

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

---

1 வாழ்த்தின

**280. இராகம்: ஆனந்தபைரவி** **ரூபகதாளம் (455)**

**பல்லவி**

**தோத்திரம், புகழ் கீர்த்தனம் ஜெய சோபனம் உமக்கையா!–துதி**
சொல்லவும் தீதை வெல்லவும் க்ருபை சூட்டுவீர், கிறிஸ்தையா!

**அனுபல்லவி**

கோத்திரந்தனில் உயர்ந்த யூத நல் கொற்றவா, தேவபாலா,
மனுவேலா, மறைநூலா, செங்கோலனு கூலா. – தோத்

**சரணங்கள்**

1. எந்தனை மீட்க நீர் இந்த உலகினில் வந்து பிறந்தீர்;
நன்மனுவாய்–மறை
ஏற்றித் தினம் எனை ஆற்றி நன்மொழியால் தேற்றினீர்;
முற்றிலும் தனுவாய்[1]
நிந்தை அடைந்து மெய்ச்சொந்த உதிரத்தைச் சிந்தினீர்;
எத்தனை பரிவாய்[2]– தேவ
நீதிக்குத் திருத்திசெய்து பவமனு ஜாதிக்கிரங்கி நற்குருவாய்
நின்றீரே, நடுவராய் நின்றீரே; தீமை எல்லாம்
கொன்றீரே, பசாசையும் வென்றீரே, ஜெயம் கொண்டீரே நித்ய.
– தோத்

2. சுத்த சுவிசேஷ சத்யமொழியை விஸ்தரிக்க வரம்தாரும்;–நேய
சூரிய கிரண வீரியத்தால் எனக் காரோக்கியம் அருள்கூரும்;
நித்தம்எனைத் தேவபத்தியில் நடத்திச் சித்தம்
இரங்கிக்கண்பாரும்;–கரம்
நீட்டிக் கிருபையைச் சூட்டிக் கவலையை ஓட்டி என்
துயரைத்தீரும்;
நில்லும், ஐயா, என் பக்கத்தில் நில்லும், ஐயா; தினம் நலம்
சொல்லும், ஐயா; தீயோன் தனை வெல்லும், ஐயா; தீதைக்
கொல்லும், ஐயா, துய்யா! – தோத்

1 சிறுமையாகி 2 அன்பாய்

3. நித்திய ஜீவனைப் பெற்றும் மோடிருக்கச் சுத்திகரித்தென்னை
ஆளும்;–பவ
நிந்தையோடன் சுயகந்தை[1] அகற்றி மெய்விந்தைக்
க்ருபையால் சூழும்;
சத்தியவசனவித்தால்எனை ஜெனிப்பித்தென்
மனதினில்வாழும்; – பதஞ்
சாற்றித்தினம் உமைப்போற்றிப் பணிந்திடத்தேற்றி எனை
அரசாளும்;
சற்குருவே, கிறிஸ்தெனும் சற்குருவே, ஜீவன் உள
சொற்குருவே, நித்தியானந்த நற்குருவே, பரப் பொற்குருவே,
தேவே. – தோத்

*– மரியான் உபதேசியார்*

**281. இராகம்: சயிந்தவி** **அடதாளசாப்பு**

**பல்லவி**

**ஓ! ஸ்திரீ வித்தேசையா,**
அன்புகூராய்? துன்பம் தீராயோ?

**அனுபல்லவி**

வஸ்தோரே, கிறிஸ்துவேதா, மானுவேலே, ஏசுநாதா,
வந்தெமை க்ருபைக் கண் பாராயோ? – ஓ!

**சரணங்கள்**

1. ஆதி மானிடர் புரிந்த பாதகம் தொலைக்க வந்த
அண்ணலே, உமக் கபயமே!
ஓ! ஸ்திரீ வித்தேசையா,
ஆதரித்திரங்க வேண்டுமே. – ஓ!

2. எத்தனை மனக் கிலேசம்? நித்தமும் சத்துருக்கள் மோசம்!
எந்தையே கைவிட்டு விடாதேயும்,
ஓ! ஸ்திரீ வித்தேசையா,
எப்படியும் காத்தருள் மெய்யா! – ஓ!

1 சுய அகந்தை

3. ஆடுகள் சிதறிப்போச்சோ? அன்னியருக்கிஷ்டம் ஆச்சோ?
பாடுபட்ட பட்சக் கோனாரே[1]?
ஓ! ஸ்திரீ வித்தேசையா;
காடுகளில் தேடிப் பாருமேன். – ஓ!

4. மந்தையை கிருபைக் கண் பாரும்; சிந்தையில் துயரம் தீரும்,
சந்ததம் தொழுவம் சேருமேன்,
ஓ! ஸ்திரீ வித்தேசையா,
வந்தனம், உமக்குத் தோத்திரமே! – ஓ!

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

## 282. இராகம்: தேசிகதோடி — ஆதி தாளம் (456)

**பல்லவி**

**திவ்ய சபையை நாட்டுவாய், தேவா, யெகோவா, தேவா;**

**சரணங்கள்**

1. திவ்ய சபையை, நாட்டி;–ஒரு
திரளாய் நரரைக்[2] கூட்டி,–அவர்
உய்யும் வழியைக் காட்டி,–உன்றன்
உச்சித அருளை யூட்டி–தேவா –திவ்ய

2. பொய்யாம் மதங்கள் மாழ–ஆதிப்
பொல்லாச் சாத்தானும் வீழ–நரர்
ஐயாவென்றுன் முன்னே தாழ–சுத்த
அண்டர்கள்[3] வந்து சூழ–தேவா –திவ்ய

3. சண்டை சல்லிய மோய, நல்ல
சமாதான வாரி[4] பாய,–கொடுந்
தண்டராச்சியங்கள்[5] சாய–ஞாலஞ்
சந்தத முன்புக ழாய–தேவா –திவ்ய

***– டி. அருளானந்தம்***

---

1 மேய்ப்பரே
2 மானிடர்
3 வானோர்
4 கடல்
5 கொடுங்கோல் அரசுகள்

**283. இராகம்: சுருட்டி** **அடதாளசாப்பு (457)**

**பல்லவி**

**எங்கள் விண்ணப்பம் இன்று கேள் ஐயா,**
ஏசு நாதையா; எங்கள் மன்றாட்டுக்கின் றிரங்கையா

**அனுபல்லவி**

என் தன் திருரத் தத்தால் உகந்து நீர் கொண்ட சபை
வந்துன் பதம் பணிந்து வந்தித்துச்[1] செய்தவங்கள். – எங்

**சரணங்கள்**

1. இருள் சூழ் தொல்புவிமீது–ஏகனே–இலங்கிடவுன்
ஒரு சொல்லால் ஒளி வீசச் செய்ததையே;
இருளுமருளு நிறை எல்லா மனுடர் நெஞ்சம்
அருள் ஒளிவீசி இன்று அத்தன்[2] பதம் பணிய. – எங்

2. மந்தையாடு சிதறிப் போனதை–மறுகி; உயிர்
தந்து ரட்சித்த கோனே, தாங்கையா;
சிந்தை தவறிவழி சிதறித் திரியும்பேர்கள்
சிந்தை திரும்பி ஜீவ பாதையில் சென்றொழுக, – எங்

3. நேசம் வைத்தாளும் நீரே மந்தையை–நெகிழ்ந்திடாமல்;
மோசம் வராது தின–முற்றுமே
தாசர் பணிவிடைகள் தவறாது வாய்க்கும்படி,
யேசுவே, நின்னடியார்க் கீயும் தேவாசீர்வாதம். – எங்

***– அருள்திரு. எஸ்.ஜி. ஏசுவடியான்***

**284. இராகம்: பியாகு** **ரூபகதாளம்**

***பல்லவி***

**தந்தானைத் துதிப்போமே–திருச்**
சபையாரே, கவி–பாடிப்பாடி.

---

1 வணங்கி 2 இறைவன்

### *அனுபல்லவி*

விந்தையாய் நமக் கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர்[1] நன்மை மிகமிகத் – தந்

### *சரணங்கள்*

1. ஒய்யாரத்துச்[2] சீயோனே,–நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து,
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே, நாமும் – தந்

2. கண்ணாரக் களித்தாயே,–நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து;
எண்ணுக் கடங்காத எத்தனையோ நன்மை
இன்னும் முன்மேற் சோனா மாரிபோற் பெய்துமே. – தந்

3. சுத்தாங்கத்து நற்சபையே,–உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தமின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம். – தந்

4. தூரந்திரிந்த சீயோனே–உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி,
ஆரங்கள் பூட்டி யலங்கரித்து உனை
அத்தன்[3] மணவாட்டி யாக்கினது என்னை! – தந்

5. சிங்காரக் கன்னிமாரே,–உம்
அலங்காரக் கும்மியடித்துப் படித்து,
மங்காத உம் மணவாளன் யேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும். – தந்

*– அருள்திரு. வே. மாசிலாமணி*

---

1 உரைக்கமுடியாத 2 அலங்கார 3 இறைவன்

**285. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதிதாளம் (458)**

**பல்லவி**

**குருவபிஷேகஞ் செய்த கொள்கை நயந்தெங்கள்**
கூட்டங் கண்பாரும் ஸ்வாமி

**அனுபல்லவி**

வரமருளும் மேலாம் வானவர் குழாஞ் சூழ
வருபவனே; க்ருபை தருபவனே, வேத
வாசக முறைவரு தாசனை நாடியே – குரு

**சரணங்கள்**

1. திருச்சபையாம் மந்தை மேய்க்க, காணாத–ஆட்டை
ஜீவ நீரோடையிற் சாய்க்க
உருக்கமுடனே துயர் போக்க, நொண்டியாட்டை
ஒக்கலித்த[1] தனினமாக்க,
தருக்குடன்[2] புரியாமற் தாழ்மையுறவே ஞானந்
தங்கிய ஆவி வரந் தினமே பெயும்
இங்கித வேதப்ர சங்கவுரை செயும் – குரு

2. அருவி மிகுதியெனச் சாற்றி–சீஷர் தெரிந்து
ஆவியை யவர்மே லூற்றி
வருவேனும் முடனெனத் தேற்றி–வரமளித்த
வண்ணமித் தாசனை யாற்றி
மருவும் லோகம், பிசாசு, மாமிசம் ஆளாமல்
வானவனே, குரு வானவனே பர
ஞான மனோகரனே, நிமலா, இந்தக் – குரு

3. புத்தி, பொறுமை, தயை சூடி–ஜெப தியானம்
பூண்ட சுகிர்த குண நாடி
உத்தம வதாரனென நீடி–மதித்தெங்கெங்கும்
உசிதமா யெவருங் கொண்டாடி,
உத்தம மனைமக்கள் உதவி யூழியஞ் செய்ய
உயிருட லொளி கதிர் எனுமியலாய் நிதம்
நயமிக சபைதனில் வருமுயர் சிரமெனக் – குரு

***– சு.ச. எரேமியா***

---

1 சுமந்து 2 செருக்கு

**286. இராகம்: தோடி** **அடதாளம் (459)**

**பல்லவி**

**வாரும், திருக் கண்ணாலே பாரும் பரிசுத்தாவி தாரும்,**
திருச் சபையைச் சேரும்; எம் ஏசு சுவாமி, வாரும்

**அனுபல்லவி**

சீரும் செயலுமுள்ள தேவ திருத்துவமே
தரிசித் தடி பணியும் பரிசுத்தமே,
கூறும் கருணாகரமே, யூத
கோத்திரமே, மெய்ஞானப் பாத்திரமே,
சேரும் சபை அறிவில் தேறும்படி உணர்த்தத்
திட்டமாய் இவர்க்குப் போதகப்
பட்டம் கட்ட இச்சமயம் வாரும் - வாரும்

**சரணங்கள்**

1. ஒன்றும் அறியாப் பேதை, என்று உலகோர் சொன்ன
உத்தமர் ஈராறு பேரை இத்தரையினில்
சென்றுபதேசம் செய்ய என்றும் அப்போஸ்தலராய்த்
தேற்றியே ஆவியை அவர்க் கூற்றிய தேவா,
இன்றும் அவர்போல் உமக் கென்றும் ஊழியம் செய்ய
இவரை, உம் தாசனாகச் சபையினில் வைக்கவும் - வாரும்

2. மந்தை ஆடுகளும் மெலிந் திரை[1] நீரின்றி,
மலைகள் காடுகளினில் அலையும் ஐயோ!
முந்த நரி கோனாய் நுழைந்து குட்டிகளையும்
முடுக்கி எங்கும் சிதற அடிக்கும்; ஐயோ!
விந்தைப்புல் மீதோட்டி நிறைந்த தண்ணீரில் காட்டி
மேய்க்க உம்தாசனை ஞானமேய்ப்பனாக ஏற்படுத்த - வாரும்

3. புத்தி, மிகுந்த தேவபக்தி, பொறுமை, தயை
புனிதம் ஜெபத்தியானம், பிறரில் அன்பு,
சத்யம், நீதி, இரக்கம், மெத்தவும் பவப் பயம்,

---

1 உணவு

தாழ்மை, இச்சை அடக்கம், கீழ்மை அகற்றல்,
சுத்த சற்குணம், இவை நித்தம் உன் தாசனிடம்
தோன்றச் செய்து குருவாய் ஊன்றிவையும் தயவாய் – வாரும்

*– ஈசாக்கு பாக்கியநாதன்*

**287. இராகம்: தோடி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**பொழியும், பொழியும்; தயை பொழிந்திடும்**

**அனுபல்லவி**

எழிலடி தந்து தாசரிவர்க் கிரங்கிப் – பொழி

**சரணங்கள்**

1. சத்தியம் விடாமல் அதில் தங்கி நிற்கவே,
நித்தமும் உமைத் துதித்து நேசிக்கவே – பொழி

2. தங்கள் விசாரணையின் சபை யாவின்மேல்
கங்குல்[1] பகலதாகக் கவலை கொள்ள – பொழி

3. பாவச் சிந்தை முதலாய்ப் பரிச்சேதமே[2]
மேவி உறாமல் உம்மேல் விருப்பம் வைக்க – பொழி

4. உந்தன் திருமறையை உலகெங்குமே
எந்தக் குலத்தோருக்கும் எடுத்துரைக்க – பொழி

*– ஈசாக்கு ஞானமுத்து*

**288. இராகம்: அசாவேரி** **ரூபகதாளம் (460)**

**பல்லவி**

**அபிஷேகஞ் செய்துவைத்தாரே–குருமார் கூடி;**
அன்பு கொண்டாடினாரே

1 இரவு  2 சற்றேனும்

**அனுபல்லவி**

ஜெபதப சிந்தையார–அபசாரம்[1] யாதுந் தீர
தேவதூதர்கள் பாட,–கோவிலிற் பலர் கூட – அபி

**சரணங்கள்**

1. திரள், திரளாகச் சேர்ந்த–ஜனங்கள் கண்டுமகிழத்
திவ்யவா[2] ரணமுறைச்–செயல்கள்–பல நிகழ
அருளணி யன்பமைந்தோர்–அருகினின்று புகழ
அஞ்ஞான திமிரம்போக்[3]–கருண[4] னீயாவையென்று – அபி

2. ஆன மந்தையை மேய்க்கும்–அருளார் கோனானீயாவை
அகிலத்தாரேற்றிப் போற்றும்–அழகிய தீபம்போல் வை
வானமிருந்துவரு–மாவி வதிய வாழ்வை
மாசணுகாத வாசீர்–வாதம் பெறுவை யென்று – அபி

3. வலக்கரங் கொருந்துநன்–மந்தையை வொப்படைத்து
வகைவகை செய்கடமை–வகுத்து வகுத்துரைத்து
கலக்கமில் லாமலதைக்–காத்துப் புன்மேய்ச்சல் காட்டி,
காலந்தோறுஞ் சுனைநீர்–காதலா[5] யூட்டென்று – அபி

4. அன்பார் நாயகியுடன்–அன்யோன்யமாக வாழும்
ஆசை நாயகன்போல, அங்கத்தாருடன் சேர்ந்து
துன்பம் நெருங்கி யென்ன–துயரம் வளைந்துமென்ன
துன்னு சரடூசிபோற்–றுலங்க வாழ்த்தியென்று – அபி

5. கரங்கள் சிரத்தில் வைத்து–கண்ணிலானந்த பாஷ்பம்[6]
கசிந்து வழியநின்று; கர்த்தர் விப் பத்தற்கின்று[7]
சுரந்தாவி மழைபோலச்–சொரியுஞ் சொரியுமென்று
சோபனஞ் சொல்லித்தேற்றி; தொடர்பாய்ப் பிரார்த்தித் தேற்றி
–அபி

*– ஜே.ஆர். அர்னால்ட்*

---

1 தீயநடை
2 வேதம்
3 இருள்
4 சூரியன்
5 அன்பாய்
6 கண்ணீர்
7 பக்தர்

**289. இராகம்: தன்யாசி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**அருட்கடலே, வரந் தர இது சமயமே**
ஐயனே, அருள் தாரும்.

**சரணங்கள்**

1. சிரந்தனில்[1] இறங்கிடும் புறாவுரு ஆவியே,
கரங்களில் தாசனைக் காத்திடும், தேவா. – அருட்

2. பன்னிரு சீஷரைப் பண்பாகத் தெரிந்தீரே,
உன்னத ஆவியால் உண்மையாய்ப் பிழைக்க. – அருட்

3. அன்போடு யேசுவை ஆவியோடு பேச,
இன்புறு வரங்களை இவர்க்கின்றே ஈய. – அருட்

4. திரியேக தேவா, திருச்சபை பெருக,
அறிவுட னாளும் அன்பர் கோனாக. – அருட்

5. அந்தம் ஆதியில்லா அல்பா ஒமேகா நமா,
சந்ததம் வாழ, சபைகளுஞ் செழிக்க. – அருட்

***– அருள்திரு. ஓய்.எஸ். டைலர்***

**290. இராகம்: பிலஹரி** **செம்படைதாளம்**

***பல்லவி***

**இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும், கர்த்தாவே.**

***அனுபல்லவி***

உந்தம் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய் வந்த –இந்த

***சரணங்கள்***

1. பிள்ளைகள் எனக் கதிகப் பிரியம், வரலாம், என்று
உள்ளமுருகிச் சொன்ன உத்தம சத்தியனே. – இந்த

1 தலை

2. பாலரைக் கையில் ஏந்தி பண்பாய் ஆசீர்வதித்த
சீலமாயின்றும் வந்தாசீர்வாதம் செய்யும், ஐயா. – இந்த

3. உமக் கூழியஞ் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்,
உமது ஆவியைத் தந்து உம்முடைய மந்தை சேர்த்து. – இந்த

4. உலகமும் பேய்ப் பசாசும் ஒன்றும் தீது செய்யாமல்,
நலமாய் இதைக் காத்தாளும், நன்மைப் பராபரனே! – இந்த

5. விசுவாசத் தோடிதுந்தன் மேய்ப்புக்கும் உள்ளடங்கிப்,
பசிய மரம்போல் தெய்வ பத்தியிலே வளர. – இந்த

*– அருள்திரு. பாக்கியநாதன் தாவீது*

**291. இராகம்: மோகனம் ஏகதாளம்**

*பல்லவி*

**பாலர் நேசனே,–மிகப்–பரிவுகூர்ந் திந்தப்**
பாலரை யேந்தி–ஆசீர்–வதியும், யேசுவே;

*சரணங்கள்*

1. பாலர் வந்திடத்–தடை–பண்ணொணா தென்றீர்;
சால வந்தருள்–தந்து–தலைமேற் கைவைப்பீர். – பாலர்

2. வான ராச்சியம்–இவர்–வசத்த தென்றீரே;
ஞானஸ்நானத்தால்–உந்தம்–நாமஞ் சூட்டுவீர். – பாலர்

3. கானம் பாடியே–பாலர்,–கர்த்தரே உமைத்
தானே, ஓசன்னா!–எனச்–சத்தமிட்டாரே. – பாலர்

4. தேவ பாலனே,–நீருஞ்–சிறிய பிள்ளையாய்
மேவினீ ரதால்–உமை–வேண்டினோ மையா – பாலர்

5. ஆவியா லிவர்–ஞான–அபிஷேகம் பெற,
ஜீவ நேசரே,–அருள்–சிறியர்க் கீவீரே – பாலர்

6. தாசர் நாங்கள் செய்–வாக்குத்–தத்தம் மீறாமல்,
நேச யேசுவே,–யெமை–நிலைநிறுத்துவீர். – பாலர்

*– சு.ச. எரேமியா*

**292. இராகம்: சங்கராபரணம்** **திரிசுரதாளம்**

*பல்லவி*

**கர்த்தரின் பந்தியில் வா,-சகோதரா**
கர்த்தரின் பந்தியில் வா.

*அனுபல்லவி*

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணிக், - கர்த்தரின்

*சரணங்கள்*

1. ஆபேலின் ரத்தம் அல்ல-நீ செய்த
அநியாயத்தைச் சொல்ல
சாபம் எல்லாம் வெல்ல;-சிந்துண்ட
தயையை நான் என்ன சொல்ல?
கோபம் இல்லாமல் உன் மா பாவம் தீர்த்திடக்
கூறிப் பிதாவின் முன் ஏறின ரத்தமே - கர்த்

2. ஜீவ அப்பம் அல்லோ?-கிறிஸ்தின்
திருச்சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ?-உனக்காய்ப்
பகிரப்பட்ட தல்லோ?
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட. - கர்த்

3. தேவ அன்பைப் பாரு;-கிறிஸ்துவின்
சீஷர் குறை தீரு;
பாவக் கேட்டைக் கூறு;-ராப்போசன
பந்திதனில் சேரு;
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே. - கர்த்

4. அன்பின் விருந்தாமே;–கர்த்தருடன்
ஐக்யப் பந்தி யாமே;
துன்பம் துயர் போமே;–இருதயம்
சுத்த திடனாமே;
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா. – கர்த்

*– மரியான் உபதேசியார்*

**293. இராகம்: வசந்தபைரவி ரூபகதாளம் (461)**

**பல்லவி**

**அன்பின் விருந்தருந்த சகோதரர் அனைவரும், வாரும்.**

**அனுபல்லவி**

இன்பமுடன் பூர்வ கிறிஸ்தவர் ஒன்றித்
திருத் துறவாக விருந்துண்ட வாறு போல்
இணைந்து தக வணிந்து, மிகப்
பணிந்து மறம் தணிந்து தணிந்து – அன்

**சரணங்கள்**

1. நண்பர்கள் கூட்டத்துக் கிந்த விருந்தொரு
நல்ல அடையாளம் மதியும்,–ஏசு
நாதர், அன்பாய் இரும், என்ற கற்பனையை
நற்கருத்தாய் அகம் பதியும்; மிகப்
பண்பட யாவரும் கூடிக்குலாவியே
பரமனை இங்கு துதியும்;–உங்கள்
பழம் பகை யாவுங் கட்டிச் சுருட்டி அப்
பாலே எறிந் ததை மிதியும்,
திண் புவியில் யாரும் ஒன்றிப்பதற் கேற்ற
செய்கை அறிந்து புரிவதற்கு வகை
தேடி அன்பை நாடி, மனம்
கூடி, கீதம் பாடிப் பாடி – அன்

2. உற்ற சிநேக மதற்கு நிகர் சொல்ல
ஒன்றும் இல்லை, அதை ஒரும்[1];-அதால்
ஊதியமான சந் தோட சிலாக்கியம்
ஒக்க இணைந் தங்கு சேரும்;-அன்பு
பெற்ற சகோதரர் ஒன்றித்து-வாழ்வது
பெருத்த மாட்சிமை பாரும்;-அதைப்
பேணி உறாத சத் ராதிகட்கு வெகு
பீடைகளே[2] வந்து சாரும்;
கற்றறிந்து வேத கற்பனை மீறாமல்
கர்த்தருக் கேற்க நடந்து பொறாமையைக்
களைந்து, கற்பில் விளைந்து, அன்பில்
தளைந்து[3], தம்மில், குழைந்து குழைந்து - அன்

*- ஜாண் பால்மர்*

**294. இராகம்: உசேனி ஆதி தாளம் (462)**

**பல்லவி**

**நற்கருணைத் திரு விருந்தை நாடுஞ் சகோதரரே,**
நம்மை மீட்ட ரட்சணியத்தைப் பாடுஞ் சகோதரரே.

**அனுபல்லவி**

சற்குருவா யுலகில் வந்து சஞ்சரித்துக் குருசில் நொந்து
சரீரம் நொறுங்குண்ண நைந்து தளர்ந்தெமக்காய் சோரிசிந்து[4]
- நற்கரு

**சரணங்கள்**

1. பரமகுரு சீடரோடும் பந்திதனிலிருந்து
பாடுபடுமுன் ரா வனுபவித்த திருவிருந்து
வரமிது பாவப்பிணிக்கு வகுத்த வொரேயொரு மருந்து;
வாருங் கூடிவாருமே கவன மாயிங்கே பொருந்து - நற்கரு

---

1 நினையும்
2 துன்பம்
3 கட்டுண்டு
4 இரத்தம்

2. அப்பமெடுத்தாசீர்வதித் தவர்கள் கையிற் கொடுத்து
அருந்துமிதை யென்சரீர மாமென்றுரை தொடுத்துச்
செப்பி, என்னை நினைப்பதற்காய்ச் செய்யுமென்றாருரை
தடுத்து,
தேவ முனிவடையாமற்[1] செறி[2] அதிகந் தனைவிடுத்து – நற்கரு

3. பாத்திரத்தை கையேந்தித் தோத்திரஞ் செய்தென்று
பருகுமிதென் புதிய உடன் படிக்கை ரத்தமென்று,
காத்திரமாய்மொழி பகர்ந்தார்; கருதுமைந்து புலனைவென்று
கர்த்தனடி சேருமவர் காருண்யத்தை யுன்னி இன்று – நற்கரு

***– சு.ச. எரேமியா***

**295. இராகம்: யமுனாகல்யாணி ஆதி தாளம் (463)**

**பல்லவி**

**திருவிருந் தருந்திட வாரும்;–ஏசு**
திருச் சடலமது சேரும்

**அனுபல்லவி**

இருசுகம்[3] தருவார், வாரும்;–மிக
இலவசமாயீவார்–இது சோதனை பாரும் – திரு

**சரணங்கள்**

1. இருதயம் நொறுங்குண்ட பேர்க்கும்–ஐயோ!
என் போலுண்டோ பாவி? யென்போர்க்கும்
மருகித் திகைத்து மாய்வோர்க்கும்–மா
தேவன் நின்றழைப்பதைச் சன்மானிப்போர்க்கும் – திரு

2. வாதையாம் பாவக்கந்தை எடுத்து–ஏசு
மகிப னுதிரத்திற் றோய்த் துடுத்து
நீதியினாடைகள் தரித்து–நமின்
நேசனின் திருச் சன்னிதானத்தை யடுத்து – திரு

---

1 கோபமடையாமல் 2 பகை 3 மிகுந்த

3. இருதய தூபகலத்தில்–திட
விசுவாசமெனும் வர்க்கமிட்டு,
த்யானமெனும் நெருப்பு மூட்டி–தேவ
ஆசனத்தைய சைக்கத் தகுதியாய் நீட்டி – திரு

4. விலைகொள்ளாத திருரத்த ரசமாம்–விருந்ததில்
மேலவன் மாம்ச போஜனமாம்;
நிலையதாய்ப் பசி யிலையென்பதாம்–வான
நேச மகாராஜனின் நித்தியமான அன்பதாம் – திரு

*– டி. சுந்தரம்*

**296. இராகம்: அம்சதோனி** **ஆதிதாளம் (464)**

*பல்லவி*

**பாவி, ஏசுனைத்தானே தேடித் துயர் மேவினார்;**
இதைத் தியானியே.

*சரணங்கள்*

1. பரம சீயோன் மலைக்கரசர் நற்பாலன்,
பரிசுத்த தூதர் பணிசெய்யும் பொற்பாதன்,
மானிடனாக அவதரித்த தெய்வீகன்
வல்ல பேயை ஜெயித்த மா மனுவேலன். –பாவி

2. தீய பாவிகள் பாவ நித்திரை செய்ய
தேவ கோபாக்கினி அவர் மீதில் பெய்ய,
தோஷம் சுமந்து யேசு தேவாட்டுக் குட்டி
துன்பக் கடலில் அமிழ்ந் தாற்றுதல் செய்ய. –பாவி

3. இந்தப் பாத்திரம் என்னை விட்டகலாதோ?
இல்லையானால் உமது இஷ்டமதென்றே
சிந்தை துயரடையச் செப்பினார், அன்றோ
சுவாமி உனக்காய் பிணைப்பட்டதால், அந்தோ! –பாவி

4. கெத்சமனேயில் ஏசு பட்டதை நினையே;
கேவலமான உன் தன் பாவத்தை மறவே;
ஆத்தும நேசர் பதம் ஆவலாய்ப் பணியே;
அன்பின் கரத்தாலுனை அணைப்பார், நிச்சயமே. –பாவி

*– தேவசகாயம் உபாத்தியாயர்*

**297. இராகம்: மோகனம்** **ஆதி தாளம் (465)**

*பல்லவி*

**தாரகமே[1],-பசிதாகத்துடன் உம்மிடம்**
வேகத்துடனே வாறேன்.

*அனுபல்லவி*

சீருஞ் செல்வமும் பெற்றுத் தேறும்படிக் கென்னிடம்
சேரும் யாரையும் ஒருபோதுந் தள்ளிடே னென்றீர். - தார

*சரணங்கள்*

1. பாவமகலத் தேவ கோபமது ஒழியப்
பாடுபட்டுயிர் விடுத்தீர்;-பின்னும்
ஜீவ போசன மெனக்கீய உமையே அந்தச்
சிலுவைதனிலே பகுத்தீர்;
மேவியெனை நெருக்கித் தாவும் பவத்தைக் கொன்று,
சேவித் துயிர் பிழைக்க, தேவே, உமையுட் கொள்ள. - தார

2. காணாதொழிந்த ஆடு வீணாய்ப் போகாம லதை
கண்டுபிடித்தி ரட்சித்தீர்;-அது
பேணுதலுடன் பரி பூரண மடைந்திடப்
பேருல குதித்தேனென்றீர்;
வேணுமுமது நீதி பூண, நிறைவா யுந்தன்
மாணருளுந் திரு பதியானே பெற வும்மிடம். - தார

3. தந்த திருவசனம்; உந்தன் இராப்போசனம்
தகமை யெத்தனமாமே;-யான்
சிந்தை பணிந்தவற்றை யென்றன் மனதுட்கொள்ளத்
வேத சுத்தாவி தாமே;
உந்தன் தசையுதிர[2] விந்தை விருந்தினை யான்
சந்ததமுண்டு துதி சாற்ற அருள் செய்வீரே! - தார

***- அருள்திரு. வே. மாசிலாமணி***

---

1 அடைக்கலமே

2 மாமிசம் இரத்தம்

**298. இராகம்: பியாகு** **ஆதி தாளம்**

*பல்லவி*

**நீதியாமோ? நீ சொல்லும்;–ஓய்!**
நெறியுளோரே, அறம் செய்யாதிருந்திடில். – நீதி

*சரணங்கள்*

1. ஆதுலர்க்[1] கீவதே பாக்கியம்;–பிறரை
ஆதரித்திடுவதே யோக்கியம்;–ஓகோ!
பாதகம் செய்யில் நிர்பாக்கியம்;–மோட்ச
பாதை நடக்கில் சலாக்கியம்[2]. – நீதி

2. தரித்திரர்க் கிரங்குவோன் உடனே–இடுவான்
தற்பரனுக் கவன் கடனே,–என்று
கருத்துடன் சுருதியில்[3] திடனே–உரைத்தார்
கடுநெஞ் சகல் மானிடனே. – நீதி

3. அன்புடன் விதவையும் போட்ட–காசை
அதி வியப்பாய் யேசு காட்ட–புகழ்
இன்புடன் அவள் மிசை சூட்ட–அதை
எவர்களும் அகத்தினில் நாட்ட. – நீதி

4. பிறர் புகழும்படி இன்றே–செய்தால்,
பிரயோசனமில்லை என்றே,–பரன்
மறையதில்[4] விளம்பினார் நன்றே–அம்
மாதிரி விலகாது நின்றே. – நீதி

5. பரிதானம்[5] வாங்குதல் தீது;–அதைப்
பறித்தறம் செய்தல் தகாது;–உமக்
குரியதில் ஈவது போதம்[6];–இதில்
ஊன்றி இருப்பதே நீதம்[7]. – நீதி

---

1 வறியவர்
2 மேன்மை
3 வேதத்தில்
4 வேதத்தில்
5 லஞ்சம்
6 அறிவு
7 நீதி

6. ஏழைகட் கீயாது ஆஸ்தி–ஐயே
இத்தலம் சேர்த்திடில் கீர்த்தி–ஏது?
வாழுல கடைந்தால் நேர்த்தி–என்றும்
வாழலாம், அதுவே மா பூர்த்தி. – நீதி

*– ச. யோசேப்பு*

**299. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**சரணங்கள்**

**இலவசமாய் நீர் பெற்றுக்கொண்டீரே;**
இலவசமாய் நீர் கொடுத்திடும்,
ஆதிபரனிட்ட கட்டளையாமே,
நீதியாம் அதைக் கைக்கொண்டிடும்.

2. நல் மனதுடனே ஈவதே பாக்யம்,
நல்ல பரன் அதை மெச்சிக் கொள்வார்,
இங்கிதமா யிகபர சலாக்யம்
துங்கனாங்[1] கிறிஸ்து தருவார்.

3. எத்தனை தேசத்தில், எத்தனை பேர்கள்
கர்த்தரின் செய்தி வேண்டி நிற்கிறார்?
புத்தியாய்த் தசம பாகங் கொடுங்கள்,
பத்தர் நற்செய்தி அறிவிப்பார்,

4. வஞ்சன் அனனியா மாது சப்ராளும்
வஞ்சித்ததின் பேற்றைப் பெற்றனரே;
உண்மையாய்த் தேவ பங்கைக் கொடுத்திடும்,
திண்ணம் திண்ணம் நீர் பிழைப்பீரே.

5. இரக்கமுள்ளவர் பாக்கியவாளர்;
இரக்கத்தை யவர் பெற்றிடுவார்;
ஏழையோர்க் கிரங்கி யீயுந் தயாளர்,
ஏழைகள் பிதாவினால் வாழ்வார்.

*– டி. அருளானந்தம்*

1 தூயவர்

**300. இராகம்: எதுகுலகாம்போதி** **ஏக தாளம்**

*பல்லவி*

**ஆண்டவர் பங்காகவே, தசம பாகம்,**
அன்பர்களே, தாரும்;–அதால் வரும்
இன்பந்தனைப் யோரும்[1].

*அனுபல்லவி*

வான்பல கணிகளைத் திறந்தாசீர்
வாதங்க ளிடங் கொள்ளாமற் போகுமட்டும்
நான் தருவேன், பரிசோதியுங்க ளென்று
ராஜாதிராஜ சம்பூரணர் சொல்வதால். – ஆண்டவர்

*சரணங்கள்*

1. வேதாளராஜ னருஞ்சிறை மீட்டாளும்
விண்ணவர் கோமானே,–அந்த
மேதகத்தை[2] நன்றி ஞாபகஞ் செய்திட
விதித்தது தானே;
வேதனம்[3] வியாபாரம், காலி[4], பறவையில்,
வேளாண்மை, கைத்தொழில், வேறு வழிகளில்,
ஊதியமாகும் எதிலுமவர் பாகம்
உத்தமமாகப் பிரதிஷ்டை பண்ணியே. – ஆண்டவர்

2. ஆலயங் கட்ட, அருச்சனை செய்ய,
அதற்குளதைப் பேண,–தேவ
ஊழியரைத் தாங்கி யுன்னத போதனை
ஓதும் நன்மை காண,
ஏழைகள், கைமைகள்[5], அனாத பாலர்கள்,
ஏதுகரமற்ற[6] ஊனர், பிணியாளர்,
சாலவறிவு நாகரீக மற்றவர்,
தக்க துணை பெற்றுத் துக்கமகன்றிட – ஆண்டவர்

---

1 நினையும்
2 மேன்மை
3 சம்பளம்
4 கால்நடைகள்
5 விதவைகள்
6 வழியற்றவர்கள்

3. நம்மைப் படைத்துச் சுகம் பெலன் செல்வங்கள்
யாவும் நமக்கீந்து,–நல்ல
இம்மானுவே லென்றொரு மகனைத் தந்து
இவ்வா றன்புகூர்ந்து,
நன்மை புரிந்த பிதாவைக் கனம்பண்ண
நம்மையும் நம்முட யாவையு மீந்தாலும்
சம்மததே அதிலும் தசம பாகம்
தாவென்று கேட்கிறார்; மாவிந்தை யல்லவோ? – ஆண்டவர்

***– அருள்திரு. ஜி.சே. வேதநாயகம்***

**301. இராகம்: அடானா** **தரு திரிபுடைதாளம் (466)**

**பல்லவி**

**சுவிசேடம் கூறுவோம், வாரீர்; கன**
தேசிகரே, உபதேசிகரே–நாம்

**அனுபல்லவி**

திடமாயிப் புடவியிலே[1] திரு
வசனத்தையே விதை செயவே நாம் – சுவி

**சரணங்கள்**

1. ஏசு கிறிஸ்தின் நாமத்தைச் சகல பேர்க்கும்
எடுத்துரைப்போம் போதமாய்;
தேசமெங்கும் சுற்றி நேசமாக வெற்றி
தேசத்தில் அஞ்ஞான மகற்றிட,
நேச க்றிஸ்தேசுவைப் போற்றிட – கவி

2. காணாத ஆட்டையும் பார்ப்போம்; கண்டால் அதையும்
கர்த்தன் மந்தையினில் சேர்ப்போம்;
தானாய் அலையும் அஞ்ஞான ஜாதியைச்
சந்தித் தவருட னுறவாடியே
முந்திப் பவமற வதைத் தேடியே – கவி

---

1 பூமி

3. பூமி மீதெங்கு மெட்டுவோம்; சுவிசேடத்தின்
புனித வலையைக் கட்டுவோம்
தாமதமின்றி வந்த சகலரைச் சீடராக்கித்
தருணம் இது குணப்பட ஏவி
தரை மீதினில் யாவரும் மேவி – கவி

*– ஜே. யாக்கோபு*

**302. இராகம்: உசேனி** **ஆதி தாளம் (467)**

**பல்லவி**

**கிருபாகரனைத் துதிப்போம்–வணக்கமாய்ச் சங்**
கீத தோத்திரம் பாடி, வேத சாஸ்திரம் தேடி – கிரு

**அனுபல்லவி**

திருமலை புரிந்து, வான் புவியுள பொருள்களும்
ஜீவ நற் காலமும் வேளையும் செயல்களும்
பெருகிட நமக்கிது வரையிலும் அருள் செய்து,
பேணினர் கிறிஸ்தேசு, ஊணினர் அன்புடன் – கிரு

**சரணங்கள்**

1. அந்தகாரத்தின் மக்களும்–மகா கொடூர
அலகைப் பசாசும் இந்த உலகின் மாய்கை உள்ளோரும்
ஆதிப்பகையை எடுத்து–நமைப் பிடிக்கச்
சோதனைக் கண்ணி கொடுத்து வளைந்து வந்தும்,
விந்தைக் கிறிஸ்து மேசியா–அவற்றை எல்லாம்
வென்று துரத்தி ஜெயங்கொண்டு நமைத் தற்காத்து
மேன்மைப் படுத்தி வைத்தனர்–கிருபையாய்ச் செங்
கோன்மைக் கடுத்து வைத்தார்; மேன்மையில் மகிழ்ந்து
சிந்தை தனில் அவர் அன்பினை அணிந்து, மெய்ச்
சீர் உள சுவிசேஷ நேர் உயர் வழிதனில்
அந்தமுடன் நடந் தேறிடப் பரிசுத்த
ஆவியின் அருளினை மேவியே ஈந்த நற் – கிரு

2. வேத சங்கத்தினோர்களும்–நலமோடெல்லா
மிஷன் சங்கத்தோர்களும் குறையாமல் பெருகவும்
மேய்ப்பர் கண்காணிமார்களும் சபைகள் தோறும்
மூப்பர் பிரசங்கிகளும் நற்சுவிசேஷ
போதகன்மார்களும் சத்ய–திருமறையைப்
புரிந்து நாடெங்கும் சுற்றித் திரிந்து நற்செய்தி சொல்லும்
போந்த உபதேசிகளும்–அவர்களுடன்
சேர்ந்த உதவிக்காரரும் வாத்திமார்களும்
பூதல மீதெங்கும் உள்ள சபைகளும்
புண்ணிய மொழிகளைப் படிக்கின்ற பிள்ளைகளும்
நீதனாம் ஏசுக் கிறிஸ்துவில் தழைக்கவும்
நித்த நல் ஆவி அருள் வர்த்திக்கவும் திவ்ய – கிரு

3. சத்திய ராஜாக்கள் வாழ்க!–பிரபுக்களும்
சகல துரைகளும் நற்சுகம் பெற்றுயர்ந்து வாழ்க!
சாதுதலைவரும் வாழ்க! அதிகாரிகள்
நீதி நெறியுடன் வாழ்க! கிருபை பெற்று
எத்திசை மாந்தரும் வாழ்க!–தேசங்கள் தோறும்
இருந்து பயிர் செய்வோரும் திரிந்து தொழில் செய்வோரும்
ஏக மனதுடன் வாழ்க;–மெய் தெய்வத்தின் முன்
பாக நலமுடன் வாழ்க; அனுதினமும்
பக்தியுடன் சிறியோர் பெரியோர்களும்,
படியினில் பலவித நிலைமை யுள்ளோர்களும்
நித்தியனைக் கண்டறிந்து என்றைக்கும்
நீடூழி வாழ்க அல்லேலூயா! ஆமென் – கிரு

*– மரியான் உபதேசியார்*

**303. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசுக் கிறிஸ்துவுக்கு**
தோத்திரம், புகழ்ச்சி நித்திய கீர்த்தனம் என்றும்!

***அனுபல்லவி***

அந்தரம்[1] புவியும் தந்து, சொந்த ஜீவனையும் தந்து
ஆற்றினார்; நமை ஒன்றாய் கூட்டினார்; அருள் முடி
சூட்டினார்; கிருபையால் தேற்றினாரே, துதி – சுந்

***சரணங்கள்***

1. பாதகப் பசாசால் வந்த தீதெனும் பவத்தால் நொந்த
பாவிகளான நமை உசாவி[2] மீட்டாரே;
வேத பிதாவுக் குகந்த ஜாதியாகக் கூட்ட வந்த
மேசியாவைப் பற்றும் விசுவாச வீட்டாரே,
கோதணுகா[3] நீதிபரன் பாதமதின் ஆதரவில்
கூடுங்கள்;–பவத்துயர்
போடுங்கள்;–ஜெயத்தைக் கொண்
டாடுங்கள், துதிசொல்லிப் பாடுங்கள், பாடுங்கள் என்றும் – சுந்

2. விண்ணிலுள்ள ஜோதிகளும், எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து போற்றவே,
மண்ணிலுள்ள ஜாதிகளும் நண்ணும்[4] பல பொருள்களும்
வல்லபரன் எனத் துதி சொல்லி ஏத்தவே,
அண்ணலாம் பிதாவுக் கொரே புண்ணிய குமாரனைக்
கொண்டாடிட,–அவர் பதம்
தேடிட,–வெகுதிரள்
கூடிட துதி புகழ்; பாடிட பாடிட என்றும் – சுந்

3. சத்தியத் தரசர்களும் வித்தகப் பெரியார்களும்
சங்கத்தோர் களுங்கிருபை தங்கி வாழவே,
எத்திசை மனிதர்களும் பக்தர் விசுவாசிகளும்
ஏக மிகுஞ் சமாதான மாக வாழவே,
உத்தம போதகர்களும் சத்திய திருச் சபைகளும்,
உயர்ந்து–வாழ; தீயோன்
பயந்து–தாழ, மிக
நயந்து கிறிஸ்துவுக்கு ஜெயந்தான், நயந்தான் என்றும் – சுந்

***– மரியான் உபதேசியார்***

---

1 வானம்–வானுலகு
2 தேடி
3 கோது–குற்றம்
4 பெற்றுக் கொள்ளும்

**304. இராகம் : செஞ்சுருட்டி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**ஜீவ வசனங் கூறுவோம்,–சகோதரரே;**
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்.

*அனுபல்லவி*

பாவிகள் மேலுருகிப் பாடுபட்டு மரித்த
ஜீவாதி பதி ஏசு சிந்தை மகிழ்ந்திடவே. – ஜீவ

*சரணங்கள்*

1. பாதகப் பேயின் வலையில்,–ஐயோ! திரள்பேர்
பட்டு மடியும் வேளையில்
பேதமை யோடு பிடிவாத மருள்[1] மிகுந்து
வேதனை தானடையப் போவோர் கதி பெறவே. – ஜீவ

2. காடுதனிலே அலைந்தே;–கிறிஸ்துவினால்
கர்த்தன் ஊழியம் அமர்ந்தோம்;
நாடு, நகர், கிராமந் தேடி நாம் பெற்றடைந்த
நல்ல ஈவு வரங்கள் எல்லாருங் கண்டடைய. – ஜீவ

3. பூலோகம் எங்கும் நமையே,–கிறிஸ்துநாதர்
போகச் சொல்லி விதித்தாரே;
காலா காலங்களிலும் கூடி இருப்போம்; என்ற
கர்த்தன் வாக்கை நினைத்து எத்தேசமும் திரிந்து. – ஜீவ

4. விண்ணின் மகிமை துறந்தார்,–கிறிஸ்து நமை
மீட்கக் குருசில் இறந்தார்;
மண்ணின் புகழ், பெருமை எல்லாம் தூசுகுப்பை என்
றெண்ணிச் சிலுவைதனை எடுத்து மகிழ்ச்சியோடு. – ஜீவ

***– ம. வேதமாணிக்கம்***

---

1 அறியாமை

**305. இராகம்: கமாசு.** **ஆதி தாளம்**

**பல்லவி**

**சோபன கீதம் பாடுவோம்;–சுவிசேச–மேன்மை**
சொல்லிக் களிகொண்டாடுவோம்.

**அனுபல்லவி**

மாபரனான இயேசு வந் துற்பவித்து மாசு
மாறும் நல் வழிதன்னைக் கூறும் விசேஷம்,
மன்பதை கதி பெற்ற கின்ப சந்தோஷம். –சோபன

**சரணங்கள்**

1. சிலுவைக் கொடி விரித்து செங்கோ லோச்சி
ஜெயமாம் முடிதரித்து,
அலகை[1]தனைச் சங்கரித்து–ஒரு குடைக்கீழ்
அவனி முழுதும் வரித்து[2],
கொலுவாய்க் கிறிஸ்திருப்பார்–குவலயமும்[3] புரப்பார்[4],
கூஷூடன் தீவு தர்ஷூஷெங்கு மிருப்பார்,
கொண்டுவந்தே தங்கள் காணிக்கை நிறுப்பார். –சோபன

2. மீட்கப்படுவார் பாடி–சீயோனுக்க
மீண்டு வருவார் கூடி;
வேட்கை யுடனே தேடி,–சத்தமிட்டு
மேசியாவைக் கொண்டாடி,
தாட்களெல்லா[5] மடிப்பார், தாழ்ந்து தலை குனிப்பார்,
சாலவுந் துதிகளை நாவினாற் படிப்பார்,
சமஸ்தரும்[6] யேசு மத்தியஸ்தரை யடிப்பார். –சோபன

***– சு.ச. ஏரேமியா, தெல்லிவினை, இலங்கை.***

---

1 பேய்
2 சேர்த்து
3 உலகம்
4 காப்பார்
5 முழங்கால்
6 சகலமக்களும்

அட்டவணை

**306. இராகம்: இந்துஸ்தான்காப்பி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு;–மங்கள வாழ்வு**
மருவிய சோபன சுப வாழ்வு.

*சரணங்கள்*

1. துணை பிரியாது, தோகையிம்மாது[1]
சுப மண மகளிவர் இதுபோது
மணமுறை யோது வசனம் விடாது
வந்தன ருமதருள் பெறவேது,–நல்ல – மண

2. ஜீவதயாகரா, சிருஷ்டியதிகாரா,
தெய்வீக மாமண வலங்காரா,
தேவ குமாரா திருவெல்லையூரா
சேர்ந்தவர்க் கருள்தரா திருப்பீரா?–நல்ல – மண

3. குடித்தன வீரம், குணமுள்ள தாரம்,
கொடுத்துங் கொண்டாலது சமுசாரம்[2]
அடக்கமாசாரம், அன்பு, உதாரம்,
அம்புவி தனில் மனைக் கலங்காரம்–நல்ல – மண

4. மன்றல்[3] செய் தேவி[4], மணாளனுக்காவி
மந்திரம் அவர்குறை மேதாவி[5]
மன்றியிப் பூவி லமிர்த சஞ்சீவி[6];
அவளையில் லாதவ னொரு பாவி–நல்ல – மண

***– சு.ச. ஏரேமியா, தெல்லிவினை, இலங்கை***

**307. இராகம்: சூரியகாந்தம்** **ஏக தாளம் (468)**

*பல்லவி*

**குணம் இங்கித வடிவாய் உயர் கோவே, ஏசு தேவே,**
மணம் இங்கித வளமாய் உற வருவீர், மேசியாவே.

---

1 மயில் போன்ற
2 குடும்பம்
3 திருமணம்
4 மனைவி
5 புத்திசாலி
6 சாவா மருந்து

***சரணங்கள்***

1. மன்றல்[1] செய்து மனை புது மண
வாளனோ டவ னேரும்[2]
தன் துணையான மங்கையும் இங்கே
தழைக்க அருள் தாரும். – குணம்

2. ஆதி மானிடற் கான ஓர் துணை
அன்றமைத்த நற் போதனை,
தீதற இணையாம் இவர்க்கருள்
செய்குவீர், எங்கள் நாதனே. – குணம்

3. தொன்று கானாவின் மன்றல் ஓங்கிடத்
தோன்றிய தயாபரனே,
இன்று மன்றல் சிறந்திட அருள்
ஈந்திடும், க்ருபா கரனே. – குணம்

4. பண்பதில லவ லேசமும்[3] குறை
பாடில்லாத தெய்வீகனே,
நண்பதில் இரு பேரும் வாழ்ந்திட
நண்ணும், மா திரி யேகனே. – குணம்

5. உற்ற நல் உறவோடும் எங்கள்
உரிமை ஆனவர் யாரும்
பற்றதாய் உறு பக்தியோடும்மைப்
பாட நல் மனம் தாரும். – குணம்

***– ஜாண் பால்மர்***

**308. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதி தாளம் (469)**

**பல்லவி**

**பாணிக்ரகணஞ் செய்யும்–இருபேருக்கும்,**
பரனே, கிருபை செய்யும்.

---

1 விவாகம் 2 நியமிக்கும் 3 லவலேசம்=சற்றேனும்

**அனுபல்லவி**

மாணப் பெரிய வேதவாசக விதிகொண்டு
வந்தார், தெய்வாலயம் புரிந்தா ரடித்தொண்டு - பாணி

**சரணங்கள்**

1. அன்றாத மேவை சீராய்-ஏகாந்தமாக
அன்போ டிசைந்த நேராய்,
துன்றி யபிராஞ் சாராய்-மனோகர
சுத்த இதயத்தோராய்
மன்றல் செய்வா ருவந்து-வைக இவர் பால் வந்து
வாக்குத் தத்தம் நினைந்து வரப்பிரசாதந் தந் - பாணி

2. கானா விவாகம் நாடி-சிந்தை மகிழ்ந்து
கரிசனையாய்க் கொண்டாடிப்
போனீ ராறு கற்சாடி-நிறைந்த ரசம்
புரிந்தீ ரங்குறவாடி
கோனே! யின்றுமைத் தெடி-கோயிற் புகுந்தார் தேடி
குழைந்துந்தன் துதிபாடி-கூடி மாங்கில்யஞ்சூடி - பாணி

3. திருச்சபை மனையாட்டி-அன்பே, புறாவே
செல்வமே யென்று பாராட்டி,
வரச்சொல்லி, நேசங்காட்டி-உன்னதகீத
வாக்கு வர்ணனை கூட்டி
உரைக்குமது மெய்ஞ்ஞான-மணவாளா, உவமானம்,
உவமேயமிது நிதானம்;-வேணுநின் சமாதானம் - பாணி

***- சு.ச. ஏரேமியா, தெல்லிவினை, இலங்கை.***

**309. இராகம்: சௌராஷ்டிரம் ஆதி தாளம் (470)**

**பல்லவி**

**இங்கெமது நடுவில் எழுந்திடுவாய்-இந்நாளில்**
இறைவா, என்மேல் கருணை பொழிந்திடுவாய்,

**சரணங்கள்**

1. துங்கவனே, இவர்கட் கிங் கியற்றும்–நல்ல
சோபனம்[1] ஓங்க வென்றா சீர்வதிக்க,
மங்கள கீதத்தால் மனம் மகிழ,–இங்கே
வரும் அனைவோரும் உரிமை உற் றொரு மனதாக
மருவி மறம் யாவும் மறந்திட,
வரும் நேசமதாலே சிறந்திட, – இங்

2. உற்றார் சுற்றத்தார் யாரும் உளம் களிக்க–வஞ்சம்
உறு மருவலர்[2] தாமும் மனம் தெளிக்க
பற்றுறு நேசர் கூடிப் பதம் படிக்க–இந்தப்
பதி[3] மனையாளின் உறவோர் நிதியுடன் வாழ்க,
பணிவாய் மனதோடு மதித்திட
பரனே, உனை யாங்கள் துதித்திட – இங்

3. பண்டு கானாவில் ஆன கல்யாணத்தில்–வந்து
பட்சம் வைத்தருள் செய்த பான்மை யதாய்
தொண்டர், எளியர் இங்கு கொண்டியற்றும்–இந்தச்
சோபன நாளில் தேவரீர் மாவணம் மேவி,
சுசியால் எமதுள்ளம் நெகிழ்ந்திட
தூய்தான நல்லாவி மகிழ்ந்திட – இங்

***– ஜாண் பால்மர்***

**310. இராகம்: கேதாரகௌளம் திரிசுரதாளம் (471)**

**பல்லவி**

**சந்தத மங்களம், மங்களமே!**
சந்தத மங்களம், மங்களமே!

**அனுபல்லவி**

அந்தம் ஆதி இலான் அருள் சேயா,
எந்தை ஏசு கிறிஸ்து சகாயா. – சந்

---

1 திருமணம் 2 மருவலர்–பகைவர் 3 கணவன்

**சரணங்கள்**

1. அந்தரம், பரம் பூமி அடங்கலும்
விந்தை மேவி நிறைந்த விசாலா,
இந்த நாள் மணம் செய்யும் இவர்க் கருள்
தந்துன் ஆசிடைய சாற்றும், தயாபரா. – சந்

2. வையமுற்ற மணவறைப் பந்தலில்,
ஐயனே, உன் அருட்கொடி வந்திருந்
துய்ய ஐங் குறியாலும் உவந்தருள்
செய்யும், ஏக திரித்துவ தேவா – சந்

3. கர்த்தனே, கருணைக் கடலே, உயர்
பெத்தலைப் பிரதாப விசேடா!
புத்திரர் பெறவும் புகழ் ஓங்கவும்
சித்தம் வைத்தே இவர்க் கருள் செய்திடும். – சந்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**311. இராகம்: பைரவி** **மீரக தாளம் (472)**

**பல்லவி**

**மாதுக்கோர் மணவாளனே, வகுத்த ஞான மணாளனே**

**அனுபல்லவி**

ஆதமேவையர்க் கன்று தந்தருள்
ஆசீர்வாதமெலா முவந்தருள் – மாது

**சரணங்கள்**

1. ஆலயந்தனில் வந்திடும்; அடியார்க் குமதருள் தந்திடும்,
சீலனே, மறைநூலனே, மரிபாலனே, யனுகூலனே, முன்பு – மாது

2. ஆகமோடுயிர்[1] போலவே அமையவே யிவர் சாலவே
பாகம் நீங்க, விவாகமென்பது பாரிநாயகர் பற்றுமன்பது – மாது

3. பாக்கியத்தினிற் பாக்கியம் பகருமே மனப்பாக்கியம்,
சீக்கிரஞ் செலும் செல்வப் பாக்கியம், சிதைவுறா தொழிற் கற்பு
யோக்கியம் – மாது

---

1 உடல்

4. புத்ர பாக்கியமருளுவாய் புகழும் வாழ்வு தந்தருள்வாய்
சத்தியம் தயை, சாந்தம், இன்னுரை, தம்பதிக்கியல்பாகும்
நல்லுரை – மாது

***– சு.ச. ஏரேமியா, தெல்லிவினை, இலங்கை.***

**312. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

***பல்லவி***

**ஏசுநாயகா, வந்தாளும்;–எந்நாளும், திவ்ய**
ஏசுநாயகா, வந்தாளும்.

***அனுபல்லவி***

ஆசீர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக. – ஏசு

***சரணங்கள்***

1. சுந்தரம் மிகும்படி முன் அந்த மண வீட்டில்
உந்தன் அருள் தந்த தயை போல, அன்பாலே – ஏசு

2. உத்தம சன்மார்க்க நெறி, பக்தி, விசுவாசம்,
நித்திய சமாதானம் உற்று, வாழ, மிக வாழ. – ஏசு

3. துங்கம் மிகு நன் கனம் விளங்கி, வளமாக
மங்களம தோங்க, நலம் தாங்க, நலம் தாங்க. – ஏசு

4. நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகப்
புத்திர சந்தானமே செழிக்கத், தழைக்க. – ஏசு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**313. இராகம்: துஜாவந்தி ஆதி தாளம்**

***பல்லவி***

**இந்த மங்களம் செழிக்கவே–கிருபை செய்யும்,**
எங்கள் திரித்துவ தேவனே!

***அனுபல்லவி***

சுந்தரக் கானாவின் மணப் பந்தலில் சென் றம்பணத்தை[1]
கந்த[2] ரசமாகச் செய்த விந்தைபோல், இங்கேயும் வந்து. –இந்த

***சரணங்கள்***

1. ஆதி தொடுத் தன்பை எடுத்தாய்;–மானிடர் தமை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்;
நீதி[3] வரம் நாலுங் கொடுத்தாய்;–பெற்றுப் பெறுகி
நிற்க உலகத்தில் விடுத்தாய்;
மாதவர் பணியும் வேத போதனே, அந்தப்படி உன்
ஆதரவைக் கொண்டு சுதன் நீதியை நம்பிப் புரிந்த –இந்த

2. தக்க ஆபிராமும் விண்டனன்[4];–அதனை மன
துக்குள் எலியேசர் கொண்டனன்;
முக்கிய ஹாரன் நிலத்தண்டினன்;–நினைத்தபடி
சக்கியம தாகக்[5] கண்டனன்;
பக்குவம் உரைத்திடா ரெபேக்காளும் ஈசாக்குவுக்கு
தக்க மண வாளியாகத் தந்து தயை செய்தாற்போல. –இந்த

3. சத்திய வேதத்தின் வாசனே,–அருளு பரி
சுத்த சுவிசேட நேசனே,
பக்தர்கள் பாவ விமோசனே,–பழுதணுவும்
அற்ற கிறிஸ் தேசுராசனே,
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும் அளித்த பேறாய்
புத்திர சம்பத்துண்டாக்கி நித்ய சுப சோபனமாய். –இந்த

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**314. இராகம்: நாதநாமக்கிரியை சாபு தாளம்**

***பல்லவி***

**இம்மணர்க் குன்னருள் ஈ பரவாசா!**
ஏசுக் கிறிஸ்தையா, ஓ! சருவேசா!

1 நீர்
2 மணமிக்க
3 ஆதி.1:28
4 கூறினான்
5 சினேகமாக

***சரணங்கள்***

1. செம்மையும் நன்மையும் செல்வமும் தாரும்,
தேவரீர் இவ்விரு பேரையும் காரும். – இம்

2. ஆதாமோ டேவையை அன்றமைத்தீரே,
அவ்விதமாக நீர் இன்றும் செய்வீரே. – இம்

3. அன்பன் ஈசாக்கு ரெபேக்காட் கிரங்கி,
ஆபிரகாமுடன் சாராளைக் காத்தீர். – இம்

4. உன் தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்,
ஒருவர்க் கொருவர் நல்லன்பில் நிலைக்கவும். – இம்

5. தாழ்மை பொறுமைகள், சற்குண மேன்மைகள்
தந்தும தாவியைக் கொண்டு காத்தாளுமேன். – இம்

6. இயேசு கிறிஸ்துவை நேசித்து வாழவும்,
இன்ப விசுவாச வீட்டார் என்றாகவும். – இம்

***– அருள்திரு. பாக்கியநாதன் தாவீது***

**315. இராகம்: சயிந்தவி** **ஆதிதாளம் (473)**

**பல்லவி**

**தீதிலா மா மகத்வ தேவா, வந்தாளும்–அதிசய**

**சரணங்கள்**

1. ஆதி மூலனே–உயர்–நீதி குணாளனே–மனு
ஜாதி இடமே மணமானதை மா தயவாய் நிலையாக்கின –தீதிலா

2. வேத போதனே–பிர–சாத நாதனே,–தினம்
மாது மணாளனும் யாதொரு பேதம் இலாது சுகித்திட –தீதிலா

3. மித்திர[1] சேர்க்கையும்–பரி சுத்த இல்வாழ்க்கையும்–வளர்
புத்திர சந்தான மோடிவர் நித்திய சிலாக்கியம் உற்றிட –தீதிலா

---

1 நண்பர்

4. தேவ சேயராய்–இவர்–மேவ, நேயராய்–கெடு
பாவ வழி மாறிநெருங்கிய ஜீவவழியே தொடர்ந்தேகிட –தீதிலா

*– ஜாண் பால்மர்*

**316. இராகம்: பைரவி** **திரிபுடைதாளம் (474)**

**பல்லவி**

**நித்தியா, இவ் ஆலயத்தில் சேர், ஐயா;–இதில்**
நேசமாய் வந்தோர்க் கருள் கூர், ஐயா,

**அனுபல்லவி**

பெத்த லேம் பதிக் கிறைவா, பேச அரிதான திரு
சத்ய மறை பரவும்[1] சுவாமி ஏசு ராஜன் எனும் – நித்

**சரணங்கள்**

1. சத்திய பரமண்டல வாசனே–பரி
சுத்தர் செய்யும் தோத்திரத்தில் நேசனே
பத்தர்கள் இயற்று பவ நாசனே,–இந்தப்
பார் இருள் அகற்றும், பிரகாசனே
சத்துரு தசை, உலகம் மெத்தவும் வருத்த நொந்து
கத்தும் அடியார்க்கு உன்தன் சித்தம் திரங்க என்றும்
பத்து நெறியும் கடந்து பித்தராய் பிழைத்த எங்கள்
பாவமும் அதால் விளைந்த சாபமும் தொலைக்க வந்த – நித்

2. மதி இல்லாத எங்களைப் பாராட்டியே, பொல்லா
மானிடர் பிழைக்க அருள் காட்டியே,
சதிசெய் அலகை வஞ்சம் ஓட்டியே,–உன்தன்
சபைக்குக் கிருபை முடி சூட்டியே
கதியும் அற இழந்த கடையானோர் உன் பதத்தின்
ததி இதுவாக வந்து தங்குதலால் ஆதரிப்பாய்!
மதியும்[2] பதத்தினில் இரவியும்[3] தாரகைக்[4] கணம்
துதி செய் சிரத்தணிந்த துய்ய சபை போற்றும் தேவவே – நித்

---

1 கூறும்
2 சந்திரன்
3 சூரியன்
4 நட்சத்திரக்கூட்டம்

3. தந்தை சுதன் ஆவியர்க்குத் தோத்திரம்–ஆ
னந்த சதா காலங்களும் பாத்திரம்;
விந்தை மறையே நமது நேத்திரம்[1],–வி
ளங்கும் ஒளியாக வந்த சூத்திரம்;
சொந்தமாய் இந்நாட்டிலுள்ள சுத்த சுவிசேஷ சபை
சொன் மறையின் ஊழியர் எச்சோதனை தனக்கும் தப்பி
தந்த மறை சத்தியத்தில் தாபரிக்க ஆதரிப்பாய்;
சந்ததம் துதி உமக்கே, ஸ்வாமி! ஏசு ராஜன் எனும் – நித்

***– காபிரியேல் உபதேசியார்***

**317. இராகம்: பிலகரி ரூபகதாளம் (475)**

*பல்லவி*

**நித்தம், நித்தம் பரிசுத்தர் துத்தியம் செய்யும் தேவே,–இவ்வாலயம்**
நேயத்துடன் வரும் யாவர்க்கும் உன் அருள் தாவே.

*அனுபல்லவி*

எத்திசையும் பணி கர்த்தாதி கர்த்தன் நம்
ஏசுகிறிஸ்துவின் நாமத்திற்கே துதி!
சத்ய சுவிசேஷம் எங்கும் பரம்ப
தயை அளித்தாளும் தயாபரனுக்கென்றும்
சர்வாதிகாரம்–மகிமையும் தகும் நமஸ்காரம்–பெருகவும்
தத் தித் திமி தத் தித் திமி தனுத்த சேம்தரி தாம் தரிகிட
தளங்கு தோமென. – நித்தம்

*சரணங்கள்*

1. அம்பரம் ஆசனம், பூமியைப் பாதத்தில் கண்டாய்;–மிக
அஞ்சிப் பணிந்தோர் இருதயத்தும் குடி கொண்டாய்;
இம்பர்[2] பணிந்து நாம் ஏற்ற கிருபையைத் தந்தாய்;–எங்கே
இரண்டொரு மூவர் இசைந்தாலும் வருவோம் என்றாய்
இன்ப முழுக்கதாகும் ஞானஸ்நானம்

1 கண்மணி 2 இவ்விடம்

எல்லா உலகத்தார்க் கீயும் பிரதானம்;
அன்பர் அடையும் கருணை ராப்போஜனம்
ஆத்துமாவுக்கு நல் ஆறுதலாம் தினம்;
ஆ! உபகாரம்–பராபரன்–அளித்தார் இந்நேரம்; எங்கட்கெந்த
ஆபத்திலும் சாபத்திலும் அருமையாய் தேவ
கோபத்திலும் யாவற்றிலும் கிருபையாகவே. – நித்தம்

2. எத்தலத்தோர்க்கும் உன் உத்தம வார்த்தையைக் கூறும் – சுவி
சேஷ குருமாருக்குக் கிருபை பெலன் தாரும்
சுத்த நற்போதகத்தில் பயிலும் நற்சபையாரும் – மெய்ச்
சுடர் வழி கண்டு நடக்கக் கருணைக் கண் பாரும்;
பக்தி, விசுவாசம், நம்பிக்கை எங்களில்
பாலித்தருளும் எக்காலும்; நிலைநிற்க
முக்தி பெறும் கடை நாள் வரை ஆவி
முத்திரையாக நிதம் புரிந்தாளும்;
மூவர் ஒன்றாய் வந்–திவ்வீட்டில்–மேவும்; அன்பாய் நின்–
நல்வார்த்தை
முற்பட்ட மகத்துவத் தயையால் உளங்கொள
முற்பொற் சிறை நற்பிற் சிறையே வணங்கியே. – நித்தம்

***– காபிரியேல் உபதேசியார்***

**318. இராகம்: கமாஸ்** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தேவனே, ஏசுநாதனே, இத்**
தேவ ஆலயம் வந்திடும்;
தேவ ஆலயம் வந்தவர்க் கருள்
திவ்ய ஆவியை ஈந்திடும்.

***சரணங்கள்***

1. பாவிகள் உமக் காலயஞ் செய்யப்
பாத்திரர்களோ? அல்லவே;
பாவநாசராம் யேசுவே உம்மால்
பாத்திரராய் இதைச் செய்தனர். – தேவனே

2. கூடிவந் தும்மையே பணிந்திடக்
குறித்த இச்சிறு ஆலயம்
நாடி வந்தவர் யாவருக்குமுன்
நல்வசன முளதாகவும். – தேவனே

3. தேவனே, உமக்கான ஆலயம்
பாவியின் சிறு நெஞ்சமே;
பாவம் யாவையும் நீக்கியே சிறு
தேவ ஆலயமாக்கிடும். – தேவனே

*– அருள்திரு. ச. தாவீது*

**319. இராகம்: காம்போதி** **சாபுதாளம் (476)**

*பல்லவி*

**மறவாதே, மனமே,–தேவ சுதனை**
மறவாதே, மனமே,–ஒருபொழுதும்

*சரணங்கள்*

1. திறமதாக உனைத் தேடிப் புவியில் வந்து,
அறமதாகச் செய்த ஆதி சுதன் தயவை – மறவாதே

2. விண்ணின் வாழ்வும் அதன் மேன்மை அனைத்தும் விட்டு
மண்ணில் ஏழையாக வந்த மானு வேலை – மறவாதே

3. கெட்ட மாந்தர் பின்னும் கிருபை பெற்று வாழ,
மட்டில்லாத பரன் மானிடனான தயவை – மறவாதே

4. நீண்ட தீமை யாவும் நீக்கிச் சுகம் அளித்திவ்
வாண்டு முழுதும் காத்த ஆண்டவனை எந்நாளும் – மறவாதே

5. நித்தம் நித்தம் செய்த நிந்தனை பாவங்கள்
அத்தனையும் பொறுத்த அருமை ரட்சகனை – மறவாதே

6. வருடம், வருடம் தோறும் மாறாத் தமதிரக்கம்
பெருகப் பெருகச் செய்யும் பிதாவின் அனுக்ரகத்தை –மறவாதே

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**320. இராகம்: துசாவந்தி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த**[1]
எண்ணமாய் ஸ்தோத்தரிப்போமாக.

*அனுபல்லவி*

நம்மை ரட்சிக்க வந்து தம்மை பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும் அற்புதமாகவும். – இம்

*சரணங்கள்*

1. காலம் சொல் போல் கழியும், தண்ணீரைப் போல் வடியும்,
கனாவைப் போலேயும் ஒழியும்;
வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்,
மண்ணின் வாழ் வொன்றும் நிற்க மாட்டாது;
கோலப் பதுமைக்கும், நீர்க் குமிழிக்கும், புகைக்குமே
கொண்ட உலகத்தில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு[2] தயவுடன். – இம்

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்,
பரம பாதையைத் தொடர்ந்தோம்;
வலிய தீமையை வென்றோம், நலியும்[3] ஆசையைக்
கொன்றோம்,
வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி[4] என்ற தெல்லாம் விண்டோம்,[5] கர்த்தாவின் மீட்பைக்
கண்டோம்;
காய்ந்த மனதொடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்து கெடவும், ஆராய்ந்து நெறியுடன். – இம்

---

1 முடிவற்ற
2 பகிர்ந்து
3 துன்புறுத்தும்
4 துன்பம்
5 நீங்கினோம்

3. கன[1] சேதம் வருவிக்கும் கேடுகட்கோர் முடிவு
தந்து; நொறுக்கினதைக் கட்டிக்,
கன சபையை ஆதரித் தன்பாய் ஆசீர்வதித்துக்,
கண் ணோக்கி எல்லார் மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து, தமது தேவ
சிந்தை யினோடதி விந்தையதாய் உயிர்
மைந்தனால் எங்களை இந்த வினோதமாய். – இம்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**321. இராகம்: உசேனி** **ஆதி தாளம் (477)**

**பல்லவி**

**தேவ சுதனைத் துதி செய்–எனதுள்ளமே,**
தேடி? அவர் தயவைப் பாடி, மன்றாடி இன்று

**அனுபல்லவி**

ஜீவ தயாபர ரான யெகோவாவின்
திருச்சுதனாகிய கிறிஸ்தெனும் ரட்சகர்
பாவ விமோசனராகச் சிலுவையில்
பாடுபட் டிறந்துயிர்த் தெழுந்துனை மீட்டவர் – தேவ

**சரணங்கள்**

1. வானும், புவியும், திரையும்–அவைகளின் உள்
வஸ்து பலவும் தோன்ற விஸ்தரித் தமைத்து;
வாழும் காலத்துக்குத் தக்க–நன்மைகள், உனைச்
சூழும் செயல்கள் மிகுக்கக் கொடுத் துயர்த்தி,
போன வருடம் முழுதும்–நடத்திக் காத்து,
புதுவருடமாம் இதில் சதுருடன்[2] கொண்டு வந்து,
போதகரும் சபைகளும்–சிநேகிதரும்
வேத நெறியை எடுத்துப் பாராட்ட, தேவ
ஞானமும் நீதியும் பரி–சுத்தமும் மீட்பும்
ஞயமுடனாகிய கிறிஸ்தேசு உன் பெல
ஈனமதில் உதவி செய்து–நிற்கிறார்;
இன்பமுடன் அவர் அன்பதில் நிலைத்து நில் – தேவ

1 மிகுந்த 2 வல்லமை

2. சத்துருக்கள், சோதனைகள்–துன்பங்கள், நோய்கள்
சாரும் கவலைகளும் சீறும் பசாசுகளும்
சதியாய் உன்தனைப் பிடிக்க–வளைந்தும் ஜீவ
அதிபதி வந்துனை அடுக்க நின்றுன்னைக் காத்து
பத்திரமாக நடத்தி,–நீ செய்த பல
பாவச் சுமையை அவர் தாவிச் சுமந்து தீர்த்து,
பரிசுத்த கூட்டத்துடனே–அன்பின் விருந்தை
தரிசத்துட் கொள்ள உன்தனைச் சேர்த்த தயவை
உத்தம கீழ்ப்படிதலுடன்–அனுதினம்
ஊக்கமாய் உணர்ந்து, நல் தீர்க்கமாய் ஜெபம் செய்து,
அத்தன்[1] வருகைக்குக் காத்து–எதிர்நோக்கி
ஆயத்தமாய் இரு; சாயுச்சியம்[2] அடைந்திட – தேவ

3. ராஜர் துரைகள் தலைவர்–பிரபுக்களும்
ராஜ்யக் குடிகளும் மாட்சிமையுள்ள தேவ
ரட்சிப்படைந்து தழைத்துச்–சமாதானமாய்ப்
பட்சத்துடனே நடந்து, வாழ்க! பூ எங்கும்
வாசம் செய் போதகர்களும்–தேவ தயவை
வாழ்த்தி, பணிந்து புகழ்ந்து தேத்தும் கிறிஸ்தோர்களும்
வல்லமை கொண்டு செழித்து, சுவிசேஷத்தைச்
சொல்லும் திறத்தில் கதித்து[3] வாழ்க! சகல
தேசங்கள், பாஷைகள், கோத்–திரங்களெல்லாம்
தேவாதி தேவன் எனும் கர்த்தராகிய மேசி
யாவின் அரசாட்சியைச் சேர்ந்திட
விண்ணப்பமும் ஜெபமும் வளந்தேறிட – தேவ

*– மரியான் உபதேசியார்*

**322. இராகம்: பிலகரி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**ஆனந்தமே! ஜேயா! ஜேயா!**
அகமகிழ்ந் தனைவரும் பாடிடுவோம்.

---

1 இறைவன் 2 ஐக்கியம் 3 பெருகி

*அனுபல்லவி*

ஞானரட்சகர் நாதர் நமை–இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் – புகழ்

*சரணங்கள்*

1. சங்கு[1] கனம், வளர் செங்கோலரசிவை
தளராதுள கிறிஸ்தானவராம்,
எங்கள் ரட்சகரேசு நமை–வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால் – புகழ்

2. முந்து வருட மதனில் மனுடரில் வெகு
மோச கஸ்திகள் தனிலேயுழல,
தந்து நமக்குயிருடை யுணவும்–வெகு
தயவுடன் யேசு தற்காத்ததினால் – புகழ்

3. பஞ்சம் பசிக்கும் பட்டயத்துக்கும் வெகு கொடும்
பாழ் கொள்ளைநோய் விஷதோஷத்திற்கும்,
தஞ்ச ரட்சகர் தவிர்த்து நமை–இத்
தரைதனில் குறை தணித்தாற்றியதால். – புகழ்

*– அருள்திரு. வே. மாசிலாமணி*

**323. இராகம்: ஆனந்தபைரவி ஆதி தாளம் (478)**

**பல்லவி**

**பாரும், பாரும், ஐயா!–எனை அன்பாகப்**
பாரும், பாரும், ஐயா–திருக்கண் கொண்டு

**அனுபல்லவி**

பாரில் மகிழ் வெல்லைப் பதி மேவிய பரா
பாவ விமோசனா, தீவினை நாசனா, மூஉலகாசனா, ஜீவனே,
ஓசனா! – பாரும்

---

1 மாண்பு

**சரணங்கள்**

1. பாவ நரர்[1] பிணையே,–பரி பூரண–மேவும் உயர் துணையே,
வினையை எய்யும்
தேவ திருக் கணையே,[2]–உலகில் உள்ள–யாவர்
உனக்கிணையே!
பூவில் இவ்வாண்டெமைப் புனித நெறியில் காவும்,
போதக நாயனே, மாதவ தூயனே,
கோதரும்[3] ஆயனே; ஆதியின் சேயனே! –பாரும்

2. தாலந்தனில்[4] இருளே–அகற்றிமிக சீலந்தரும் அருளே,–அடியர்
கட்கனு
கூலம் நிறைதெருளே[5],–மனுடர்களின்–கோலம் உறும்
பொருளே,
காலத்தை எண்ண மெய்க் கருத்தை எனக்களியும்;
காரண நேசனே, ஆரண[6] வாசனே,
பூரண ராஜனே, தாரணி ஈசனே. –பாரும்

***– தேவசகாயம் எழுத்தர்***

**324. இராகம்: தோடி** **ஆதி தாளம் (479)**

**பல்லவி**

**ஞான திரி முதலொரு[7] பொருளை, நரர் சுகமொடு வர அருள்**
ஞான திரி முதலொரு பொருளே

**அனுபல்லவி**

வானவர் துதிசெய் அனாதி குருபரனே, ரீரீரீ ரீ
மானுவேல் ஏசெனும் நாம சங்கீதனே – ஞான

---

1 மனிதர்
2 அம்பு
3 குற்றமற்ற
4 பூமியில்
5 ஞானமே
6 வேதம்
7 இறைவன்

**சரணங்கள்**

1. மாதுக் குரைத்த ஆதி வார்த்தையின் வித்தே
மண்ணின் ஈசாயின் வேராய் வழுத்தும் விண் முத்தே,
வேதப்ரமாணம் ஈந்த ஆறு லட்சண சித்தே;
விளங்கும் திருச்சபையில் இலங்கும் அரூபவஸ்தே – ஞான

2. நித்தம் விக்கனம்[1] வராமல் ரட்சித்த நன்னேசா,
நெஞ்சில் கவலை, துயர் நீக்கும் சந்தோஷா,
சத்துருப் பசாசின் முடிதரித்த உல்லாசா,
சந்ததம் இச்சபையை ஆதரிப்பாய், சருவேசா – ஞான

3. புவியில் அநேக நரர் போயினர் முன்மாண்டு,
பூர்த்தியாய்க் காப்பாற்றி வைத்தீர் புகுத இவ்வாண்டு,
திவ்ய திருச்சபையோ சிறிய கடுகுப் பூண்டு
திரண்ட மரம்போலாகிச் செழிக்கவும் நீண்டு – ஞான

4. தின முன தருள் புரி சீயோன் அனுகூலா
தேசிகர் உளம் களிக்கச் சிறக்கும் நன்னூலா;
மன நலம் தரும் ஒரு பரகுரு பாலா
வருட முதலில் புது வரமருள், சீலா[2] – ஞான

***– ஈசாக்கு பாக்கியநாதன்***

**325. இராகம்: தன்யாசி** **ஆதி தாளம் (480)**

**பல்லவி**

**ஆதரி, ஐயா; இந்த அவனியில்பேய் எனை**
மதியை மயக்குதே

**சரணங்கள்**

1. சாதாரண சத்திய வேதா, சம்பூரண சகலலங்காரா,
சங்கை இலங்கியே எங்கும் நிறைந்திடும்
சார்ந்த நயகுண சிங்காரா – ஆதரி

---

1 துன்பம் 2 மேன்மை பொருந்தியவனே

2. வையகந்தனை நடுத்தீர்க்க வரும் வல்லமை அற்புத நயகுணனே,
மழலை போல் இரங்கியே–சதி செய்யும் பாதகர்க்
காறுதல் அளிக்கும் நயகுணனே – ஆதரி

3. கேரூபின் செட்டைகள் மீதினிலேறிக் களிப்புடனே வரும் தாயகனே
கேட்டின் அலகை மாய்கைக் குள் இருக்கும்
கிஞ்சினர்[1] கைதூக்கும் தாயகனே – ஆதரி

4. சத்திய வேதத் திருச்சபையோரும் சம்பிரமமுடன் தழைத் தோங்கிடவே
தாரணியோ ரனைவோரும் சேர்ந்து
ஸ்வாமி ஏசு பதம் தேடிடவே – ஆதரி

### 326. இராகம்: இந்துஸ்தானி

**பல்லவி**

**தூய பரப் பொருளே, துன்புற ரட்சித்தருளே**

**சரணங்கள்**

1. நேய பரனே, உனது நீதி நெறி மறுத்துத்
தீய நரர் ஆம் எளியர் செய்த பாவம் பொறுத்து – தூய

2. காவல் எமக்குன்ன அன்றிக் காண யாரும் இலையே;
தேவன் நீயே மேவும் எங்கள் சிறந்த கன்மலையே – தூய

3. சுற்றிவரும் கொள்ளை நோயில் தொண்டர் மடியாமலே
பற்றதாய் வைத் தாதரித்தெம் பாவ மதியாமலே – தூய

4. எங்கள் பிணையாக வந்த ஏசுநாதர் மூலமாய்ப்
பங்கம் அற யாம் தழைக்கப் பாரில் அனுகூலமாய் – தூய

1 ஏழைகள்

5. தீய குணம் யாவையுமே சிந்தையை விட்டகற்ற
நாயனே, எப்போதும் நாங்கள் நன்மைதனை இயற்ற – தூய

***– ஜாண் பால்மர்***

**327. இராகம்: ஆனந்தபைரவி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**தருணம் மழை ஈயும், நாதனே**
சருவேசா, அதி நேசா, பவ நாசா, ஈசா

**சரணங்கள்**

1. தருணம் அருள் ஈசனே, தவிக்கிறோம், மா ராஜனே
கிரணம் ஒளிர் உல்லாசனே, கிலேசம் அகற்றும் நேசனே – தரு

2. பூமி வறண்டு போனதே, புற்கள் வாடல் ஆனதே;
ஸ்வாமி, நன்மழை ஊற்றுமே, தாபம்[1] அனைத்தும் மாற்றுமே
– தரு

3. வெப்ப மிகுந்த தையனே, வேதனை உதவாய், துய்யனே!
எப்படியும் மழை பொழிந்தே இரக்கம் செய்வாய், மெய்யனே
– தரு

4. ஜீவன் யாவும் மாளுதே, தினமும் துயரம் நீளுதே;
தேவே திருக்கண் பாருமே, செழிக்க நல் மழை தாருமே – தரு

5. பஞ்சமே பறந்தோடவே, பணிந்துனைக் கொண்டாடவே,
கெஞ்சும் அடியர் கூடவே, கிருபை அருள் நீடவே – தரு

6. அல்லும் பகலும் அழுகிறோம்; ஆற்றும் பரனே தொழுகிறோம்;
பொல்லார் எனவே விழுகிறோம்; பொழியும் மழையை
எழுகிறோம் – தரு

***– ச. யோசேப்பு***

---

1 துன்பம்

**328. இராகம்: பைரவி** **திரிசுர தாளம்**

*பல்லவி*

**வாரும், எமது வறுமை நீக்க**
வாரும், தேவனே; மழை – தாரும், ஜீவனே.

*சரணங்கள்*

1. பாரில்[1] மிகுக்கும் வருத்தத்தாலே
பாடும் நீண்டதே; வெகு–கேடும்–நீண்டதே. – வாரும்

2. நட்ட பயிர்கள் மழை இல்லாமல்
பட்டுப்போச்சுதே;–மிகக் கஷ்டம் ஆச்சுதே. – வாரும்

3. பச்சை மரங்கள் கனிகள் இன்றிப்
பாறிப்போச்சுதே; அன்னம்[2]–பாறல்[3] ஆச்சுதே. – வாரும்

4. தரணி யாவும் காந்தியாலே[4]
ததும்புதே, ஐயா; நரர்–தயங்கிறோ மெய்யாய். – வாரும்

5. கருணையுள்ள நாதனே, இத்
தருணம் வாருமே; எங்கள்–தயங்கல் தீருமே. – வாரும்

*– ச. யோசேப்பு*

**329. இராகம்: ஆனந்தபைரவி** **ரூபக தாளம் (481)**

**பல்லவி**

**எங்கள் மீதிரங்குவீர் ஐயா; இரக்கமுறும்**
எந்தையே, திருக்கண் பார்; ஐயா

**அனுபல்லவி**

துங்க மிகும் ஏகனே, மெய்ச் சோதியுறும் ஏசுநாதா
கங்குல்[5] பகல் துன்பம் மிஞ்சிக் கலங்குகிறோம், ஓலம்! ஐயா
– எங்கள்

---

1 பூமியில்
2 உணவு
3 புலம்பல்–வறட்சி
4 வெப்பம்
5 இரவு

**சரணங்கள்**

1. வாந்திபேதி மல்கல்[1] ஆச்சே; மதிமயங்கி
வாலிபரும் சாகல் ஆசசே;
மாந்தர் மிசைகோபம் ஆச்சோ? மகத்வமிகும்
வள்ளலே; உன் அன்பும் போச்சோ?
வேந்தன் மனுவேலே எங்கள் வேண்டுதலைக் கேட்டுத் தயை
போந்தபடி[2] ஈந்தருளும்; பூரண நல் ஆதிபனே – எங்கள்

2. ஈசனே, உன் தஞ்சம் அன்றியே–எமக்குப் புகல்
எங்கும் வேறொருவர் இன்றியே,
நீரச நரர் மீது நன்றியே–நிதம் அளித்த
நேசம் போயினதோ குன்றியே?
சாசுவத நாயகா, இத்தாரணியில் கொள்ளை நோயும்
வீசும்படி செய்ததாலே விம்முகிறோம் கேளும், ஐயா – எங்கள்

3. ஈனர் மன்றாட்டைக் கேள் ஐயா;–இப்போதிரங்கி
எம்பரா, நோயைத்தீர், ஐயா
மானிடர் முகம் பார் ஐயா,–மகா நிச்சய
வாக்கின்படி கண்பார் ஐயா,
ஞானமுறும், ஏசுதேவா, ஞாலத்தில் வருந்தும் எம்மை
வானுலகில் சேர்த்து, நிதம் மாட்சியுடன் வாழுதற்காய் – எங்கள்

*– ச. யோசேப்பு*

**330. இராகம்: கெண்டை** **ஆதி தாளம் (482)**

**பல்லவி**

**வந்தே கடைக்கண் பாருமேன்,–சர்வேசுரனே,**
வந்தே கடைக்கண் பாருமேன்.

**சரணங்கள்**

1. வந்தே கடைக்கண் பாரும்; மானிடர் மீதிரங்கி,
எந்தா, துயரம் யாவும் எவ்விதமும் நீக்க. – வந்தே

---

1 பெருகுதல் 2 வேண்டும்–போதுமான

2. கொள்ளை நோய் மிகுத்ததின் கொடுமை பெருக்கமாச்சே;
வள்ளலுன் சகாயத்தால் மாற்றும் கருணைத் தேவே! – வந்தே

3. எண்ணா வேளை வாலரும்[1] இறந்துபோறார், ஐயோ!
கண்ணீர் சொரியும் மாந்தர் கலக்கம் அனைத்தும் போக்க,
– வந்தே

4. எங்கே விரைந் தோடுவோம், இறைவா உமை அல்லாமல்!
எங்கள் தஞ்சம் வேறாரும் இல்லை; சரணம், ஐயா! – வந்தே

5. மானிடர் துயரத்தால் மறுகியே திரிகின்றோம்;
ஏன் இந்தக் கஸ்தி[2] யாவும் எந்தையே? கண்பாருமேன். – வந்தே

6. எந்த மட்டும் இந்நோயால் ஈனர் எமை வாதிப்பீர்?
அந்தி, சந்தி அலறும் ஆதுலர்[3] மீதிரங்கி. – வந்தே

7. வாரும், கருணாகரா; வந்தே கொள்ளை நோயதைத்
தீரும் இவ்வேளை தானே தீனர்[4] எம்மீதினின்றே. – வந்தே

*– ச. யோசேப்பு*

**331. இராகம்: காப்பி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**கல்லும்[5] அல்லவே,–காயம்[6], வல்லும்[7] அல்லவே–இது**

*அனுபல்லவி*

வெள்ளி, பொன் விலைமதியா மேரும்[8] அல்லவே. – கல்

*சரணங்கள்*

1. வல்லமை பேசாதே, நாளை வருவதறியாய்,–அதால்
நல்ல வழி தேடி, தேவ நாமத்தைத் தியானி. – கல்

1 இளைஞர்
2 துன்பம்
3 ஏழை
4 நோயாளிகள்
5 நிலையானது
6 உடல்
7 வலிமை
8 மலை

2. சூரியன் கீழ்க் கண்டதெல்லாம் மாயை அல்லவோ?–சாலமோன்
பார்[1] அறிய சொன்னதை நீ பார்த்தறியாயோ? – கல்

3. காற்றடித்த மேகம் புகைக்கொப்பதாகவே,–இங்கே
போற்றிய மனுடர் ஜீவன் போய் ஒழியுமே. – கல்

4. வேகமாய் வடியும் ஆற்றுக்கொப்பதாகவே,–மாய
தேக நரர் நாட்களும் சீக் கிரம் கழியுமே. – கல்

5. இராப் பகல், இருள், வெளிச்சம் மாறும் வண்ணமே,–ஐயோ!
நராட்களின் மகிழ்ச்சிக்கு மா மாறுதல் உண்டே. – கல்

6. பூவதும் உதிரும், பசும் புல்லும் வதங்கும்.–அது
போலவே நரர் உருவம் மாறி வதங்கும். – கல்

7. கொஞ்ச நாள் ஜெயம் சிறப்பான் பஞ்சை[2] மனுடன்;–அவன்
கொஞ்ச நோய் வந்தால் கிடப்பான், தொஞ்சு போவானே – கல்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**332. இராகம்: காப்பி ஆதி தாளம்**

***பல்லவி***

**கல்லும்[3] அல்லவே, காயம்[4]–வல்லும்[5] அல்லவே–இது**

***அனுபல்லவி***

வெள்ளி, பொன் விலைமதியா மேரும்[6] அல்லவே. – கல்

***சரணங்கள்***

1. மேலது கீழ், கீழதுமேல் ஆம் உருளைபோல்;–நரர்[7]
மேன்மையும் வாழ்வும் கீழது மேலும் ஆகுமே. – கல்

2. பூவுலகின் மேன்மை என்ன? மா தரித்ரன்–போல்,
யாவரும் வணங்கும் ராஜன் சாவும் ஒக்குமே – கல்

---

1 உலகம்
2 பலவீன
3 நிலையானது
4 உடல்
5 வலிமை
6 மலை
7 மனிதர்

3. எத்தனை கற்றாலும் என்ன? சுத்தப் பேதைக்குச்–சரி
ஒத்தபடி செத்துப் போவான், முற்றும் மண்ணாவான் – கல்

4. நுண்ணிமை ஞானி என்றாலும் கீர்த்திபெற்றாலும்,–ஐயோ!
அன்னவன் மலையும்[1] நேரம் யாவும் கலையும். – கல்

5. வெள்ளச் சேதத்துக்கும் பல விக்கினத்துக்கும்–பார்
கொள்ளைக்கும் சடுதியில் போம், கூட்டும் ஆஸ்தியே – கல்

6. ஆசனம், துரைத்தனம், தத் துவங்கள் ஒழியும்;–அர
சாண்ட மன்னரும் ஒரு நாள் மாண்டொழிவார்கள். – கல்

7. கொஞ்ச நாள் மினுக்கும் நரரின் சிறப்புகள்–செருக்கை
வெஞ்சிறு பூச்சிகள் அரிக்கும், வீ அழிக்குமே – கல்

8. யாவும் ஓட்டமாகப் பாயும், யாவும் அழியும்,–மெய்த்
தேவபத்தியே கெலிக்கும்[2]; ஜீவன் நிலைக்கும். – கல்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**333. இராகம்: செஞ்சுருட்டி சாப்புதாளம் (484)**

**பல்லவி**

**உலகம் நில்லாது, நல்மனதே; நீ கேளு.**

**அனுபல்லவி**

நலம் இலா உலோகம், அகந்தை உண்டீதில்
ஞாயம் இல்லை; நம் இடம் இது அல்ல – உலகம்

**சரணங்கள்**

1. அக்ரமக்காரர் நிறைந்த முள் காடு;
ஆசூசப்[3] பாவிகள் ஆர்[4] புழுக்கூடு;
துக்க சமுத்திர மான திவ்வீடு;
தொலையாத பேரின்ப வீடதைத் தேடு – உலகம்

---

1 மறையும்
2 வெல்லும்
3 தீட்டு
4 நிறைந்த

2. வேத விதிப்படி சாதித்து நில்லு;
மேலாம் எருசலை வீட்டிற்குச் செல்லு;
பாதக ஆசா பிசா சத்தைக் கொல்லு;
பரம பொருளை அனுதினம் சொல்லு – உலகம்

3. நசரேய ராஜன் நவில் மொழி உள்ளு[1];
ஞானகரத்தில் அருள் மாண்டுகொள்ளு;
அசலம்[2] அழிவின் வனாந்தரம் தள்ளு;
ஆதிபராபரனால் பாவம் விள்ளு[3] – உலகம்

***– சத்தியநாதன் உபதேசியார்***

**334. இராகம்: பைரவி ஆதி தாளம்**

**பல்லவி**

**நம்பவேண்டாம்; உலகை நம்பவேண்டாம்**

**அனுபல்லவி**

நம்பவேண்டாம், இவ்வுலகம் யாவும் விழல்[4] என்று சால்மோன்
செம்மையாய் அறிந்துரைத்தான்; இம்மையில் உழன்றுழன்று
–நம்ப

**சரணங்கள்**

1. மன்னர் மகுடரும் பால சின்னவரும் ஓர் நமிஷம்
தன்னிலே அழிவதல்லால் பின் வழக்கே தொன்றுமில்லை –நம்ப

2. காயத்தைப்[5] பிரிந்த துன்னுயிர் ஏகி, ஒரு நாள் இருந்தால்;
நேய சுற்றம், மக்கள், பெண்டீர் மாயமாய் அகன்று நிற்பார் –நம்ப

3. பிள்ளை இடு காடு மட்டும், பெண்கொடியாள் வாசல் மட்டும்;
தெள்ளிய அன்பர் பொருள் கைக்குள்ள நாளளவு மட்டும் –நம்ப

4. ஆசையாய்க் கருத்தில் உன்தன் ஏசுவைப் பதித்து நிதம்
ஓசையாய் ஜெபித்து வந்தால், மோசம் இல்லை, வேறெதையும்
–நம்ப

***– சத்தியநாதன் உபதேசியார்***

---

1 நினை
2 பூமி
3 நீங்கு
4 விழல்
5 உடல்

**335. இராகம்: காம்போதி** **சாபு தாளம் (485)**

**பல்லவி**

**விரும்பாதே, மனமே; உலக வாழ்வை**
விரும்பாதே, மனமே;–பதவி என.

**சரணங்கள்**

1. தரம் பெரும் சுகம் எனத் தரையின் செல்வமதை
கரும்ப தாக எண்ணிக் காதல் மிஞ்சி அதை – விரும்

2. அகிலம் யாவுக்கும் நீ அரசன் ஆனாலும், மா
மகிமை நிறைந்த ஒரு மாளிகையில் வாழ்ந்தாலும் – விரும்

3. பெலத்தால் வீரனெனப் பேர் கீர்த்தி அடைந்தாலும்,
ஜலத்தின் ஓட்டம்போலே க்ஷணத்தில் ஒழிந்துபோவார். – விரும்

4. திட்டமாய் நூல் கற்றுத் தேர்ந்த ஞானி, என்றே
அட்டதிக்கிலும்[1] உன் பேர் இஷ்டம் புரிந்தாலும். – விரும்

5. பொன்னும் பொருளும் உன் தன் பொக்கிஷமானாலும்,
என்ன புகழ்ச்சி என்று இப்போதே வெறுத்து நீ – விரும்

6. லோக ஆஸ்தி எல்லாம் குப்பை எனவே தள்ளு,
ஏக பரன் உனக்கு ஏற்ற பொக்கிஷம் தானே. – விரும்

7. நிழலைப் போலே ஏகும்[2] நிலையாச் செல்வமதில்
களிகூராமல் யேசு கர்த்தன் பதத்தைத்தேடு. – விரும்

*– ச. யோசேப்பு*

**336. இராகம்: உசேனி** **ரூபகதாளம் (486)**

**பல்லவி**

**திரும்பிப் பாராதே–சோதோமைத்**
திரும்பிப் பாராதே

---

1 எட்டு திசை 2 போகும்

**அனுபல்லவி**

விரும்பிப் பார்த்து, லோத்தின் பெண்டு
முரம் புப்புத் தூண் ஆனதைக் கண்டு. – திரு

**சரணங்கள்**

1. சந்தைக் கூட்டும் பொம்மலாட்டு,–மாதர்
சந்தடி செய்யும் சீராட்டு,
விந்தையான போரோட்டு,–மந்தை
வேடிக்கை என்று விட்டோட்டு. – திரு

2. செல்வத்திலே மெத்தச் செருக்கு;–நீ
செய்வதெல்லாம் முழுத்–திருக்கு,
பல்வழி நீரோட்டப் பெருக்கு;–ஏன்
பண்ணுகிறாய் இந்த முறுக்கு? – திரு

3. அங்கும் இங்கும் சுற்றித் தயங்கிறாய்;–உல
காசையினால் மெத்த தியங்கிறாய்;
சங்கடத்துள்பட்டு மயங்கிறாய்,–வீண்
சண்டாளரோடு ஏன் முயங்கிறாய்[1]? – திரு

4. ஆண்டவர் ஏசு சகாயமே,–உனக்
கடைக்கலம் ஐந்து காயம்;
வேண்டிக் கொள்வது நேயம்;–கை
விடாதே இந்த உபாயம். – திரு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**337. இராகம்: கமாசு** **ஆதிதாளம்**

***பல்லவி***

**செய்ய வேண்டியதைச் சீக்கிரம்**
செய், செய், செய், செய், செய்.

---

1 சேர்கிறாய்

*சரணங்கள்*

1. வையகமும் அதன் வாழ்வுகளும் மிக
மகிமை பெருமை பொருளானதுவும்
வெய்யவன்[1] கண்ட பனிபோலாம்; இது
மெய், மெய், மெய், மெய், மெய். – செய்

2. ஆவியும் கூடுவிட் டேகாமுன்,
ஆபத்து நாட்கள் வந்துணுகாமுன்,
தேவசுதன் ஜெக ரட்சகரண்டை
சேர், சேர், சேர், சேர், சேர். – செய்

3. ஔவியம்[2] பெருமை அகந்தையும் அசுத்தமும்
அகற்றி நீ அனுதினமும்
திவ்விய வேதத் தீவர்த்தி ஒளியினில்
செல், செல், செல், செல், செல். – செய்

4. துர்ச்சன[3] ரோடுற வாகாமல், ஐயன்
துய்ய விதி பத்து மீறாமல்,
உச்சிதப் பதமருள் யேசுவைப் பணிந்
துய், உய்[4], உய், உய், உய். – செய்

*– ஈசாக்கு பாக்கியநாதன்*

**338. இராகம்: காப்பி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**பொன்னகர்ப் பயணம் போகும் புண்ணியர்களே–மகிமை**
என்னவென் றுரைக்க வல்லோர் யாருமில்லையே.

*சரணங்கள்*

1. உன்னத சுதனுக் கேதும் ஒப்புமை யுண்டோ?–அவர்
தன்னுதிரந் தந்து கொண்ட தன்மை யருமை. – பொன்

2. லாசருக் கழுத கண்ணீர் நம்முடையதே;–அவர்
நேசமார்பில் சாய்ந்து கொள்ளும் நித்திரையிதே. – பொன்

---

1 கதிரவன்
2 பொறாமை
3 தீயோர்
4 பிழைப்பாய்

3. வந்தழைத்துப் போயென்னோடு வைப்பேனென்றவர்—இன்று
வந்தழைத்துப் போகுமேன்மை மாந்தருக்குண்டோ? – பொன்

4. மண்ணினாலுண்டான வுடல் மண்ணேயாயினும்,—யேசு
தன்னுரு வோடே எழும்பும் சத்தியம் இதே. – பொன்

5. கண்ணீர் துடைத்தெம்மையாற்றும் கர்த்தரருகில்—சென்றோர்
நண்ணியே ஜீவகனி யுண் டின்னல் நீங்குவார். – பொன்

6. ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனங் கண்டு—புதுப்
பாட்டுக்கள் பாடும் சுத்தர் கூட்ட மடைந்தார். – பொன்

7. கர்த்தருக்குள்ளே மரிப்போர் பாக்கியரென்று—சொல்லும்
உத்தம வேதத்தி னுண்மை யுன்னத மல்லோ? – பொன்

***– அருள்திரு. எஸ். வேதநாயகம்***

**339. இராகம்: துஜாவந்தி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**ஆறுதல் அடை, மனமே;—கிறிஸ்துவுக்குள்**
ஆறுதல் அடை, மனமே.

***அனுபல்லவி***

பாருள் பாவத்தால் வந்த பலனாம் மரண மதின்
கூரை அழித்த யேசு கொற்றவன் றனை நோக்கி. –ஆறு

**சரணங்கள்**

1. நம்பிக்கை யற்றோரைப் போலே,—மரித்தோர்க்காக
நலிவதேன் ஒருக்காலே;
உம்பர்[1] கோன் மேகத்தின் மேலே—தோன்றிடும் போ
துயிர்த்தெழும்புவ தாலே,
வெம்பிப் புலம்பி அழ வேண்டாம்; கிறிஸ்து வெனும்
தம்பிரான் திருமொழிச் சாரத்தை ருசிபார்த்து. –ஆறு

---

1 வானோர்

2. ஏசு வருவார்; வானத்தில்–தேவதூதர்கள்
எக்காளம் ஊதும் நேரத்தில்
காசிதனில் ஏசுவில்–மரித்தோர் எல்லாம்
கதித்துயிராகி மேகத்தில்
மாசறச் செல்ல, நாமும் மறு ரூபமாகிச் சென்று
சாசுவதமாய் என்றும் தற்பரனுடன் வாழ்வோம் –ஆறு

3. ஜீவ நதிகள் ஓடுமே;–எருசலேமில்
திரளாய் ஜனங்கள் கூடுமே;
தேவ துதியைப் பாடுமே;–ஏசுகிறிஸ்தின்
ஜெயத்தைச் சொல்லிக் கொண்டாடுமே;
ஆவலுடனே நாமும் அதையே அடைவதற்கு
ஜீவ வசனந் தன்னைத் திடனாய்ப் பிடிப்போமாக. –ஆறு

***– மரியான் உபதேசியார்***

### 340. இராகம்: சாவேரி ஆதி தாளம்

**பல்லவி**

**ஆற்றிக்கொள்ளுவோம் மனதை;–கிறிஸ்துவினால்**
தேற்றிக்கொள்ளுவோம் மனத்தை.

**அனுபல்லவி**

சாற்றரிதான பரன் தோற்ற முடிவில்லானைப்
போற்றிப் பணிந்து துதித் தேத்தித் திருவருளால் – ஆற்

**சரணங்கள்**

1. எண்ணம் கவலைகள் உண்டாம்;–மரித்தோர்க்காக
ஏக்கம் பெருமூச்சும் உண்டாம்;
கண்ணீர் சொரிவதும் உண்டாம்;–துயரம் மிஞ்சிக்
கலங்கி அழுவதும் உண்டாம்;
அண்ணல் கிறிஸ்துவும் முன் எண்ணிக் கண்ணீர் விட்டார்;
நண்ணி அவரை ஜெபம் பண்ணத் துயரை விட்டு – ஆற்

2. ஏசுவைப் பற்றின பேர்கள்–மரித்தும் உயிர்த்
தெழுந்து புறப்படுவார்கள்;
மாசற்ற தேவன் அவர்கள்–உடனிருக்க
மகிமை பெற்றிருப்பார்கள்;
பேச வேண்டுமோ? ஏசு ராஜன் சமுகமதில்
நேசமுடன் என்றைக்கும் வாசம் செய்வார்கள் அல்லோ – ஆற்

3. நித்திய பிதா அவரே; ஆரோக்கியம் அருள்
நீதிச் சூரியன் அவரே;
சத்தியம் வழி அவரே; எண்ணம், கவலை;
சஞ்சலம் தீர்ப்போர் அவரே;
புத்தியில் உணர்ந்து, தேவ பக்தியுடன் ஜெபம் செய்து
முக்தியை அடைய மனச்சுத்தி செய்தே அன்பினாலே – ஆற்

***– மரியான் உபதேசியார்***

**341. இராகம்: ரீதிகௌளம் திரிபுடை தாளம்**

**பல்லவி**

**என்றைக்குச் சாவேனோ?–என் யேசுவை நான்**
என்றைக்குச் சேர்வேனோ?

**அனுபல்லவி**

ஒன்றாம் அனாதி பிதா உரிமை கிறிஸ்துவுக்குள் – என்றை

**சரணங்கள்**

1. இன்றைத் தினமோ? நாளையோ?–இன்னும் ஓர் ஆண்டோ?
இரவோ? பகல் எவ்வேளையோ?
துன்றிய[1] வாலிபத்தோ? தோன்றும் முதுமையிலோ?
துன்ப வியாதியிலோ? சுகமாய் இருக்கும்போதோ? – என்றை

2. வன்மம்[2], பகை இல்லாமல், குறை சொல்லாமல்,
மனச் சாட்சி வாதை கொல்லாமல்,
கன்மப்[3] பாவம் சாராமல், கற்பனைத் துரோகம் சேராமல்,
கவலை விசாரத்தினால் கலங்கி மனம் சோராமல் – என்றை

1 வலிமை மிகுந்த 2 தீராப்பகை 3 தீவினை

3. தரும வழியில் நடந்து–தீமை கடந்து
ஸ்வாமி அடியைத் தொடர்ந்து,
பரம கதியை நோக்கி, பல துர்க்குணமும் நீக்கி,
பாவ மன்னிப்பை நாடி, தேவ க்ருபையைத் தேடி – என்றை

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**342. இராகம்: சஹானா** **ஆதி தாளம்**

**பல்லவி**

**யேசுவின் ஒதுக்கில்[1] நான் இறக்க அருள் புரியும்.**

**அனுபல்லவி**

நேசபரனே இந்த நீசன் கெஞ்சிக் கேட்கிறேன். – யேசு

**சரணங்கள்**

1. நாள் ஓடும், சாவி சேரும், நாதா, எந்த நேரமோ?
பாழுடல் விட்டு ஜீவன் பறக்கும் வேளையறியேன். – யேசு

2. யேசுவை விட்டென் சாவு என்னைப் பிரித்திடாது;
நீசன் அவரில் நின்றென் நேசரேயென்று சொல்வேன். – யேசு

3. என் ஜீவன் இன்றுபோயும் என் மீட்பரால் நான் பாக்யன்;
என் சாவு நாளை வந்தும் யேசுவுக்குள் நான் நிற்பேன். – யேசு

4. நீர் என்னை இங்கே வைக்கும் நேரமட்டும் உமக்கே
சீராக நான் பிழைக்க, தேவா, எனை நடத்தும். – யேசு

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**343. இராகம்: குரஞ்சி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்,**
வானத்தெக்காளத் தொனி முழங்க.

---

1 மறைவில்

*அனுபல்லவி*

எரி புகை மேக ரத மேறி
ஏசு மகா ராஜன் வருங்கால். – மரித்

*சரணங்கள்*

1. தூதர் மின் னாற்றிசை துலங்க[1],
ஜோதி வான் பறை[2] இடி முழங்க,
பாதகர் நெஞ்சம் நடுநடுங்க,
பரிசுத் தோர் திரள் மனதிலங்க. – மரித்

2. வானம் புவியும் வையகமும்
மடமடவென்று நிலைபெயர,
ஆன பொருளெல்லாம் அகன்றோட
அவரவர் தம் தம் வரிசையிலே. – மரித்

3. அழிவுள் ளோராய் விதைக்கப்பட்டோர்
அழியா மேனியை அணிந்திடுவார்;
எளிய ரூபமாய் விதைக்கப்பட்டோர்
என்றும் வாழும் ஜோதிகளாய். – மரித்

4. சமுத்திரம் தன்னில் விழுந்தோரை,
தரை, தீ, தாமும் தின்றோரைச்
சமூலம்[3] தந்தது க்ஷணப் பொழுதில்
சருவேசர் நடுத் தீர்வைக்கென்றே[4] – மரித்

***– அருள்திரு. எஸ்.ஜி. ஏசுவடியான்***

**344. இராகம்: சங்கராபரணம்** **ரூபக தாளம் (487)**

**பல்லவி**

**உச்சித பட்டணம் பட்சமுடன் செலுவோம்;–**
விரைந்தோடி நடவடி, உத்தம புத்திரி,–
உச்சித பட்டணம் பட்சமுடன் செலுவோம்.

---

1 தூதர் ஒளி நான்கு திசைகளிலும் விளங்க
2 இசைக்கருவி
3 அனைத்தும்
4 நியாயத்தீர்ப்பு

**அனுபல்லவி**

நிச்சயமாதவே ரட்சகர் செப்புரை
நீணிலம் தோன்றும் முனாடி,–நம்
நித்திய பிதாவே ஆயத்தமாய் நாட்டிய
நீதியின் பட்டணம், ஆதிபன்[1] கட்டடம்,
நிண்ணய மா நகரம்–திடத்திடு
உன்னதமே சிகரம்;–நமின் பிரிய
நேசர் கிறிஸ்து மேல் பாசம் மிகுத் தவர்
நேரே செலும் நவ சாலேம் நகர் என்ற. –உச்சி

**சரணங்கள்**

1. சித்தமாய் உச்சித பட்டணம் பற்றியே,
செப்புகிறாய் எனின் தாயே;–அதில்
சேர்ந்திடு பிள்ளைகள் வாழ்ந்துறும் பாக்கியம்,
திட்ட அரிதாம், என் தாயே;–புது
வித்தக மா நகர் ரத்னப் பளிங்கு
விளக்கொளி மேவும், நன்றாயே;–அந்த
விஞ்சையர்ப் பட்டணம் எங்கே இருக்கும்?
விளிம்பி விரி, என் பேராயே;
இத்தரை மீதிலோ அத்திரி[2] வானிலோ?
இஷ்டமாய் யாம் அதற் கெட்டி நடவமோ?
எங்கே இருக்குதம்மா?–கவலை அற்
றங் கிருப்போமே, சும்மா,–சரி சரி,
இன்பக் கண்ணாட்டியே, அன்புப் புதல்வியே,
எங்கிருக்கு தென்றன் தங்கமே, சொல்கிறேன். –உச்சி

2. உன்னத வானிலிருந் திறங்கும் அவ்வெ
ருசலேம் பட்டணம் கண்டு,–வெகு
ஊக்கமுடன் அதைப் பார்க்கப் புறப்பட்டு,
ஓசன்னாவும் பாடிக் கொண்டு,–அங்கே

---

1 அரசன் 2 ஆகாயம்

பன்னிரு வாசலும் கண்ணாடி வீதியும்
பானொளிக் கற்களும் உண்டு,–அந்தப்
பட்டணம் தேவாட்டுக் குட்டியின் ஆசனம்
பண்பாக மத்தியில் கொண்டு,
மின்னும் விளக்குகள், தீவட்டிகள் இல்லை;
விண்ணில் சூரிய சந்திரரும் இல்லை;
மெய்ப் பொழுதானவரே–அதன் விளக்
கெப்பொழுதும் அவரே;–அலங்க்ருத
மேன்மைப் பிரகாசப் பான்மையின் நீதியர்
மேனி மினுங்கிடத் தோணி இலங்கிடு. –உச்சி

3. பந்தயம் பெற்றுமே அங்ஙனம் உற்ற மெய்ப்
பாக்கியரே களிப்பர், என்றும்
பட்டினி வந்து வருந்தாது;–தேவனின்
பாலன் சனி அளிப்பர்,–நனிச்
சந்தோடமாய் ஜீவ தண்ணீரின் ஆற்றினில்
தாகம் தீரக் குளிப்பர்–எங்கள்
தற்பரனார் எல்லார் கண்களின் கண்ணீரைத்
தான் துடைத்தே அளிப்பர்;
அந்தியும் சந்தியும் ஆலயம் மேவுவர்;
ஆசனத்தின் முன் ஆராதனை செய்குவர்;
அங்கிகள் தாம் துவைப்பர்;–குருதியில்
இங்கிதமாய் வெளுப்பர்;–ஒவ்வொருவர்
அங்கைகளில் குருத்தோலைகள் கொண்டெழுந்
தாட்டுக் குட்டி மண வாட்டியும் ஆகுவர் –உச்சி

*– ஏசடியான் உபாத்தியாயர்*

**345. இராகம்: சுருட்டி** **அடதாள சாப்பு**

**பல்லவி**

**மோட்ச பேரின்ப பாக்கியங்கள்–அறிவுக்கெட்டா**
ஆச்சரியமாம் யோக்கியங்கள்;

**அனுபல்லவி**

காட்சி வளர் கடவுள் மாட்சிமையின் பிரதாபம்
காண அமரர் கண்கள் நாணும்; அதுவோ வேணும் – மோட்ச

**சரணங்கள்**

1. கண்களுக் கடங்கா நிதியும்–பளிங்கைப்போல
கலந்து பாய்கின்ற நதியும்.
விண்ணவர்கள் கெம்பீரம், வெற்றியின் ஆரவாரம்;
அண்ணல் கிறிஸ்து வீரம் ஆர் உரைப்பார் இந்நேரம்? – மோட்ச

2. நித்திய சங்கீர்த்தனங்களும்; சீயோனுக்கும்
நிமலர்க்கும் மங்களங்களும்
சுத்த பளிங்குமேடை, ரத்ன கசித ஆடை,
சுக பரிமள வாடை, சுதந்தரர் ஆவதோடே – மோட்ச

3. அறிவைக் கடந்த சுகங்கள், உட்டணம்[1] வெயில்
அணுவும் இல்லாத நிகங்கள்,
செறியும் சுத்த சுகங்கள், திவ்ய மகா பதங்கள்,
பரவு பேரின்பங்கள், பதியை நோக்குவோம் எங்கள் – மோட்ச

4. பயங்கள் திகில்கள் ஏது? பரிசுத்தர்கள்
பாடி மகிழும்போது,
ஜெயம்! ஜெயம்! என்று காத்ர திரித்துவத்துக்கு மாத்திரம்
மயநசரேயர் கோத்திரம் மகிழ்ந்து சொல்வோமே தோத்திரம்
– மோட்சி

***– சவரிமுத்து உபாத்தியாயர்***

**346. இராகம்: துசாவந்தி — ஆதி தாளம்**

**பல்லவி**

**பரத்திலே நன்மை வருகுமே, நமக்கு நித்திய**
பாக்கியம் மிகப் பெருகுமே.

---

1 வெப்பம்

**அனுபல்லவி**

பரத்திலே சிறந்த ஜீவ பதி வளர் கிரீடம் அதைச்
சிரத்திலே அணிய, யேசு
தேவனைப் பணிந்து போற்றுவோம். – பரத்

**சரணங்கள்**

1. பரம சீயோன் மலையில் ஏறலாம்–கிறிஸ்தின் புதுப்
பாட்டைப் பாடி, ஜெயத்தைக் கூறலாம்,
சுரமண்டலத் தொனியைச் சேரலாம்; தேவ குமாரனின்
சுந்தரம் கண்டிளைப்பும் ஆறலாம்,
வரமிகும் பரிசுத்தரோடும்
வானவர்களான சேனைத்
திரள் சபை சங்கத்தினோடும் நாம்
சேர்ந் தெந்நாளும் வாழ்ந்திருக்கலாம் – பரத்

2. ஆட்டுக்குட்டியின் ரத்தத்தில் தோய்த்து,–வஸ்திரங்கள் தமை
அழுக்கறப் பிரகாசமாய் வெளுத்து,
வாட்டங்கள் அனைத்தையும் தீர்த்து,–கண்ணீர் அறவே
மகிமையின் கரத்தினால் துடைத்து,
கூட்டி ஜீவ புனலிடத்தில்
கொண்டு மேய்த் தருள் முடியை
சூட்டியே அனந்த பாக்கிய
சுகத்தில் வாழ்ந்திருக்கச் செய்குவார். – பரத்

***– மரியான் உபதேசியார்***

**347. இராகம்: துசாவந்தி ஆதி தாளம்**

**பல்லவி**

**பரத்திலே நன்மை வருகுமே,–நமக்கு நித்திய**
பாக்கியம் மிகப் பெருகுமே.

**அனுபல்லவி**

பரத்திலே சிறந்த ஜீவ பதி வளர் கிரீடம் அதைச்
சிரத்திலே அணிய, யேசு
தேவனைப் பணிந்து போற்றுவோம். – பரத்

**சரணங்கள்**

1. வருத்தம், பசி, தாகம், சாவில்லை;–அலறுதலும்
மனத்துயர், இரவு சாபம் இல்லை;
அருணன், மதிவேண்டியதில்லை;–துன்மார்க்கர் எனும்
அசுத்தர் வந்து சேர்வதும் இல்லை;
சருவ மகிமையுடைய தந்தை
பரனொடு கிறிஸ்தின் திரு
அருள் மிகச் சிறந்த ஒளி
தெளிவுற ப்ரகாசம் ஆக்குமே – பரத்

2. பங்கம் இன்றி மகிழ்ந்து வாழலாம்;–பேர் ஒளி துலங்கும்
பரம கிருபாசனத்தைச் சூழலாம்;
சங்கை யோ டரசிருந்தே ஆளலாம்;–பராபரன் தன்
சமூக ப்ரபைதனிலே வாழலாம்;
மங்கை சீயோன் மகளின் பிரிய
மன்னவன் தேவாட்டுக் குட்டியின்
இங்கிதக் கல்யாணப் பந்தியின்
இருந்து நித்ய விருந்தால் மகிழலாம். – பரத்

***– மரியான் உபதேசியார்***

**348. இராகம்: காம்போதி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**வான நகரத்தின் மேன்மையென சொலுவோம், கன**
வலன் நலவருக் கருள்.

***சரணங்கள்***

1. பானொளி ரத்னங்க ளஸ்திபாரமாந் திருவாசல்கள்
பன்னிரு முத்துக்கள் தெரு பொன்னின் மயமே;
தேனிலும் மதுரம் தெளிவிற் பளிங்கதான ஆறும்
ஜீவ தருவும் இருக்கும் செப்பரும் அழகதான. –வான

2. அங்கு நோய், துன்பம், விசாரம், அக்ரமம், கண்ணீர், தரித்திரம்
அற்பமு மிருப்பதில்லை; சொற்பமாகிலும்
பொங்கியே முச்சத்துருக்கள் போரினுக் கிழுப்பதில்லை,
புண்ணியனார் சொன்ன திரு உன்னத எருசலையாம். –வான

3. அந்நகர்க் குடிகள் வெண்மையான அலங்கார
அர்ச்சய[1] உடுப்பு, சிரமானதிற் கிரீடம்
மன்னவர் போலே யணிந்து மகிமை யினாசனத்தில்
வாய்மையாக வீற்றிருப்பர்; தூய்மையான அந்த நல் –வான

4. நேய முற்பிதாக்கள், தீர்க்கர்; நின்மல னப் போஸ்தலர்கள்,
நீதிமான்கள், எல்லாரும் தூதர் நல்லோரும்
ஓய்வின்றித் தோத்ர கீத உச்சிதத் தொனி முழக்கி
உன்னதனைப் போற்றுவார்கள்; பன்னரும் சிறப்பதுள்ள –வான

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**349. இராகம்: முகாரி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**எப்போ காண்பேனோ? எப்போ சேர்வேனோ?**
எது என் சீயோனோ? அதின்னம் எத்தனை தொலையோ?

**சரணங்கள்**

1. என் ஏசுநாதர்,–என் ஆத்தும மீட்பர்,
என் ரட்சகராகிய ஏசு கிறிஸ்து இருக்கிற இடத்தை, – எப்

2. தூதர்கள் கூடிச்–சோபனம் பாடி,
நாதன் கிறிஸ்துவைப் போற்றும் பரிசுத்த ராஜ்ய வாழ்வை. – எப்

3. ஜீவ கிரீடம்,–திவ்விய வாழ்வு,
பாவி எனக்குப் பரிசுத்தவான்களின் பங்குண்டாமே. – எப்

4. துன்பங்கள் மாறும்,–சுகம் வந்து சேரும்;
இன்பக் கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்தால் என் மனம் ஆறும். –எப்

---

1 தூய

5. உலகத்தின் கவலை–ஒன்றும் செய்யாதே;
பலவித தொல்லை இராது, அங்கே பாக்கியம் கொள்வேன். –எப்

6. பாவத்தில் ஆசை–லோகத்தின் மாய்கை
தேவனுக்கு ஏலாதொன்றுமில்லா திவ்ய இடத்தை – எப்

7. கைகளில் எடுத்தேன்–கண்ணீரைத் துடைப்பார்;
ஐயன் கிறிஸ்து மேல் கவிபாடி நான் ஆனந்தம் கொள்வேன்.
–எப்

*– அருள்திரு. பாக்கியநாதன் தாவீது*

**350. இராகம்: போர்த்துக்கீஸ் ஏக தாளம்**

*பல்லவி*

**ஆரிவராராரோ–இந்த–அவனியோர் மாதிடமே**
ஆனடை குடிலிடை மோனமா யுதித்த இவ்வற்புதப் பாலகனார்?

*சரணங்கள்*

1. பாருருவாகுமுன்னே–இருந்த–பரப் பொருள் தானிவரோ?
சீருடன் புவி, வான், அவை பொருள் யாவையுஞ்
சிருட்டித்த மாவலரோ? – ஆரி

2. மேசியா இவர்தானோ?–நம்மை–மேய்த்திடும் நரர்கோனோ?
ஆசையாய் மனிதருக் காய்மரித்திடும் அதி அன்புள்ள
மனசானோ? – ஆரி

3. தித்திக்குந் தீங்கனியோ?–நமது–தேவனின் கண்மணியோ?
மெத்தவே யுலகிருள் நீக்கிடும் அதிசய மேவிய
விண்ணொளியோ? – ஆரி

4. பட்டத்துத் துரைமகனோ?–நம்மைப்–பண்புடனாள் பவனோ?
கட்டளை மீறிடும்யாவர்க்கும் மன்னிப்புக்காட்டிடுந்
தாயகனோ? – ஆரி

5. ஜீவனின் அப்பமோதான்?–தாகம்–தீர்த்திடும்பானமோதான்?
ஆவலா யேழைக ளடைந்திடுமடைக்கல மானவரிவர்தானோ?
– ஆரி

*– அருள்திரு. வே. மாசிலாமணி*

**351. இராகம்: சங்கராபரணம்** **ஏக தாளம்**

**பல்லவி**

**ஏசு கிறிஸ்து நாதர்**
எல்லாருக்கும் ரட்சகர்.

**சரணங்கள்**

1. மாசில்லாத மெய்த்தேவன்
மானிடரூ புடையார்;
யேசு கிறிஸ்துவென்ற
இனிய நாமமுடையார்; – ஏசு

2. வம்பு நிறைந்த இந்த
மானிட ஜாதகள் மேல்
அன்பு நிறைந்த கர்த்தர்
அதிக உருக்கமுள்ளோர்; – ஏசு

3. பாவத்தில் கோபம் வைப்பார்;
பாவிமேல் கோபம் வையார்,
ஆவலாய் நம்பும் பாவிக்
கடைக்கலம் ஆக நிற்பார்; – ஏசு

4. தன்னுயிர் தன்னை விட்டுச்
சருவ லோகத்திலுள்ள
மன்னுயிர்களை மீட்க
மரித்தே உயிர்த்த கர்த்தர்; – ஏசு

5. அந்தர வானத்திலும்
அகிலாண்ட கோடியிலும்
எந்தெந்த லோகத்திலும்
இவரிவரே ரட்சகர். – ஏசு

***– அருள்திரு. பாக்கியநாதன் தாவீது***

**352. இராகம்: காம்போதி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**பணிந்து நடந்து கொண்டாரே–பரன் பாலனும்**
கனிந்து பிதா மாதாவுக்கு.

**அனுபல்லவி**

அணிந்து தேவ தயவைப் பணிந்த மனதினோடு
தணிந்து அவர்க்கு எதிர் முனைந்து சொல்லாதபடி, – பணி

**சரணங்கள்**

1. தந்தை தாய் தனை மதித்து–அவருடைய
தயவின் சித்தத்துக் கமைந்த
மைந்தர்கள் உலகினில் வாழ்ந்து இருப்பாரென்று
சிந்தை மகிழ்ந்து பரன் செப்பிய மொழிப்படி, – பணி

2. தந்தைக் குகந்த வேலையில்–அவருடனே
விந்தை யுடனே பயின்றார்;
நிந்தை யிதுவென்றெண்ணிச் சிந்தைக் கலங்கிடாமல்
எந்த விதமும் நரர்[1] தன்னைப் பின்பற்றியேகப் – பணி

3. பாவம் ஒன்று தவிர நம்மைப் போல
பாடுள்ளவராய் நின்றாரே;
நாவின் கிரியையாலும் நடந்தாரே புனிதமாய்;
பாவி யவரைக்கண்டு பயிலுவது நன்று – பணி

4. ஆவி பல முமடைந்தார்;–உலக தேவ
அறிவிலும் நிறைவு கொண்டார்;
தேவ கிருபையிலும் திருமறை முறையிலும்
பூவிலவர்க்கு நிகர் புனித னில்லாதபடி, – பணி

***– அருள்திரு. சா. சீமோன்***

1 மானிடர்

**353. இராகம்: ஆங்கிலம்.** **ஆதி தாளம்**

**எந்தை, எந்தை முந்துந் திருமகன்**
நிந்தை, நிந்தை உந்தும்[1] புவிதனில்
விந்தை! விந்தை! மனுவுருவாய்
வந்தனர்; சந்தோடமே!

ஆ! சந்தோஷம்! துதி சொல்லுவோம்;
ஆ! சந்தோஷம்! குதி கொளுவோம்;
ஆ! சந்தோஷம்! கன மகிமை
அவர் என்றும் பெறுகுவரே

2. வானோ ரானோர், ஞானிகள், இடையர்கள்
கான தான மான பல செயல்
வான மீன நடையொடுமே
மோனம் மிகுதனமே

தங்கள் சிறுபுல் லணைதனிலே
எங்கண் மணி அனை[2] அருகினிலே
இங்கிங் கெனவழு கிறகுரலோ!
இதுபரன் உறுதிறலோ?

3. துங்கம்[3], துங்கம், துங்கம் நிறைவலு
சிங்கம், சிங்கமு கங்கண் டலகை[4] ப
துங்கும், சிங்கும்[5] பங்கமுறும்,
மங்கும், மடிவுறுமே

மா பெலசாலிகள் பாலரொடும்
மா கவி பாடுமின்; ஆடவரும்
பூவையர் ஆடுவிர் ஆவலொடும்
புவி புரந்திடுவர்[6] வந்தார்.

***– அருள்திரு. பி. தைரியம்***

---

1 எழும்பும்
2 அன்னை
3 தூய்மை
4 பேய்
5 பலம்குன்றும்
6 பாதுகாவலர்

**354. இராகம்: நாதநாமக்கிரியை** **ஏக தாளம்**

*பல்லவி*

**கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறே னெங்கள்**
குருவேசு நாதர் பதங் கும்பிடுகிறேன்.

*சரணங்கள்*

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்;–எனை
யாண்டவனை, மீண்டவனைக் கும்பிடுகிறேன்;
நம்புமடியார்க் கருளைக் கும்பிடுகிறேன்;–பவ
நாசனைக் கிருபாசனைக் கும்பிடுகிறேன்;
தம்பமெனக்[1] கானவனைக் கும்பிடுகிறேன்;–நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்;
உம்பர்[2] தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன்;–தொனித்
தோசன்னா வோசன்னா வென்று கும்பிடுகிறேன். – கும்பிடு

2. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன்;–ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்;
திருவுருவானவனைக் கும்பிடுகிறேன்;–தவிது
சிம்மாசனாதிபனைக் கும்பிடுகிறேன்;
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்;–யூதர்
குருகுல தேவதையைக் கும்பிடுகிறேன்;
அருமை ரட்சகனைக் கும்பிடுகிறேன்;–என
தாத்துமாவின் நேசர்தனைக் கும்பிடுகிறேன். – கும்பிடு

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**355. இராகம்: நாதநாமக்கிரியை** **ஏக தாளம் (489)**

**பல்லவி**

**தோத்திரிக்கிறேன் நான் தோத்திரிக்கிறேன்–தேவ**
சுந்தரக் கிறிஸ்து வேந்தைத் தோத்திரிக்கிறேன்.

---

1 பற்றுக்கோடு 2 தூதர்

**சரணங்கள்**

1. க்ஷேத்திரத் தொரேயோவாவைத் தோத்திரிக்கிறேன்,–கன
திவ்விய திரித்துவத்தைத் தோத்திரிக்கிறேன்;
பாத்திரமாக்கிக் கொண்டோனைத் தோத்திரிக்கிறேன்;–உயர்
பரமண்ட லாதிபனைத் தோத்திரிக்கிறேன்;
நேத்திரக் க்ருபாநதியைத் தோத்திரிக்கிறேன்;–சதா
நித்திய மகத்துவத்தைத் தோத்திரிக்கிறேன்
கோத்திரத் திஸ்ராவேலைத் தோத்திரிக்கிறேன்;–யூதர்
கொற்றவனைப் பெற்றவனைத் தோத்திரிக்கிறேன். – தோத்

2. அண்டர்களி னாயகனைத் தோத்திரிக்கிறேன்;–அதற்கு
அப்புறத்தை யப்புறத்தைத் தோத்திரிக்கிறேன்;
மண்டல மெலாமறியத் தோத்திரிக்கிறேன்;–முழு
வானவரும் பார்த்து நிற்கத் தோத்திரிக்கிறேன்
தெண்டனிட்டுத் தெண்டனிட்டுத் தோத்திரிக்கிறேன்;–
மனச் சிந்தையினால், விந்தையினால் தோத்திரிக்கிறேன்;
தொண்டனடி யேனென்று தோத்திரிக்கிறேன்;–என்றன்
துன்பமெல்லாந் தீருமென்று தோத்திரிக்கிறேன். – தோத்

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**356. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**வீராதி வீரர் ஏசு சேனை நாங்கள்**
சேனை நாங்கள்; யேசுவின் சேனை நாங்கள்.

2. திரு வசனத்தை எங்கும் திரிந்து சொல்வோம்,
திரிந்து சொல்வோம்; அதை அறிந்து சொல்வோம்.

3. அறிவீன மென்னும் காட்டை அதமாக்குவோம்[1],
அதமாக்குவோம்; ஞானமதால் தாக்குவோம்.

4. சிலுவைக் கொடியைச் சேரத் தேடிப் பிடிப்போம்,
தேடிப்பிடிப்போம், அன்பு கூறி பிடிப்போம்.

---
1 அழிப்போம்

5. இரட்சண்ய சீராவுடன் நீதிக் கவசம்,
நீதிக் கவசம்; கையாடுவோம் வாசம்.

6. விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்,
மேலுயர்த்துவோ மதை மேலுயர்த்துவோம்.

7. பாவச் சோதனைத் தடைகள் பாசம் நீக்குவோம்,
பாசம் நீக்குவோம்; ஆசாபாசம் போக்குவோம்.

*– அருள்திரு. ச. சீமோன்*

**357. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**சகோதரர்க ளொருமித்துச்**
சஞ்சரிப்பது மெத்தனை
மகா நலமு மின்பமும்
வாய்த்தல் செயலா யிருக்குமே.

2. ஆரோன் சிரசில் வார்த்த நல்
அபிஷேகத்தின் தைலந்தான்
ஊறி தாடி யங்கியில்
ஒழுகு மனந்தம் போலவே.

3. எர்மோன் மலையின் பேரிலும்
இசைந்த சீயோன் மலையிலும்
சேர்மானமாய்ப் பெய்கின்ற
சீதளப்[1] பனிகள் போலவே.

4. தேசமார்க்க மிரண்டிற்கும்
சேர்ந்த திசைந்ததாகிய
ஆசீர்வாதம் சீவனும்
அங்கே என்று முள்ளதே.

*– ஆ. நா. சட்டம் பிள்ளை*

1 குளிர்ந்த

**358. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

*பல்லவி*

**வேத புத்தகமே, வேத புத்தகமே,**
வேத புத்தகமே, விலை பெற்ற செல்வம் நீயே.

*சரணங்கள்*

1. பேதைகளின் ஞானமே,–பெரிய திரவியமே,
பாதைக்கு நல்தீபமே,–பாக்யர் விரும்புந் தேனே! – வேத

2. என்னை எனக்குக் காட்டி–என் நிலைமையை மாற்றிப்,
பொன்னுலகத்தைக் காட்டிப்–போகும் வழி சொல்வாயே. – வேத

3. துன்ப காலம் ஆறுதல்–உன்னாலுண்டு; சாகுதல்
இன்பமாகு மென்றாயே–என்றும் நம்பின பேர்க்கே. – வேத

4. பன்னிரு மாதங்களும்–பறித் துண்ணலா முன்கனி;
உன்னைத் தியானிப்பவர்–உயர்கதி சேர்ந்திடுவார். – வேத

*– அருளானந்தம் பிரசங்கியார்*

**359. இராகம்: லாவணி** **ஆதி தாளம்**

**தேனிலும் மதுரம் வேதம தல்லால்**
ஏதுண்டு? சொல், கண்ணே–மிக
சிற்றின்பமதனை நத்தாசை[1] வைத்து
தேடுவாயோ கண்ணே.

2. காலையில் பனிபோல் சாலேமோன் மகிமை
கரைந்தது பார், கண்ணே–நேச
கர்த்தரின் வசனம் எத்தனை இன்பம்
காதலி, என் கண்ணே.

3. தோழி, சங்கிர்த இனிமை நற்பாகின்
சுவையு மிணையோ, கண்ணே? அருள்
சுருதியின்[2] வசனம் இருதயம் மகிழச்
செய்திடும், என் கண்ணே.

---

1 பேராசை 2 வேதத்தின்

4. நாற்பது நாளாய்த் தீப்பசிக்காளாய்
நலிந்திட்ட போதேசு–வெகு
தாற்பரியத்தோ டேய்த்த பசாசை
ஜயித்தா ரிதினாலே.

5. தேனிலும் தேன்கூண் டொழுகல்கள் தனிலும்
திவ்விய மதுரமாமே;–அது
ஜீவனுக் கமிர்தம், ஆவிக்குச் சுகிர்தம்
தினம் ருசித்திடு, கண்ணே.

*– ஆபிரகாம் அல்லின்*

**360. இராகம்: போர்த்துக்கீஸ் ஆதி தாளம் (490)**

**பல்லவி**

**நாம் மோட்ச வின்பம் நாடிப்போவோம், வாரும் அன்பரே; நல்**
தூதர் சேனை சூழ் மா ஸ்தலங் கிட்டிச் சேரும், இன்பரே

**அனுபல்லவி**

ஆ! ஆ! சந்தோஷம்! மா கெம்பீரம் ஆம் என்றென்றுமே–அன்
போடுமே துதி சாற்றுவோம் கிறிஸ்தருகே நின்றுமே – நாம்

**சரணங்கள்**

1. பட்டணம் பளிங்குக் கொப்ப தாய்த் துலங்குமே; அதில்
பரம ஆட்டுக்குட்டி ரவிபோற்சுடர் பரவிலங்குமே–ஆ! ஆ!
–நாம்

2. சுத்தர், சுத்தர் சித்தரென்று தூதர் போற்றுவார்;–பின்னும்
துதி கிறிஸ்துக்குரியதென்றும்பர் தொழுது ஏத்துவார்–ஆ! ஆ!
– நாம்

3. ஜீவ நதியோடும் இன்ப ஜீவக்கனியும்–திரு
ஜீவமுடியும் திவ்ய ஆடையும் தேடும்பாக்கியம்–நாம் ஆ! ஆ!
– நாம்

4. மகத்து வாசனத்தின் மேல் கிறிஸ்து நாயனார்–அதி
மகிமையாக வீற்றிருந்து ஆளுவார், வல்லமைநேயனார்;
ஆ! ஆ! – நாம்

*– S.A.S.*

**361. இராகம்: லாவணி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**உச்சித மோட்ச பட்டணம் போக**
ஓடி நடப்போமே;–அங்கே
உன்னத யேசு மன்னவருண்டு, ஓயா இன்பமுண்டு.

***சரணங்கள்***

1. சித்திரச் சீயோன் பெற்றிடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய்,–எங்கள்
ஜீவனி னதிபர் யேசு நம் மகிபர்
சீயோன் பதி மனுவேல். – உச்சித

2. அன்பினால் அழைப்பார், ஆறுதல் சொல்வார்
அதிபதி யேசையர்–அங்கே
இன்பங்களுண்டு; யேசுவின் சமுகம்
என்றென்றும் ஆறுதலே. – உச்சித

3. கீதங்களோடு யேசுவைப் போற்றிக்
கெம்பீரமாய் நடப்போம்;–அங்கே
கிளர்[1] ஒளியுள்ள பட்டண ராசன்
கீதங்கள் நாம் அறைவோம். – உச்சித

***– ஜே.ஐ. கிறிஸ்மஸ்***

**362. இராகம்: பியாகு** **ரூபக தாளம்**

*பல்லவி*

**உன்தன் சுயமதியே நெறி என்**
றுகந்து சாயாதே;–அதில் நீ
மகிழ்ந்து மாயாதே.

***சரணங்கள்***

1. மைந்தனே, தேவ மறைப்படி யானும்
வழுத்தும்[2] மதிதனைக் கேளாய்;–தீங்
கொழித் திக[3] மனந் தாழாய்[4]; அருள் சூழாய். – உன்தன்

---

1 இலங்கும்–பிரகாசிக்கும்
2 வாழ்த்தும்
3 வெல்ல
4 தாழ்மைப்படுவாய்

2. சொந்தம் உன துளம் என்று நீ பார்க்கிலோ,
வந்து விளையுமே கேடு;–அதின்
தந்திரப் போக்கை விட்டோடு; கதி தேடு. – உன்தன்

3. துட்டர் தம் ஆலோசனைப்படியே தொடர்ந்
திட்ட மதாய் நடவாதே;–தீயர்
கெட்டவழியில் நில்லாதே; அது தீதே. – உன்தன்

4. சக்கந்தக்[1] காரர் இருக்கும் இடத்தொரு
மிக்க இருக்க நண்ணாதே;–அவர்
ஐக்யம் நலம் என்றெண்ணாதே; அ தொண்ணாதே[2]. – உன்தன்

5. நான் எனும் எண்ண மதால் பிறரை அவ
மானிப்பது வெகு பாவம்;–அதின்
மேல் நிற்குமே தேவ கோபம்; மனஸ்தாபம். – உன்தன்

*– ஜாண் பால்மர்*

**363. இராகம்: பைரவி** **ஆதி தாளம் (491)**

**பல்லவி**

**ஜென்மம் ஏதுக்கு? ஜெபம் செய்யா**
ஜென்மம் ஏதுக்கு?–தபம் செய்யா

**சரணங்கள்**

1. நன்மை ப்ரவாகர ஞானச் சொரூபத்தை
உண்மையினாலே உணர்ந்து வணங்காத – ஜென்

2. வானம் புவியும் மகிழ்ந்து படைத்த மெய்ஞ்
ஞானப்ர காசத்தின் நன்றி அறியாத – ஜென்

3. தேடிப் பாராபரன் பாதத்தைச் சிந்தித்து
நாடித் தினந்தினம் பாடித் துதியாத – ஜென்

---

1 பரிகாசக்காரர் 2 இசையாதே

4. எங்கும் நிறைந்த பராபரன் இல்லை என
றங் ககம் கொண்டெங்கும் அலைந்து திரிகின்ற - ஜென்

5. ஆவியினால் உண்மை யாலும் அரூபியாம்
ஜீவப் பிரானைத் தியானித்துப் போற்றாத - ஜென்

6. உத்தம சத்திய வேதத்தின் உண்மையைப்
புத்தியினால் கண்டு போற்றி கைக்கொள்ளாத - ஜென்

7. யாவும் அறிந்து நடுத்தீர்க்க வல்ல ஓர்
தேவன் உண்டென் றுளம் சிந்தனை செய்யாத - ஜென்

***- வேதநாயகம் சாஸ்திரியார்***

**364. இராகம்: இந்துஸ்தான் ககுபா** **ஆதி தாளம் (492)**

**பல்லவி**

**அடங்காத நாவு; தீதே அதை**
ஆட்கொள்ளவே பார் இப்போதே; சற்றும்

**சரணங்கள்**

1. உடலதில் அது சிறு அவயம் ஆயினும்
சட சடெனவே எழுந்தாடும்;-தீராச்
சல்லியம்[1] மூட்டிச் சண்டை போடும், சற்றும் - அடங்

2. மூர்க்க அசுவமது[2] சூட்ச கலினமதால்[3]
ஈர்க்கம்[4] மடங்கி அடங்கிடுமே;-அதை
இயற்றும் வழியில் உடன்படுமே, சற்றும் - அடங்

3. தேட அரிய கப்பல் சிறிய சுக்கான் ஒன்றால்
ஓட விடப்படுமே நேராய்-நாவோ
உற்றிணங்காது நற் சீராய், சற்றும் - அடங்

4. மூட்டும் அற்ப நெருப்பு தோற்றி எத்தனை பெரும்
காட்டைக் கொளுத்தும் அறிவாயே;-அந்நேர்
கண்டறி குறுநாவும் தீயே, சற்றும் - அடங்

***- ஜாண் பால்மர்***

---

1 உபத்திரவம்
2 குதிரை
3 கடிவாளம்
4 இழுப்பு

**365. இராகம்: புன்னாகவராளி** **அடதாள சாப்பு (493)**

**பல்லவி**

**பாவம் வந்ததையோ! உலகுக்கு பாவம் வந்ததையோ!**

**அனுபல்லவி**

பாவத்தினால் தேவ கோபம் வந்தது;
கோபத்தினால் பல சாபம் வந்தது – பாவம்

**சரணங்கள்**

1. குலத்தையும் கெடுத்தானே; ஆதாம் பெற்ற
பலத்தை வீண் விடுத்தானே;
தலைப்பலன் இழந்தானே பின்னும்பல
அலக்கணும் உழந்தானே;
விலக்கின கனி தின்று, மெல்லியல் சொல்கொண்டு
கலக்கம் உற்றான் என்று கண்டிலீரோ பண்டு? – பாவம்

2. ஆபிரகாமைக் கொண்டே–இருட்கோர்
தீபம் தந்ததுவும் கண்டே,
கோபத்தை மூட்டுகின்றீர்; அஞ்ஞானத்தி
லே பக்தி காட்டுகின்றீர்;
பாவம் செய்தீர் யேசு பரன் இன்றிப் போமோ?
கூபத்தில் விழுந்தால் கொடி இன்றி ஆமோ? – பாவம்

**366. இராகம்: காம்போதி** **ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**துய்ய திருப் பாலனே; துன்ப வினை சூழ்ந்ததோ–மகனே**
வையகத்தோ ரால் நமக்கு வந்த பலன் இது தானோ?

2. விலகுங் கனி புசித்து வீழ்ந்த பாவிகளுக்காய், மகனே
வலமைத் தேவாதி தேவன் மனுடன் ஆகவேண்டாமோ?

3. கோபாக்கினை பெரிது, குற்றமில்லாத ஆடே;–மகனே
பாபத்தைச் சகித்துப் பாடுபட்டுத் தரிப்பாய்

4. நரகத்தைக் காணாமல் நரர்குலம் வாழவே–மகனே
தருணத்தில் சென்றுலகின் சாபத்தையே தவிர்ப்பாய்

5. மானிடனாய்ப் பிறந்து, வல்வினையைச் சுமந்து, மகனே
ஈனச் சிலுவை தனிலே அறையுண் டிறந்து

6. மரணத்தை ஜெயங்கொண்டு வலிய சர்ப்பத்தை வென்று–மகனே
நரகத்தைப் பூட்டி–வான நாட்டில் வருகுவாயே

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**367. இராகம்: மோகனம் ஆதி தாளம்**

***பல்லவி***

**ஒரு மருந்தரும் குருமருந்தே**
உம்பரத்தில் கண்டேனே.

***அனுபல்லவி***

அருள் மருந்துடன்–ஆனந்த மருந்து,
ஆதியிற் றானாய்–முளைத்த மருந்து
வரும் வினைகளை–மாற்றும் மருந்து,
வறுமை யுள்ளோர்க்கே–வாய்த்த மருந்து. – ஒரு

***சரணங்கள்***

1. சிங்கார வனத்தில்–செழித்த மருந்து,
ஜீவ கனிமீதில்–படர்ந்த மருந்து
மங்கை ஏவை பவம்–மாற்றும் மருந்து,
வல்ல சர்ப்ப விஷம்–மாய்த்த மருந்து – ஒரு

2. மோசே முதல் முன்னோர்–காணா மருந்து,
மோட்ச மகிமையைக் காட்டும் மருந்து,
தேசத்தோர் பிணியைத்–தீர்த்த மருந்து
தீர்க்க தரிசிகள்–செப்பிய மருந்து; – ஒரு

3. தீராத குஷ்டத்தைத்–தீர்த்த மருந்து,
செவிடு, குருடூமை–தின்ற மருந்து,
மானா[1] திருத்துவ–மான மருந்து,
மனுவாய் உலகினில்–வந்த மருந்து. – ஒரு

---

1 மகிமையுள்ள

4. செத்தோர் உயிர்த்தே–எழுந்த மருந்து,
ஜீவன் தவறா–தருளும் மருந்து,
பத்தரைச் சுத்தி–கரித்திடும் மருந்து,
பரம வாழ்வினில்–சேர்க்கும் மருந்து; – ஒரு

*– ஜே. யாக்கோபு*

**368. இராகம்: முகாரி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**தரி–தாழ்மையே தெரிந்து,–வெறு**
தாட்டிகமதை[1] உரிந்து. (1 பேது 5:5)

**சரணங்கள்**

1. திரித்துவத் தொருவராம் கிறிஸ்தேசு
செயலதை நீ குறி மனமே;–அவர்
தரித்திர னிகராய் இகத்தில் உற்பவமாய்த்
தாழ்ந்திருந்தார் அனுதினமே, (பிலி 2:5–8) – தரி

2. மனத் தரித்திரர் தாம் பாக்கியர், எனவே
வாகுடன் அவர் உரைத்தாரே;–நெஞ்சே
உனக்குள் இத்தகையான நற்குணமே
உண்டோ என்றாய்ந்து நீ பாரே (மத்.5:3) – தரி

3. மேட்டிமை யுடையோர் மீது தற்பரனார்
வெறுப்படைந் தகற்றுவார் உடனே;–நல்ல
தாட்டிக மதிலாத்தாழ்ந்த சிந்தையினோர்
தமக்கருள் புரிகுவர் திடனே (யாக்.4:6) – தரி

4. ஆதியில் தூதர்களில் சிலர் கெர்வம்
அடைந்து நல் வாசமற்றாரே;–உடன்
தீ தறு பேய்களால் எரிநகரில்
சேர்ந்ததி சாபமுற்றாரே, (யூதா 6) – தரி

*– ஜாண் பால்மர்*

1 அகந்தை

**369. இராகம்: வசந்தபைரவி** **அடதாள சாப்பு (499)**

**பல்லவி**

**உன்னையே நிமிஷந் தோறும் ஓர்ந்தறி, மனமே.**

**அனுபல்லவி**

உன் நினைவும், உன் விருப்பும்
இன்ன தின்ன தென்றுணர்ந்து – உன்னை

**சரணங்கள்**

1. சுற்றி நிற்கும் பாவம் உன்னைப்
பற்றின துண்டோ நீ–நினை;
வெற்றி கொள்ளாதே அதன் கீழ்
வீழ்வை ஆனால், மீள்வதெங்கே? – உன்னை

2. போக ஒண்ணாத் தலந் தன்னில்
போக ஆசை கொண்டே–உன்னில்
ஏகனுக் கீ திசை யாதென் றின்
றடங்கல் நன் றல்லவோ? – உன்னை

3. முன் அருவருத்த தீதைப்
பின்னும் நீ நினைக்கில்–வாதை
தன்னையே வருத்தம், என்று
சஞ்சலம் கொண் டஞ்சுவாயே – உன்னை

4. கண்ணினால் இங்குற்ற தோஷம்
எண்ணில், மிகு மோசம்; ஓகோ!
நண்ணும் ஓர் பார்வையிலும் நீ
நன்று தீதிதென்று கண்டு – உன்னை

5. வாய் செவியால் வந்த தீது நீ
உணரில், அளவேது?–பின்னும்
தீயதாம் இப் புலன் எல்லாம்
செய்வினை அனைத்தும் நோக்கி – உன்னை

***– ஜாண் பால்மர்***

**370. இராகம்: கல்யாணி** **அடதாள சாப்பு (495)**

**பல்லவி**

**மத்திய[1] பானத்தில் மிக நித்தியம் கருத்து வைக்கும்**
மானிடரே கேளீர்

**அனுபல்லவி**

புத்தி மழுங்கவும் நும் புகழ் அழிந்திடவுமே
சித்தம் உமக்குண்டானால் தெளிந்து குடியும்; சும்மா – மத்திய

**சரணங்கள்**

1. பாம்பை மடியில் வைப்பாரோ? பழகினாலும்
பயம் இன்றி அதை மொய்ப்பாரோ?
வேம்பு கசப்பில், என்பரோ?–மதுக் குடிக்க
விரும்பு கின்றீர், நல்லதோ?
நாம் பிசகோம் என்றும், நடந்து திரிவோம், என்றும்
வீம்புகள் சொல்வதேன்? விழுவீர், விழுவீர்; காணும் – மத்திய

2. கைப் பொருள் இழந்திடவும்–புதல்வரொடு
காதலி[2] அழிந்திடவும்
மெய்ப் பொருள் மறைந்திடவும் எரிநரகில்
வீழ்ந்ததில் உறைந்திடவும்
தற்பரன் அருள் இங்குதான் இழக்கவும் வேண்டில்,
எப்படியும் குடியும் இளைத்துச் சுணங்கிக்கொண்டு – மத்திய

3. சற்றும் விருப்பம் வேண்டாம்–மதுவில், அது
சதித்துக் கெடுத்து விடுமே;
முற்றும் இயேசுபரன் மேல்–உரிமையாக
முழுதும் அன்படைந் தவரைப்
பற்றி விசுவாசித்து; பரகதிக்[3] காளாக
உற்ற மதுக் குடியை உடனே விடுதல் நன்றே – மத்திய

***– ஜாண் பால்மர்***

---

1 மதுபானம் 2 மனைவி 3 மோட்சம்

**371. இராகம்: மலையாமி** **திரிசுரதாளம்**

**பல்லவி**

**எது வேண்டும், சொல், நேசனே,-உனக்**
கெது வேண்டாம், என் நேசனே?

**சரணங்கள்**

1. மதிவாட, மனம் வாட, மயக்கங் கண் ணிறைந்தாட
மதுபான முண வேண்டுமோ?-அன்றித்
துதிபாடும் உலகோருன் புகழ்பாடி மகிழ்ந்தாடச்
சுத்த ஜலம் வேண்டுமோ? - எது

2. வாதாடி நகையாடி, வழிகளில் விழுந்தாடி
மதுவுண்டு கெட வேண்டுமோ?-அன்றி
தாதாவே[1], கனவானே, தனவானே யெனச் சாற்றத்
தண்ணீ ருண்ண வேண்டுமோ - எது

3. பகைதந்து, பழிதந்து, பரியாசந் தரு மது
பான முண வேண்டுமோ?-அன்றி
தகை கொண்ட கதியேற, அருளொடு புகழ்பெறத்
தண்ணீ ருண்ண வேண்டுமோ? - எது

4. சண்டை, காயம், கந்தை, அமளி, வேதனையாதி
தருங் குடி வெறி வேண்டுமோ?-அன்றிப்
பண்டை வேதஞ் சொன்னபடி மோட்சம் பெற ஜல
பானமது வேண்டுமோ? - எது

5. இரத்தக்கண், பெருந்துக்கம், ஏக்கம், நடுக்கம், வெட்கம்,
இவை தருங் குடி வேண்டுமோ?-அன்றி,
ஸ்திரத்துக்கு மறிவுக்குஞ் சுகத்துக்கு மிடமான
தெளிந்த தண்ணீர் வேண்டுமோ? - எது

***- ஜே.ஆர். அர்னால்ட்***

1 தந்தையே

**372. இராகம்: துவாசந்தி** **அடதாளம்**

**பல்லவி**

**தேவா, சுகம் அருள்வாய்–நின் தாசனுக்கு;**
தேவா, சுகம் அருள்வாய்

**அனுபல்லவி**

பாவ ரோக மகல ஜீவ மருந்தளித்த
பாக்கியனே, சத்ய வாக்கியனே; யேசு – தேவா

**சரணங்கள்**

1. ஆபத்துக் கால மிதில்–நின் தாசனை
அன்பாய் அணைத்திடுவாய்;
கோபம் வைத்தால் தாங்க மாபாவி எங்களால்
கூடுமோ; மா கருணாநிதியே?–யேசு – தேவா

2. மாய உலகமிதிலே நின் மக்கட்கு நீ
மாத்திர மல்லா தில்லையே;
காயம்[1] எடுத்துப் பாரில் காயம்[2] ஐந்து தரித்துக்
கஷ்டப் பட்டிறந் துயிர்த்தெழுந்த எங்கள் யேசு – தேவா

3. மருந்தும் வைத்தியனும் நீரையா–அல்லா லெமக்கு
மானிலத்தில் வேறில்லையே;
வருந்தும் நின்னடியானோ டிருந்து நின் தயவீந்து
மனமிரங்கிப் பாவ மன்னிப் பருள்வதோடே – தேவா

***– பி.ஜே. சிங்***

**373. இராகம்: லாவணி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**தேவா, இவ்வீட்டில் இன்றே மேவி எழுந்து வரவே;–தயை**
செய்வாய், எமது கோவே!

---

1 உடல் 2 புண்

***சரணங்கள்***

1. மூவர் ஒருவரான தேவா;–கிறிஸ்துநாதா,–எங்கள்
முன்னவா, சத்ய வேதா!
பூவில் எமக்குதவி யாருமில்லை, எம் தாதா[1],–யேசு
புண்ணியனே, மா நீதா!–இங்கு
நண்ணுவாய்[2], மெய்ப்போதா;–தயை
பண்ணுவாய், வினோதா!
மேவி உனதருளை ஈவாய் இவ்வீட்டின் மீது,
ஜீவனே, யேசு கோனே,–ஏழைப்
பாவிகள் மீட்பன் தானே. – தேவா

2. விந்தையுடன் களிப்பும் சந்தமுடன் உண்டாக,–அதி
மேன்மையுடன் சிநேகம்
அந்தமுடன் பெருகி எந்தப் பாவமும் ஏக–என்றும்
அத்தனோ டுற வாக–ஜெப
துந்துமிகள் முழங்க–ஐக்யம்
பந்தமுடன் இலங்க,
தந்தைப் பரனே, இன்று உன் தன் அருள் நிறைவாய்ச்
சொந்தமுடன் ஈவாயே–இவர்
சந்ததம் வாழ நீயே – தேவா

3. இங்கு வசிக்கும் மட்டும் துங்கன்[3] மொழிக்கிசைந்தே–பரன்
இஷ்டப்படி நடந்தே
அங்கம், மனது யாவும் பங்கம் இன்றித் தொடர்ந்தே–இவர்
அனுதினமும் மகிழ்ந்தே–உயர்
அம்பர[4] வீட்டில் சேர்ந்து–மிகு
கெம்பீரமாக வாழ்ந்து,
புங்கமுடன்[5] நிதமும் தங்கி யேசு பரனில்
இங்கி தமாய்க் கொண்டாட–நிதம்
மங்களக் கவி பாட – தேவா

***– ச. யோசேப்பு***

---

1 தந்தை
2 வந்தருள்வாய்
3 தூயவர்
4 விண்
5 சிறப்பு

**374. இராகம்: சங்கராபரணம் ரூபக தாளம்**

**சத்தாய்[1] நிஷ்களமாய்[2] ஒரு சாமியமும்[3] இலதாய்,**
சித்தாய்[4] ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே,
எத்தால் நானடியேன் கடைத்தேறுவன் என்பவந்தீர்ந்து;
அத்தா[5], உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

2. எம்மா விக்குருகி உயிரீந்து புரந்ததற்கோர்[6]
கைம்மா றுண்டுகொலோ? கடைகாறுங் கையடையாய்[7],
சும்மா ரக்ஷணைசெய்[8], சொல்சுதந்தரம் யாதுமிலேன்,
அம்மான்[9], உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

3. திரைசேர் வெம்பவமாம் கடல்மூழ்கிய தீயரெமைக்
கரைசேர்த் துய்க்க[10]வென்றே புணையாயினை[11] கண்ணிலியான்,
பரசேன்[12] பற்றுகிலேன்; என்னைப்பற்றிய பற்றுவிடாய்,
அரசே, உன்னையல்லால் எனக்கார்துணை, யாருறவே?

4. தாயே, தந்தை தமர்[13], குருசம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான், கதிவேறிலை நிண்ணயங்காண்[14];
'ஏயே' என்றிகளும் உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே[15], உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

***– எச்.ஏ. கிருட்டிணன்***

---

1 மெய்ப்பொருள்– உண்மைப்பொருள்
2 ஓரிடமென்றில்லாமல்– உருவமற்றவராய்
3 ஒப்புமை
4 அறிவாய்–வெளிப்பட்ட மறைபொருள்
5 தந்தை
6 காப்பாற்றியதற்கோர்– பாதுகாத்தல்
7 அடைக்கலம்
8 மீட்பு
9 தந்தை
10 தப்புவிக்க
11 தெப்பமானாய்– படகானாய்–தெப்பம்
12 வணங்கேன்
13 சுற்றம்
14 உண்மை
15 மேய்ப்பன்

**375. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**ஆகமங்கள் புகழ் வேதா, நமோ நமோ!**
வாகு[1] தங்கு குருநாதா, நமோ நமோ!
ஆயர் வந்தனை செய் பாதா, நமோ நமோ, – அருரூபா,

2. மாகமண்டல[2] விலாசா,[3] நமோ நமோ!
மேகபந்தியி னுலாசா, நமோ நமோ!
வான சங்கம் விஸ்வாசா, நமோ நமோ, – மனுவேலா,

3. நாகவிம்பம்[4] உயர் கோலா[5], நமோ நமோ!
காகமும் பணிசெய் சீலா, நமோ நமோ!
நாடும் அன்பர் அனுகூலா, நமோ நமோ, – நரதேவா,

4. ஏக மந்த்ரமுறு[6] பூமா, நமோ நமோ!
யூக[7] தந்த்ரவதி சீமா, நமோ நமோ!
ஏசு வென்ற திருநாமா, நமோ நமோ, – இறையோனே!

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**376. இராகம்: பூரிகல்யாணி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**சீர்திரியேக வஸ்தே, நமோ, நமோ, நின்**
திருவடிக்கு நமஸ்தே நமோ, நமோ!

**அனுபல்லவி**

பார்படைத்தாளும் நாதா,
பரம சற்பிரசாதா,
நரருறுந்[8] தூயவேதா, நமோ, நமோ, நமோ! – சீர்

---

1 அழகு–ஒளி
2 விண்ணுலகம்
3 மாகமண்டல விலாசா= விண்ணெங்கும் வியாபித்திருக்கின்றவனே
4 வெண்கல சர்ப்பம்
5 நாகவிம்பம் உயர் கோலா – வான விரிவைப் போன்று எல்லையில்லாமல் மேம்பட்டிருக்கும் அழகினையுடையவனே!
6 வேதம்
7 ஞானப்பிரபு
8 அன்புறும்

**சரணங்கள்**

1. தந்தைப் பராபரனே நமோ நமோ, எமைத்
தாங்கி ஆதரிப்போனே – நமோ, நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய்,
சொல்லரும் நலமீந்தாய்,
எந்தவிர்[1] போக்குமெந்தாய், நமோ, நமோ, நமோ. – சீர்

2. எங்கள் பவத்தினாசா நமோ நமோ, புது
எருசலேம் நகராசா நமோ நமோ!
எங்கும் நின் அரசேற,
எவரும் நின் புகழ்கூற,
துங்க மந்தையிற் சேர, நமோ, நமோ, நமோ. – சீர்

3. பரிசுத்த ஆவிதேவா நமோ, நமோ, திட
பலமளித் தெமைக்காவா, நமோ, நமோ!
கரிசித்துத்தா நற்புத்தி,
கபடற்ற மனசுத்தி,
திருமொழி பற்றும்பக்தி, நமோ, நமோ, நமோ – சீர்

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**377. இராகம்: செஞ்சுருட்டி ஆதி தாளம் (501)**

**பல்லவி**

**வாருமையா என்னுள்ளத்திலே,**
வாருமையா என்னுள்ளத்திலே.

**சரணங்கள்**

1. நாசமுண் டாக்கும் பாசம் யாவற்றையும் நீக்கிட –வாரு

2. சாலொமொன் ஆலயத்தில் மேகம்போல் தோன்றினவா –வாரு

3. சோதனை காலமதில் நாதா உம்மைப் பற்ற யான் –வாரு

1 வறுமைத்துயர்

4. பெந்தேகொஸ் தேமுருகில் வந்த தேற்றரவாளா! -வாரு

5. அற்பராம் எங்களையே தற்பரா சுத்திசெய்ய -வாரு

*- C.S.*

**378. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம் (502)**

**பல்லவி**

**அருணோதயம் செபிக்கிறேன் அருள்பரனே கேளுமேன்**
ஆவி வரம் தாருமே-என் யேசுவே

**சரணங்கள்**

1. கருணையுடன் கடந்தராவில் காப்பாற்றினீர் தெய்வமே
கரங்குவித்துத் தோத்தி ரிக்கிறேன்-என் யேசுவே
சிரங்குனிந்து[1] தோத்திரிக்கிறேன் - அருணோ

2. இந்த நாளைக் காணச் செய்தீர் இரக்கமுள்ள தெய்வமே
இதற்காயும்மைத் தோத்தி ரிக்கிறேன்-என் யேசுவே
இதயத்தாலும் தோத்திரிக்கிறேன் - அருணோ

3. கதிரவன் எழும்பிவரும் முறையின்படியே என்மேலே
கர்த்தரே நீர் ப்ரகாசித்திடும்-என் யேசுவே
நித்தம் நித்தம் ப்ரகாசித்திடும் - அருணோ

***- அருள்திரு. ச. தாவீது***

**379. இராகம்: மோகனம் ஆதி தாளம்**

**அருணோதயம் எழுந்திடுவோம்**
பரனேசுவை ஸ்துதிப்போம்,
அருணோதயம் பரமானந்தம்
பரனோடுற வாடவும்.

2. இதைப் போன்றொரு அருணோதயம்
எம்மைச் சந்திக்கும் மனமே;
ஆ! என்னானந்தம் ஜோதி சூரியனாம்
எந்தன் நேசரெழும்பும் நாள்.

---

1 சிரம்-தலை

3. நன்றியாலுள்ளம் பூரித்திடுதே
அன்னையா மேசு காருண்யம்
ஒவ்வொன்றாயிதை தியானம் செய்யவும்
எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்

*– அருள்திரு. ச. தாவீது*

**380. இராகம்: மோகனம்** **திஸ்ர ஏகதாளம்**

**நல்ல தேவனே, ஞான ஜீவனே,**
வல்ல உமது கருணை தன்னை
வாழ்த்திப் போற்றுவேன்.

2. போன ராவிலே பொல்லாங்கின்றியே,
ஆன நல்ல அருளினாலே
அன்பாய்க் காத்தீரே.

3. காலையைக் கண்டேன், கர்த்தா உம்மையே
சாலவும் துதித்துப் போற்றிச்
சார்ந்து கொள்ளுவேன்.

*– ச. அருமைநாயகம்*

**381. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**வாரும் ஐயா, போதகரே, வந்தெம்மிடம் தங்கியிரும்;**
சேரும் ஐயா பந்தியினில், சிறியவராம் எங்களிடம்.

2. ஒளிமங்கி இருளாச்சே, உத்தமனே, வாரும் ஐயா!
கழித்திரவு காத்திருப்போம், காதலனே, கருணை செய்வாய்.

3. உன்றன்மனை திருச்சபையை உலகமெங்கும் வளர்த்திடுவாய்,
பந்தமறப் பரிகரித்தே பாக்யம் அளித் தாண்டருள்வாய்.

*– வேதநாயகம் பாகவதர்*

**382. இராகம்: புன்னாகவராளி** **சாப்பு தாளம்**

***பல்லவி***

**ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க,**
உனக்கென்ன குறை மகனே?

***அனுபல்லவி***

சிறுவந்தொட்டுனை யொரு
செல்லப் பிள்ளைபோற் காத்த
உரிமைத் தந்தை யென்றென்றும்
உயிரோடிப்பாருன்னை. - ஒரு

***சரணங்கள்***

1. கப்பலினடித் தட்டில்–களைப்புடன் தூங்குவார்,
கதறுமுன் சத்தங்கேட்டால்–கடல் புசலமர்த்துவார்,
எப்பெரிய போரிலும்–ஏற்ற ஆயுதமீவார்,
ஏழைப்பிள்ளை உனக்கு–ஏற்ற தந்தை நானென்பார். - ஒரு

2. கடல் தனக் கதிகாரி–கர்த்தரென் றறிவாயே,
கடவாதிருக்க வெல்லை–கற்பித்தாரவர்சேயே.
விடுவாளோ பிள்ளையத் தாய்–மேதினியிற்றனியே?
மெய்ப் பரனை நீ தினம்–விசுவாசித்திருப்பாயே. - ஒரு

3. உன்னாசை விசுவாசம்–ஜெபமும் வீணாகுமா?
உறக்க மில்லாதவர் கண்–உன்னைவிட் டொழியுமா?
இந்நில மீதிலுனக்–கென்னவந்தாலும் சும்மா
இருக்குமா அவர்மனம்? – உருக்கமில்லாதே போமா? - ஒரு

***– சு. முத்துசாமி உபாத்தியாயர்***

**383. இராகம்: பியாகு** **சாப்பு தாளம்**

**பல்லவி**

**கண்களை ஏறெடுப்பேன்–மாமேரு[1] நேராய் என்**
கண்களை ஏறெடுப்பேன்.

---

1 கன்மலை

**அனுபல்லவி**

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்
தெண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும். – கண்

**சரணங்கள்**

1. காலைத்தள்ளாட வொட்டார்–உறங்காது காப்பவர்
காலைத்தள்ளாட வொட்டார்,
வேலையில்[1] நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர் – கண்

2. பக்தர் நிழல் அவரே – எனை ஆதரித்திடும்
பக்தர் நிழல் அவரே
எக்கால நிலைமையில் எனைச் சேதப்படுத்தா–து
அக்கோலம் கொண்டென்னை அக்காவல் புரியவே – கண்

3. எல்லாத் தீமைகட்கும்–என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர் – கண்

***– த. ஐயாத்துரை பாகவதர்***

**384. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**திரியேகா! திருமகிபா[2]! திரியுலகின் பூரணா!**

அனுபல்லவி

திவ்ய மகா நேயபரா! துய்ய நின் வர மிகப் பெய்திடுவாய் – திரி

**சரணங்கள்**

1. அன்புமிகும் இன்ப சுகம் அமைந்திலகும் தாதையே[3]
உன் புனிதம் நன்கருள்வாய் உனதடி தொழுதிடும் ஊழியர்க்கே
– திரி

---

1 செங்கடல் 2 அரசன் 3 தந்தை

2. தேவ சுதா ஏவைசுதா தாரணியின் வான சுதா
ஜீவவிதை தூவிடவுன் சீடர் தம் மோடிருந்தாண்டருள்வாய் –திரி

3. தாதை சுதன் தமிலுதிக்கும் தேவ மகா ஜீவாவி
பாதை தனில் தூதனுப்பி பலன் மிகவரத்துணை புரிந்திடுவாய்
– திரி

*– ஜே.எம். தாவீது*

**385. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**பூமியும் நிறைவும் உலகமும் அதிலுள்ள**
குடிகளும் கர்த்தருடையது.

**சரணங்கள்**

1. அவரே அதைக் கடல்களுக்கு மேலாக அஸ்திபாரப்படுத்தினார்,
அவரே அதை நதிகளுக்கு மேலாக ஸ்தாபித்தார் – பூமி

2. யார் கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுவான்?
யார் அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிலைத்திருப்பான் – பூமி

3. கைகளில் சுத்தமுள்ளவனும் இதயத்தில் மாசில்லாதவனும்
மாயைக்கு ஒப்புக்கொடாமலும் கபடமாய் ஆணையிடாதவனே
– பூமி

4. அவன் கர்த்தரால் ஆசீர்வாதத்தையும் பெறுவான்
தன் இரட்சிப்பின் தேவனால் நீதியையும் பெறுவான் – பூமி

**386. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**கர்த்தர் பெரியவர் அவர் நமது**
தேவனுடைய நகரத்திலும்
நமது பரிசுத்த பர்வதத்திலும்
மிகத் துதிக்கப்படத் தக்கவர்.

**சரணங்கள்**

1. வட திசையிலுள்ள சீயோன் பர்வதம்
வடிப்பமான ஸ்தானமும்;
சர்வ பூமியின் மகிழ்ச்சியாய் இருக்கிறது
அது மஹா ராஜாவின் நகரம் - கர்த்

2. தேவனே உமது ஆலயம் நடுவில்
உம்முடைய கிருபையைச்
சிந்தித்துக் கொண்டு இருக்கிறோம்,
உம் நாமம் விளங்குகிறது - கர்த்

**387. இராகம்: இந்துஸ்தானி** **ஏக தாளம்**

**பல்லவி**

**என் உயிர் நேசர் இயேசுவை-நான்**
எங்கே காண்பேனோ?-பரன் - என்

**சரணங்கள்**

1. உன்னத மாளிகை உயர் அரியணையில்
உத்தமர் இருப்பாரோ
இன்னிலந் தங்கும் ஏழையின் அகத்தில்
இறைவன் இருப்பாரோ-பரன் - என்

2. வாசனை மிகுந்த மணமலர் மீதில்
மறையவர் இருப்பாரோ
தாசரை இழுக்கும் நாதத்தில் கீதத்தில்
தலைமறைந்தி ருப்பாரோ-பரன் - என்

3. தேடு மிடங்கள் எங்குமே காணும்
திவ்ய இரட்சகனே!
நாடுமென் ஆத்ம கண்களைத் திறப்பீர்
நானுமைக் காண்பேனே-பரன் - என்

*- ஒய். ஆமோஸ்*

**388. இராகம்: தோடி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**தேவசுதன் புவிதனில் பிறந்தார்,**
நரருருவினை[1] மருவியே

**அனுபல்லவி**

பாவக் கடலமிழ்ந்து ஜீவனிழந்த பேர்கள்
யாவருக்கும் ரட்சை ஆவலாயளித்திட – தேவ

**சரணங்கள்**

1. விண்ணுலகின் மகிமை விமலா[2] தெனினும்
வீசும் சுடரொளியும் விடலரி தென்றும்
மண்ணுலகத்தின் தீங்கு மா கொடிய தெனினும்
மாந்தர் நிலை மிகத் தாழ்ந்ததே யெனினும் – தேவ

2. தாழ்வில் நமை நினைத்து தம்மொரே பொன் மகவை
தந்த தயாளர் வேறே எந்த ஈவை யருளார்?
சூழ்விழி வென்றுந் தீர்த்துச் சுதந்திரராகச் சேர்த்து
சோதரர்களாக்கிச் சோபிதம்[3] ஈந்திடுவார் – தேவ

***– ஜே.எம். தாவீது***

**389. இராகம்: பியாகு** **ஆதி தாளம்**

**பல்லவி**

**இவரே பெருமான், மற்றப் பேர்**
அலவே பூமான்,–இவரே பெருமான்.

**சரணங்கள்**

1. கவலைக் கிடங்கொடுத் தறியார்,–வேறு
பவவினை யாதுமே தெரியார்,–இப்
புவன[4] மீது நமக்குரியார். – இவரே

---

1 நரர்–மானிட
2 இன்பம்
3 இன்பம்
4 உலகம்

2. குருடர்களுக் குதவும் விழியாம்,–பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம்,–தெய்வம்
இருக்குந் தலஞ்செல் வாசல் வழியாம் – இவரே

3. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன்[1],–கொடு
மறம்விடு பவர்க்கருள் முத்தன்[2],–இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன். – இவரே

*– த. ஐயாத்துரை பாகவதர்*

**390. இராகம்: சங்கராபரணம் ஏக தாளம்**

**பல்லவி**

**ஆனந்தம் கொண்டாடுவோம்–நாம்**
அனைவருமே பாடுவோம்–மிக

**சரணங்கள்**

1. வானவர் நாதன் மாமறை நூலன்
மண்ணினில் வந்த மாட்சியைப் பாரும்
ஈனமாம் கோலம் எடுத்ததை ஒரும்[3]
ஈசனே உளம் வையும்–மிக –ஆன

2. பாவமாம் தீய மாமலை போக்க
பாசமே கொண்டு பாரினில் வந்த
தேவாதி தேவன் திருவுயர் பாதம்
தினந்தினமே துதிப்போம்–மிக –ஆன

*– ஒய். ஆமோஸ்*

**391. இராகம்: கெம்பீரநாட்டை ஆதி தாளம்**

**பல்லவி**

**மா பரன்சேய் மனுவாயினாரே–யேசு**

**சரணங்கள்**

1. பூவுலகில் நேர்ந்த பாவம் போக்கிடவென்றே பல
ஆவுக ளடையும் வீட்டில் அன்பதாகவே–மிகு
ஆவலாகவே மிகு–ஆசையாகவே–யேசு – மா

---

1 வல்லவர் 2 மீட்பர் 3 நினையும்

2. வானகத்தின் தூதர் பாதம் வாழ்த்திப்பாடவே அங்கு
கானகத்தின் ஆயர் காட்சி–கண்டு கூடவே–பேயோர்
காட்டிலோடவே–ஞானோர்–காணத் தேடவே–யேசு – மா

3. உன்னதத்தில் மகிமையது ஓங்கிடவென்றும் இந்த
மன்னிடத்தில் சமாதானம் வாய்த்திடவென்றும்–தூதர்
வாழ்த்திடவன்று–தங்க–மங்களமென்றும்–யேசு – மா

*– J.S.*

**392. இராகம்: சங்கராபரணம் ஏக தாளம்**

**சரணங்கள்**

**பெத்லேகம் ஊரோரம் சத்திரத்தை நாடிக்**
கர்த்தன் ஏசு பாலனுக்குத் துத்தியங்கள்[1] பாடிப்
பக்தியுடன் உத்தமியே வாடிப் – பெத்

2. எல்லையில்லா ஞானபரன் வெல்லைமலையோரம்
புல்லனையிலே பிறந்தார் இல்லமெங்கும் மீரம்
தொல்லைமிகும் அவ்விருட்டு நேரம் – பெத்

3. வான் புவி வாழ் ராஜனுக்கு மாட்டகந்தான் வீடோ
வானவர்க்கு வாய்த்த மெத்தை வாடின புல் பூண்டோ
ஆன பழங் கந்தை என்ன பாடோ? – பெத்

4. அந்தரத்தில் பாடுகின்றார் தூதர் சேனை கூடி
மந்தை ஆயர் ஓடுகின்றார் பாடல் கேட்கத்தேடி;
இன்றிரவில் என்ன இந்த மோடி[2] – பெத்

**393. இராகம்: சரசாங்கி திஸ்ர ஏகதாளம்**

**பல்லவி**

**பெத்தலையில் பிறந்தவரைப்**
போற்றித்துதி, மனமே–இன்னும்

1 துதி 2 சிறப்பு

**சரணங்கள்**

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவவல்லவர்-இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார். - பெத்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார்-இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார். - பெத்

3. முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக-இங்கு
மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே. - பெத்

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர்-இங்கு
ஆக்களுட[1] சத்தத்துக்குள் அழுது பிறந்தார். - பெத்

5. இந்தடைவாய் அன்புவைத்த எம்பெருமானை-நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே. - பெத்

***– ஜாண் பால்மர்***

**394. இராகம்: காம்போதி ஆதி தாளம்**

**பல்லவி**

**மன்னுருவானார், ஆதிமன்னுருவானார்;-ஏதுந்**
தன்னிகரிலாத ஆதி மன்னுருவானார்

**சரணங்கள்**

1. மன்னன் தாவீது வம்சக் கன்னியாமாது,-அந்தக்
கன்னியென்னும் அன்னைமரி தன்னிடமாக,
தன்னிடமாக, ஆதி தன்னிடமாக, -ஏதுந்

2. வல்லமைத் தேவன், தீர்க்கர் சொல்லமைச் சீவன்-சிறு
வெல்லைமலைக் கல்லுறுத்த புல்லணையிலே,
புல்லணையிலே, ஆதி புல்லணையிலே, -ஏதுந்

3. எப்பொருள் மேலா நின்ற விற்பன[2] நூலான்-ஆதி
பொற்பரர் சிரர் பணிய, அற்புதமாக,
அற்புதமாக, ஆதி அற்புதமாக, -ஏதுந்

---

1 பசுக்களுடைய 2 வித்தகர்

4. ஆயர்கள் கூட, உயர் ஞானிகள் தேட,-யூத
ராய னென்றதாலே ஏரோதேயுமே வாட,
ஏரோதேயுமே, வாட ஏரோதேயுமே, -ஏதுந்

**395. இராகம்: ஹிந்தோளம் ஆதி தாளம்**

**பல்லவி**

**அந்தரங்கமாக வந்த நீர் ஆர்? சொல்ல வேணும்**
யேசையரோ காணும்

**அனுபல்லவி**

கந்த[1] மா மலர் சோலை சூழ் வெல்லை
காவில் வந்தீரோ! என்மேற்
காதல் கொண்டீரோ!

**சரணங்கள்**

1. பாதியிரவிற் பரம சேனைகள் பாடுவதேதோ! வெகு
சோதியாய்ப் புன்மிசை துயில்கின்ற
சூட்சமுமேதோ! அதைச் சொல்லவொண்ணாதோ! - அந்த

2. கோவலர்[2] அமிழ்தோ வந்துமைக் கும்பிடுகிறார்; நல்ல
குவளைவிழியாள் அன்னைமரி மடி
கொம்மை[3] யுண்ணுகிறீர்; குறு நகையுங் கொள்ளுகிறீர் - அந்த

3. வாலுடு[4] விண்ணினின்று கண்களை மருட்டுதே என்னமோ!
உயர்
சாலப் பொருள்களோடு ஞானிகள்
சந்திப்பதேனோ,-இந்த ஜாலமுமேனோ[5] ! - அந்த

***- தாமஸ் கவிராயர்***

---

1 மணம்
2 மேய்ப்பர்
3 பால்
4 நட்சத்திரம்
5 வினோதம்

**396. இராகம்: லாவணி** **ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**தேவனே உமையான் மனமாறிப்பிறந்த ஓர் சிறியகுழந்தையாகச்**
சேர்ந்தேன் எனக்காய் நீரே எல்லாமும் செய்கிறீர் தயவாக

2. ஆவியில் வளர ஞானப்பாலூட்டி ஆதரிப்பதை மறக்கேன்;
அனுதினம் நீதி ஆடையளிக்கும் அருமையும் நான் மறக்கேன்.

3. தாய்மகவணைத்துக் காப்பதொப்பாகவே தமியனைக்[1] காக்கின்றீர்,
தவறிவிழாமல் கைதந்து தாங்கி தயை மடிசேர்க்கின்றீர்.

***– ரா. ஈஸ்வரபாக்கியம் ஈசாக்கு***

**397. இராகம்: நாதநாமக்கிரியை** **ஆதி தாளம்**

**பல்லவி**

**இயேசுவின் திருநாமம்–பாரில்**
எங்கும் விசேஷ நாமம்.

**அனுபல்லவி**

காசினி நிறை பாவக் கறைய தொழிக்க மனு
வேஷம் தரித்து இந்த மேதினிதனில் வந்த – இயேசு

**சரணங்கள்**

1. வழி சத்யம் உயிர்தாமே–தன்னருகில்
வளர் நன்மை உளதாமே–நீ வருகில்
ஒழித்துப் பாவக்கறையை உயர்த்தி மனுக்குலத்தை
அழிவில்லாப் பாக்கியம் அனுதினம் அளித்திடும் – இயேசு

2. கன்னெஞ் சுடைக்கும்–நம்முள்ளக்
காடெல்லாம் வெட்டும் நாமம்–நாம் விள்ள[2]
முன்னம் பரனமைத்த மோத[3] பாக்ய நிலையை
இன்னம் நமக்களிக்க இரக்கம் மிகுந்து வந்த – இயேசு

***– ஜோசப் ஜோயல்சிங்***

---

1 ஆதரவற்றவன் 2 கூற 3 மகிழ்ச்சி

**398. இராகம்: ஹரிகாம்போதி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**பாவிக்கு நேசராரே**
யேசு மானுவேலரே,–ஆ! நரர்

**சரணங்கள்**

1. மாசற்ற தேவனார், மைந்தப் ப்ரதாபரே,
யேசு கிறிஸ்துநாதரே, ஆசை மானுவேலரே! – ஆ!

2. பிரயாசத்தோரே, பாரஞ் சுமந்தோரே,
கிருபைப் பிதாவானவரே! யேசு மானுவேலரே; – ஆ!

3. நெரித்த நாணல் முறியார், பொரிந்த[1] திரயவியார்,
நிர்ப்பந்தரைத் தள்ளாரே, யேசு மானுவேலரே! – ஆ!

4. கெட்ட குமாரர்க்கு கிருபைப் பிதா வந்தார்,
இட்ட ப்ரசாதத்தாரே, யேசு மானுவேலரே! – ஆ!

***– வேதநாயகம் சாஸ்திரியார்***

**399. இராகம்: தோடி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**இயேசுமகேசனை நான்–சிந்திப்பதென்**
உள்ளத்தில் ஆனந்தமே

**சரணங்கள்**

1. ஈசன் திரு சந்நிதானந்தனிலமர்ந்து
இயேசுவின் திருமுகத்தை–என்னகத்தினில்
எண்ணிக் களித்திடுவேனே – இயேசு

2. மானிடரையெல்லாம் வானவராக்கி
வானவர் மேதினியில்–மனுடனாய்
வந்துதித்த தென்ன விந்தை – இயேசு

---

1 மங்கின

3. பாவச்சுமையினால் பாரம் சுமந்தோர்க்கு
பாரினில் கிடையா இன்பம்–அளிப்பவர்
பார்த்திபன்[1] இயேசு வல்லோ – இயேசு

*– அருள்திரு. வி.டி. சகாயம்*

**400. இராகம்: கௌசிகை. ஆதி தாளம்**

**பல்லவி**

**சொந்தம் உமக்கினி என் ஏசுதேவா–பாவ**
தொந்தம்[2] நீக்கி என்னைஆள் ப்ராணநாதா.

**சரணங்கள்**

1. சந்தோச மென்று பேயின் வழி நடந்தேன்–அது
சதியென்றுணர்ந்திடாமல் மயங்கி நின்றேன் – சொந்

2. பாவத்தில் இன்பம் எதிர் பார்த்திருந்தேன்–துயர்
பங்காகக் கிடைத்தால் பயந்துவந்தேன் – சொந்

3. காயம் பெலன் சுகமும் கர்த்தருக்கே–நானும்
கனிவாய் படைக்கிறேன் என் யேசு நாதா – சொந்

*– அருள்திரு. வி.டி. சகாயம்*

**401. இராகம்: சங்கராபரணம் ஏக தாளம்**

**பல்லவி**

**உம்மைப் போல யாருண்டு, என்னை நேசிக்க**

**சரணங்கள்**

1. அம்மையோ அப்பனோ அண்ணனோ, தம்பியோ,
எம்முறை யானோரோ ஏங்கிடும் மக்களோ. – உம்மை

2. தங்கமே தாதாவே[3] துங்கவா தூயோனே,
மங்கா மணாளனே மாநிலம் மீட்டோனே. – உம்மை

3. பங்கக்குருசினில் பாவி என் மீட்புக்காய்,
தொங்கி ஜீவன் விட்ட தேவ குமாரனே. – உம்மை

---

1 அரசன் 2 பிணைப்பு 3 தந்தையே

**402. இராகம்: நாட்டை** **ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**அன்புடன் எங்களை ஆண்டருளும் தேவா**
அனைவரும் உம்பாதம் போற்றுகின்றோம்;
இன்பமுக வொளி எங்கள் அகம் வீச
எழுந்தருள்வாய் யேசு பெருமானே.

2. வேரினில் ஊன்றியே விளங்கவுன் சாரத்தை
விரைவுடன் வேதனே[1] கனிந்திடுவாய்;
தாரணியில் வீழா தங்கும் ஜீவதருவாய்
தழைத்திடவே செய்வாய் தயாபரனே!

3. மலர்ந்த நல்லுள்ளமும் மணங்கமழ் வாழ்க்கையும்
மறையவனே தந்து வசித்திடுவாய்;
அலைந்தவர்கள் வந்து அதிசயத் தேனுண்டு
அகமகிழ நாளும் அலங்கரிப்பாய்.

*– ஒய். ஆமோஸ்*

**403. இராகம்: காம்போதி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஈசனே! கிறிஸ்தேசு நாயகனே! உன்றன்**
இராஜ்யம் வருவதாக!
ஈசனே! கிறிஸ்தேசு நாயகனே!

**சரணங்கள்**

1. பாசமுறும் எழில் பரலோக ராஜ்ஜியம் வருக!
மண்ணில் நரர் உயர்தர வாழ்வு பெறுக!
நேச அன்பின் அருட்பிரகாச நெறிநேர் பெருக!
நீச அநியாய இருள் தேசத்தில் நில்லா தொழிக! – ஈச

1 இறைவன்

2. அஞ்ஞானம் வேரோடழிய அலகை[1]யின் பேரொழிய,
அத்தன்[2] உனைப் பார் அறிய, ஆவிக்குரிய
மெய்ஞ்ஞான அனலெரிய, விண்ணவா! நீயே பெரிய
வேந்தனாய் ஆட்சி புரிய வேண்டும் அருள்தா, நிறைய. – ஈச

***– தே.அ. ஞானாபரணம் பண்டிதர்***

**404. இராகம்: யமுனா கல்யாணி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**பவனி செல்கின்றார் ராசா–நாம்**
பாடிப் புகழ்வோம், நேசா!

***அனுபல்லவி***

அவனிதனிலே மறி[3]மேல் ஏறி
ஆனந்தம் பரமானந்தம். – பவனி

***சரணங்கள்***

1. எருசலேமின் பதியே[4] –சுரர்
கரிசனையுள்ள நிதியே!
அருகில் நின்ற அனைவர் போற்றும்
அரசே, எங்கள் சிரசே! – பவனி

2. பன்னிரண்டு சீஷர் சென்று–நின்று
பாங்காய் வஸ்திரம் விரிக்க,
நன்னயம்சேர் மனுவின் சேனை
நாதம் கீதம் ஓத. – பவனி

3. குருத்தோலைகள் பிடிக்க,–பாலர்
கும்பு கும்பாகவே[5] நடக்க,
பெருத்த தொனியாய் ஓசன்னாவென்று
போற்ற மனம் தேற்ற. – பவனி

***– சு. முத்துசுவாமி***

---

1 பேய்
2 இறைவன்
3. கழுதைக் குட்டி
4. மணவாளன்
5 கூட்டம்

**405. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**நெஞ்சமே, கெத் சேமனேக்கு நீ நடந்து வந்திடாயோ?**
சஞ்சலத்தால் நெஞ்சுருகித் தயங்குகின்றார் ஆண்டவனார்.

2. ஆத்துமத்தில் வாதை மிஞ்சி, அங்கலாய்த்து வாடுகின்றார்
தேற்றுவார் இங்காருமின்றித், தியங்குகின்றார் ஆண்டவனார்.

3. அப்பா பிதாவே, இப்பாத்ரம் அகலச்செய்யும் சித்தமானால்
எப்படியும் நின் சித்தம்போல் எனக்காகட்டும் என்கின்றாரே.

4. ரத்த வேர்வையாலே தேகம் மெத்த நனைந்திருக்குதே,
குற்றம் ஒன்றும் செய்திடாத கொற்றவர்[1]க்கிவ் வாதை ஏனோ?

*– ஜ. சாமுவேல்*

**406. இராகம்: உசேனி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**வந்தேன் கல்வாரி சிலுவையினருகே–எனைத்**
தந்தேன் எனக்காய்ப் பிணை நின்றவனே.

**சரணங்கள்**

1. உந்தன் திருமகிமை திறமதையும்–விட்டு
ஓடி உலகில் வந்த விதமதையும்
எந்தன் பாவப் பாரத்தை மனசுடனே–சாமி
ஏற்றுக்கொண்டென்னை மீட்ட விதமதையும்–கண்டு – வந்

2. ஐயோ! பாவத்தின் பலன் பயங்கரமே–அது
ஆகாதென்றதனை விட்டடுத்து வந்தேன்
மெய்யாய் அடியனுக்காய்ப் பிழைப்பேன்–உந்தன்
மீதாசை வைத்து தினம் சுகித்திருப்பேன்–சாமி – வந்

*– ஜோசப் ஜோயல்சிங்*

---

1 அரசர்

**407. இராகம்: சலநாட்டை** **திரிபுடை தாளம்**

**உருகாயோ நெஞ்சமே, குருசினில் அந்தோ பார்!**
கரங் கால்கள் ஆணி யேறித் திரு மேனி நையுதே!

2. மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை மாய்க்க வந்த மன்னவனாம்,
இந்நிலமெல் லாம் புரக்க ஈன குரு சேறினார்.

3. மூவுலகைத் தாங்கும் தேவன் மூன்றாணி தாங்கிடவோ?
சாவு வேளை வந்த போது சிலுவையில் தொங்கினார்.

***– சத்தியவாசகம் பண்டிதர்***

**408. இராகம்: மோகனம்** **ரூபக தாளம்**

**பல்லவி**

**சிலுவைக்காட்சி–என்**
சிந்தையை உருக்குதே

**சரணங்கள்**

1. வலுவாய் மூன்றிரும்பாணி தறைந்து[1]
மாசில்லாதவர் வருந்திய அந்த – சிலு

2. என்னைப் புரந்த என் யேசுவின் மரணம்
எல்லாருக்கும் ஏற்ற தென்றோத – சிலு

3. விசுவாசக் கண்ணால் நீ இதோ நோக்கு
வேறெதுக்காய்? உனை மீட்கவே தொங்குகிறார் – சிலு

***– ரா. ஈஸ்வரபாக்கியம் ஈசாக்கு***

**409. இராகம்: முகாரி** **ஏக தாளம்**

**பல்லவி**

**ஆ! என் ப்ராணநாதா! ஐயோ! என் ப்ராணநாதா!**
ஆனீரோ இந்தக் கோலம்–நாதா, நாதா, நாதா – ஆ!

---

1 அடித்து

**சரணங்கள்**

1. மாந்தரை மீட்கவென்று–வானின் மகிமைவிட்டு
வந்த பலனிதுவோ ஐயா, ஐயா, ஐயா – ஆ!

2. முற்றும் பரன்செயலை–முடிக்கக் குருசில் தூங்கி
முடிந்த தென்றாவி விட்டீர்–ஐயோ, ஐயோ, ஐயோ – ஆ!

3. அன்பு மிகுந்த நேயா! பாவியெந்தன் சகாயா!
அடியானும்மைப் பின்செல்வேன்–நாளும், நாளும், நாளும் –ஆ!

***– ஜோசப் ஜோயல்சிங்***

**410. இராகம்: இந்துஸ்தானி அடதாளம் (503)**

**எருசலேமே! எருசலேமே! எருசலேமே! எருசலேமே!**
என் பிரிய சாலமே! விரும்பி வந்தேன் பார்,
இதோ பார், இதோ பார்!

2. கனியைக் காணேன், கனியைக் காணேன், கனியைக் காணேன், கனியைக் காணேன்,
கசிந்துருகியே தனியே யான்வந்து
தவிக்கிறேன், தவிக்கிறேன்

3. இந்த நாளாயினும், இந்த நாளாயினும், இந்த நாளாயினும், இந்த நாளாயினும்
இணங்க மனமோ எந்தனிடம் பெறச்
சமாதானம், சமாதானம்.

4. கண்கள் இல்லையோ? கண்கள் இல்லையோ? கண்கள் இல்லையோ? கண்கள் இல்லையோ?
கர்த்தன் உன் ராஜாவைக் கண்டானந்தித்துமே
களிகூர, களிகூர

***– வேதநாயகம் பாகவதர்***

**411. இராகம்: சங்கராபரணம்** **ரூபக தாளம் (504)**

**பல்லவி**

**என்ன செய்குவேன்–எனக்காய் இயேசுமைந்தன்**
ஈனக்குருசில் அறையுண்டனர்

**கண்ணிகள்**

1. கண்ணினால் யான் செய்த கன்மந்[1] தனைத் தொலைக்க
முண் முடிதனை அந்தோ முன்னோன் சிரசில் வைத்து
மூங்கில் தடியைக் கொண்டு ஓங்கியடிக்குந் துயர்
பாங்குடன் நினைக்கையில் ஏங்குதே என்னகம் – என்ன

2. பாரச் சிலுவைதனை பரமன் தோளதிலேற்றி
பாதகர் கல்வாரி மலைச் சிகரத்துக் கோட்டி
உதை உதைக்கவே உடல் சதை சதையாக கீற
பதை பதைக்கவே யூதர் வதை வதைக்கவே கொன்றார் – என்ன

*– ஈசாக்கு ஞானமுத்து*

**412.**

**கண்ணிகள்**

**அன்பு நிறைந்தவரே–எங்கள்–ஆசைக்–கிறிஸ்தரசே!**
துன்பம் மிகவடைந்தே–சிலுவையில்–தூங்கி மரித்தனரோ?

2. மாசற்ற தேவமைந்தர்–லோக–மானிடர் மீட்புக் கென்றோ
நீச மரணமதை–சகித்துந்தன்–நிர்மல ஜீவன் விட்டீர்.

3. உள்ளம் உருகிடவே–பார்த்த–உன் திருக் கண்கள் ரண்டும்
மெள்ள வடைத்தனரோ–சாமி மிகு–வேதனையடைந்தீரோ?

*– ஜோசப் ஜோயல்சிங்*

**413. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!**
சொல்லக்கூடாதே
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம் மன்னித்து விட்டாரே.

---

1 கன்மம்–பாவம்

**சரணங்கள்**

1. கூடுவோம், ஆடுவோம், பாடுவோம், நன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்;
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம். – என்ன

2. பாவங்கள், சாபங்கள், கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே;
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே. – என்ன

3. அட்சயன்[1] பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்
கருளினதாலே,
நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே. – என்ன

4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீட்டில்
ஜெயக் கொடியுடனே,
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனைத் தோத்தரிப்போம். – என்ன

***– த. சத்தியநாதன்***

**414. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**விந்தையாகவே சாவை வென்றுயிர்த்தனரே**

**சரணங்கள்**

1. வேத சத்ய ஓதும் வாக்யம் யாவும் நிறைவேறவே
மேதினிமீதெங்கும் நாதனின் நாமமே சோபித்திலங்கிடவே – விந்

2. தேவதூதர் அங்குவந்து கல்லறை மூடி திறந்திடவே
காவலர் யாவரும் மாபலமேவியே ஆடியேவீழ்ந்திடவே – விந்

1 நிறைவானவர்

3. உந்தன் பரிசுத்தர் காணவொட்டீரழிவை யென்று
விந்தையாய் முந்துரை நிந்திருவாக்கியமும் நிறைவேறிடவே
– விந்

*– ஜோசப் ஜோயல்சிங்*

**415. இராகம்: பியாகு ஆதி தாளம்**

*பல்லவி*

**எழுந்தார் இறைவன்,–ஜெயமே ஜெயமெனவே**
எழுந்தார் இறைவன்.

*சரணங்கள்*

1. விழுந்தவரைக் கரையேற்றப்,–பாவத்
தழுந்து[1] மனுக்குலத்தை மாற்ற, விண்ணுக்
கெழுந்து நாம் அவரையே போற்ற, – எழுந்தார்

2. செத்தவன் மீண்டுமே பிழைக்க,–உயர்
நித்திய ஜீவனை அளிக்கத்,–தேவ
பக்தர் யாவரும் களிக்க. – எழுந்தார்

3. கருதிய காரியம் வாய்க்கத்,–தேவ
சுருதி[2] மொழிகளெல்லாம் காக்க,–நம்
இரு திறத்தாரையும் சேர்க்க. – எழுந்தார்

*– அருள்திரு. சா. பரமானந்தம்*

**416. இராகம்: சங்கராபரணம் ஏக தாளம்**

*பல்லவி*

**யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்,**
உயிர்த்தெழுந்தார், நரகை ஜெயித்தெழுந்தார். – யூத

*சரணங்கள்*

2. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே,
எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே. – யூத

---

1 அமிழ்ந்து 2 வேதம்

3. உயிர்த்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை,
மரிப்பதில்லை, இனி மரிப்பதில்லை. – யூத

**417. இராகம்: சங்கராபரணம் திஸ்ர ஏகதாளம்**

***பல்லவி***

**ராசாதி ராசன் யேசு, யேசு மகா ராசன்!–அவர்**
ராஜ்யம் புவியெங்கு மகா மாட்சியாய் விளங்க,
அவர் திரு நாமமே விளங்க,–அவர் திருநாமமே விளங்க,
அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலுயாவே!
அல்பா, ஒமேகா, அவர்க்கே அல்லேலுயாவே!

***சரணங்கள்***

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்,
மன்னன் யேசுநாதருக்கே வான்முடி சூட்டுங்கள்!

2. நாலாதேசத் திலுள்ளோரே, நடந்து வாருங்கள்,
மேலோனேசு நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்!

3. யேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்,
ராசாதிராசன் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்!

***– ஆ.ஜ. பிச்சைமுத்து***

**418. இராகம்: காம்போஜி ஆதி தாளம்**

**பல்லவி**

**எந்தன் பூமானைக் காண, சிந்தை பெருகுதையோ;**
என்றைக்குக் காண்பேனோ? – ஆ!

**சரணங்கள்**

1. சுந்தரத்தில்[1] மிகுந்து, அந்தரத்திலிருக்கும்
எந்தன் பூமானைக் காண, அழகுடைய
அண்ணல் இயேசுவைக்காண – எந்

1 அழகு

2. விண்ணிலிருந்தவர் மண்ணின்மேல் வந்தவர்
கன்னிகையில் பிறந்தவர், லாசருக்காக
கண்ணீரை விட்டழுதவர் – எந்

3. கன்னத்தில் அடிபட்டு, கண்ணீர் விடும் வேளை
என்னை நினைத்தீரோ நீர் அதை நினைத்தால்
உம்மை மறப்பேனோ நான்? – எந்

**419. இராகம்: சங்கராபரணம் ஏக தாளம்**

**பல்லவி**

**மேகமீதில் இயேசு ராஜன் வேகம் வாறாரே!**

**அனுபல்லவி**

ஆயத்தமுள்ளோரை ஆகாயஞ் சேர்க்க, அவரே வாறாரே
–மேக

**சரணங்கள்**

1. ஆண்டவர் தாமே ஆர்ப்பரிப்போடே அவனியில் வாறாரே
மீண்டவரோ மேலோகமே செல்ல மேதினியை விடுவார் – மேக

2. கிறிஸ்துவுக்குள் மரித்தோரெல்லாம் கிளம்பியே எழும்பிடுவார்
மரிக்காதிருக்கும் பரிசுத்தரெல்லாம் மறைந்தே போவாரே – மேக

3. பாடுபட்டோருக்குப் பலனளிப்பாரே பாடுபட்டவர் தாமே
கூடும் நமக்கோ குறைவில்லாப் பலனையே கூவியே
கொடுத்திடுவார் – மேக

***– ஜே.சி. அருளப்பன்***

**420.**

**இயேசு கிறிஸ்து வருகிறார், வருகிறார், வருகிறார்,**
இயேசு கிறிஸ்து வருகிறார், அதிசீக்கிரமாய்

2. சந்திக்க நீ ஆயத்தமா ஆயத்தமா, ஆயத்தமா?
சந்திக்க நீ ஆயத்தமா, இன்று இயேசு வந்தால்.

3. ஆயத்தப்படு இல்லை என்றால், இல்லை என்றால், இல்லை என்றால்
ஆயத்தப்படு இல்லை என்றால் கிருபை நாளில்

**421. இராகம்: மோகனம் சாபுதாளம்**

**கண்ணிகள்**

**இயேசுமகா ராஜன் வரும் வேளையறியாயே,**
எப்பொழுதும் நீ ஆயத்தமாயிருப்பாயே.

2. நினைத்திராத சமயம் எழுந்தருள்வாரே,
நீயுன் எஜமானைக் காண நற்பொருட்கள் சேரே,

3. இடைவிடாமல் ஜெபம் செய்து மேல் நோக்கிச் செல்லு;
இதோ; இயேசு வருகிறாரென்றைக்கும் சாட்சி சொல்லு

*– ரா. ஈசுவரபாக்கியம் ஈசாக்கு*

**422. இராகம்: கமாஸ் ஆதி தாளம்**

**பல்லவி**

**வேதமே, என்ன சொல்லுவேன்?–நின் மாட்சியை.**

**அனுபல்லவி**

சேத மிலாது நன்னாதர் தம் அருள் திருப்
பாதமுறும் நெறி யோது மொரே சத்ய. – வேத

**சரணங்கள்**

1. சிறியவர் பெரியவர் செல்வர்கள் வலியார்
தீரர்கள் வீரர்கள் சீரியர்[1] எளியார்
அறிஞர்கள் அல்லவர் ஆடவர் மெலியார்
அனைவரும் அருந்திட அருந்திடச் சலியார். – வேத

---

1 சிறந்தோர்

2. கனபல மருளுவாய், தினந்தினங் காலை
களைப்பினைப் போக்குவாய், களைப்புறு மாலை
தினமென திதயமே திருத்தலுன் வேலை,
செப்பருங் கனிதருங் கற்பகச் சோலை. – வேத

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**423. இராகம்: தன்யாசி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**திரு மாமறையதை ஜெகத்தி லளித்தவனை**
தினமும் நினை மனமே.

**சரணங்கள்**

1. பாரதும்[1] பேயோடும் சேர்ந்திடும் காயமும்[2]
ஆரவார மோடுன்னை அலைக்களித்திடு முன்னே – திரு

2. அதிக சம்பத்தைக் கண்டு அத்தனாரை[3] மறந்து
மதிகெட்டு விதமாறி மதம்[4] வந்தழியு முன்னே – திரு

3. ஞானிகள் வாக்கதை மறந்து பெருமைகொண்டு
நானெனு மாணுவத்தைத் தரித்தழிந்திடு முன்னே – திரு.

***– ஜோசப் ஜோயல்சிங்***

**424. இராகம்: இந்துஸ்தானி** **ஆதிதாளம்**

**பல்லவி**

**வாராயோ திருமீட்பரினண்டை**
வர நாளிதுதானே–தடையின்றி
வருவாய் உடன்தானே–திடனோடு
வருவாய் உடன்தானே.

---

1 உலகம் 3 இறைவன்
2 உடல் 4 ஆணவம்

**சரணங்கள்**

1. சேராய் அமலன் செம்பாதம்–அவர்
க்ஷேமம் ஈவார் நேசனே
வாராய் ஞானப்பேழைக்குள்ளே
வருவாய் உடன் தானே தடையின்றி – வாரா

2. தந்தைப் பரனார் ஆவலால்–அவர்
மைந்தன் அலைந்து தேடுறார்
விந்தை ஆவி கூவுகின்றார்
வருவாய் உடன்தானே–தடையின்றி – வாரா

***– ஜே.எம். தாவீது***

**425. இராகம்: சுத்தஸாவேரி** **ஏக தாளம்**

**பல்லவி**

**உனக்கெதுவேண்டும்? இன்னும் எது வேண்டும்?**
பின்னும் எதுவேண்டும்? சொல் பாவியே,
உடல் அழிந்துபோகும் முன்னமே.

**சரணங்கள்**

1. பாவத்தோடெதிர்த்து, பரமனைச் சேவித்து
பாடித் துதிக்க வேண்டுமா? வேண்டுமா? வேண்டுமா?–இல்லால்
பரமனோடே எதிர்த்து மாயவலை யடுத்து
மாண்டு மடிய வேண்டுமோ? – உன

2. கர்த்தன் அருள்பெற்று, கவலையெல்லம் நீங்கி,
களித்துச் சுகிக்க வேண்டுமா? வேண்டுமா? வேண்டுமா?
–அல்லால்
கண்ட இடத்தினின்று கடவுளைச் தூஷித்து;
கசடனாக[1] வேண்டுமா? – உன

---

1 கீழ்த்தரமானவன்

3. பாவத்தை விட்டு நீ பக்தனாய் ஜீவித்து
பதவி பெற்றிட வேண்டுமா? வேண்டுமா? வேண்டுமா?–இல்லால்
பாசவலைக்குட் சிக்கி, மோசம் செய்கின்ற பேயை
பற்றித் தொடர வேண்டுமா? – உன

4. என் ஆத்துமத்தைச் சுத்தம் செய்து காக்கின்ற எங்கள்
அப்பனார் அருள் வேண்டுமா? வேண்டுமா? வேண்டுமா?
–அதோ
தண்டனைக்குட்பட்டுத் தட்டுக்கெட்டலைந்திடும்
சாத்தான் உறவுவேண்டுமா? – உன

5. மனம் மாறிப் பிறந்து நீ மாசற்று ஜீவிக்க
மகத்வன் கிருபை வேண்டுமா? வேண்டுமா? வேண்டுமா?–மிக
பாசவலையை வீசி நெசத்தைக் காட்டிப் பின்
மோசம் செய் மதம் வேண்டுமா? – உன

**426. இராகம்: உசேனி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**நித்தம் முயல்[1] மனமே! பரி**
சுத்த ஜீவியத்தில் மெத்த வளர நீ.

***சரணங்கள்***

1. அத்தன்[2] யேசுவினில் பத்தியாய் அமர்ந்து
சத்திய வேதத்தால் நித்தம் உன்னைப் போஷி! –நித்தம்

2. அல்பகல் யேசுவோ டதிக நேரத்தை
ஆசையாய்க் கழி நீ, அவரைப்போலாவாய். – நித்தம்

3. தேவன் றன் பிள்ளைகள் யாவரையும் நேசி,
ஆவலாய் எளியோர்க் கன்பாலுதவி செய். – நித்தம்

***– வேதநாயக சாஸ்திரியார்***

1 முயற்சி செய் 2 இறைவன்

**427. இராகம்: புன்னாகவராளி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**நம்பிப் பிழைக்கலாம் வாரீர்–இயேசு கிறிஸ்துவை**
நம்பிப் பிழைக்கலாம் வாரீர்.

**சரணங்கள்**

1. வெம்பு[1] நரகக் குழி வம்பிலே விழாமல்
அம்புவி உளபோதே உம்பரத் தாளாக – நம்

2. சந்தேகக் காட்டிலே தொந்தலைந் தேங்காமல்
சிந்தைதி ரும்பியே எந்தமோ சமுமற்று – நம்

3. பெரும்பாவி களுக்கெல்லாம் தரும்நீதி யானிவர்
வரும் யாரும் பெறுகுவர் கிருபையாசன இன்னாள் – நம்

***– ரா. ஈஸ்வரபாக்கியம் ஈசாக்கு***

**428.**

**பல்லவி**

**எப்படித் தப்பிடுவாய்–தண்டனைக்(கு) எப்படித் தப்பிடுவாய்**

**அனுபல்லவி**

இப்பெரிதான இரட்சிப்பை வீணாய்
இப்படி அசட்டை செய்துவிட்டால் – எப்

**சரணங்கள்**

1. அற்புதமானதல்லோ–மீட்பு அதிசயமானதல்லோ
தற்பரனின் சுதன் தரணியில் வந்து தம்மையே உனக்காய்த்
தந்தனரே – எப்

2. திருவுதிரம் சிந்தி–உன்னைக் கிருபையினால் மீட்டார்
குருசிடம் வந்து உருகு முன்னுள்ளம் ஊற்றாயோ பவம்
மாற்றாயோ – எப்

1 கொடிய

**429.**

**பல்லவி**

**லாபமென்ன உனக்கு லாபமென்ன—நீ**
லோகம் முழுவதும் ஆதாயப்படுத்தினாலும்
ஜீவனை இழந்து விட்டால்—நித்ய

**சரணங்கள்**

1. சாபமுதலை நீ சேர்த்துக் குவிக்கின்றாய்
பாவ இன்பங்களைப் பால் போல் பருகுகின்றாய்
தேவ கோபத்தையோ தேடியடைகின்றாய்
ஜீவனையோ நீ சேதம் செய்கின்றாய் – லாப

2. உன்னையே நீ முற்றும் உகந்து காப்பாயோ
உன்னுடைமைகளையே உவந்து சேர்ப்பாயோ
அன்பர்களையெல்லாம் அகற்றி விடாயோ
அன்பர் கோமானை நீ அண்டிக் கொள்ளாயோ – லாப

**430. இராகம்: காம்போதி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**ஆரிடம் போவேன் நான் அவதிகள் மிகுந்திடில்**
ஆதரிப்பாய் என்னை ஐயனே

**அனுபல்லவி**

பாரினில் உனையல்லால் பாவிக்கோர் துணையுண்டோ
யாருமில்லையே கண் பாருமெனை யென்நாதா – ஆரி

**சரணங்கள்**

1. சித்தம் இரங்காதோ திருவுள்ளம் கனியாதோ
தினம் தினம் படும் பாடும் தீராதோ
அத்தனே[1] என்பிழை அத்தனையும் பொறுத்
தாண்டு இரட்சித்தருளுவாய் அன்பே என் ஆருயிரே – ஆரி

---

1 இறைவன்

2. சோதனையனுதினம் நூதனமாய் வருதே
சொல்லிமுடியாத் துயர் தருதே
நாதனே போகும் வழி ஏதும் காணேனே ஐயோ
வேதனே வெற்றி வழி விளங்கிடச் செய்திடாயோ - ஆரி

***- அருள்திரு. வி.டி. சகாயம்***

**431. இராகம்: ஸ்ரீரஞ்சினி ஆதி தாளம்**

**பல்லவி**

**ஆவி உடல் பொருள் அத்தனையும் உமக்(கு)**
ஆகப் படைக்கிறேன் ஆண்டவரே.

**அனுபல்லவி**

பாவி எனை மீட்கப் பரலோகத்தை விட்டுப்
பார் தன்னில் வந்து மா பாடுகள் பட்டதால், - ஆவி

**சரணங்கள்**

1. பாவத்தைத் தண்ணீர் போல பருகி வந்தேன்
கோபத்துக் குள்ளாகிக் கெட்டழிந்தேன்
சாபத்துக் கேதுவாய்ச் சஞ்சரித்தேன் என்
சாபத்தை அன்புடன் சகித்தீரே என் நாதா - ஆவி

2. பங்கக் குருசில் படுத்தீரன்றோ
தங்கத் திருமேனி தவித்ததன்றோ
தாங்கொணா வேதனை சகித்தீரன்றோ
ஏங்குதே என் ஆவி இப்பாடு நினைக்கையில் - ஆவி

**432. இராகம்: மோகனம் ரூபக தாளம்**

**பல்லவி**

**அகலா தென்னோடு வாழும்**
அருமைக் கிறிஸ்தரசே

**அனுபல்லவி**

மிகப் பாவியாகு மென்னில்
மிக தயை நிறைந்தோனே! - அகலா

**சரணங்கள்**

1. என் திரு ரத்தத்தாலென்
உள்ளத்தை சுத்தமாக்கி
எந்த னகத்தில் வாழும்
என்னருமை நாதனே – அகலா

2. சுத்த இதயம் என்னில்
துரிதமா யுண்டு பண்ணி
நித்தம் நிலைக்கும் ஆவி
நீசனெனக் கருளி – அகலா

***– ஜோசப் ஜோயல்சிங்***

**433. இராகம்: செஞ்சுருட்டி ஆதி தாளம்**

***பல்லவி***

**திருப் பதம் சேராமல் இருப்பேனோ–நான்**
தெய்வத்தைத் தேடாமல் பிழைப்பேனோ?

***சரணங்கள்***

1. அருட்கடலாம் ஈசன் அடியவர் பாசன்!
உருக்கம் நிறைந்த விண்ணுயிரான நேசன்! – திரு

2. ஆவியும் ஆத்மமும் ஆண்டவர் பங்கே,
பூவில் அவரல்லால் புகலிடம் எங்கே? – திரு

3. உலையில் மெழுகு போல் உருகுதென் நெஞ்சம்,
மலையா[1]துன் திருவடி வணங்கினேன் தஞ்சம். – திரு

***– சத்தியவாசகம் பண்டிதர்***

**434. இராகம்: பைரவி ரூபக தாளம்**

***பல்லவி***

**விந்தை கிறிஸ்தேசு ராசா!**
உன் தன் சிலுவை என் மேன்மை.

1 வருந்தாது

**அனுபல்லவி**

சுந்தரம்[1] மிகும் இந்த பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும் – விந்தை

**சரணங்கள்**

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி,
செல்வாக்குகள் மிக விருப்பினும்,
குருசை நோக்கிப் பார்க்க எனக்
குரிய பெருமை யாவும் அற்பமே. – விந்தை

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம், வற்றா ஜீவ நதியாம்;
துங்க[2] இரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்தே மேன்மையாகினேன். – விந்தை

3. இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன். – விந்தை

***– அருள்திரு. வே. சந்தியாகு***

**435. இராகம்: ஆபோகி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**அற்புதம்! பாவிநான் மீட்கப்பட்டேன்.**

**அனுபல்லவி**

சற்றாகிலும் கிருபை பெற;
முற்றும் பாத்திரனானபோதும் – அற்

**சரணங்கள்**

உலகத்தின் சிற்றின்பக் காதல்களும்,
பலவித மாமிச இச்சைகளும்,
பாவி என்னிதயத்தை வதைத்த போது
பாவ விமோசனர் கிருபை கூர்ந்தார். – அற்

1 அழகு 2 தூய

2. மாய்மால வேஷத்தைத் தரித்துக் கொண்டு,
வாய்ச் சொல்லால் மாத்திரம் சேவை செய்தேன்;
நீண்ட ஜெபங்களைச் செய்வதினால்,
மீண்டு மோஷம்போகக் காத்திருந்தேன். – அற்

3. நான் செய்த தீவினை யுணர்ந்து, எந்தன்
பெத்தலை பதியண்டை யோடிவந்து,
மெய் மனஸ்தாபத்தின் அழுகையுடன்
"ஐயனே! இரட்சியும்" என்றவுடன் – அற்

4. இந்த மா ரட்சிப்பை நம்பாயோ நீ?
வந்து பார்; மீட்பரின் சிலுவையண்டை
ஓடுகின்ற இந்த சிவந்த நதி
தேடி வருவோர்க்கு உயிரைத் தரும். – அற்

***– இரட்சணியசேனைப் பாடல்***

**436. இராகம்: சுருட்டி** **சாபு தாளம்**

**விண்மணி, பொன்மணி, வித்தக[1] மணியே,**
விட்புலம்[2] பூவிற்கு விழைத்திடுங் கனியே,
சொன்மணி மாலை தொகுத்த நல்மணியே,
சோதியாய் இங்கெழுந் தருள் சூடாமணியே[3]!

2. பன்மணி கோத்தொளிர் பாவலர் மணியே,
பாக்கியம் தருஞ்சீவ காருண்ய மணியே,
கண்மணி பொன்றினோர்[4] கண்மணி யருளக்
கண்டனர் உரைகேட்டக் கண்ணருள் மணியே!

3. மங்கை சீயோன்மகள் பூண்ட வானணியே,
மாசிலார் உளமதில் ஒளிரும் அம்மணியே[5],
நங்கைமரிகன்னி யீன்ற கண்மணியே,
நரர்சுரர் போற்றிடு நாயக மணியே!

***– த. ஐயாத்துரை பாகவதர்***

---

1 ஞான
2 வானம்
3 தெய்வீக மணி
4 பார்வையற்றோர்
5 அழகுமிக்கவர்

**437. இராகம்: ஆனந்தபைரவி** **ஏகதாளம்**

*பல்லவி*

**தேவனே, நான் உமதண்டையில்–இன்னும் நெருங்கிச்**
சேர்வதே என் ஆவல் பூமியில்.

*அனுபல்லவி*

மாவலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே,[1] தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை சேர்வேன்;
–தேவனே

*சரணங்கள்*

1. யாக்கோபைப்போல், போகும் பாதையில்–பொழுது பட்டு
இராவில் இருள் வந்து மூடிட,
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா!
– தேவனே

2. பரத்துக்கேறும் படிகள் போலவே–என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே,
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைத்து அன்பின் தூதனாகச் செய்யும்
– தேவனே

3. நித்திரையினின்று விழித்துக்–காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்;
இத்தரையில் உந்தன் வீடாய் என் துயர்க் கல் நாட்டுவேனே,
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச்
சேர்வேன். – தேவனே

*– அருள்திரு. வே. சந்தியாகு*

---

1 அரசனே

**438. இராகம்: நாதநாமக்கிரியை** **சாப்புதாளம்**

**பல்லவி**

**இயேசு என் அஸ்திபாரம் ஆசை எனக்கவரே**
நேச முசிப் பாறுதல் இயேசுவில் கண்டேன்யானும்

**சரணங்கள்**

1. என்ன மதுரம் அவர் நன்னய நாமச்சுவை
என்னகத்தில் நினைத்தால் இன்னல் பறந்திடுமே

2. பஞ்சம் பசியுடனே மிஞ்சும் துயர் வந்தாலும்
அஞ்சிடேன் இவையை என் தஞ்சம் யேசுயிருக்கையில்

3. பாவத்தால் என்னில் வந்த சாபக் கறைகள் மாற்றி
சோபித நீதியுடை ஆபரணமாய் ஈவார்

4. ஆசை என் மணவாட்டி ஆக்குவேன் உன்னை எனும்
நேச உறுதியுரை இயேசு எனக்களித்தார்

***– அருள்திரு. வி.டி. சகாயம்***

**439. இராகம்: தோடி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**இயேசுநேசரே! விசுவாசக் கண் களால்**
நேசத்தின் ரூபைத் தாசர் காணலானோமே.

**சரணங்கள்**

1. வாசம் வீசுதே நளதம் வாசம் வீசுதே;
பாசம் நிறைந்தவர் பாதம் பளிங்காய் மின்னுதே! – இயேசு

2. தொட்டதின் பேரில் பாடு விட்டகலவே
பட்ட வஸ்திர ஓரம் பறந்து தோன்றுதே! – இயேசு

3. விரல்கள் காணுதே நேசர் மணலின் மீதிலே
பரமகளுக்கோர் வார்த்தை பண்பாய்த் தொனிக்குதே – இயேசு

***– உயர்பேரருள்திரு. ஐ.ஆர்.எச். ஞானதாசன்***

**440. இராகம்: உசேனி** **ரூபக தாளம்**

*பல்லவி*

**என் உள்ளங் கவராய்,–நீர் மரித்த**
இன்பக் குருசண்டை இன்னும் நெருங்கிட.

*அனுபல்லவி*

என் பாவம் போக்கவே ஈட்டியால் குத்துண்டு
இரத்தம், தண்ணீர் வழிந்தோடும் விலாவண்டை. – என்

*சரணங்கள்*

1. உந்தன் மகா இன்ப சத்தம் நான் கேட்டவன்,
உமதாச்சரிய அன்பை உணர்ந்தவன்,
எந்தையே, நானும்மைச் சேர்ந்தவனாயினும்,
இன்னும் நெருங்கி நான் உம்மண்டை சேர்ந்திட. – என்

2. அம்பரா[1], மரண ஆழி[2] தாண்டும் வரை
அறிய முடியா அன்பின் ஆழம் உண்டு;
என் பரனே, உந்தன் அன்பின் ஆழத்தை நான்
இம்மையில் கூடியமட்டும் அறிந்திட. – என்

*– அருள்திரு. வே. சந்தியாகு*

**441. இராகம்: காபி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**நான் விடமாட்டேன் என் இயேசுவை.**

**அனுபல்லவி**

வான் புவியாவும் போனாலும்,–அத்தால்
மயங்கியே ஒருக்காலும் மெய்யாய். – நான்

**சரணங்கள்**

1. முந்தியென் மேலன்பு கூர்ந்தார்; இங்கே
முக்யநன்மைதரச் சேர்ந்தார்; தீய
எந்தனுக்காய்த்தம்மை யீந்தார்; எனக்
கெண்ணருநன்மைகள் நேர்ந்தார்; மெய்யாய். – நான்

---

1 வானுலகோனே 2 கடல்

2. லோகமெனை உதைத்தாலும், பொல்லா
லோபிகள் துஷ்டர் மொய்த்தாலும், பசி
தாகநோயும் வதைத்தாலும், இந்தத்
தாரணியோர் சிதைத்தாலும், மெய்யாய். – நான்

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**442. சங்கராபரணம் ஆதி தாளம்**

***பல்லவி***

**ஆதாரம் நீ தான் ஐயா, என் துரையே,**
ஆதாரம் நீ தான் ஐயா.

***அனுபல்லவி***

சூதாம் உலகில் நான் தீதால் மயங்கையில். – ஆதாரம்

***சரணங்கள்***

1. மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்
மற்றோர்க்குப் பற்றேதையா, எளியன் மேல்,
மற்றோர்க்குப் பற்றேதையா? எளியனுக்கு – ஆதாரம்

2. கற்றோர் பெருமையே, மற்றோர் அருமையே,
வற்றாக் கிருபை நதியே, என் பதியே[1],
வற்றாக் கிருபை நதியே, என் மதியே – ஆதாரம்

3. சோதனையடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகும் வேளையில் என் சுகிர்தமே[2]
துக்கம் மிகும் வேளையில்; உன் தாசனுக்கு – ஆதாரம்

***– அருள்திரு. ஆ. தேவதாசன்***

**443. இராகம்: நாதநாமக்ரியை சாப்பு தாளம்**

***பல்லவி***

**இயேசு நான் நிற்குங் கன்மலையே!–மற்ற**
எந்த ஆதாரமும் வெறும் மணல் தரையே.

---

1 தலைவன் 2 இன்பம்

***சரணங்கள்***

1. இயேசுவின் நாமத்தின் மேலே–என்றன்
எல்லா நம்பிக்கையும் வைத்தேன் அன்பாலே;
நேசனையுங் கூட நம்பேன்,–நான்
இயேசு நாமத்தின் மேல் முழுதுமே சார்வேன். – இயேசு

2. சோதியாய் அவர் வரும்போது–நான்
சுத்தனாய்த் தரிசித்தே அவரைப் போலாவேன்;
நீதியாம் ஆடை தரிப்பேன்,–சதா
நித்திய காலமாய் ஆளுகை செய்வேன். – இயேசு

***– அருள்திரு. வே. சந்தியாகு***

**444. இராகம்: கமாஸ்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**சித்தம் கலங்காதே, பிள்ளையே,**
செய்வதெ னென்று.

**சரணங்கள்**

1. சுத்தனுக்குன் நிலை காட்டு,
குவலையெல்லாம் நீ யோட்டு,
அத்தனே[1] உந்தனை மீட்டு
அரவணைப்பார் நீ சாட்டு[2]. – சித்தம்

2. பரலோக வாழ்வை நாடு,
பரன் தயவை நீ தேடு,
தரை யின்பம் விட்டுப் போடு,
தகாக் கவலை விட் டோடு. – சித்தம்

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**445. இராகம்: உசேனி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**கவலை வைக்காதே, மகனே, நீ**
கவலை வைக்காதே.

---

1 இறைவன் 2 சமர்ப்பி

**அனுபல்லவி**

கவலைவைத்திந்த உலகை – நாடி
அபலமான[1] வரனந்தங் – கோடி – கவலை

**சரணங்கள்**

1. பெற்ற பிதா நமக்கொன்று,–அவர்க்
குற்ற செல்வம் நமக்குண்டு,
உத்தம வேலை கைக்கொண்டு–செய்ய
உனக்கென்ன குறையுண்டு? – கவலை

2. முந்திப் பராபரன் ராஜ்யம்–தேடும்,
மோனமாம் நீதி சிலாக்யம்
மிந்தியே லோக சாம்ராஜ்யம்–வரும்
பேசுவாய் நீயதின் சாட்சியம் – சவலை

*– ச. முத்துசாமி உபாத்தியாயர்*

**446. இராகம்: காம்போஜி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**உந்தன் சித்தம் போல என்னை ஒவ்வொரு நாளும் நடத்தும்**

**அனுபல்லவி**

எந்தன் சித்தம் போல் அல்ல என் பிதாவே என் தேவனே

**சரணங்கள்**

1. இன்பமுள்ள ஜீவியமோ அதிக செல்வம் மேன்மைகளோ
துன்பமுற்ற வாழ்வுகளோ தேடவில்லையே அடியான்; – உந்

2. நேர்வழியோ நிரப்பானதோ நீண்டதுவோ குறுகியதோ,
பாரம் சுமந்தோடுவதோ பாரில் பாக்கிய மானதுவோ; – உந்

3. அந்தகாரமோ பயமோ அப்பனே பிரகாசமோ
எந்த நிலை நீரளிப்பீர் எல்லாம் எனக்காசீர்வாதம்; – உந்

---

1 பயனற்றவர்கள்

4. ஏது நலமென்றறிய இல்லை ஞானம் என்னில் நாதா
தீதிலா நாமம் நிமித்தம் நீதி வழியில் திருப்பி; – உந்

5. அக்கினி மேக ஸ்தம்பங்களால் அடியேனை என்றும் நடத்தி
அனுதினம் கூட இருந்து அப்பனே ஆசீர்வதிப்பீர் – உந்

**447. இராகம்: பியாகு** **சாப்பு தாளம்**

***பல்லவி***

**எந்நாளு மேதுதிப்பாய்–என்னாத்துமாவே, நீ**
எந்நாளு மேதுதிப்பாய்!

***அனுபல்லவி***

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த
எண்ணில்லா நன்மைகள் யாவும் மறவாது. – எந்

***சரணங்கள்***

1. எத்தனையோ கிருபை,–உன்னுயிர்க்குச் செய்தாரே,
எத்தனையோ கிருபை?
நித்தமுனைமுடி சூட்டினதுமன்றி,
செத்திடாதபடி ஜீவனை மீட்டதால். – எந்

2. பூமிக்கும் வானத்துக்கும்–உள்ள தூரம் போலவே,
பூமிக்கும் வானத்துக்கும்,
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே, சத்திய மேயிது. – எந்

3. தந்தை தன் பிள்ளைகட்கு–தயவோ டிரங்கானோ
தந்தை தன் பிள்ளைகட்கு?
எந்த வேளையும் அவரோடு தங்கினால்,
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே; – எந்

***– அருள்திரு. சா. பரமானந்தம்***

**448.**

**பல்லவி**

**பிரிய இயேசுவின் சேனை வீரர்கள் நாம்**
சேனை வீரர்கள் நாம், சேனை வீரர்கள் நாம்
சிலுவை தோளில் சுமந்து போகலாம் –சேனை

**சரணங்கள்**

1. நம் தேவன் சமாதானப் பிரபுவே,
நம் சர்வாயுத வர்க்கம் தாழ்மை தானே
நம் ஆத்ம சகாயர் அவரே – சேனை

2. எப்போதுமே இயேசுவை தியானிப்போம்
எல்லோரும் ஜீவியத்தைத் தியாகஞ் செய்வோம்
இயேசுவின் மகா அன்புக்காய்த் தத்தஞ் செய்வோம் – சேனை

3. இயேசுவின் அன்புக்காய் இறந்திடுவோம்
புல் பூண்டுமேயானாலும் புசித்திடுவோம்
முன் வைத்த காலை பின் வைக்க மாட்டோம் – சேனை

**449. இராகம் : தேவகாந்தாரி** **ரூபக தாளம்**

***பல்லவி***

**தந்தேன் என்னை இயேசுவே,**
இந்த நேரமே உமக்கே.

***அனுபல்லவி***

உந்தனுக்கே ஊழியஞ் செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும்! – தந்

***சரணங்கள்***

1. ஜீவ காலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்,
பூவில் கடும் போர் புரிகையில்
காவும்! உந்தன் கரத்தினில் வைத்து. – தந்

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்,
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா, வெல்லுவேன். – தந்

3. உந்தன் சித்தமே செய்வேன்,
என்றன் சித்தம் ஒழித்திடுவேன்,
எந்த இடம் எனக்குக் காட்டினும்,
இயேசுவே, அங்கே இதோ! போகிறேன். – தந்

*– அருள்திரு. வே. சந்தியாகு*

**450. இராகம்: தன்யாசி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்**
கண்ணீர் விடுவாயே.

***அனுபல்லவி***

ஞாலத்தில் பரனுன்னை நாட்டின நோக்கத்தைச்
சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய் – கால

***சரணங்கள்***

1. மதியை யிழந்துதீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ?
கதியாம் ரக்ஷண்ய வாழ்வை கண்டு நீ மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ? – கால

2. இகத்தினில் ஊழியம் அகத்தியம்[1] நிறைவேற
ஏசுனை அழைத்தாரல்லோ?
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்கால முடியும் ராக்காலத்திலென்ன செய்வாய்? – கால

*– அருள்திரு. சா. பரமானந்தம்*

---

1 கட்டாயம்

**451. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஆனந்தமே பரமானந்தமே–யேசு**
அண்ணலை அண்டினோர்க் கானந்தமே

**சரணங்கள்**

1. இந்தப் புவி ஒரு சொந்தமல்லவென்று
இயேசு என் நேசர் மொழிந்தனரே
இக்கட்டும் துன்பமும் இயேசுவின் தொண்டர்க்கு
இங்கேயே பங்காய் கிடைத்திடினும் –ஆன

2. கூடாரவாசிகளாகும் நமக்கிங்கு
வீடென்றும் நாடென்றும் சொல்லலாமோ?
கைவேலையில்லாத வீடொன்றை மேலேதான்
செய்வேன் எனச் சொல்லிப் போகலையோ –ஆன

3. யேசுவே சீக்கிரம் இத்தரை வாருமேன்
ஏழை வெகுவாய்க் கலங்குகிறேனே!
என்நேசர் தன்முக ஜோதியே யல்லாமல்
இன்பந்தரும் பொருள் ஏதுமில்லை –ஆன

***– அருள்திரு. வி.டி. சகாயம்***

**452. இராகம்: காம்போதி** **சாப்பு தாளம்**

**கண்ணிகள்**

**இயேசுவை நான் நம்பி சீவியம் செய்குவேன்**
இயேசு தான் என் தஞ்சம் வானிலும் பூவிலும்

2. பூமியின் பாரங்கள் யாதொன் றெனக்கில்லை;
போக்கிடமாகுவோர் என் யேசுதானல்லோ!

3. இராப் பகல் அன்பர் தம் கண்மணிபோல் என்னைக்
காப்பதற்காகவே தூங்கிடேன் என்கிறார்

**453. இராகம்: காமாசு** **ஆதி தாளம்**

**பல்லவி**

**வா, வா, நேசா மலர் சுவிசேஷத்தின் மது தனையுண்டிடவே!**

**அனுபல்லவி**

தேவாமிர்தமாம் ஜீவனைக் கண்டிட
சாவாமிர்தமாம் சாமியை அண்டிட - வா

**சரணங்கள்**

1. ஜீவ போஜனம் ஜீவ நீரதும் தினமும் சுரந்திடவே
தினமும் பார்த்திட தினமும் கேட்டிட சிந்தைவரும் திடமே
பாவ மனைத்தையும் பாடுடனழித்திடும்;
ஓவா[1] மகிழ்ச்சியை உளமதிலளித்திடும் - வா

2. யேசு நாமம் தெங்குங்குலவுமோ இன்பம் அளித்திடுமே
இனிய மறையது இடமே தேடிடில் இதயம் விழித்திடுமே
பேசிடும் பேயெல்லாம் பெயர்ந்திட ஓடிடும்;
வீசிடும் ஒளியதை வீறுடன் நீட்டிடும். - வா

**454.**

**பல்லவி**

**எப்போதுமே எப்போதுமே எப்போதுமே இன்பவாழ்வே**
யேசையா என்னோடிருப்பதாலே

**சரணங்கள்**

1. எப்பொருளுங் குப்பை போன்றனவே-மாந்தர்
எல்லாரும் ஓர் நாளில் தூசிதானே;
என்னருமை நேச யேசு எனக்கெல்லாம்
அவர் பின்னே எனக்கேது குறை - எப்

2. மாதா பிதா உற்றார் மாண்டிட்டாலும்-பின்னும்
மற்றுள்ள இஷ்டர் மறந்திட்டாலும்
மன்னர் கிறிஸ்தேசு மங்கா நேசர் எனக்
கென்ன குறை எனக்கேது பீடை - எப்

---

1 இடைவிடா

3. தங்குமிடம் பூமி சத்திரமே–விண்ணின்
தங்க வீட்டின் வாழ்வு நித்தியமே
மங்கா வாழ்வு எனக்கங்கேயுண்டு பின்னே
இங்கே எதை எந்தன் பங்கெனுவேன். – எப்

**455. இராகம்: சரசாங்கி** **திஸ்ர ஏகதாளம்**

**பல்லவி**

**கருணைநிறை கர்த்தனே எம் காவலா நீயே**
அரணாய் நின்று ஆதரிப்பாய், அருள் பரன் சேயே!

**சரணங்கள்**

1. மரி புதல்வா, மறை முதல்வா, மாமனுவேலா!
பரிவாய் எமைப் பார்த்திடுவாய் பார்த்திபன்பாலா – கருணை

2. தெள்ளமுதே, தெளி தேனே, தேவாதி தேவா!
உள்ளமதில் ஒளிந்திடவே ஓடியே நீ வா! – கருணை

3. நானுன்னுள்ளும் நீ யென்னுள்ளும் ஆயிருப்போமே
வானம் பூவும் வாசமுற இசைந்திடல் ஆமே – கருணை

***– உயர்பேரருள்திரு. ஐ.ஆர்.எச். ஞானதாசன்***

**456. இராகம்: வசந்தபைரவி** **திரிபுடதாளம்**

**பல்லவி**

**அந்த நாள் பாக்கிய நாள்–நான் மீட்கப்பட்ட**
அந்த நாள் பாக்கிய நாள்.

**அனுபல்லவி**

அந்த நாள் ஆனந்த நாள், அருமை இரட்சகரென்னை
அன்போடழைத்தெனது அசுத்தங்கள் நீக்கின நாள் – அந்த

**சரணங்கள்**

1. அன்றே எனக்குப் பேதித்தார்,–அவர் வழியில்
அனுதினம் செல்லக் கற்பித்தார்;
என்றும் அவர்மேல் சார்ந்தே இன்ப ஜீவியம் செய்ய
ஏவினார் என் இரட்சகர், எங்கும் ப்ரஸ்தாபிப்பேனே. – அந்த

2. அந்நாளில் வாக்குப் பண்ணினேன், உறுதியாக
எந்நாளும் நான் புதுப்பிப்பேன்;
சொன்ன இவ்வாக்கை நிதம், சுத்தமாய் நிறைவேற்ற
உன்னத பலம் தாராய்; என்னையாட்கொண்ட தேவா. – அந்த

*– அருள்திரு. வே. சந்தியாகு*

**457. இராகம்: செஞ்சுருட்டி ஆதி தாளம்**

**பல்லவி**

**சித்தப்படி இரங்கையா–நின் திருச்**
சித்தப்படி இரங்கையா!

**அனுபல்லவி**

அத்தனின் கரத்தினுள் சொத்தான சபைதனில்
பத்தர்கள் கண்ணீரையே நித்தமருந்துவதால் – சித்

**சரணங்கள்**

1. உன்னதனாஞ் செடியோடே–ஒட்டப்பெற்ற
ஒரு கூட்டம் கொடிகளிவை–இன்று
வன்மலை அக்கினியால் வாடி வதங்கிடலை
நின்வாக்குப் பொய்த்திடாது இன்றே தடுத்தாட்கொண்டு – சித்

2. திரும்பி வருவீர் ஐயனே–செடியை
விரும்பி விசாரித்தருள்–இன்னுந்
திரும்பவும் ஆவியருள் திடனாய் எமைத் தாங்கிட
பரமதில் போலுன் சித்தம் தரைமீதில் தழைத்திடவும் – சித்

*– உயர்பேரருள்திரு. ஐ.ஆர்.ஹெச். ஞானதாசன்*

**458. இராகம்: செஞ்சுருட்டி ஆதி தாளம்**

*பல்லவி*

**திருமா மறையே–அருள் பதியே; நின்**
திருச்சபை வளர நின் தயை புரியே.

***சரணங்கள்***

1. கருணை வாசகக் கதிர்பலத் தொளிர,
கனகார்[1] புவிநின்றே அகல,
மருள் ஜன மொளிபுற அவனரு ளுணர, – திருமா

2. யேசு நாமமெங் கணுமொளி வீச,
இறையே நினை மெய் விசுவாச
நேச மோடேயுனின் தாசர்கள் பேச. – திருமா

3. ஞாலம் அந்தமட் டெம்முடனிருக்க,
நயவாக் களித்தாய் எமக்குருக்கச்,
சீலமதாயுனின் வசனமதுரைக்க. – திருமா

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**459. இராகம்: கமாஸ் ஆதி தாளம்**

***பல்லவி***

**ஜெபம் மறவாதே; நேசனே–எக்காலமும் நீ!**

***சரணங்கள்***

1. ஜெபம் பரமனுடன் பேச்சு; தேவை யெல்லாம் அத்தா லாச்சு;
தப விசுவாசி மூச்சு; தகாதெலாம் அத்தால் போச்சு. – ஜெபம்

2. பகலுடன் இரவிலும், பணிவுடன் குறைவிலும்,
திகிலிலும் மகிழ்விலும், செல்வம் வறுமையிலும். – ஜெபம்

3. தேவ அரசாட்சிக்காக ஜெபி, உன்றன் குறைபோக,
ஆவலுடன் பிறர்க்காக அன்புடன் ஜெபிப்பா யாக. – ஜெபம்

***– அருள்திரு. ஞா. சாமுவேல்***

**460. இராகம்: செஞ்சுருட்டி ரூபக தாளம்**

**பல்லவி**

**ஐயனே! இவர்க் காசி ஈகுவாய்,**
மெய்யாய் உன்னைச் சார–என்றும்

---

1 பொன் நிறைந்த

**அனுபல்லவி**

பொய்யா மிவ்வுலகாசை யைவிட்டு,
மெய்யாய் உன்னைச் சார—என்றும் — ஐயனே!

**சரணங்கள்**

1. பாவ முஞ்செக சால மும்விட்டுப்
பனுவ லிரைப்[1] படியே,—வெகு
ஆவ லாயுன தருளி னாலுயிர்
அடையக் கதி யடைய—என்றும் — ஐயனே!

2. அன்று சீடராய்ப் பன்னி ருவரை
அழைத்தாய், தயை விளைத்தாய்;—இவர்
என்றுஞ் சபையில் ஒன்றி வைகிட[2]
நின்றுன் கிருபை ஈவாய்;—என்றும் — ஐயனே!

***— யாழ்ப்பாணப்பாடல்***

**461. இராகம்: தேவகாந்தாரி** **ஆதி தாளம்**

***பல்லவி***

**அன்பரின் நேசம் ஆர் சொல்லாகும்?—அதிசய**
அன்பரின் நேசம் ஆர் சொல்லாகும்?

***அனுபல்லவி***

துன்ப அகோரம்[3] தொடர்ந்திடும் நேரம். — அன்

***சரணங்கள்***

1. இதுவென் சரீரம், இதுவென்றன் ரத்தம்,
எனை நினைத்திடும்படி அருந்துமென்றாரே. — அன்

2. பிரிந்திடும் வேளை நெருங்கினதாலே
வருந்தின சீஷர்க்காய் மறுகி நின்றாரே. — அன்

3. வியாழனிரவினில் வியாகுலத்தோடே
விளம்பின போதகம் மறந்திடலாமோ? — அன்

---

1 வேதவுரை 2 இருக்க 3 பயங்கரம்

4. செடியுங் கொடியும்போல் சேர்ந்து தம்மோடே
முடிவு பரியந்தம் நிலைப்பீரென்றாரே - அன்

5. பக்தர்கட்காகப் பரமனை நோக்கி
மொத்தவும் ஊக்கமாய் வேண்டிக்கொண்டாரே. - அன்

*- அருள்திரு. சா. பரமானந்தம்*

**462. இராகம்: யமுனாகல்யாணி ஆதி தாளம்**

*பல்லவி*

**பரிசுத்தாவி நீர் வாரும்!-திடப்**
படுத்தல் பெறுவோர்க் கருள் தாரும்!-இன்று

*அனுபல்லவி*

அருளினைப் பெருக்கும் அக்கினி மயமே
ஆவியின் நற்கனி நல்குமா தூயமே. - பரி

*சரணங்கள்*

1. செயல்குண வசனத் தீதுகள் போக,
திருச்சபை யதிலிவர் பூரணராக,
ஜெயமொடு பேயை எதிர்த்துக் கொண்டேக,
ஜெபதப தியானஞ் செய்வதற்காக. - பரி

2. நற்கருணைதனை நலமுடன் வாங்க,
நாளொரு மேனியாய் ஆவியி லோங்க,
சற்குணராய் இவர் சபையைக் கை தாங்க,
சகல தீதான பேதங்களும் நீங்க. - பரி

3. தினமறை யோதி ஜெபித்து மன்றாட,
திருச்சபை யதின்ஐக் கியத்தினிற் கூட,
உணர்வோடு தொழுது கீதங்கள் பாட
உள்ளந் திருந்து ஜீவாறுகளோட. - பரி

*- அருள்திரு. ச.பே. ஞானமணி*

**463. இராகம்: காம்போஜி** **ஆதி தாளம்**

**பல்லவி**

**அன்பே! அன்பே! அன்பே! ஆருயிருறவே**
ஆனந்தம்! ஆனந்தமே!

**சரணங்கள்**

1. ஒரு நாளுந் தயை கண்டேனையா,
அந்நாளெனை வெறுத்தேனையா
உம் தயை பெரிதையா–என் மேல் – அன்

2. அலைந்தேன் பலநாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியாமென்னை
அணைத்தீ ரன்பாலே–கரத்தால் – அன்

3. விடுத்தீரே நீர் விண்ணுலகத்தை;
எடுத்தீரே மா ஏழையின் கோலம்;
கொடுத்தீரே உயிரை–எனக்காய் – அன்

**464. இராகம்: மோகனம்** **ரூபக தாளம்**

**பல்லவி**

**சந்ததம் மா தேவா! துதி**
தந்தனமே காவா – சந்ததம்

**சரணங்கள்**

1. முந்து வோர் விதவை தந்ததாம் காணிக்கை
மெய்யென வறைந்தாயே
உன் திருப்பாதம் வந்திடுவோர் தாம்
உணர்ந்திட வரம் தாயே–ஆ ஆ – சந்ததம்

2. கனதுக்கம் நிறைந்து நிறைந்து தனமது குறைந்து
கலி[1]யெமைத் தொடர்ந்தாலும்
மனமது குளிர்ந்து கனமதாய்ப் பணிந்து
மகிழ்வோம் எமை யாளும்–ஆ ஆ – சந்ததம்

***– ஜோசப் ஜோயல்சிங்***

---

1 துன்பம்

**465. இராகம்: ஹம்சத்வனி** **ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**ஆனந்தமாக இச்சங்க நாளில்**
ஆண்டவர் பாதம் பணிவோமே,
ஆன நன்மை தந்தா தரித்தோரை
ஆவலாய்ப் போற்றித் துதிப்போமே

2. காணிக்கையாக ஈகுவோம் செல்வம்
கர்த்தரின் வேலை செய்வோமே;
வேண்டும் உள்ளத்தைக் கொடுப்போமே
வேதனின்[1] நாமம் வளர்ப்போமே.

3. அன்பின் ஊற்று ஆற்றுந் தண்மை
இன்பநற் பெருக்கு எழுந்தோட
துன்பந் தொல்லைப் பாலைவனங் கடக்கத்,
தூயவன் காக்க நினைப்போமே.

*– ஒய். ஆமோஸ்*

**466. இராகம்: சங்கராபரணம்** **ஏக தாளம்**

**பல்லவி**

**தாசரே, இத்தரணியை அன்பாய்**
யேசுவுக்குச் சொந்தமாக்குவோம்.

**அனுபல்லவி**

நேசமாய் யேசுவைக் கூறுவோம், அவரைக்
காண்பிப்போம், மாவிருள் நீக்குவோம்,
வெளிச்சம் வீசுவோம். – தாசரே

**சரணங்கள்**

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமந்தோரை,
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்,
உரித்தாய் யேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே. – தாசரே

---

1 இறைவன்

2. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்;
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,
யேசு கனிந்து, திரிந்தனரே. – தாசரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை;
நீசரை நாம் உயர்த்திடுவோம்;
பொறுக்கவொண்ணா கஷ்டத்துக்குள்,
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே. – தாசரே

***– அருள்திரு. வே. சந்தியாகு***

**467. இராகம்: செஞ்சுருட்டி ரூபக தாளம்**

**பல்லவி**

**எந்தன் நிர்பந்தம் பாரும் என் மக்களே!**
இரங்க மனதில்லையா?

**அனுபல்லவி**

இந்துமா சமுத்திரம் தொடங்கி
இமயமலை வரைக்கும்–ஐயோ? – எந்தன்

**சரணங்கள்**

1. கண் மணிகளில் கணக்கற்ற பேர்கள்
கல்வியாதும் அறியார்–பலர்
விண்ணொளியற்று வீண் பக்தியினில்
விழுந்து கிடக்கின்றாரே! ஐயோ! – எந்தன்

2. அருமையாய்ப் பெற்ற எந்தன் மக்கள்
அந்தகாரச் சிறையில்–சிக்கிச்
சிறுமையடைந்து தவித்து நிற்பதைச்
சிந்தையில் வைப்பார் இல்லையோ ஐயோ! – எந்தன்

***– அருள்திரு. வே. சந்தியாகு***

**468. இராகம்: மோகனம் ரூபக தாளம்**

**பல்லவி**

**நிறைவுற வரந்தா,–நியமகம்**
நிறைவுற வரந்தா.

**அனுபல்லவி**

நித்திய திரித்துவ சத்தியபரா என்றும், –நிறை

**சரணங்கள்**

1. உரிய தொண்டருக்கில்லமே,–இங்கு
உண்டமைக்கும் எங்கள் தெய்வமே!
உன் திருத்தாளரண்[1] எங்களுக்குகே சரண் –நிறை

2. ஒப்பந்தத் தாலிரு சார்பினர்–தமை
உற்றவர் மற்றவர் நற்றவர்
உன்னதா சீரடைந்துன் மகிமை தர. –நிறை

***– அருள்திரு. ஜி.சே. வேதநாயகம்***

**469. இராகம்: ஆனந்தபைரவி ஆதி தாளம்**

**பல்லவி**

**மங்கள மணாளா! மன்றல் ஆசி தா; இம்மண மக்கள்**
இங்கிதமாய்[2] வாழ அருள் துங்கா! வளமாய்

**அனுபல்லவி**

சங்கு நாதமே முழங்க, எங்கும் யேசு பேர் விளங்க
சந்ததம்; துணையீந்து
பெந்தமாய்; காத்து ரட்சை
சொந்தமாய்; தயை நல்கி விந்தையாய் வாழ்ந்திட நாளும் – மங்

---

1 திருப்பாதமாகிய கோட்டை 2 இன்பம்

**சரணங்கள்**

தம்பதிகளாம் இவர்கள் உம்பர்[1] போல் நீடுழிவாழ்ந்து
தாட்சியின்றியே ஜெபங்கள் மாட்சியுடனே
அம்பர[2] வாசிகளென தம்பிரானடி வணங்கி
அந்தி சந்தி மத்தியானம் வந்தனை செய்து
கம்பம்[3] போல் நிலைத்து வாழ எம்பரா அனுதினமும்
காருமே; உன் கிருபை
கூருமே; ஞானம் கல்வி
தாருமே அடியாரைக் கண் பாருமே, பாருமே என்றும் – மங்

*– ஈசாக்கு ஞானமுத்து*

### 470. இராகம்: கன்னடம் ஆதி தாளம்

**பல்லவி**

**துதிபூரணா! நீ சுபம் அருள்**

**சரணங்கள்**

1. அதியாணம்[4] சூழ அதம் ஏவை வாழ
விதித்தோய்! தயாள[5] விவிதாசீர் நீள; – துதி

2. மன்றல் ஓங்கிடவும் மகிழார்ந்திடவும்
தென்றல் ஆவிமேவும் தொண்டு சேர்ந்திடவும் – துதி

3. இல்வாழ்வும் சகடம்[6] இணை பாசவடம்
செல்வர் சேர்ந்து தடம் சென்று யீர்க்கத்திடம் – துதி

4. ஜெப தூப மணம் செலவெ எங்கணும்
தபம் நாடும் குணம் தருவாய் இம்மணம் – துதி

*– ஜே.எம். தாவீது*

1 வானோர்
2 விண்ணுலக
3 தூண்
4 சிறந்த நன்மை
5 பல ஆசிகள்
6 வண்டி

**471. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**சருவேஸ்பரனே! சரணம்–சுபதினமதில் மகிழ்**
சருவேஸ்பரனே! சரணம்

**சரணங்கள்**

1. திருமண முறையைத் தீதறவமைத்தாய்
தீங்கனிக் காவில்[1] திடமுறவே
அருள் தருவாயித் தருணமதிங்கே,
அமர்ந்திடுஞ் செல்வ நண்பருக்கே
ஆதி நாயகா! – சருவேஸ்

2. உத்தம பக்தி, உனில் விசுவாசம்;
உளமதில், அன்பு, உயிர் நேசம்,
சுத்த இல்வாழ்க்கை, சுகிர்த நற்சேர்க்கை,
சுருதியில்[2] ஆசை பெருகிடவே
ஜீவ நாயகா – சருவேஸ்

***– ஜே.எம். தாவீது***

**472. இராகம்: கமாஸ்** **அட தாளம்**

***பல்லவி***

**நிச்சயம் செய்குவோம் வாரீர்,–வதுவரர்க்கு[3]**
நிச்சயம் செய்குவோம் வாரீர்.

***சரணங்கள்***

1. மெச்சும் கல்யாண குண விமலன் துணையை நம்பி
இச்சிறு தம்பதிகள் இருவர் மணம் விரும்பி. – நிச்சயம்

2. வாழ்க்கை வனத்தினிலே மலரும் மணமும் போலே
மனையறம் நடத்திட மனம் இவர் கொண்டதாலே. – நிச்சயம்

3. செடியும் கொடியும் போலே உடலும் உயிரும் போலே,
கடிமண வாழ்வில் வரக் கருத்திவர் கொண்டதாலே. – நிச்சயம்

---

1 ஏதேன் 2 வேதம் 3 மணமக்கள்

4. இரவியும்[1] கதிரும் போல் பாவுடன் ஊடும் போலே
இருவரும் நீடூழி இனிது வாழப் பூ[2] மேலே. – நிச்சயம்

*– வே. ஜெயராஜ்*

**473. இராகம்: ஆனந்தபைரவி** **ரூபக தாளம்**

**பல்லவி**

**ஆனந்த கல்யாணா! இச்சோபனத்**
தாசி தந்தாண் டருள் கூர்.

**அனுபல்லவி**

ஞானந்தரும் சச்சிதானந்தத் தேவனே,
கானக் கலியாணக் கருணைத் திருவடிவே –ஆன

**சரணங்கள்**

1. கலியேக[3] அருள் இலங்க–ஐக்யம் கற்பு நிலை துவங்க
மலி நன்மை சுகபெலன் வாய்மை புத்திர பாக்யம்
கலி துன்பத்தில் பொறுமை நாதனே அளித்திடும் –ஆன

2. சந்தொஷமே பெருக–இகபர சௌபாக்கியம் வருக
எந்தை நின்பூரண இணையாத அன்புற
சுந்தர ஆவியைச் சொரிந்தே உற்சாகிதமுற –ஆன

*– ரா. ஈ.*

**474. இராகம்: நவரோஜ்** **ஏக தாளம்**

**கண்ணிகள்**

**கர்த்தருக்குப் பயந்தன்னவர் வழியில் உத்தமமாய் நடப்போன்**
நிச்சயமாயவன் பாக்கியவானாவான் நீணிலந்தன்னி லென்றும்.

2. உந்தன் பிர யாசத்தால் வரும் ஆகாரம் உண்மையாய் நீ புசிப்பாய்;
எந்நாளும் பாக்கியம் நன்மையுமுண்டாகும் ஏகபரன் தயவால்.

3.உந்தன் மனைவியும் வீட்டோரம் கனிதரும் திராட்சைக் கொடியாவாள்
பந்தியைச் சுற்றிலும் உன் மக்கள் ஒலிவக்கன்றுகள் போலாவார்

---

1 சூரியன் 2 புவி 3 துன்பம்

4. கர்த்தருக்குப் பயந்துத்தம வழியில் நித்தம் நடக்கின்றவன்
இத்தன்மையாய் ஆசீர்வாதம் பெறுவதை யாவரும் காணலாமே

**475. இராகம்: புன்னாகவராளி** **ஏக தாளம்**

**பல்லவி**

**எழுந்தருள்வாய், தேவா! எழுந்தருள்வாய், தேவா!**
இங்கிரங்கி மங்களமாய் எழுந்தருள்வாய்.

**சரணங்கள்**

1. தொழுந்தலங்கள் எழுந்தருளி
செழும்பலன்கள் பொழிவதாக!
சொன்னமொழி பின்னமின்றி[1]
நன்னயமாய் இன்னேரம் – எழு

2. தம்பதிகள் கெம்பீர நின்
செம்பதமே நம்பி வாழி;
சாற்றும் ஆசி ஊற்றும் ஆவி
போற்றும் உள்ளம், தேற்றும் ராஜா – எழு

*– ரா.ஈ.*

**476. இராகம்: சஹானா** **ஆதி தாளம்**

**பல்லவி**

**சிந்தையுடன் தெய்வாலயந்தனில் சேர்வோம்–திரி**
யேகரின் திருத்தாள்[2] போற்றியே களிகூர்வோம்.

**அனுபல்லவி**

1. தெய்வநிறையுள்ள யேசு சீர்தெய்வாலயம்;–அவர்
செற்றலர்[3] இடித்துமே சிறந்தவாலயம்;–தமின்
மெய்ப்பல னளித்து நம்மை மீட்குமாலயம்; – சிந்

2. கர்த்தனைப்பிடித்தோன் ஜீவ கற்றெய்வாலயம்;–எந்தக்
காலமும் துதி முழங்கும் கான[4] வாலயம்;–பரி
சுத்தமாய்த்தனையே காக்கும் துங்க[5] வாலயம்; – சிந்

---

1 மாற்றமின்றி
2 திருப்பாதங்கள்
3 பகைவர்–இசை
4 சங்கீதம்
5 உயர்ந்த

3. திவ்யபக்தர் கூட்டமே சிங்காரவாலயம்;—அது
தெய்வ ஆவி சிற்பி வேலை செய்யுமலாயம்;—தீட்
டவ்வியம்[1] பகைவிலக்கும் அன்பினாலயம்; — சிந்

*— அருள்திரு. ஞா. சாமுவேல்*

**477. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**வருவாய்! கருணாநிதியே!—புது**
வருடமதில் துதி

**சரணங்கள்**

1. வருடங்கள் வளர்ந்து வருகின்ற வாறே
இருதயம் ஆவியில் இலங்கி யொரு
தருவினில்[2] மாண்டுயிர்த் தெழுந்த நின் சீர் போல்
வருபவந் தனிலிறத் துயர் கதியே—வாகா[3] யேகிட — வரு

2. ஆண்டிதிற் புதிய ஆண்மையு மருளும்
வேண்டிய வாறே விளங்கி வளர
ஆண்டவன் மந்தையில் ஆற்றிடத் தொண்டு
வேண்டிய மட்டும் விரைந்தீவாய்—வேதநாயகா — வரு

3. ஆதியிற் சபைகள் ஆகியவாறே
ஆதிபன் ஆவியின் அபிஷேகம்
ஜோதியோடேற்று ஜொலித்திட நாளும்
வேதியரோடு[4] விழைந்துழைப்போம்—வீராவேசமாய் — வரு

*— S.A.*

**478. இராகம்: சங்கராபரணம் மட்டியதாளம்**

**பல்லவி**

**இன்பக்ரு பாகரன் நீர்—இவ்வாண்டை உம்**
அன்பின் ஈவாய் அருள்வீர்!

---

1 பொறாமை
2 சிலுவைமரம்
3 சிறப்பாய்
4 ஊழியர்

**அனுபல்லவி**

துன்ப விரும் உறைந்தோர் பள்ளத்தாக்கிதில்
நின் கோலும் தடியும் கொண்டெந்நாளும் தேற்றிடும் – இன்

**சரணங்கள்**

1. நன்மை ஏதும் பெறவே–அபாத்திரர்
நல்கும் தயை உறவே
புன்மை[1] மிகு பவத் தன்மை யாராயினும்
போந்த[2] நலமெமக் கீந்த தயாளராம் – இன்

2. நம்புவோம் உம்மை மெய்யாய்–முழுவதும்
அன்போ டெந்நாளும் ஐயா!
தம்புரான் உம்பதம் தாசர்க் கென்றும் சதம்[3]
தாதா! அருட் பிரசாதா! சர்வேசுரா! – இன்

***– ஜே.எம். தாவீது***

**479. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**காப்பார் உன்னைக் காப்பார்**
காத்தவர் காப்பார், இன்னும் இனிமேல் காத்திடுவார்
கலங்காதே மனமே – காத்திடுவார்

**சரணங்கள்**

1. கண்டுனையழைத்தவர் கரமதைப் பார், அவர் கைவிடாதிருப்பார்
ஆண்டுகள் தோறும் உனக்கவர் அளித்த ஆசிகளை எண்ணிப்பார்
என்னிப்பார், என்ணிப்பார், எண்ணிப்பார்
என்றுமதை எண்ணிப்பார் – காப்

2. ஆதரவாய்ப் பல ஆண்டுகளில் பரனடைக்கலமாயிருந்தார்
காதலுடனவர்[4] கைப்பணி செய்திட; கனிவுடனாதரித்தார்
தரித்தார், தரித்தார், தரித்தார்
பரிசுத்தத்தில் லங்கரித்தார் – காப்

---

1 இழிவு
2 போதுமான
3 நிலையானது
4 அன்புடன்

**480. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**மகிழையனே மன மகிழையனே**
துதி புரியுந்ததி வந்தாள் புண்ணியனே

**அனுபல்லவி**

வந்தனம் ஸ்வாமி தருதுணைநேமி
மனோகர தினமேவி – மகி

**சரணங்கள்**

1. சீரார் புதிய துங்க வருடமருள் சிங்களென மாமனுவேலா
திவ்யகுணாளா மரியாள் பாலா–ஜெகாதிபா நடத்தன்பா – மகி

2. தாதை[1] தணிய விண்டு தவணை பலதண்டு மருளாசன ராஜா
சற்குண வாசா தவறா ஈசா தயாபரா சரண்ன்பா – மகி

3. நாதா கனிகள் மல்க புனித ஆவி நல்கும் பரிபாலன் நேயா
நல்ல சகாயா தனை பாராயோ நராதிபா அருளன்பா – மகி

***– அருள்திரு. மோ. சாலமோன்***

**481. இராகம்: அமிர்தகல்யாணி** **சாபு தாளம்**

***பல்லவி***

**தேவா எனை மறக்காதே,–இந்தச்**
சிறியன் படுந்துயரில் தூரநிற்காதே.

***அனுபல்லவி***

நேயா உனையன்றி நீசனுக்கார் கதி?
தூயா கிருபைகூர், நான் மகாதோஷி. – தேவா

***சரணங்கள்***

1. நெருக்கப்படுகிறேன் தேவா,–என்னை
உருக்கமாய்ப் பாராய், கிறிஸ்தேசு நாதா!
இரக்கம் வைத்தென்றனின் குறைதனை நீக்கு,
என்னை ஆட்கொண்டவா; இயேசு சர்வேசா! – தேவா

---

1 தந்தை

2. சரணம், சரணம் சருவேசா!–இந்தத்
தருணம், தருணம் உன்றன் கருணைகூர் நேசா!
மரணவேளையிலும் நடுத்தீர்வை[1] தினத்திலும்
மாபாதகன் எனை ரட்சியாய் நாதா! – தேவா

***– அருள்திரு. ஆ. தேவதாசன்***

**482. இராகம்: சகானா** **சாபு தாளம்**

*பல்லவி*

**சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில்**
சூழ்ந்தனர் பிணியாளிகள்–உனை நெருங்கித்
துயர் தீர வேண்டினரே.

*அனுபல்லவி*

இன்னேரம் உன்தயை தேடும் இவ்வடியாரின்
இன்னலெல்லாம் ஓட அன்பே உன்னருள் ஈவாய். – சூரி

**சரணங்கள்**

1. பேயின் அகோரத்வம் உனைக்கண்டு பறந்தது,
நோயும் நிர்ப்பந்தமும் நீ தொட ஒழிந்தன,
வாய்க்கும் சுகானந்தம் உனை நம்பினோர்க்கெல்லாம்,
தாய்க் கருணையுடையோய், இன்றும் உன் தயை கூர்வாய்.–சூரி

2. சருவ சக்தி சதா காலமும் உனதல்லோ?
வருத்த மெல்லாம் ஓடும் வார்த்தை ஒன்று சொல்ல,
உரித்தாய் கரத்தினால் உன்னடியாரைத் தொடுவாயே,
கருகுங் கங்குலிலும் யாம் களிப்பாய்ச் சுகிப்போமே. – சூரி

***– சவரிராயன் ஏசுதாசன்***

**483. இராகம்: மோகனம்** **ஆதி தாளம்**

**பல்லவி**

**ஜகமே! உன்னால் என்ன சுகமே?**

---

1 நியாயத்தீர்ப்பு

**சரணங்கள்**

1. அகத்தினைக் குருடாக்கி
இகத் தழுத்து வதல்லால் - ஜக

2. ஆசையைப் பெருக்கி நீ
மோசம் செய்வதே அல்லால் - ஜக

3. வாழ்வில் மகிழ்ந்துறவாடித்
தாழ்விலே பிரிவதல்லால் - ஜக

*- ரா.ஈ*

**484.**

**என்ன என் ஆனந்தம் என்ன என் பேரின்பம்**
தூதரோடு சேர்ந்து நானும் அன்பரைப் பாடிடுவேன்

2. இத்தரை யாத்திரையே முற்றிலும் போராட்டமே
மண்ணில் வெற்றி சிறந்தோர்க்கெல்லாம் நித்திய மகிமை

3. என் நேசர் மார்பில் நான் சாயும் நேரத்தில்
என்ன இன்பம் என்ன மதுரம் சொல்ல முடியாதே

4. பொன் தளம் மீதினில் இங்கித சாலையிலே
நேசரோடு நின்று நானும் ஓடி யுலாவிடுவேன்

**485. இராகம்: இந்துஸ்தானி**

**பல்லவி**

**உலகமுன் சதமென்று எண்ணியிராதே,**
பலவிதப் பாதாள வலையிற் சிக்காதே

**சரணங்கள்**

1. மாதா, பிதா, மற்றுஞ் செல்வ மிருந்தாலும்,
மரணம் வந்து உந்தன் வாழ்வைக் குலைக்கும் -உலக

2. சாவின் கோரக் காட்சி நெஞ்கையில்
பாவி! நான் என் செய்வேனென்று திகைப்பாய் -உலக

3. பாவ விமோசன மிப்போதே பெறுவாய்
தாவியுன் மீட்பரின் பாதத்தைத் தேடு. -உலக

**486. இராகம்: சகானா** **ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**நாளும் வாழும் நாதா! வேதா!**
ஆளும் எமையும் ஆவியைத் தாதா!

2. வாசல் லாசரு மேலுலகடைந்தான்
பாசமில் செல்வன் பாழ் நகரடைந்தான்

3. பூவின் மேன்மை போகும் புல் பூ போல்
தேவனின் நீதியைத் தேடும்வோமன்பால்

*C.C.*

**487. இராகம்: குந்தளவராளி** **ஆதி தாளம்**

**கண்ணிகள்**

**தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே,**
மெய் மனதானந்தமே!
செய்ய[1] நின்செம்பாதம் சேவிக்க இவ்வேளை
ஐயா, நின் அடி பணிந்தேன்.

2. சொந்தம் உனதல்லால் சோர[2] வழி செல்ல
எந்தாய் துணிவேனோ யான்?
புந்தி[3]க் கமலைப் பொற்பூமாலை கோர்த்து நின்
பதந்தனைப் பிடித்துக் கொள்வேன்.

3. மரணமோ, ஜீவனோ, மறுமையோ, பூமியோ,
மகிமையோ, வருங்காலமோ,
வேறு சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ
பிரித்திடுமோ தெய்வன்பை?

***– சவரியான் ஏசுதாசன்***

**488.**

**பல்லவி**

**யோர்தான் நதியோரம் திகையாதே மனமே**
யோசனை யாலுன்னைக் கலக்காதே உள்ளமே.

---

1 சிவந்த 2 தீய 3 புத்தி

**சரணங்கள்**

1. வெள்ளம் பெருகினும் வல்லமை குன்றாதே;
வல்லவன் வாக்கொன்றும் மாறிப் போகாதே – யோர்

2. வைப்பாயுன் காலடி தற்பரன் சொற்படி
வானவன் யேசு தம் வாக்கு மாறாரே – யோர்

3. உன்னத மன்னன் உண்டு முன்னணியில்;
துன்பமணுகாமல் துணையருள்வாரே – யோர்

4. கானானினோரமே காதலன் நாடதே
காணுவன் தேசம் ஆ என்ன இன்பமே – யோர்

**489. இராகம்: தேசிகதோடி** **சாபு தாளம்**

**பக்தியாய்ச் ஜெபம் பண்ணவே சுத்தமாய்த் தெரியாதய்யா!**
புத்தியோடுமைப் போற்ற, நல் சித்தம் ஈந்திடும், யேசுவே!

2. பாவ பாதையைவிட்டு நான் ஜீவ பாதையில் சேர, நல்
ஆவி தந்தெனை ஆட்கொளும், தேவ தேவ குமாரனே!

3. சிறுவன் நானுனைச் செவ்வையாய் அறியவும், முழு
அன்பினால்
நிறையுமுள்ள நிலைக்கவும் இறைவனே! வரம் ஈகுவாய்.

***– எச்.எ. கிருஷ்ண பிள்ளை***

**490. இராகம்: பலஹம்சா** **ஏக தாளம்**

**பல்லவி**

**பாலரே, நடந்து வாருங்கள்,**
காலையில் எழுந்து கூடுங்கள்,
சாலவே சீவன் சுகமும்
தந்த தேவனை, மைந்தன் யேசுவைச்
சந்தோஷத்துடன் நாடித் தேடுங்கள்.

**சரணங்கள்**

1. சிறு கண்கள் இரண்டு தந்தனர்
தேவன் செய்தவை நோக்கிப் பார்க்கவே!
சிறு செவி இரண்டு தந்தனர்
தேவன் சொல்லைக் கேட்பதற்குமே;
சிறப்புடன் பதத்தை நோக்கியே
திவ்ய வார்த்தையைக் கேட்டு வாருங்கள். – பாலரே

2. சிறிய கால் இரண்டு தந்தனர்
செல்லவே மோட்ச பாதையில்;
சிறு கைகள் இரண்டு தந்தனர்
செய்யவே தேவ ஊழியம்;
சீக்கிரம் அந்தப் பாதை சென்று மெய்
தேவனைத் தினம் சேவித் தேத்துங்கள். – பாலரே

***– ஈசாக்கு பாக்கியநாதன்***

**491. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

**பல்லவி**

**பாலர் ஞாயிறிது, பாசமாய் வாரும்,**
பாடி யேசு நாமம் பணிந்து போற்றும்;

**அனுபல்லவி**

தாலந்தை புதைத்திடாமல் தாமதமே பண்ணிடாமல்
ஞாலமீதிறங்கி வந்த சுவாமி யேசு அன்பை எண்ணிப் – பாலர்

**சரணங்கள்**

1. பாலர் சங்கத்தாலே மாட்சிமை பெற்றோம்,
பாலர் நேசர் பதம் பணியக்கற்றோம்,
பாரில் ஜோதி வீசுகின்ற பரிசுத்த வேதம் கற்றோம்,
ஊரில் எங்கும் கார்ட் பஞ்சாங்கம் ஓதும் பாலியர் நேசன்
கண்டோம். – பாலர்

2. இன்று மட்டும் நம்மை ஏந்தி வந்தாரே,
இன்னும் நித்யமும் பாதுகாப்பாரே,
அன்பின் சங்கம் இதைக்கொண்டு ஆத்மநேசர் செய்து வரும்
எண்ணி முடியா நன்மையை ஏகமாக எண்ணிக் கொண்டு.

– பாலர்

***– சாமுவேல் பாக்கியநாதன்***

**492. இராகம்: ஸ்ரீரஞ்சினி ஆதி தாளம்**

**பல்லவி**

**கர்த்தர் பிறப்புப் பண்டிகையைக்**
கண்டேன் மகிழ்ச்சி கொண்டேனே

**அனுபல்லவி**

அர்த்த ராவில் அருணோதயமே
அஅஆ! அஅஆ! அஅஆ! ஆஆஆஆ! – கர்த்தர்

**சரணங்கள்**

1. தெய்வ ரூபம் தெளிவாகத் தெரிந்தேன் நன்றாய் எளிதாக
உய்யும் மார்க்கம் உருவாகியதே–அஅஆ – கர்த்தர்

2. தந்தை வானில்; தாய் பூவில் சார்ந்த கோயில் ஓராவில்
இந்தக் குமரற் கிணை வேறிலையே–அஅஆ – கர்த்தர்

3. ஞானம், வளர்ச்சி நரர் தயவு நாதன் கிருபைதனில் வளர
தானம் எனக்குத் தருவோரிவரே–அஅஆ – கர்த்தர்

***– சா. மோட்சக்கண்***

**493. இராகம்: புன்னாகவராளி ஆதி தாளம்**

**பல்லவி**

**ஏசு மகாராசனுக்கே இன்றும் என்றும் ஜே!**

**அனுபல்லவி**

மீசு[1] ரர்கள் போற்றும் எங்கள் ஈசனுக்கு ஜே, ஜே!

---

1 வானோர்

**சரணங்கள்**

1. சின்ன மறி யொன்றைச் சீடர் கொண்டு சேர்த்தனர்,
கன்னி மரி மகனைப் பாலர் காண ஏகினார்.

2. காணரிய கூட்ட ஜனம் கண்டு களித்துச்
சேணமாக வஸ்திரம் விரித்துச் சேவித்தார்.

3. ஆண்டவருக் கேற்ற மறி நானும் ஆவேனே,
தாண்டவம் ஆடி அவரை ஈண்டு போற்றுவேன்.

***– அருள்திரு. ஜி.ச. வில்லியம்***

**494.**

**இயேசு கிறிஸ்து மாறாதவரே**
மாறாதவரே மாறாதவரே
ஆமாம், இயேசு கிறிஸ்து மாறாதவரே,
நித்திய நித்தியமாய்
அல்லேலூயா அல்லேலூ...யா
அல்லேலூயா... ஆ – ஏசுக்

**495. இராகம்: ஆனந்தபைரவி ஆதி தாளம்**

**பல்லவி**

**இன்னமும் நாம் யேசு பாதத்தில்–சந்திக்கும்வரை**
என்றும் கர்த்தருன்னைக் காப்பாரே.

**அனுபல்லவி**

தன்னுடைய காவலின்மேல்–தப்பாமல் வைத்துத் தற்காத்துத்
தன்னிரு கரத்தால் உன்னைத் தாங்கியே காத்துக் கொண்டு
– இன்

**சரணங்கள்**

1. தன்னிரு சிறகுகளின் கீழ்–உன்னை மறைத்துத்
தாங்கித் தயவோடு காப்பாரே!
இன்னமும் திருமன்னாவை–என்றும் உனக்களித்தே
இன்பமோடே உன்னைத்தாங்கி எல்லாத் தீங்குக் குந்தற்காத்து
– இன்

2. ஆண்டவனின் அன்பின் கொடிதான்—உன்மேல் பறந்து
ஆட, மகிழ்ந் தானந்தங்கொள்வாய்!
நீண்டிடும் ஆயுளளித்து நிதமும் சுகத்தைத் தந்து
நீண்ட காலமாக உன்னை—நேசித்துப் பரிபாலித்து — இன்

***– ச.ஜெ. சிங்***

**496. இராகம்: ரகுபதி-ராஜாராம்**

**ரட்சகர் இயேசு ராஜாதாம்—பட்சமுடன் எமைக் கவர்ந்தவராம்;**
அர்ச்சனை செய்வோம் அவரை நாம் உச்சரிப்போம் அவர் திருநாமம்
எல்லாம் வல்ல இயேசுவை நாம்—சொல்லால் போற்றிப்
பணி செய்வோம்.

2. மீட்பர் ஏசுவே வல்லவராம், மேன்மையுள்ள ஆண்டவராம்,
கேட்போர் யாருக்கும் அருள் நாதர், கீழோர்களை உயர்த்தவராம்
மாட்சியுற்ற ஏசுவை யாம், மனமுவந்து பணி செய்வோம்

***– சவரிராயன் ஏசுதாசன்***

**497.**

**பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்**
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத் தாக்கிலேயும்,
இயேசு நாதர் பின்சென்றேகி மோட்சம் நாடுவேன்,
விண்ணில் சூடும் க்ரீடம் நோக்கி ஓடுவேன்.

**பல்லவி**

பின் செல்வேனே! மீட்பர் பின்செல்வேனே!
எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்.
பின் செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே
இயேசு காட்டும் பாதை யெல்லாம் செல்லுவேன்.

2. கார்மேகம் மேலே மூடும் பள்ள மென்கிலும்
காற்றகோரமாக மோதும் ஸ்தானத்திலும்
யேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவே மாட்டேன்;
இரட்சகர்கை தாங்கத் தைரியம் கொள்ளுவேன்.

**498.**

**பல்லவி**

**தொழுகிறோம் எங்கள் பிதாவே**
பொழுதெல்லாம் ஆவி உண்மையுடனே

***அனுபல்லவி***

பரிசுத்த அலங்காரத்துடனே
தரிசிப்பதினால் சரணம் சரணம்

***சரணங்கள்***

1. நான் நலங்கட்கோர் முதலே
நற்சேயை நீ தந்ததாலே
திரித்துவ யேகத்துவனே
திரிலோகனே சரணம் சரணம் - தொழு

2. சமஸ்த சபையின் சிரசே
நமஸ்காரம் எங்கள் அரசே
பிரதானம் எம் மூலைக் கல்லே
ஏராளமாய் சரணம் சரணம் - தொழு

3. அடியார்களின் அஸ்திபாரம்
அறிவுக்கெட்டாத விஸ்தாரம்
கூடி வந்த எம் அலங்காரம்
கோடா கோடியாம் சரணம் சரணம் - தொழு

4. பார்த்திபனே கன தோத்திரம்
கீர்த்தனம் மங்களம் நித்தியம்
வாழ்க வாழ்க வாழ்க என்றும்
அல்லேலூயா ஆமென் ஆமென் - தொழு

**499. இராகம்: சங்கராபரணம்** **ஆதி தாளம்**

**அனுக்ரக வார்த்தையோடே-இப்போ-து**
அடியாரை அனுப்புமையா!
மனமதில் தயவுறும் மகத்துவபரனே!
வந்தனம் உமக்காமென்.

2. நின்திரு நாமமதில்–கேட்ட
நிர்மலமாம் மொழிகள்
சந்ததம் எமதகம் மிக பலனளித்திடச்
சாமி நின்னருள் புரிவாய்.

3. தோத்திரம், புகழ், மகிமை,–கீர்த்தி,
துதிகனம், தினமுமக்கே
பாத்திரமே; அதிசோபித பரனே!
பாதசரண் ஆமென்!

*– ச.ஜே. சிங்*

**500.**

**அல்லேலூயா! அல்லேலூயா! இயேசு நாமத்திற்கு;**
ஆமென், ஆமென், ஜெயம், ஜெயம் என்றுமவர்க்கு

**501. இராகம்: மாஞ்சி** **ஆதி தாளம்**

*பல்லவி*

**அரசனைக் காணமலிருப்போமோ?–நமது**
ஆயுளை வீணாகக் கழிப்போமோ? – அரசனை

*அனுபல்லவி*

பரம்பரை ஞானத்தைப் பழிப்போமோ?–யூதர்
பாடனு பவங்களை ஒழிப்போமோ?–யூத – அரசனை

*சரணங்கள்*

1. யாக்கோபிலோர் வெள்ளி உதிக்குமென்றே,–இஸ்ரேல்
ராஜ செங்கோலெங்கும் கதிக்குமென்றே[1],
ஆக்கமிழந்து மறுவாக்குரைத்த பாலாம்
தீர்க்கன் மொழிபொய்யாத பாக்கியமே!–யூத – அரசனை

1 மிகுதல்

2. தேசோ மயத் தாரகை[1] தோன்றுது பார்!–மேற்குத்
திசை வழி காட்டிமுன் செல்லுது பார்!
பூசனைக்[2] காண நன்கொடைகள் கொண்டே–அவர்
பொன்னடி வணங்குவோம், நடவுமின்றே!–யூத – அரசனை

3. அலங்காரமனை யொன்று தோணுது பார்!–அதன்
அழகு மனமுங் கண்ணும் கவர்ந்தது பார்!
இளவர சங்கிருக்கும் நிச்சயம் பார்!–நாம்
எடுத்த கருமம் சித்தியாகிடும் பார்!–யூத – அரசனை

4. அரமனையில் அவரைக் காணோமே!–அதை
அகன்று தென்மார்க்கமாய்த் திரும்புவமே!
மறைந்த உடு[3] அதோ! பார் திரும்பினதே,–பெத்லேம்
வாசலில் நமைக்கொண்டு சேர்க்குது பார்!–யூத – அரசனை

5. பொன் தூபவர்க்கம் வெள்ளைப் போளமிட்டே,–ராயர்
பொற்கழல் அர்ச்சனை புரிவோமே!
வன்கண்ணன் ஏரோதைப் பாராமல்,–தேவ
வாக்கினால் திரும்பினோம் சோராமல்,–யூத – அரசனை

***– அருள்திரு. ஜி.சே. வேதநாயகம்***

**502. இராகம்: சங்கராபரணம் ஆதி தாளம்**

***பல்லவி***

**ஓசன்னா பாடுவோம், ஏசுவின் தாசரே,**
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!

***சரணங்கள்***

1. முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னப் பாலர் பாடினார்,
அன்று போல இன்றும் நாமும் அன்பாய்த் துதிபாடுவோம்.

2. சின்ன மறி மீதில் ஏறி, அன்பர் பவனி போனார்
இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்.

---

1 நட்சத்திரம் 2 இறைவன் 3 நட்சத்திரம்

3. பாவமதைப் போக்கவும் இப் பாவியைக் கைதூக்கவும்,
பாசமுள்ள ஏசையா பவனியாகப் போகிறார்.

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்,
ஜாலர் வீணையோடு பாடித் தாளைமுத்தி செய்குவோம்.

5. குருத் தோலை ஞாயிற்றில் நம் குரு பாதம் பணிவோம்,
கூடி அருள் பெற்றுநாமும் த்ரியேகரைப் போற்றுவோம்.

*– ஜாண் பால்மர்*

**503. இராகம்: சங்கராபரணம்** **ஏக தாளம்**

## அப்போஸ்தலர் விசுவாசப் பிரமாணம்

**உலகும் வானும் செய்தாளும் ஒப்பில் சர்வவல்லவராய்**
இலகுமருளும் தந்தையாம் எம்பிரான்றனை நம்புகிறேன்.

2. அவரொரு பேறாமைந்தனுமாய் ஆதிமுதலெங்கர்த்தனு மாய்த்
தவறிலேசுக் கிறிஸ்துவையும் சந்ததமே யான் நம்புகிறேன்.

3. பரிசுத்தாவி அருளதனால் படிமேல்[1] கன்னிமரியிடமாய்
உருவாய் நரரவதாரமாய்[2] உதித்தாரெனவும் நம்புகிறேன்.

4. பொந்து பிலாத்ததிபதி நாளில் புகலருபாடுகளையேற்று[3],
உந்துஞ் சிலுவையிலறையுண்டு உயிர்விட்டாரென நம்புகிறேன்.

5. இறந்தே அடங்கிப் பாதாளம் இறங்கி மூன்றாம் தினமதிலே
இறந்தோரிடம்நின்றே உயிரோடெழுந்தாரெனவும் நம்புகிறேன்.

6. சந்ததமோட்சம் எழுந்தருளிச் சருவவல்ல பரனான
எந்தை தன்வலப் பாரிசமே யிருக்கின்றாரென நம்புகிறேன்.

7. உயிருள்ளோரை மரித்தோரை உத்தமஞாயந் தீர்த்திடவே,
ஜெயமாய்த் திரும்பவருவாரெனச் சிந்தையார நம்புகிறேன்.

---

1 உலகில் 2 மானிட அவதாரமாய் 3 சொல்வதற்கரிய

8. பரிசுத்தாவியை நம்புகிறேன், பரிசுத்த மாபொதுச் சபையும், பரிசுத்தர்களின் ஐக்கியமும், பரிவாயுண்டென நம்புகிறேன்.

9. பாவ மன்னிப்புளதெனவும், மரித்தோருயிர்த் தெழுவாரெனவும், ஓவாநித்ய ஜீவனுமே உளதெனவும் யான் நம்புகிறேன்.

**504.**

## கன்னிமரியாளின் கீதம்

### (லூக்கா 1:46-55)

**என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது; என் ஆவி** என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது.

அவர் தமது அடிமையின் தாழ்மையை; நோக்கிப் பார்த்தார்.

இதோ, இதுமுதல் எல்லா சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்.

வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு; தலைமுறை தலைமுறைக்குமுள்ளது.

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.

பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி; தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி; ஐசுவரியம் உள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.

நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ் செய்ய நினைத்து; தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்.

**பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.**

**ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**

Tune in Cathedral Psalter for Easter day

1. நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறாரே

2. ஆதலால், பழைய புளித்தமாவோடே அல்ல துர்குணம், பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம், (1 கொரி. 5:7)

3. மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.

4. அவர் மரித்து, பாவத்திற்கென்று ஒரே தரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார்.

5. அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும்; நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். (ரோமர் 6:9)

6. கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து; நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

7. மனுஷனால் மரணம் உண்டானபடியால்; மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.

8. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறது போல; கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார். (1 கொ. 15:20)

**பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.**

**ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**



# பாடலாசிரியர் அகராதி

**அருமைநாயகம் ச.** (நெய்யூர்) – 13, 380

**அருளப்பன். ஜே.சி.** (திருநெல்வேலி) – 83, 125, 419

**அருளானந்தம் பிரசங்கியார்** (திருநெல்வேலி) – 121, 136, 137, 163, 238, 358

**அருளானந்தம். தா.** (யாழ்பாணம்) – 143, 282 299

**அருனால்டு. ஜ.ர.** (யாழ்பாணம்) – 288, 371

**ஆசீர்வாதம். ஜி.** – 278

**ஆபிரகாம் அல்லின்.** (திண்டுக்கல்) – 59, 167, 209, 272, 359

**ஆபிரகாம் உபதேசியார்** (டோனாவூர்) – 112, 117, 140

**ஆமோஸ். ஒய்.** (தேவிகோடு) – 387, 390, 402, 465

**இரட்சண்ணிய சேனைப் பாடல்** – 435

**ஈசாக்கு ஞானமுத்து** – 165, 287, 411, 469

**ஈசாக்கு பாக்கியநாதன்** (மதுரை) – 75, 151, 152, 155, 276, 286, 324, 337, 490

**ஈஸ்வரபாக்கியம் ஈசாக்கு. ரா.** (திட்டுவிளை) – 396, 408, 421, 427

**எரேமியா சு.ச.** (யாழ்ப்பாணம்) – 27, 285, 291, 294, 305, 306, 308, 311

**ஏசடியான் உபாத்தியாயர்** (நாசரேத்) – 54, 128, 344

**ஏசுதாசன் அண்ணாவியார்** (கும்பகோணம்) – 20, 91, 92, 103

**ஏசுவடியான் எஸ்.ஜி. அருள்திரு.** (திருநெல்வேலி) – 85, 107, 283, 343

**ஐயாத்துரைப் பாகவதர். த.** (கயத்தாறு) – 383, 389, 436

**காபிரியேல் உபதேசியார்.** (பார்வதியாபுரம்) – 10, 31, 41, 53, 316, 317

**கால்டுவெல். ஆர்.சி. உயர்அருள்திரு.** (இடையன்குடி) – 255

**கிருஷ்ணபிள்ளை. எச்.ஏ.** (பாளையங்கோட்டை) – 374, 489

**கிறிஸ்மஸ். ஜே.ஐ.** (சேலம்) – 361

**குளோரியா. எ.ஐ. அருள்திரு.** (திருச்சி) – 102

**சகாயம். வி.டி. அருள்திரு.** (தோட்டவாரம்) – 399, 400, 430, 438, 451

**சட்டம் பிள்ளை. அ.நா.** (பிரகாசபுரம்) – 357

**சத்தியநாதன் உபதேசியார். த.** (தஞ்சை) – 3, 9, 60, 64, 150, 333, 334

**சத்தியநாதன் பிள்ளை** (தஞ்சை) – 413

**சத்தியவாசகம் பண்டிதர்** (பாளையங்கோட்டை) – 407

**சந்தியாகு. வே. அருள்திரு.** (மதுரை) – 427, 434, 437, 440, 443, 449, 456, 466, 467

**சவரிமுத்து உபாத்தியாயர்** (பன்றிகுளம்) – 1, 79, 129, 252, 345

**சவரிமுத்து. ஆ. அருள்திரு.** (திண்டுக்கல்) – 109, 206

**சவரிராயன் ஏசுதாசன்** (திருப்பத்தூர்) – 166, 482, 487, 496

**சற்குணம் உயின்பிரட். அருள்திரு.** (நாசரேத்) – 135

**சாண்ட்லர் ஐயர். ஜா.ச.** (மதுரை) – 241

**சாமுவேல். மு.** (நாகர்கோவில்) – 141

**சாமுவேல். ஞா. அருள்திரு.** (தரங்கம்பாடி) – 118, 127, 169, 195, 246, 342, 348, 376, 422, 441, 444, 458, 459, 476

**சாமுவேல். ஐ.** (புதுச்சேரி) – 405

**சாமுவேல். ஜே.டி.** (மெய்ஞ்ஞானபுரம்) – 173

**சாலமோன். மோ. அருள்திரு.** (சந்தையடி) – 480

**சிங். ச.ஜே.** (நெய்யூர்) – 495, 499

**சிங். பி.ஜே.** (திருவனந்தபுரம்) – 372

**சீமோன். ச. அருள்திரு.** (மதுரை) – 30, 192, 203, 213, 273, 352, 356

**சுந்தரம். டி.** – 34, 295

**செல்லத்துரை சாலமோன்.** – 14

**ஞானதாசன். ஐ.ஆர்.எச். அதிஉயர்மறைத்திரு.** (திட்டுவிளை) – 439, 455, 457

**ஞானமணி. ச.பே. அருள்திரு.** – 15, 73, 205, 462

**ஞானமணி. ஒய்.** (அருப்புக்கோட்டை) – 212, 274, 275

**ஞானாபரணம் பண்டிதர். தே.அ.** (சேனம்விளை, நாகர்கோவில்) – 403

**டைலர். ஒய்.எஸ். அருள்திரு.** (மதுரை) – 289

**தாமஸ் கவிராயர்.** – 395

**தாவீது ஜே.எம்.** (மெஞ்ஞானபுரம்) – 204, 384, 388, 424, 470, 471, 478

**தாவீது. ச. அருள்திரு.** (சிவகாசி) – 318, 378, 379

**தேவசகாயம் ஆசாரியர்.** (தஞ்சை) – 108

**தேவசகாயம் உபாத்தியாயர்.** (சாட்சியாபுரம்) – 162, 201, 296

**தேவசகாயம் எழுத்தர்.** (தஞ்சை) – 98, 99, 323

**தேவசகாயம். ஏ.** (வைராகுடியிருப்பு) – 11

**தேவசகாயம். மு. அருள்திரு.** (மதுரை) – 210

**தேவசிகாமணி சாஸ்திரியார்** (தஞ்சை) – 224

**தேவதாசன். ஆ. அருள்திரு.** – 442, 481

**தேவவரம் முன்ஷி** (மயிலாடி) – 39, 87, 110, 126, 133, 175, 236, 237

**தைரியம் எழுத்தர்** – 7, 45, 233

**தைரியம். பி. அருள்திரு.** (வத்தலகுண்டு) – 353

**பரமானந்தம். சா. அருள்திரு.** (சங்கரன்கோவில்) – 415, 433, 447, 450, 461, 491

**பலவேந்திரம். த. அருள்திரு.** (வத்தலக்குண்டு) – 181, 256

**பாக்கியநாதன் தாவீது அருள்திரு.** – 132, 290, 314, 349, 351

**பால்மர். டி.** (மயிலாடி) – 139

**பாளையங்கோட்டைப் பாடல்.** – 16, 22, 23, 122, 123, 174, 207, 253

**பிச்சைமுத்து. அ.ஜ.** (தஞ்சை) – 417

**பிரிக்கன்ரிட்ஜ். இரா.** (யாழ்பாணம்) – 211

**பு.சு.யோ.** – 146

**மதுரநாயகம் உபதேசியார்** (திருநெல்வேலி) – 327

**மரியான் உபதேசியார்** (ஸ்ரீவைகுண்டம், திருநெல்வேலி) – 78, 120, 145, 148, 149, 188, 198, 220, 231, 232, 266, 268, 269, 280, 292, 302, 303, 321, 339, 340, 346, 347

**மாசிலாமணி. வி. அருள்திரு.** (திருவண்ணாமலை) – 35, 157, 161, 277, 284, 297, 322, 350

**முத்துசுவாமி உபாத்தியாயர். ச.** (கரம்பக்குடி) – 382, 404, 445

**மோட்சக்கண். சா.** (சந்தையடி) – 492

**யாக்கோபு. யோ.** (கருவூர்) – 47, 144, 301, 367

**யாழ்ப்பாணப் பாடல்** – 261, 460

**யோசேப்பு. ச.** (நாகர்கோவில்) – 66, 130, 172, 223, 235, 258, 298, 327, 328, 329, 330, 335, 373

**யோசேப்பு. தீ.** (நெய்யூர்) – 24, 105, 154, 227, 245, 256, 264, 265, 267

**யோவான். ப.ஈ.** – 19, 240

**ரா.ஈ.** – 473, 475, 483

**லுத்தரன் பாடல்** – 250

**வில்லியம். ஜி.ச. அருள்திரு.** (உடுமலைப்பேட்டை) – 493

**வீரமாமுனிவர்** (மதுரை) – 88, 89

**வெப். ஈ. அருள்திரு.** (மதுரை) – 182

**வேதக்கண். அ. அருள்திரு.** (கோவிலான்விளை) – 186, 202, 262

**வேதநாயகம் சாஸ்திரியார்** (தஞ்சை) – 4, 5, 6, 8, 18, 32, 33, 36, 37, 38, 40, 42, 43, 44, 46, 48, 49, 50, 51, 52, 55, 56, 57, 58, 62, 63, 67, 68, 69, 70, 71, 72, 79, 77, 80, 81, 84, 90, 94, 95, 96, 97, 100, 101, 104, 106, 111, 114, 119, 124, 131, 138, 153, 158, 159, 177, 180, 184, 185, 190, 208, 214, 215, 216, 218, 219, 221, 222, 226, 228, 234, 242, 243, 247, 249, 251, 254, 263, 271, 279, 281, 310, 312, 313, 319, 320, 331, 332, 336, 341, 354, 355, 363, 366, 375, 398

**வேதநாயகம் பாகவதர்** (சென்னை) – 381, 410

**வேதநாயகம். ஜி.சே. அருள்திரு.** (மதுரை) – 156, 244, 300, 468, 501

**வேதமாணிக்கம். ம. அருள்திரு.** (கல்லுக்கூட்டம்) – 29, 239, 304

**ஜாண் பால்மர்** (மயிலாடி, நாகர்கோவில்) – 2, 17, 21, 25, 26, 28, 61, 82, 86, 113, 115, 116, 134, 142, 168, 170, 171, 176, 178, 179, 183, 187, 189, 191, 194, 196, 197, 200, 217, 225, 229, 248, 259, 260, 293, 307, 309, 315, 326, 362, 364, 368, 369, 370, 393, 502

**ஜெயராஜ். வே.** (தேவாரம்) – 472

**ஜே.யா.** – 147

**ஜேம்ஸ். ஜி.** (நெய்யூர்) – 74

**ஜோசப். ஜோயல்சிங்.** (நெய்யூர்) – 199, 397, 406, 409, 412, 414, 423, 432, 464

**C.C.** – 486

**C.S.** – 377

**D.A.** – 193

**J.S.** – 391

**S.A.** – 477

**S.A.S.** – 360

**S.S.J.** – 160

**E_Mail: skrajann@gmail.com**
**Mobile: +91 9843755298**